வெளியீடு : 24-9-2007 Issued : 24-9-2007

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**திங்கட்கிழமை, மே 7, 2007—தொகுதி 35 — எண் 1**

**Monday the 7th May 2007 —Volume 35—No. 1**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

7–5–2007

## உள்ளடக்கம்


பக்கங்கள்

ஆளுநரும் அமைச்சரவையும் v-x

Governor and Council of Ministers xi-xv

பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் xvii-xx

பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) xxi-xxxi

1. **இரங்கல் தீர்மானம்—**

கென்யா ஏர்வேஸ் விமானம் விபத்திற்குள்ளானது 1

2. **வினாக்கள்—விடைகள்—**

உடுக்குறியிட்ட வினாக்கள் 2-42

3. **தகவல் கோரல்—**

பூவிருந்தவல்லி நீதிமன்றங்களின் வழக்குகளை காஞ்சிபுரம் மாவட்ட நீதிமன்றங்களுக்கு மாற்றியது 42-52

* திரு. டி. சுதர்சனம் 42-45,51

திரு. தி. வேல்முருகன் 45-46

* மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி 47

* மாண்புமிகு திரு. துரைமுருகன் 46-52

பக்கங்கள்

**4. மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 29 – சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை)

(ஆ) கோரிக்கை எண் 28 – செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) — 53-197

(இ) கோரிக்கை எண் 30 – எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)

| | |
|---|---|
| * மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன் | 53,99,110, 132-136, 186-193 |
| மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி | 75,-89, 100,129,152, 157,158, 170-182, 183-184,195 |
| * திரு. ந. கணபதி | 100-106 |
| திரு. சு. சிவராஜ் | 106-112 |
| திரு. என். மாலைராஜா | 112-119 |
| திரு. பா. செந்தமிழ்ச்செல்வன் | 120-126 |
| திருமதி ஜி. லதா | 126-130 |
| திரு. சு. குணசேகரன் | 130-134 |
| திரு. ரா. வரதராஜன் | 134-137 |
| * திரு. கோ. எதிரொலி மணியன் | 137-139, 141,142 |
| திரு. சி. தமிழ்செல்வன் | 142-145 |
| திரு. போ. கோபாலன் | 145-149,154, 155 |
| * திரு. வி.பி. கலைராஜன் | 156-168 |




பக்கங்கள்

**5. விதி 110–ன்கீழ் அறிக்கை—**

கிருஷ்ணா நதிநீர்க் கால்வாயை ஸ்ரீ சத்ய சாய்பாபா டிரஸ்ட் செப்பனிடுதல்–மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சரின் அறிக்கை — 139-140

**6. அறிவிப்பு—**

11–5–2007 அன்று "சட்டமன்றத்தில் கலைஞர் பொன்விழா" நிகழ்ச்சியில் மேதகு ஆளுநர் அவர்கள் பாராட்டுரை வழங்குதல் — 169

**7. அரசினர் தீர்மானம்—**

விதி 32–ஐத் தளர்த்தல் — 198

**8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** — 198-200

## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. முதலமைச்சர் .. **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:**

   பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், இலஞ்ச ஒழிப்பு, மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல், தொழில்கள், தகவல் தொழில் நுட்பவியல், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, சிறுபான்மையினர் நலன், தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு, கடவுச் சீட்டுகள் மற்றும் சிறப்பு முயற்சிகள்

2. நிதி அமைச்சர் .. **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:**

   நிதி, திட்டமிடல், சட்டமன்றப் பேரவை மற்றும் தேர்தல்கள்

3. மின்சாரத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:**

   மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம்

227667

4. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்

5. புள்ளியியல் மற்றும் முன்னாள் இராணுவத்தினர் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கோ.சி. மணி:

புள்ளியியல் மற்றும் முன்னாள் இராணுவத்தினர் நலன்

6. வேளாண்மைத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

7. பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. துரைமுருகன்:

பொதுப் பணிகள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனம், செயற்திட்டப் பணிகள், சட்டம் மற்றும் நீதிமன்றங்கள்

8. உயர் கல்வித் துறை அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் தொழில்நுட்பவியல், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்



9. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே.என். நேரு:

போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்

10. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள், பத்திரப் பதிவு மற்றும் முத்திரைத் தாள் சட்டம்

11. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:

குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள்

12. வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:

வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், சிறைச்சாலைகள், எடைகள்–அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்

13. சுற்றுலாத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

**14. செய்தித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு, அரசு அச்சகம், நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

**15. உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எ.வ. வேலு:**

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு மற்றும் கூட்டுறவு

**16. வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:**

வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, குடிசை மாற்று வாரியம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு

**17. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்

**18. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:**

தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, எஃகுக் கட்டுப்பாடு, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு



**19. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்

**20. கைத்தறித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்

**21. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:**

பள்ளிக் கல்வி மற்றும் தொல் பொருளியல்

**22. வணிக வரித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:**

வணிக வரிகள்

**23. சுற்றுச்சூழல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:**

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு மற்றும் இஸ்லாமிய அறக்கட்டளைகள் (வக்ஃபு)

**24. வனத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:**

வனங்கள் மற்றும் சின்கோனா

**25. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:**

நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்

**26. சமூக நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள்

**27. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:**

கால்நடை பராமரிப்பு

**28. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:**

ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்

**29. மீன்வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:**

மீன்வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்

**30. பால் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

**31. கதர்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்:**

கதர் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்



## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR -- *THIRU SURJIT SINGH BARNALA*

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi:**

Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, Prevention of Corruption, District Revenue Officers, Home, Police, Industries, Information Technology, Prohibition and Excise, Molasses, Minorities Welfare, Tamil Official Language & Tamil Culture, Passports and Special Initiatives

2. **Minister for Finance** .. **The Hon. Prof. K. Anbazhagan:**

Finance, Planning, Legislative Assembly and Elections

3. **Minister for Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:**

Electricity, Non-Conventional Energy Development and Personnel and Administrative Reforms

4. **Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru M.K. Stalin:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply

5. **Minister for Statistics and Ex-Servicemen** .. **The Hon. Thiru Ko.Si. Mani:**

Statistics and Welfare of Ex-Servicemen

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development and Wasteland Development

7. **Minister for Public Works and Law** .. **The Hon. Thiru Duraimurugan:**

Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Law and Courts

8. **Minister for Higher Education** .. **The Hon. Dr. K. Ponmudi:**

Higher Education including Technical Education, Electronics, Science and Technology, Mines and Minerals

9. **Minister for Transport** .. **The Hon. Thiru K.N. Nehru:**

Transport, Nationalised Transport and Motor Vehicles Act

10. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees, Registration and Stamp Act

11. **Minister for Rural Industries** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:**

Rural Industries including Cottage Industries and Small Industries



12. **Minister for Revenue and Prisons** .. **The Hon. Thiru I. Periasamy:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Prisons, Weights and Measures, Debt Relief including Legislation on Money Lending, Chits and Registration of Companies

13. **Minister for Tourism** .. **The Hon. Thiru N. Suresh Rajan:**

Tourism and Tourism Development Corporation

14. **Minister for Information** .. **The Hon. Thiru Parithi Ellamvazhuthi:**

Information and Publicity, Film Technology and Cinematograph Act, Stationery and Printing, Government Press, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority

15. **Minister for Food and Co-operation** .. **The Hon. Thiru E.V. Velu:**

Food, Civil Supplies, Consumer Protection, Price Control and Co-operation

16. **Minister for Housing and Slum Clearance** .. **The Hon. Thiru Suba. Thangavelan:**

Housing, Rural Housing, Housing Development, Slum Clearance Board and Accommodation Control

17. **Minister for Health** .. **The Hon. Thiru K.K.S.S.R. Ramachandran:**

Health, Medical Education and Family Welfare

18. **Minister for Labour** .. **The Hon. Thiru T.M. Anbarasan:**

Labour, Population, Employment and Training, Steel Control, Newsprint Control, Census and Urban and Rural Employment

19. **Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Thiru K.R. Periakaruppan:**

Hindu Religious and Charitable Endowments

20. **Minister for Handlooms** .. **The Hon. Thiru NKK. P. Raaja:**

Handlooms and Textiles

21. **Minister for School Education** .. **The Hon. Thiru Thangam Thenarasu:**

School Education and Archaeology

22. **Minister for Commercial Taxes** .. **The Hon. Thiru S.N.M. Upayathulla:**

Commercial Taxes

23. **Minister for Environment** .. **The Hon. Thiru T.P.M. Mohideen Khan:**

Sports and Youth Welfare, Environment and Pollution Control and Wakfs

24. **Minister for Forests** .. **The Hon. Thiru N. Selvaraj:**

Forests and Cinchona



25. **Minister for Highways** .. **The Hon. Thiru M.P. Saminathan:**

Highways and Ports

26. **Minister for Social Welfare** .. **The Hon. Dr. (Tmt.) Poongothai:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Homes

27. **Minister for Animal Husbandry** .. **The Hon. Tmt. P. Geetha Jeevan:**

Animal Husbandry

28. **Minister for Adi Dravidar Welfare** .. **The Hon. Tmt. A. Tamilarasi:**

Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour

29. **Minister for Fisheries** .. **The Hon. Thiru K.P.P. Samy:**

Fisheries and Fisheries Development Corporation

30. **Minister for Dairy Development** .. **The Hon. Thiru U. Mathivanan:**

Milk and Dairy Development

31. **Minister for Khadi** .. **The Hon. Thiru K. Ramachandhiran:**

Khadi and Village Industries Board, Bhoodhan and Gramadhan

# பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

## பேரவைத் தலைவர்

*மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன்*

## பேரவைத் துணைத் தலைவர்

*மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி*

## மாற்றுத் தலைவர்கள் #

*திரு. ப. ரங்கநாதன்*

*திரு. துரை சந்திரசேகரன்*

*டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்*

*திரு. தி. வேல்முருகன்*

*செல்வி கே. பாலபாரதி*

*திரு. வை. சிவபுண்ணியம்*

## செயலாளர்

*திரு. மா. செல்வராஜ்*

---

# 26-3-2007 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திரு. வெ.சி. சுப்ரமணியன் எம்.ஏ., பி.எல். | கூடுதல் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | இணைச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | துணைச் செயலாளர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. தி. கோவிந்தராசு, எம்.ஏ., பி.எட்., பி.எல். | துணைச் செயலாளர் |
| திரு. எ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | துணைச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | துணைச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | துணைச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | துணைச் செயலாளர் |
| திருமதி ப. சரசுவதி, எம்.ஏ., பி.ஜி.எல். | துணைச் செயலாளர் |
| திரு. மு. பைரவன், எம்.காம். | குழு அலுவலர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. தேவராசன், பி.ஏ. | குழு அலுவலர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | குழு அலுவலர் |



| | |
|---|---|
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | தலைமை நிருபர் |
| திரு. தர. நாகராஜன், எம்.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர் |
| திரு. கோ. சுப்புராம், பி.ஏ. | சார்புச் செயலாளர் |
| திரு. மு. கதிரேசன், எம்.ஏ. | தலைமை நிருபர் |
| திரு. து. சீனிவாசன், பி.ஏ. | சார்புச் செயலாளர் |
| திரு. க. லட்சுமணன், பி.எஸ்சி., பி.எல். | பேரவைத் தலைவரின் தனிச் செயலர் |
| திருமதி து. இராஜேஸ்வரி, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர் |
| திரு. ம. பன்னீர் செல்வம் | தலைமை நிருபர் |
| திருமதி இரா. சந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர் |
| திரு. கி. மாதவன், எம்.ஏ., பி.ஜி.எல். | தலைமை நிருபர் |
| திரு. இரா. வெங்கடகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | தலைமை நிருபர் |
| திருமதி அ. லெற்றிஸால், பி.ஏ. | சார்புச் செயலாளர் |
| திருமதி ஓ.வி. கல்யாணி, பி.எஸ்சி., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர் |
| திரு. கே. இராமகிருஷ்ணா, பி.எஸ்சி., பி.எல். | சார்புச் செயலாளர் |
| திருமதி கோ. காயத்ரி, பி.எஸ்சி. | சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. பிரேமா, பி.காம்., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர் |

திரு. கே. பாலசுப்ரமணியன், எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

திருமதி கு. இந்துமதி, பி.எஸ்சி., எம்.எட்., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்



## பேரவை உறுப்பினர்கள்

### (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அங்கையற்கண்ணி, செல்வி ஆ. | .. சங்கராபுரம் |
| 2. | அப்துல் பாசித், திரு. எச். | .. வாணியம்பாடி |
| 3. | அப்பாவு, திரு. மு. | .. ராதாபுரம் |
| 4. | அமரமூர்த்தி, திரு. து. | .. அரியலூர் |
| 5. | அரி, திரு. கோ. | .. திருத்தணி |
| 6. | அருண்மொழிதேவன், திரு. ஆ. | .. சிதம்பரம் |
| 7. | அருள் அன்பரசு, திரு. | .. சோளிங்கர் |
| 8. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. திருச்செந்தூர் |
| 9. | அன்பரசன், திரு. தா.மோ. | .. ஆலந்தூர் |
| 10. | அன்பழகன், திரு. எம். | .. பழனி (செ.வ.) |
| 11. | அன்பழகன், திரு. கே.பி. | .. பாலக்கோடு |
| 12. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 13. | அன்பில் பெரியசாமி, திரு. | .. திருச்சிராப்பள்ளி–1 |
| 14. | ஆவுடையப்பன், திரு. இரா. | .. அம்பாசமுத்திரம் |
| 15. | ஆறுமுகம், திரு. கி. | .. செங்கல்பட்டு |
| 16. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | .. அண்ணா நகர் |
| 17. | இராசசேகரன், திரு. எஸ். | .. ஆலங்குடி |
| 18. | இராணி, திருமதி இரா. | .. உப்பிலியாபுரம் (ஆ.வா.) |
| 19. | இராமகிருஷ்ணன், திரு. நா. | .. கம்பம் |
| 20. | இராமசாமி, திரு. கரி. | .. திருவாடானை |

21. இராமசாமி, திரு. தி. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
22. இராமசுவாமி, திரு. கே.பி. .. ராசிபுரம்
23. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். .. சாத்தூர்
24. இராமச்சந்திரன், திரு. டி. .. தளி
25. இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். .. பள்ளிப்பட்டு
26. இராம்பிரபு, திரு. இரா. .. பரமக்குடி (செ.வ.)
27. இராஜா, திரு. எஸ்.ஆர். .. தாம்பரம்
28. இராஜேந்திரன், திரு. ஆ. .. வீரபாண்டி
29. இராஜேந்திரன், திரு. இரா. .. பனமரத்துப்பட்டி
30. இராஜேந்திரன், திரு. க. .. ஜெயங்கொண்டம்
31. இராஜேந்திரன், திரு. சபா. .. நெல்லிக்குப்பம்
32. இராஜ்குமார், திரு. ம. .. பெரம்பலூர் (செ.வ.)
33. இளமதி சுப்பிரமணியன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
34. இளவரசன், திரு. வீர. .. திருமங்கலம்
35. இளவழகன், திரு. கே.எல். .. ஆற்காடு
36. உதயசூரியன், திரு. தா. .. சின்னசேலம்
37. உதயம் சண்முகம், திரு. .. அறந்தாங்கி
38. உபயதுல்லா, திரு. சி.நா.மீ. .. தஞ்சாவூர்
39. உலகநாதன், திரு. கே. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
40. எதிரொலி மணியன், திரு. கோ. .. பெரணமல்லூர்
41. ஐயப்பன், திரு. கோ. .. கடலூர்
42. கணபதி, திரு. ந. .. வானூர் (செ.வ.)



43. கணேசன், திரு. ஆர்.டி. .. தேனி
44. கண்ணப்பன், திரு. மு. .. தொண்டாமுத்தூர்
45. கண்ணன், திரு. பெ. .. தாரமங்கலம்
46. கண்ணன், திரு. வே. .. செஞ்சி
47. கமலாம்பாள், திருமதி பெ. .. காஞ்சிபுரம்
48. கருணாநிதி, கலைஞர் மு. .. சேப்பாக்கம்
49. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
50. கருப்பசாமி பாண்டியன், திரு. வீ. .. தென்காசி
51. கலியவரதன், திரு. வீ.ஏ.டி. .. முகையூர்
52. கலீலூர் ரஹ்மான், திரு. ம.அ. .. அரவக்குறிச்சி
53. கலைராஜன், திரு. வி.பி. .. தியாகராய நகர்
54. காந்தி, திரு. ஆர். .. இராணிப்பேட்டை
55. காமராஜ், திரு. பெ. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
56. காயத்ரி தேவி, டாக்டர் (திருமதி) கே. .. மதுராந்தகம்
57. காவேரி, திரு. வை. .. எடப்பாடி
58. கிருஷ்ணமூர்த்தி, திரு. அக்ரி எஸ்.எஸ். .. கலசப்பாக்கம்
59. கீதா ஜீவன், திருமதி பி. .. தூத்துக்குடி
60. குணசேகரன், திரு. சு. .. சிவகங்கை
61. குணசேகரன், திரு. ம. .. மானாமதுரை (செ.வ.)
62. குத்தாலம் க. அன்பழகன், திரு. .. குத்தாலம்
63. குமரகுரு, திரு. இரா. .. திருநாவலூர்

64. குருசாமி, திரு. ரெ. .. அந்தியூர் (செ.வ.)
65. கோபாலன், திரு. போ. .. உதகமண்டலம்
66. கோபிநாத், திரு. கே. .. ஓசூர்
67. கோவிந்தசாமி, திரு. சி. .. திருப்பூர்
68. கோவை தங்கம், திரு. .. வால்பாறை (செ.வ.)
69. சக்கரபாணி, திரு. அர. .. ஒட்டன்சத்திரம்
70. சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன், திருமதி .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
71. சண்முகம், திரு. சி.வி. .. திண்டிவனம்
72. சண்முகவேலு, திரு. சி. .. உடுமலைப்பேட்டை
73. சதன் திருமலைக்குமார், டாக்டர் தி. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)
74. சந்திரகாசி, திரு. மா. .. வரகூர் (செ.வ.)
75. சந்திரா, திருமதி மு. .. ராஜபாளையம் (செ.வ.)
76. சாமி, திரு. ஆர். .. மேலூர்
77. சாமி, திரு. கே.பி.பி. .. திருவொற்றியூர்
78. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
79. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். .. ஆண்டிமடம்
80. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
81. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
82. சிவானந்தம், திரு. ஆர். .. ஆரணி
83. சிவாஜி, திரு. இ.ஏ.பி. .. திருவள்ளூர்
84. சின்னசாமி, திரு. அ. .. பேரணாம்பட்டு (செ.வ.)
85. சின்னசாமி, திரு. ஆர். .. சிங்காநல்லூர்



86. சின்னச்சாமி, திரு. செ. .. மருங்காபுரி
87. சின்னதுரை, திரு. கு. .. தலைவாசல் (செ.வ.)
88. சின்னப்பன், திரு. போ. .. விளாத்திகுளம்
89. சின்னராஜ், திரு. ஓ.கே. .. மேட்டுப்பாளையம்
90. சீனிவாசன், திரு. கு. .. பூங்கா நகர்
91. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி
92. சுந்தரம், திரு. எம்.ஆர். .. ஆத்தூர்
93. சுந்தரம், திரு. ந. .. காரைக்குடி
94. சுந்தர், திரு. க. .. உத்திரமேரூர்
95. சுப்பிரமணியம், திரு. ஓ. .. பவானிசாகர்
96. சுப்புராம், திரு. ராம. .. திருமயம்
97. சுப்ரமணியன், திரு. ந. .. குளத்தூர் (செ.வ.)
98. சுரேஷ் ராஜன், திரு. என். .. கன்னியாகுமரி
99. சூரியகுமார், திரு. என்.கே.ஆர். .. நாட்ராம்பள்ளி
100. செங்குட்டுவன், திரு. டி. .. கிருஷ்ணகிரி
101. செங்கோட்டையன், திரு. கே.ஏ. .. கோபிசெட்டிப்பாளையம்
102. செந்தமிழன், திரு. ஞா. .. சைதாப்பேட்டை
103. செந்தமிழ்ச்செல்வன், திரு. பா. .. மேல்மலையனூர்
104. செந்தில் பாலாஜி, திரு. வே. .. கரூர்
105. செல்வம், திரு. கு. .. மங்களூர் (செ.வ.)
106. செல்வராஜ், திரு. என். .. முசிறி
107. செல்வராஜ், திரு. து. .. ஸ்ரீவைகுண்டம்
108. செல்வி ராமஜெயம், திருமதி .. புவனகிரி

109. சேகரன், திரு. கூ.ந. - திருவெறும்பூர்

110. சேகர், திரு. எஸ்.வி. - மயிலாப்பூர்

111. சேகர்பாபு, திரு. பி.கே. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்

112. சையது கௌஸ் பாஷா, திரு. சை. - மதுரை மத்தி

113. சௌந்தரபாண்டியன், திரு. அ. - லால்குடி

114. சௌந்திரபாண்டியன், திரு. அ. - குன்னூர் (செ.வ.)

115. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்

116. ஞானதாஸ், திரு. ஆர். - சிவகாசி

117. டில்லி பாபு, திரு. ப. - அரூர் (செ.வ.)

118. தங்கமணி, திரு. பி. - திருச்செங்கோடு

119. தங்கம் தென்னரசு, திரு. - அருப்புக்கோட்டை

120. தங்கவேலன், திரு. சுப. - கடலாடி

121. தண்டபாணி, திரு. மா. - வேடசந்தூர்

122. தமிழரசி, திருமதி ஆ. - சமயநல்லூர் (செ.வ.)

123. தமிழரசு, திரு. அ. - ஓமலூர்

124. தமிழ்செல்வன், திரு. சி. - ஏற்காடு (ஆவா.)

125. தம்பிதுரை, முனைவர் மு. - பர்கூர்

126. தர்மலிங்கம், திரு. எல்.பி. - சத்தியமங்கலம்

127. தாமோதரன், திரு. செ. - கிணத்துக்கடவு

128. தியோடர் ரெஜினால்டு, திரு. த. - பத்மநாபபுரம்

129. திருநாவுக்கரசு, திரு. கே. - உளுந்தூர்பேட்டை (செ.வ.)

130. துரைக்கண்ணு, திரு. இரா. - பாபநாசம்



131. துரை சந்திரசேகரன், திரு. - திருவையாறு

132. துரைசாமி, திரு. வீ.பெ. - சங்கரி (செ.வ.)

133. துரைமுருகன், திரு. - காட்பாடி

134. துரைராஜ், திரு. சி. - சேடப்பட்டி

135. தேன்மொழி, திருமதி எஸ். - நிலக்கோட்டை (செ.வ.)

136. நன்மாறன், திரு. என். - மதுரை கிழக்கு

137. நெடுஞ்செழியன், டாக்டர் க. - கபிலர்மலை

138. நெடுஞ்செழியன், திரு. ரெ. - புதுக்கோட்டை

139. நேரு, திரு. கே.என். - திருச்சிராப்பள்ளி–2

140. பதர் சயீத், திருமதி - திருவல்லிக்கேணி

141. பத்மாவதி, திருமதி பி. - நன்னிலம் (செ.வ.)

142. பரஞ்ஜோதி, திரு. மு. - ஸ்ரீரங்கம்

143. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)

144. பலராமன், திரு. பி. - பொன்னேரி (செ.வ.)

145. பழனிசாமி, திரு. ஆர்.எம். - மொடக்குறிச்சி

146. பன்னீர்செல்வம், திரு. எம். - சீர்காழி (செ.வ.)

147. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி

148. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்

149. பாண்டுரங்கன், திரு. கு. - அணைக்கட்டு

150. பாபு, திரு. வி.எஸ். - புரசைவாக்கம்

151. பாரதி மோகன், திரு. ஆர்.கே. - திருவிடைமருதூர்

152. பாலபாரதி, செல்வி கே. - திண்டுக்கல்

153. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை

154. பிரபாவதி, திருமதி பெ. .. தாராபுரம் (செ.வ.)
155. பிரேமா, திருமதி ஆர். .. அவினாசி (செ.வ.)
156. பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். .. கடையநல்லூர்
157. புஷ்பராஜ், திரு. செ. .. கண்டமங்கலம் (செ.வ.)
158. பூங்கோதை, டாக்டர் (திருமதி) .. ஆலங்குளம்
159. பெரியகருப்பன், திரு. கே.ஆர். .. திருப்பத்தூர்
160. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
161. பெரியசாமி, திரு. மு.க. .. பூம்புகார்
162. பெரியண்ணன், திரு. பி.என். .. பெண்ணாகரம்
163. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. .. கோயம்புத்தூர் கிழக்கு
164. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. .. பொள்ளாச்சி
165. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
166. பொன்னுசாமி, திரு. கே. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
167. பொன்னுதுரை, திரு. செ. .. பெருந்துறை
168. போளூர் ம. வரதன், திரு. .. செங்கம் (செ.வ.)
169. போஸ், திரு. ஏ.கே. .. திருப்பரங்குன்றம்
170. மகேந்திரன், திரு. இ. .. உசிலம்பட்டி
171. மகேந்திரன், திரு. கே. .. பெரம்பூர் (செ.வ.)
172. மகேஷ் கிருஷ்ணசாமி, திரு. த. .. திருவோணம்
173. மணி, திரு. எஸ். .. பொங்கலூர்
174. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
175. மணி, திரு. ஜி.கே. .. மேட்டூர்
176. மதிவாணன், திரு. உ. .. திருவாரூர் (செ.வ.)



177. மலரவன், திரு. தா. .. கோயம்புத்தூர் மேற்கு
178. மாணிக்கம், திரு. இரா. .. குளித்தலை
179. மாரிமுத்து, திரு. வே. .. நாகப்பட்டினம்
180. மாலைராஜா, திரு. என். .. திருநெல்வேலி
181. முருகவேல், திரு. கே. .. முதுகுளத்தூர்
182. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்
183. மூர்த்தி, திரு. டி. .. திருப்போரூர் (செ.வ.)
184. மூர்த்தி, திரு. பி. .. சோழவந்தான்
185. மேகநாதன், திரு. த.அ. .. காவேரிப்பட்டினம்
186. மோகன், திரு. பெ. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
187. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை
188. யசோதா, திருமதி டி. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
189. ரங்கநாதன், திரு. ப. .. வில்லிவாக்கம்
190. ரங்கராஜன், திரு. என்.ஆர். .. பட்டுக்கோட்டை
191. ரவிக்குமார், திரு. து. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
192. ரவிச்சந்திரன், திரு. எல். .. சேலம்–1
193. ராணி வெங்கடேசன், திருமதி .. சாத்தான்குளம்
194. ராதாகிருஷ்ணன், திரு. ல. .. கோவில்பட்டி
195. ராமச்சந்திரன், திரு. கா. .. கூடலூர்
196. ராமநாதன், திரு. கே.வீ. .. பவானி
197. ராஜ கண்ணப்பன், திரு. ஆர்.எஸ். .. இளையான்குடி
198. ராஜகுமார், திரு. எஸ். .. மயிலாடுதுறை
199. ராஜசேகரன், திரு. மா. .. தொட்டியம்

200. ராஜன், திரு. அ. .. நாகர்கோவில்
201. ராஜா, திரு. என்கேகே.பி. .. ஈரோடு
202. ராஜா, திரு. தி.க. .. திருப்பத்தூர்
203. லட்சுமணன், திரு. ச. .. போடிநாயக்கனூர்
204. லதா, திருமதி ஜி. .. குடியாத்தம்
205. லீமா றோஸ், திருமதி ரா. .. திருவட்டாறு
206. வசந்தகுமார், திரு. எச். .. நாங்குநேரி
207. வரதராஜன், திரு. ரா. .. விருதுநகர்
208. விசுவநாதன், திரு. இரா. .. நத்தம்
209. விடியல் எஸ். சேகர், திரு. .. காங்கேயம்
210. விஜயகாந்த், திரு. .. விருத்தாசலம்
211. விஜயகுமார், திரு. கே.எஸ். .. கும்மிடிப்பூண்டி
212. விஜயகுமார், திரு. பெ.சு. .. போளூர்
213. விஷ்ணுபிரசாத், டாக்டர் எம்.கே. .. செய்யாறு
214. வீரகபிலன், திரு. எம்.வி.ஆர். .. பேராவூரணி
215. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. .. சேலம்–2
216. வேதரத்தினம், திரு. எஸ்.கே. .. வேதாரண்யம்
217. வேலு, திரு. எ.வ. .. தண்டராம்பட்டு
218. வேலுசாமி, திரு. இல. .. தருமபுரி
219. வேலுசாமி, திரு. செ.ம. .. பல்லடம்
220. வேலுமணி, திரு. சு.ப. .. பேரூர்
221. வேல்துரை, திரு. பா. .. சேரன்மகாதேவி
222. வேல்முருகன், திரு. தி. .. பண்ருட்டி



223. வைத்திலிங்கம், திரு. ஆர். .. ஒரத்தநாடு
224. ஜாண் ஜேக்கப், திரு. எஸ். .. கிள்ளியூர்
225. ஜாண் ஜோசப், திரு. ஞா. .. விளவங்கோடு
226. ஜெகன்மூர்த்தி, திரு. மு. .. அரக்கோணம் (செ.வ.)
227. ஜெயக்குமார், திரு. டி. .. இராயபுரம்
228. ஜெயக்குமார், முனைவர் கு. .. நாமக்கல் (செ.வ.)
229. ஜெயபால், திரு. எஸ். .. குளச்சல்
230. ஜெயராமன், திரு. எஸ்.பி. .. வந்தவாசி (செ.வ.)
231. ஜெயலலிதா, செல்வி ஜெ .. ஆண்டிப்பட்டி
232. ஸ்டாலின், திரு. மு.க. .. ஆயிரம் விளக்கு
233. ஹசன் அலி, திரு. கு. .. இராமநாதபுரம்
234. ஆஸ்கார் சி. நிக்லி, டாக்டர் .. நியமனம்
235. (வெற்றிடம்) .. மதுரை மேற்கு

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. இரா. விடுதலை .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**சித்திரை 24, சர்வஜித் – திருவள்ளுவர் ஆண்டு 2038**
**2007 மே 7, திங்கட்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க*
*சொல்லிற் பயனிலாச் சொல்"*

பயனளிக்காத சொற்களை விடுத்து மனத்தில் பதிந்து பயனளிக்கக் கூடிய சொற்களையே கூற வேண்டும்.

### 1. இரங்கல் தீர்மானம்

#### கென்யா ஏர்வேஸ் விமானம் விபத்திற்குள்ளானது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஐவரி கோஸ்ட் நாட்டின் அபிட்ஜான் நகரிலிருந்து கென்யா தலைநகர் நைரோபிக்கு, 15 இந்தியர்கள் உட்பட 114 பேருடன் சென்ற கென்யா ஏர்வேஸ் விமானம், விபத்துக்குள்ளானது குறித்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

இவ்விபத்தில் மறைந்தவர்களது குடும்பத்தினருக்கு இப்பேரவை ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது. இதில் 5 தமிழர்கள் இறந்ததாக இங்கே தகவல் கிடைத்திருக்கிறது. இத்தீர்மானத்தை நிறைவேற்றும்முகமாக உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் எழுந்து நின்று அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு மணித்துளிகள் எழுந்து நின்று அமைதி காத்ததன்மூலம் தீர்மானம் நிறைவேறியது.)

[2007 மே 7

## 2. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 171, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**171—**

### சிறப்பு தபால் தலை

***402—திரு. ப. ரங்கநாதன்:**

*மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சுதந்திரப் போராட்டத்தில் பங்கு பெற்ற உடுமலை நாராயணகவியின் 25 ஆவது நினைவு நாளை முன்னிட்டு அவரைப் பெருமைப்படுத்தும் விதத்தில் சிறப்பு தபால் தலை வெளியிட மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?*

*(ஆ) ஆம் எனில், அரசு எடுக்கும் நடவடிக்கை என்ன?*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சுதந்திரப் போராட்டத்தில் பங்குபெற்ற உடுமலை நாராயணகவியின் 25 ஆவது நினைவு நாளை முன்னிட்டு சிறப்பு தபால் தலை வெளியிட அரசுக்கு இதுவரை எந்தக் கோரிக்கையும் கிடைக்கப்பெறவில்லை. இது குறித்து மைய அரசுதான் முடிவெடுக்கும். எனினும், அவ்வாறு கோரிக்கை ஏதேனும் அரசுக்குக் கிடைக்கப்பெற்றால், அக்கோரிக்கையை மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்வது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடுமலை நாராயணகவி அவர்களுடைய தந்தை ஒரு தமிழாசிரியர். அவ[illegible] தன்னுடைய கல்வியையும், கவிதை [illegible]யும் வளர்த்துக் கொண்டார். அவர் இயற்றிய கவிதைகளில்



2007 மே 7]

ஒரு தலைசிறந்த கவிதை 'பெண்மணி நல்ல பெண்மணி' ஆகும். நாடு சுதந்திரம் அடைவதற்கு சுதந்திர உணர்வினைத் தூண்டுகின்ற வகையில் தன்னுடைய புரட்சிகரமான கவிதைகளை சமுதாயச் சிந்தனையோடு உருவாக்கியும் பாடியுள்ளார். ஏற்கெனவே நமது தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவருக்கு நினைவுச் சின்னமும் உருவாக்கித் தந்துள்ளார். இதுபோன்று கடந்த மூன்று ஆண்டுகளாக தமிழகத்திலே சுதந்திரப் போராட்டத் தியாகிகள், தலைவர்கள், பெரிய பெரிய அறிவில் சிறந்த நல்லவர்கள், அவர்களுடைய சிறப்பினை இந்த நாட்டு மக்கள், இளைய சமுதாயத்தினர் தெரிந்துகொள்ள வேண்டும், அறிந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணத்தோடு பல்வேறு தலைவர்களுடைய தபால் தலைகளை, தலைவர் அவர்கள் வெளியிட்டுள்ளார்கள். ஆகவே, சுதந்திரப் போராட்டத்தில் பங்குபெற்ற உடுமலை நாராயணகவி அவர்களுடைய இந்த 25 ஆவது நினைவு நாளில் அவருடைய தபால் தலையை வெளியிட தலைவர் கலைஞர் அவர்கள் முயற்சி எடுப்பார்களா என தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, தபால் துறை இயக்குநர் அவர்கள் காட்டியுள்ள வழிகாட்டு நெறிகள்படி தேசிய அல்லது உலக முக்கியத்துவம் வாய்ந்த ஒருவரது நூறாவது பிறந்த நாள் அல்லது 10 ஆவது, 25 ஆவது, 50 ஆவது மற்றும் 100 ஆவது நினைவு நாள் வரும் தருவாயில் அவர்கள் நினைவாக தபால் தலை வெளியிடப்படுகிறது. இந்த நெறிமுறைகளின்படி பார்த்தால் மறைந்த நாராயண கவிராயருடைய 25 ஆவது ஆண்டு நினைவு நாள் 23-5-2006 ஆம் நாள் முடிவடைந்துள்ளது. சுதந்திரப் போரில் பங்குபெற்ற கவிராயருடைய 25 ஆவது நினைவு நாளை முன்னிட்டு, அவரைப் பெருமைப்படுத்தும்விதமாக நினைவு தபால் தலை வெளியிடுவது குறித்து இதுவரையிலே கோரிக்கை எதுவும் கிடைக்கப்பெறவில்லை என்றாலும்கூட, மாண்புமிகு உறுப்பினருடைய இந்தக் கேள்வியை அடிப்படையாக வைத்து இதுபற்றி மாநில அரசு மைய அரசுக்குப் பரிந்துரை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 9-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன்.

**திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின்சார்பாக இதுவரையில் யார், யாருக்கு அஞ்சல் தலை

வெளியிட வேண்டுமென்று மத்திய அரசுக்கு கோரிக்கைகள் எழுப்பப்பட்டிருக்கின்றன? அப்படி எழுப்பப்பட்ட கோரிக்கைகளில் நிறைவேற்றப்பட்டவை எவையெவை? நிறைவேற்றப்படாமல் நிலுவையில் உள்ள கோரிக்கைகள் எவை என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2004 ஆம் ஆண்டு மத்தியிலே ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு அமைந்த பிறகு, தமிழ்நாட்டில் பின்வருகின்ற தலைவர்களுக்கு அல்லது பிரபலமானவர்களுக்கு அல்லது அறிஞர்களுக்கு தபால் தலைகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. அந்தப் பட்டியலில் திரு. எஸ்.எஸ். வாசன், இயக்குநர் திரு. கே. சுப்பிரமணியம், திருப்பூர் குமரன், திரு. முரசொலி மாறன், மருது பாண்டியர் சகோதரர்கள், மன்னர் பாஸ்கர சேதுபதி, டாக்டர் டி.எஸ். சவுந்தரம், அயோத்தி தாச பண்டிதர், திரு. என்.எம்.ஆர். சுப்பராமன், திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமி, திரு. வி. கல்யாண சுந்தரனார், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, திரு. ஏ.எம்.எம். முருகப்ப செட்டியார், தீரன் சின்னமலை, தேவநேயப் பாவாணர், திரு. ஏ.வி. மெய்யப்பன், திரு. ஜெமினி கணேசன், திரு. சிங்காரவேலர், டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர், திருமுருக கிருபானந்த வாரியார், தமிழவேள் உமா மகேசுவரன் பிள்ளை, திரு. ஜி. வரதராஜுலு கோவை, திரு. ம.பொ. சிவஞானம், திரு. பார்த்தலோமியஸ் சீகன் பால்க், திரு. அழகப்பச் செட்டியார் ஆகியோருக்கு இதுவரையில் இந்த அரசு அமைந்த பிறகு, 2006 ஆம் ஆண்டுக்குப் பிறகு அஞ்சல் தலைகள் வெளியிடப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தர்.

**திரு. க. சுந்தர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுடைய கருணையினால் பெரியார் வரலாற்றுச் சித்திரத்தைக் கண்டுகளித்தோம். தந்தை பெரியாரோடு அந்தக் காலத்திலே சமுதாய நீதிக்காக அரும்பாடுபட்டவர்களுக்கு, நினைவு தபால் தலை வெளியிடுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** யாருக்கு என்று கேள்வியில் இல்லை. கேள்வியை மறுபடியும் கேட்கச் சொல்லுங்கள்.



**திரு. க. சுந்தர்:** பேரவைத் தலைவர் அவர்களே, சர். பிட்டி. தியாகராயர் போன்ற தலைவர்களுக்கு நினைவு தபால் தலை வெளியிடப்படுமா?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** குறிப்பிடப்பட்ட பலருக்கு அஞ்சல் தலைகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. வேறு யாருக்காவது விடப்பட்டிருந்தால், அதைச் சிறப்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் நினைவுபடுத்தினால் அது பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எல்.பி. தர்மலிங்கம்.

**திரு. எல்.பி. தர்மலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த அரசியல் தலைவர்கள், அறிஞர் பெருமக்கள் ஆகியோருக்கு அஞ்சல் தலை வெளியிட முக்கிய நெறிமுறைகள் என்ன என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** நான் தொடக்கத்திலேயே குறிப்பிட்டேன். தபால் துறை அனுப்பியுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி ஒருவர் தேசிய அல்லது உலக முக்கியத்துவம் வாய்ந்தவராக இருக்க வேண்டும். அத்தகையவருடைய 100 ஆவது பிறந்த நாள் அல்லது 10ஆவது, 25 ஆவது, 50 ஆவது, 100 ஆவது நினைவு நாள் வரும் தருவாயில் அன்னாரது நினைவாகத் தபால் தலை வெளியிடப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜன்.

**திரு. அ. ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடுமலை நாராயண கவிராயர் நினைவாக தமிழக அரசின் சார்பில் தபால் தலை வெளியிட முயற்சி மேற்கொள்ளப்படும் என்று நம்முடைய மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள் தமிழக அரசின் சார்பில் உடுமலை நாராயண கவிராயர் நினைவாக ஏதாவது நினைவுச் சின்னம் எழுப்பப்பட்டிருக்கிறதா என்பதைத் தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** நாராயண கவிராயருடைய பெயரால் உடுமலையில் ஒரு சிறந்த மணி மண்டபம் எழுப்பப்பட்டிருக்கிறது. அதிலே ஒரு நூல் நிலையமும் அவர் பெயரால் அமைக்கப்பட்டிருக்கிறது.

[2007 மே 7

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 172, மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**172—**

## சாலைப் பணிகள்

***114—திரு. குத்தாலம் க. அன்பழகன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் ஒன்றியம், ரெட்டிகடலங்குடி-திருமணஞ்சேரி சாலையினை சம்பூரண கிராம யோஜ்னா திட்டத்தில் சேர்த்து சாலைப் பணிகள் உடனே தொடங்கப்படுமா?

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ரெட்டிகடலங்குடி-திருமணஞ்சேரி சாலைப் பணி பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன்.

**திரு. குத்தாலம் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நன்றி. இந்தச் சாலை புகழ்பெற்ற திருமணஞ்சேரி ஆலயத்தை மயிலாடுதுறையிலிருந்து குறைந்த தூரத்திலே இணைக்கும் சாலையாகும். இந்த ரெட்டிகடலங்குடி சாலையிலிருந்து சேத்திரபாலபுரம் ஊராட்சியை இணைக்கும் சுமார் 2 கி.மீ. ஒன்றியச் சாலையை ஏதாவது ஒரு திட்டத்தில் எடுத்துச் செய்தால், திருமணஞ்சேரி ஆலயத்திலிருந்து கும்பகோணம்-மயிலாடுதுறை மாநில நெடுஞ்சாலையுடன் இணைப்புக் கிடைக்கும். எனவே, இந்த 2 கி.மீ. சாலையை ஏதாவது ஒரு திட்டத்தில் எடுத்துச் செயல்படுத்தித் தரப்படுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.



2007 மே 7]

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடை அளிக்கிறபோதே நான் முன்பே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன். இந்த ரெட்டிகடலங்குடி சாலை என்பது மொத்தம் 2 கி.மீ. 130 மீட்டர் தூரமாகும். எனவே, முக்கியத்துவம் வாய்ந்த இந்தச் சாலையை, நம்முடைய உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதைப்போல, சம்பூர்ண வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் போதுமான தரத்திற்கு மேம்படுத்த நிதி ஒதுக்கீடு செய்ய இயலாது. எனவேதான், இந்தப் பணி பிரதம மந்திரி கிராமச் சாலை திட்டத்தின்கீழ் மூன்றாவது கட்டப் பணியாகச் சேர்க்கப்பட்டு ரூ.39,72,000 மதிப்பீட்டிலே மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. எனவே, தற்சமயம் மணல், கிராவல் அடித்தளம் போடப்பட்டு, முதல் அடுக்கு கருங்கல் ஜல்லி பரத்தும் வேலை முடிவுற்று, இரண்டாம் அடுக்கு ஜல்லி போடக்கூடிய வேலையும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. 15-6-2007-க்குள் இந்தப் பணி நிறைவு செய்யப்பட்டுவிடும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன்.

**திரு. குத்தாலம் க. அன்பழகன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என் சார்பாகவும் தொகுதி மக்களின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறையில் கிராமச் சாலைகள், ஒன்றியச் சாலைகள், மாவட்டச் சாலைகள் என்று பல்வேறு சாலைகள் இருக்கின்ற சூழ்நிலையில், குறிப்பாக ஒன்றியச் சாலைகளும், ஊராட்சி சாலைகளும் ஒரு 10 கி.மீ. நீளம் இருக்கிறது என்றால், அதிலே 2 கி.மீ. N.H. பராமரிப்பில் உள்ளன. ஒரு 2 கி.மீ. மாநில நெடுஞ்சாலைத் துறை பராமரிப்பிலே இருக்கிறது. இடையிலே இருக்கின்ற 3 கி.மீ., 4 கி.மீ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்விக்குத் தொடர்பில்லை.

**திரு. ப. ரங்கநாதன்:** தொடர்புள்ள கேள்விதான் இது. இடையில் இருக்கின்ற அந்த 2 கி.மீ., 3 கி.மீ. சாலை ஊராட்சிப் பகுதியினுடைய சாலையாக இருக்கின்ற காரணத்தினால், அந்தச் சாலையை வெகு விரைவில் போடுவதற்கு நிதியாதாரம் இல்லை. ஆகவே, இதுபோன்ற சூழ்நிலையிலுள்ள சாலைகளை, N.H. மாநில நெடுஞ்சாலைத் துறை, இடையில் இருக்கின்ற ஊராட்சி சாலைகளை எல்லாம் ஒருங்கிணைத்து

[2007 மே 7

செயல்படுத்த மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் பொதுவாகக் குறிப்பிட்டுக்கொண்டிருக்கிறார். ஏதேனும் ஒரு சாலையைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்வார் என்று சொன்னால், அதற்குரிய விளக்கம் தரப்படும். இருந்தாலும், இதுபற்றித் தனிக் கேள்வி போட்டால் விளக்கமாகப் பதில் சொல்ல முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 173, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**173—**

## தூர்வாரும் பணி

***890—திருமதி பி. பத்மாவதி:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமருகல் ஒன்றியம், திருச்சங்காட்டான்குடியில் வடிகால் வாய்க்காலைத் தூர்வாருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமருகல் ஒன்றியம், திருச்சங்காட்டான்குடியில் இருக்கின்ற அந்த வடிகால் பகுதியைத் தூர்வார வேண்டுமென்று நான் முன்பு கேட்டிருந்தேன். அதில் ஒரு 2½ கி.மீ. வரையில் தூர்வாரப்பட்டிருக்கிறது. மற்றவற்றையும் தூர் வாரவேண்டும். அதோடு மட்டுமல்லாமல், திருச்சங்காட்டான்குடி பகுதியிலேயே திருமருகல் ஒன்றியம் என்பது கடைசிப் பகுதி. அது மிகவும் தாழ்வான பகுதி. வெள்ளக் காலங்களில், ஒரு நாள் மழை பெய்தால்கூட, அந்தப் பகுதியிலே உள்ள குடியிருப்புகள் முழுவதும் தண்ணீரில் மிதக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. எனவே, அந்த வடிகாலுக்கு முன்பு இருக்கின்ற நரிமணியாறு என்ற அந்த வடிகால் ஆற்றை முழுமையாகத் தூர்வாரினால்தான், அந்தப் பகுதியில் வெள்ளத்தைத் தடுக்கமுடியும். எனவே, அந்தவகையில், அந்த நரிமணியாற்றை தூர் எடுத்துத் தரவேண்டுமாய், அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



2007 மே 7]

*முற்பகல் 9-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சங்காட்டான்குடி என்ற கால்வாய், திருச்சங்காட்டான்குடியிலேயிருந்து 8½ கி.மீ. ஓடி, பிரமடையான் ஆற்றிலே கலக்கிறது. இந்த 8½ கிலோமீட்டர் தூரத்தில், கிட்டத்தட்ட 6 கி.மீ. தூரத்திற்கு, எங்கெங்கு அதிக பாதிப்பு இருக்கிறதோ, அந்தப் பகுதிகளிலே தூர்வாருவதற்காக, 2006-2007 ஆம் ஆண்டு தூர்வாரும் திட்டத்தின்கீழ், சுமார் 34 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு, அந்தப் பணிகள் இப்பொழுது நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. ஆக, அந்தத் திருச்சங்காட்டான்குடி கால்வாயைத் தூர்வாருவதிலே பெரும் பகுதி இந்த ஆண்டு நிறைவு பெறுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இதைத் தூர்வாருவீர்களா என்ற அந்தக் கேள்வியை கேட்டுவிட்டு, இன்னொரு ஆற்றை இப்பொழுது சொல்கிறார். அந்த ஆறு அடுத்தமுறை எடுத்துக்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. அந்த நரிமணியாற்றிலும் தூர் எடுக்கும் பணியைச் செய்துகொடுத்திட வேண்டுமென்ற வேண்டுகோளை மீண்டும் வைத்து அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ்.

**திரு. ஏ.கே. போஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருப்பரங்குன்றம் தொகுதியிலே, நிலையூர் கால்வாய்

என்ற ஒரு கால்வாய் இருக்கிறது. அம்மா அவர்களுடைய கடந்த கால ஆட்சியிலே, அந்தக் கால்வாய்க்குத் திட்டம் போட்ட நிலையில், இப்பொழுது ஆட்சி மாறிவிட்டபடியால், அந்தக் கால்வாயில் தூர்வாரும் பணியை இந்த அரசு செய்யுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நிலையூர் கால்வாயை வேண்டிய அளவிற்கு அகலப்படுத்தி, அதைப் பலப்படுத்தி, மேலும் பல பகுதிகளுக்கு பாசனத்திற்கு நீர் வழங்குகிற காரியத்தை, 1996 ஆம் ஆண்டு கலைஞர் ஆட்சி இருந்தபோது செய்தோம். நிலையூர் channel மட்டுமல்ல; மறைந்த மாண்புமிகு திரு. தங்கபாண்டியன் அவர்கள், கம்பிக்குடி வரையிலே அந்தக் கால்வாயை நீட்டித்துத் தரவேண்டுமென்று இந்த அவையிலே கேட்டுக்கொண்டிருந்தார்கள். கம்பிக்குடி கால்வாய் வரையிலே அந்தக் கால்வாயை நீட்டித் தருவதற்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுமதி அளித்து, அதற்கு நிதியையும் ஒதுக்கிவிட்டுத்தான் போனோம். நான் இப்பொழுது சமீபத்திலே செய்த review meeting-லே பார்த்தேன். ஆனால், கம்பிக்குடி கால்வாய் வரையிலே நீட்டித்துத் தருகிற அந்தப் பணியைக் கடந்த காலத்திலே ஏனோ விட்டுவிட்டார்கள். மீண்டும் இந்த அரசு பொறுப்பேற்றிருக்கிறது. நிலையூர் channel-ஐ கம்பிக்குடி வரையிலே நீட்டித்துத் தருகிற அந்தப் பணியை நிச்சயமாக அரசு எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்குள்ளே, 46.புதூர், லக்காபுரம், முத்துக்கவுண்டம்பாளையம் ஆகிய ஊராட்சிகளுக்கு வருகிற பெரும்பள்ளம் என்கிற வாய்க்கால் ஈரோடு தொகுதியிலே இருக்கிறது. அந்தப் பெரும்பள்ளம் வாய்க்கால் என்பது, அந்தக் காலத்திலே, அந்தப் பகுதியினுடைய நீராதாரமாக இருந்தது. நகரப் பகுதியாக மாறியதற்குப்பிறகு, இப்போது முழுமையாக அந்த வாய்க்கால் மூடப்பட்டிருக்கிறது. அதைத் தூர்வார மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா? அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக கீழ்பவானிக்குக் கீழேயிருக்கிற காளிங்கராயன், தடப்பள்ளி, அரக்கன்கோட்டம் ஆகிய கால்வாய்களில் பெரும்பகுதி தூர்ந்து போயிருக்கின்றன. குறிப்பாக, சிறப்பாக, காளிங்கராயன் கால்வாயிலே பார்த்தால், கால்வாய் எது, கரை எது, வயல் எது என்றில்லாமல், முழுக்க நீர்ப்பரப்பாகவே இருக்கிறது. தடப்பள்ளியிலும் பெரும் பகுதி குறைந்துபோயிருக்கிறது. அரக்கன்கோட்டத்தில் கொஞ்சநஞ்சம் இருப்பவை கல் கட்டடங்கள். அவை முழுவதும் நிரம்பியிருக்கின்றன. அதற்காகத்தான், சமீபத்திலே கீழ்பவானி விவசாயிகள் என்னைச் சந்தித்தபோது சொன்னேன். ஆண்டு முழுவதும் தண்ணீர் நிரம்பப் போய்க் கொண்டிருக்கிற பகுதி. ஒருமுறை, விவசாயிகள் தாங்கள் பயிரிடுவதை நிறுத்தினால், கலைஞருடைய அரசு தனிக் கவனம் செலுத்தி, அந்தக் கால்வாய்களைத் தூர்வாரி, பலப்படுத்துகிற காரியத்தைச் செய்யும். ஒவ்வொரு கால்வாய்க்கும் ஒரு ஆண்டு என்று பார்த்தால், மூன்று ஆண்டுக் காலத்திற்குள் கீழ்பவானி முழுவதிலுமுள்ள கால்வாய்கள் செப்பனிடப்படும் என்று நான் அவர்களிடத்திலே தெரிவித்திருக்கிறேன். அவர்கள் கலந்துபேசி, இதுகுறித்து என்னிடத்திலே தெரிவிப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு மத்திய அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி அவர்கள், என்னிடத்திலே தன்னோடு அழைத்துவந்த அந்த விவசாயிகளிடத்திலே பேசியபோது, அதை ஓரளவிற்கு ஒத்துக்கொண்டார்கள் என்று நேற்றைக்கு முன்தினம் என்னிடம் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, அந்தத் திட்டம் வந்தால், விவசாயிகள் ஒத்துக்கொண்டால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே கலந்து பேசி, அடுத்து என்ன செய்வது என்பதை இந்த அரசு அறிவிக்கும்.

முற்பகல் 9-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன்.

**திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னைக் கேள்வி நேரத்தில் அனுமதித்ததற்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய அச்சரப்பாக்கம் தொகுதி, முழுக்க முழுக்க விவசாயப் பகுதியாகவும், அதற்குப் பாசனம் தருகிற ஏராளமான ஏரிகளைக் கொண்டதாகவும் அமைந்துள்ள தொகுதியாகும். இரண்டு ஏரிகள் தூர்வாரலாம் என்று மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வாய்ப்பினைக் கொடுத்திருந்தாலும்,

அந்த இரண்டு ஏரிகளைத் தவிர்த்து பல பகுதிகளுக்கு, பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்கு பாசனம் தரக்கூடிய, நீர் தரக்கூடிய ஏரிகள் நிறைந்த பல பகுதிகளிலுள்ள மக்கள், தங்கள் பகுதி ஏரிகளையும் தூர்வாருவதற்கு ஆவன செய்யுங்கள் என்று கேட்டுக்கொள்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களிடம் நான் ஏற்கெனவே சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவுடனும் ஒரு பட்டியலைக் கொடுத்திருக்கிறேன். இப்போது அறிவிப்பிற்கு இரண்டு தினங்களுக்கு முன்பும் இந்த ஏரிகளின் பட்டியலைக் கொடுத்து தூர்வாருவதற்கு எனக்கு உதவிடுமாறும் கேட்டிருக்கிறேன். ஆகவே, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதியில் நான் கொடுத்திருக்கிற பட்டியலின் அடிப்படையில் இன்னும் பல ஏரிகளைத் தூர்வாருவதற்கு வாய்ப்பளிப்பார்களா என்று உங்கள்மூலமாகக் கேட்டு அமருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தொகுதியில் இருக்கிற அத்தனை ஏரிகளையும் ஒரே ஆண்டில் அரசு எடுத்து தூர்வாரிவிட முடியாது. பல திட்டங்களின்கீழ் நாம் தூர்வாருகிற பணியைச் செய்கிறோம். மாநில அரசினுடைய நிதியாதாரத்தின் அடிப்படையில் தூர்வாருகிறோம். நபார்டு வங்கியினிடத்திலே பணம் வாங்கிச் செய்கிறோம். சிலவற்றை வேறு சில திட்டங்களின்மூலமாகவும் செய்கிறோம். ஆக, எந்தெந்தத் திட்டத்தின்மூலம் மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியில் ஏரிகள் எடுத்துக்கொள்ளப்படமுடியுமோ, அவற்றை எடுத்துக்கொண்டு அரசு தூர்வாரும் என்பதற்கு நான் அவர்களுக்கு உறுதியளிக்கிறேன். அதே நேரத்தில், இந்தக் கேள்வி நேரத்தைப் பயன்படுத்திக்கொண்டு மீண்டும் நான் மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வொரு தொகுதியிலும் 2 ஏரிகளை, மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவிக்கிற அந்த ஏரிகளை எடுத்துத் தூர்வாருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்த அந்த ஆணைக்கேற்ப நான் என்னுடைய மானியக் கோரிக்கையிலே தெரிவித்திருக்கிறேன். இன்னும் பல எம்.எல்.ஏ-க்களிடமிருந்து அந்தப் பட்டியல் எனக்கு வரவில்லை. எனவே, இந்தக் கேள்வி நேரத்தைப் பயன்படுத்திக்கொண்டு அவர்களுக்கு அதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடப்பாடி நகரத்தின் வழியாகச் செல்லக்கூடிய சரபங்கா நதி தூர்வாரி, செப்பனிட்டுக் கொடுக்கப்படுமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு தனிக் கேள்வி போட்டால் முழு விவரத்தை அறிந்து நான் தெரிவிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் 2 ஏரிகளைத் தூர்வார 20 இலட்சம் ரூபாய் நிதியைத் தந்த மாண்புமிகு முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதோடு, அந்த 20 இலட்சம் ரூபாயை ஒரு சட்டமன்ற உறுப்பினர் தொகுதிக்குக் கொடுப்பதற்குப் பதிலாக 20 இலட்சம் ரூபாயில் ஒரு ஜே.சி.பி. அல்லது ஒரு பொக்லைன் மண் அள்ளும் இயந்திரத்தை ஒரு மாவட்டத்திற்கு பத்தோ அல்லது இருபதோ வாங்கிக்கொடுத்து, அதற்கு Driver-ஐயும், ஒரு உதவியாளரையும் நியமித்தால் எந்தக் குளம், ஏரி தூர் எடுக்க வேண்டுமோ அப்படி விவசாயிகள் பயன்படுத்துகின்ற வாய்க்கால், குளம் ஏரிகளைத் தூர் எடுப்பதற்கு அந்த விவசாயிகளுக்கு டீசல் மட்டும் கொடுத்து அதைப் பயன்படுத்தினால் எத்தனை நாட்கள் வேண்டுமானாலும் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று ஒரு புதிய திட்டத்தை இந்த அரசு நிறைவேற்றித் தருமா என்று தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை, துறையோடும், மாண்புமிகு முதல்வரோடும் கலந்து ஆலோசித்து, சாத்தியக்கூறுகள் இருந்தால் அரசு ஏற்றுக்கொள்ளும்; சாத்தியமில்லையென்றால் விட்டுவிடும். (சிரிப்பு)

[2007 மே 7

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த செங்கல்பட்டு மாவட்டத்திற்கு ஒரு சிறப்புப் பெயர் உண்டு. ஏரிகள் நிறைந்த மாவட்டமான அந்த மாவட்டத்திற்கு ஏரி மாவட்டம் என்ற பெயருண்டு. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்பொழுது ஒவ்வொரு தொகுதிக்கும் இரண்டிரண்டு ஏரிகளைத் தூர்வாருவதற்கான பரிந்துரையை சட்டமன்ற உறுப்பினர்களைச் செய்யச் சொல்லியிருக்கிறார்கள். அதை வரவேற்கிறோம். அதேசமயத்திலே, ஏரிகள் நிறைந்த மாவட்டமான காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டத்திற்கு சிறப்புச் சலுகைகளின் அடிப்படையிலே செய்ய வேண்டும். ஏனென்று சொன்னால், மற்ற மாவட்டங்களில் ஏரிகள் மிகக் குறைவு. ஆனால், காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களிலே அதிகமான ஏரிகள் இருக்கின்றன. எனவே, கூடுதலாக ஏரிகளைச் செப்பனிடுவதற்கு நம்முடைய அமைச்சர் முன்வருவாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததைப்போல் ஏரிகள் நிறைந்த மாவட்டம், செங்கல்பட்டு மாவட்டம்தான். அதனால் அந்த ஏரிகளைத் தூர்வார வேண்டுமென்று சென்ற முறை உலக வங்கி நிதி உதவியோடு பல ஏரிகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்பினால் ஒரு தனிக் கேள்வியோ அல்லது கவன ஈர்ப்புத் தீர்மானமோ கொண்டு வந்தால், மொத்தம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிபுரிந்த காலத்தில் எத்தனை ஏரிகளை, செங்கல்பட்டிலே தூர்வாரியிருக்கிறோம் என்கின்ற விவரத்தை முழுமையாக நான் அளிக்க இயலும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 174, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. செந்தில் பாலாஜி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.



2007 மே 7]

**174—**

## ஜவ்வரிசித் தொழிற்சாலை

***14584—திரு. வே. செந்தில் பாலாஜி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கரூர் தொகுதியில் ஜவ்வரிசித் தொழிற்சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கரூர் தொகுதியில் ஜவ்வரிசித் தொழிற்சாலை தொடங்கும் கருத்துரு அரசிடம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் தொகுதி விவசாயிகள் காவிரி, அமராவதி, நொய்யல் ஆகிய ஆறுகளின் பாசனத்தை நம்பி விவசாயம் செய்து வருகிறார்கள். இத்தகைய விவசாயப் பெருமக்கள் கரும்புக்கு அடுத்தபடியாக கிழங்கு பயிரிட்டு வருகிறார்கள். அத்தகைய கிழங்கினை விற்பனை செய்யும்பொழுது சேலம், இராசிபுரம், ஆத்தூர், நாமக்கல் ஆகிய பகுதிகளில் உள்ள தொழிற்சாலைகளின் உரிமையாளர்கள் இடைத்தரகர்கள்மூலம் அந்தக் கிழங்கினைப்பெற்று அங்கே ஜவ்வரிசி தயார்செய்து வருகிறார்கள். கரூர் தொகுதியிலுள்ள விவசாயப் பெருமக்கள் சேலத்திற்கும் ஆத்தூருக்கும் எடுத்துச் செல்கின்றபொழுது போக்குவரத்துச் செலவு, கமிஷன் தொகை போன்றவற்றைக் கழித்து மீதமுள்ள தொகையே விவசாயப் பெருமக்களுக்குக் கிடைக்கின்றன. ஆகையால், கரூர் தொகுதியில் கரும்புக்கு அடுத்தபடியாக கிழங்கு பயிரிடுவதால் ஜவ்வரிசித் தொழிற்சாலை அமைக்க அரசு பரிசீலனை செய்யுமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டத்தில் தற்போது 2,191 ஹெக்டர்

நிலப் பரப்பில் குச்சிக் கிழங்கு பயிர் செய்யப்பட்டு வருகிறது. ஜவ்வரிசித் தொழிற்சாலை தொடங்க சாத்தியக்கூறுகள் இங்கே உள்ளன. கரூர் தொகுதியில் இத்தொழிற்சாலை தொடங்க நிறைய முன்வரும்பட்சத்தில் மாவட்டத் தொழில் மையம்மூலம் தனியார்கள் அனைத்து உதவிகளும் செய்து தரப்படும். அவர்களுக்கு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டத்தில் ஏற்கெனவே இருந்த இரண்டு, மூன்று factory-களும் தற்போது மூடப்பட்டுள்ளன. ஆகையால் ஈரோடு மாவட்டத்தையும், கரூர் மாவட்டத்தையும் இணைக்கின்ற வகையில் நொய்யல் பகுதியில் அல்லது வேறு சில பகுதிகளில் அரசின்மூலம் ஜவ்வரிசித் தொழிற்சாலை அமைக்கின்ற முயற்சியை அரசு பரிசீலிக்குமா என மீண்டும் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Sago உற்பத்திக்காக அரசு இதுவரை தமிழகத்திலே எங்கும் தொழிற்சாலையைத் தொடங்கியது இல்லை. தனியார் Sago தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் ஜவ்வரிசிக் குருணை மற்றும் மாவு ஆகியவற்றை விற்பனை செய்து அவற்றிற்கு நல்ல விலை கிடைக்கச் செய்ய தமிழக அரசு Sago Serve எனப்படும் தொழில் கூட்டுறவுச் சங்கம் ஒன்றை சேலத்தில் நிறுவி நடத்தி வருகிறது. மொத்தம் தமிழ்நாட்டில் உள்ள 550-க்கும் மேற்பட்ட Sago உற்பத்தி factory-களில் 364 நிறுவனங்கள் அதிலே மெம்பர்களாக உள்ளன. ஆகவே, இதேபோல உற்பத்தி நிறுவனங்களை, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியார்களுக்கு அறிவுரை கொடுத்து அவர்கள் கரூர் பகுதியிலே தொழிற்சாலைகளை அமைக்க முன் வந்தால் அரசு பல்வேறு உதவிகளைச் செய்யத் தயாராக இருக்கிறது. சமீபத்திலே மானியக் கோரிக்கையிலேகூட மாண்புமிகு முதல்வர் அவர்கள் பின்தங்கிய வட்டாரங்களுக்கு தொழில் தொடங்க சலுகைகளை அறிவித்திருக்கிறார்கள். அதன்மூலமாகக்கூட சலுகைபெற்று தொழிற்சாலைகளை தனியார்கள் தொடங்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.



**திரு. அக்ரி எஸ். எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரவள்ளிக் கிழங்குகளை விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்கின்றபொழுது ஏற்படுகின்ற பிரச்சினைகளைப் போக்குவதற்காக அரசின் சார்பிலே மரவள்ளிக் கிழங்குகளை விற்பனை செய்வதற்கு விற்பனை மையம் அமைக்கப்படுமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பிலேதான் Sago Serve என்ற தொழில் கூட்டுறவுச் சங்கம் சேலத்திலே அமைக்கப்பட்டு ஆண்டுக்கு 1,62,000 டன் Sago வாங்கப்பட்டு, அவை பகிரங்க ஏலம்மூலமாக 223.79 கோடி ரூபாய்க்கு விற்கப்பட்டு விவசாயிகளுக்கு நல்ல இலாபம் கிடைப்பதற்கு தமிழக அரசு ஏற்கெனவே ஏற்பாடுகள் செய்துள்ளது. இப்பொழுது ஒரு கிலோ Sago 19 ரூபாய் என்ற அளவிலே விற்கப்படுகிறது. விவசாயிகளுக்கு உரிய இலாபம் கிடைக்கிறது.

முற்பகல் 10-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன். (குறுக்கீடு) அவர் கேட்ட கேள்வி மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாதது. திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்ருட்டி என்றாலே, அது பலாப்பழத்திற்கு பெயர் பெற்ற ஊர். அதுவும், இந்தியாவிலே, உலக அளவிலே மிகவும் இனிப்பான, சுவையான பலாப்பழம் கிடைக்கின்ற அந்த பண்ருட்டி தொகுதியில், விவசாயிகள் அதிக அளவில் பலா மரங்களைப் பயிர் செய்து, பலாப்பழங்களை உற்பத்தி செய்கிறார்கள். கேரளா, தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகளில், பலாச் சுளைகளைப் பதப்படுத்தி, அவற்றை தேனோடு கலந்து, ஜாம் உள்ளிட்ட பல்வேறு வகையான இனிப்பு உணவுப் பண்டங்களைத் தயார் செய்கிறார்கள். அதுபோன்று, எனது பண்ருட்டி தொகுதியில் பலாப்பழத்தைக் கொண்டு—ஏனென்றால், இரண்டு நாட்களுக்கு மேலே போனால், பழுத்துவிடும். அதை வைக்க முடியாது. அதனால், விவசாயிகள் அடிமாட்டு விலைக்கு அந்தப் பழங்களை விற்க வேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளாகிறார்கள். அதனால், நம்முடைய மாண்புமிகு சிறு தொழில் துறை அமைச்சர் அவர்கள் அந்தப் பலாப்பழத்தைக் கொண்டு—ஜாம் அல்லது இனிப்பான உணவுப் பண்டங்களைத் தயார் செய்வதற்கு, அரசே ஒரு தொழில் கூடத்தை அமைப்பதற்கு முன்வருமா என்பதைப் பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்வி, ஜவ்வரிசித் தொழிற்சாலை அமைப்பது தொடர்பானது.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்கப்பட வேண்டிய கேள்வி; இடம் மாறிக் கேட்டிருக்கிறார்கள். இருந்தாலும், நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு, தொழிற்சாலைகளை அமைப்பதற்கு, தொழில் முனைவோர்களுக்கு பல்வேறு வகையிலே மானிய நிதியுதவிகள் அளிப்பதற்காக இந்த ஆண்டு 20 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறது. நீங்கள் தனியாருக்கு சிபாரிசு செய்து, மாவட்டத் தொழில் மையம்மூலமாக விரைவிலே அனுமதியைப் பெற்று, தொழிற்சாலைகள் தொடங்குவதற்கு ஏற்பாடு செய்யலாம். முதலீட்டு மானியமும், மின் மானியமும் விரைவிலே பெறலாம். அதற்குத் தாங்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 175, திரு. த. தியோடர் ரெஜினால்டு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**175—**

### பல் சிகிச்சைப் பிரிவு

***13748—திரு. த. தியோடர் ரெஜினால்டு:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பத்மநாபபுரம் தொகுதி, பத்மநாபபுரம் அரசு தலைமை மருத்துவமனையில் பல் சிகிச்சைப் பிரிவு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பத்மநாபபுரம் அரசு தலைமை மருத்துவமனையில் ஏற்கெனவே பல் சிகிச்சைப் பிரிவு செயல்பட்டு வருவதால், மேற்படி மருத்துவமனைக்குத் தனியாக பல் சிகிச்சை மையம் அமைக்கத் தற்போது அவசியம் எழவில்லை.

**திரு. த. தியோடர் ரெஜினால்டு:** மாண்புமிகு பேரவைத் தலைவர்





அவர்களே, என்னுடைய தொகுதியிலுள்ள பத்மநாபபுரம் அரசு தலைமை மருத்துவமனை, முன்பு தாலுகா மருத்துவமனையாக இருந்தது. கடந்த ஆட்சியில் அதைத் தலைமை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தினார்கள். பல் சிகிச்சைப் பிரிவிற்காக ஒரு மருத்துவரையும் நியமனம் செய்தார்கள். ஆனால், மாவட்ட மருத்துவமனைக்குரிய எந்தவிதமான அடிப்படை வசதிகளும் செய்யப்படவில்லை. நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர், முத்தமிழறிஞர் அவர்களுடைய உதவியோடு, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் தற்போது அங்கே பல பிரிவுகளைக் கொண்டு வந்திருக்கிறார்கள். விபத்து அவசர சிகிச்சைப் பிரிவு, ஒருங்கிணைந்த மகப்பேறு மருத்துவ சிகிச்சைப் பிரிவு என பல்வேறு மருத்துவ சிகிச்சைப் பிரிவுகளைக் கொண்டுவந்திருக்கிறார்கள். ஆனால், பல் மருத்துவ சிகிச்சைப் பிரிவிற்கு ஏற்கெனவே நியமனம் செய்யப்பட்ட பல் மருத்துவர், அங்கே ஒழுங்காகச் சிகிச்சை அளிக்காமல் இருக்கிறார் என்பதை நான் இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பல் மருத்துவமானது, இப்போது இன்றியமையாத ஒன்றாகக் காணப்படுகிறது. கிராமங்கள் சுற்றியுள்ள எனது தொகுதியில், பல் மருத்துவ சிகிச்சைக்கு சிறப்பானதொரு மருத்துவ சேவையை அரசினால் கொடுக்க முடியவில்லையோ என்று மக்கள் நினைக்கிறார்கள். எனவே, பத்மநாபபுரம், அரசு மாவட்ட மருத்துவமனையில், பல் மருத்துவ சிகிச்சைப் பிரிவிற்கு நல்ல உபகரணங்களை வழங்கி, போதிய மருந்துகளையும் கொடுத்து, அந்தப் பிரிவை விரிவாக்குவதற்குத் தனிக் கவனம் செலுத்தி, ஏழையெளிய, குக்கிராம மக்களுக்குப் பயன்படுகிற வகையில், அந்தப் பிரிவை இன்னும் முழுமைப்படுத்துவதற்கு, சிறப்பாக நவீனப்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, தினசரி 56 பல் நோயாளிகள் அங்கே வந்துகொண்டிருக்கிறார்கள். தற்போது அங்கே சிகிச்சை வசதிகள் நிறைவாக இருக்கின்றன. இன்னும் தேவையிருக்குமென்று சொன்னால், சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், எது எது தேவை என்று என்னிடம் எழுதிக் கொடுத்தால், நிச்சயமாக தலைவர் கலைஞர் அரசில் கனிவோடு பரிசீலித்து, வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2006-2007 ஆம் ஆண்டிற்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறைக்கான மானியக் கோரிக்கை கொள்கை விளக்கக் குறிப்பில், அத்தியாயம் மூன்றில், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் என்ற தலைப்பில், புதிய திட்டங்களுக்கான அறிவிப்பில் பாமத்தி வேலூர் அரசு மருத்துவமனை உள்ளிட்ட 13 அரசு வட்டத் தலைமை மருத்துவமனைகளில் ரூ.108.94 இலட்சம் செலவில் பல் சிகிச்சைப் பிரிவுகள் தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. பல நல்ல சிறப்பான அம்சங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். குறிப்பாக, பராமரிப்புப் பணிக்காக 12 இலட்சம் ரூபாய், சிறப்பு விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு தொடங்குவதற்காக . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாகக் கேள்வியைக் கேளுங்கள்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** ரூ.65.5 இலட்சம் ஒதுக்கி அறிவித்திருக்கிறார்கள். அதற்காக நன்றி கூறிக்கொண்டு, கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்ட பல் மருத்துவ சிகிச்சைப் பிரிவை பாமத்தி வேலூர் அரசு மருத்துவமனையில் இந்த ஆண்டு ஏற்படுத்திட ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்பொழுது மொத்தம் 130 மருத்துவமனைகளில் பல் சிகிச்சைப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. 2007-2008-ல் மேலும் 52 அரசு வட்ட மருத்துவமனைகளுக்கு பல் சிகிச்சை மருத்துவர்களை நியமிக்க வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். உறுப்பினருடைய ஊருக்கும் முன்னுரிமை வழங்கி, வேண்டிய தேவைகளை இந்த அரசாங்கம் நிறைவு செய்து கொடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவத் துறை சார்ந்த ஒரு கேள்வி. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் திருப்பூர் மாவட்ட மருத்துவமனைக்கு நேரிலே வந்து ஆய்வு செய்து, சில மராமத்துப் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். அதற்காக நன்றி. அங்கு நடைபெறுகிற





தொடர்ச்சியான விபத்துகளால் பலர் பாதிக்கப்பட்டு வருகிற நிலையில், ஜனத்தொகை எண்ணிக்கைக்கு ஏற்ப, கூடுதலான மருத்துவர் பணியிடங்களை உருவாக்க வேண்டும். அதைப்போல, ஊழியர்களுடைய எண்ணிக்கையையும் அதிகப்படுத்தி, அந்தப் பணியிடங்களைப் பூர்த்தி செய்வதற்கு அரசு முன்வருமா என்று கேட்டுக்கொள்கிறேன். அடிக்கடி விபத்து நடக்கிறது. போதுமான அளவு அறுவை சிகிச்சை மருத்துவர்கள் இல்லை. ஒருவரோ, இருவரோ இருக்கிறார்கள். திரும்பத் திரும்ப அவர்களை அழைக்கிறபொழுது, உரிய நேரத்திலே வருவது தடைபடுகிறது. பல உயிர்களைப் பாதுகாப்பதிலேகூட சில நேரங்களில் தடங்கல் ஏற்படுகிறது. ஆகவே, மருத்துவர்களுடைய எண்ணிக்கையை அதிகப்படுத்த மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், அந்த மருத்துவமனையை சென்று ஆய்வு செய்த நேரத்திலே, இந்தக் கோரிக்கையை நம்முடைய உறுப்பினர் அவர்கள் என்னிடத்திலே வைத்தார்கள். தற்பொழுது அரசாங்கத்திலே ஒரு கருத்துரு இருக்கிறது. 15 ஆண்டு காலத்திற்கு முன்புதான் ஒவ்வொரு மருத்துவமனைக்கும் அரசு மருத்துவர்களை நியமித்திருக்கிறார்கள். இந்த 15 ஆண்டு காலத்திலே மருத்துவர்களின் எண்ணிக்கை உயர்த்தப்படவில்லை. ஆகவே, இந்த ஆண்டிலே அனைத்து மருத்துவமனைகளுக்கும் மருத்துவர்களின் எண்ணிக்கையை உயர்த்துவதற்கு வேண்டிய முயற்சியை நம்முடைய அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கிறது. நம்முடைய முதலமைச்சர் அவர்களிடத்திலே இந்தக் குறைகளைச் சொல்லியிருக்கிறோம். அவரும் அதற்கு வேண்டிய நிவாரணப் பணிகளுக்கு எங்களுக்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். அதன்மீது சரியான நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். திருப்பூரில் மக்கள் அதிகமாக வருவதை நானே நேராக அன்றைக்கு O.P.-யிலே பார்த்தேன். ஆகவே, அதற்கு முன்னுரிமை வழங்கி வேண்டிய உதவிகள் செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விபத்திலே படுகாயமுற்றவர்களுக்கு அரசு மருத்துவமனைகளில் scan எடுக்கிறபொழுது, அதற்குரிய கட்டணம் செலுத்த வேண்டுமென்று

[2007 மே 7

கட்டாயப்படுத்துகிறார்கள். ஒரு சாதாரண நோயாளியால் முன்னேற்பாடாகக் கட்டணம் கொண்டுபோய் செலுத்த முடியும். ஆனால், விபத்திலே கடுமையாக படுகாயமுற்றவர்களிடம், நீங்கள் கட்டணம் செலுத்தினால்தான் scan எடுக்க முடியும் என்று சொல்வது பொருத்தமாக இருக்காது. ஆகவே, அரசு மருத்துவமனைகளில் நிலவிக் கொண்டிருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையை மாற்றுவதற்கு விசேஷமான ஏற்பாட்டை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனைகளில் M.R.I. scan, 64 slice C.T. scan போன்ற விலையுயர்ந்த மருத்துவக் கருவிகள் எல்லாம் நம்முடைய Tamil Nadu Medical Services Corporation-லிருந்து வாங்கிக் கொடுத்திருக்கிறோம். அரசாங்கத்தினுடைய அங்கமாக இருக்கக்கூடிய அங்கேயிருந்து வாங்கும்போது, வெளியில் கட்டணம் வாங்குவதைவிட பாதி அளவுக்கு குறைத்து வாங்கிக்கொண்டிருக்கிறோம். அதனுடைய maintenance-க்காகவும், அங்கே பணிபுரியும் ஊழியர்கள் சம்பளத்திற்காகவும் ஒரு குறிப்பிட்ட தொகையை ஒதுக்கீடு செய்திருக்கிறோம். ஆகவே, அங்கே அந்தப் பணிகள் சிறப்பாக நடந்துகொண்டிருக்கின்றன. ஒரு சில இடங்களில் இதுபோன்ற பிரச்சினைகள் வருகின்றன. அதையும் யோசித்து எதிர்காலத்திலே அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பரஞ்ஜோதி.

**திரு. மு. பரஞ்ஜோதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனையில் சிறப்பு மருத்துவர்கள் என்று சொல்லக்கூடிய பொது மருத்துவத்திற்குரிய M.D. டாக்டர், கண் மருத்துவர், பல் மருத்துவர், ENT டாக்டர் ஆகிய பணியிடங்கள் நீண்ட நாட்களாகக் காலியாக இருந்துகொண்டிருக்கின்றன. இந்தப் பணியிடங்களை நிரப்புவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, D.M.S. side-லும், D.M.E. side-லும், ஏறத்தாழ 99 சதவீதம் அளவிற்குப் பணியிடங்களை நிரப்பியிருக்கிறோம். அவர்கள் join பண்ணுவதற்கு நான்கு நாட்கள், ஒரு வாரம்,



2007 மே 7]

ஆகியிருக்குமேயொழிய, எல்லா இடங்களும் நிரப்பப்பட்டிருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் விஷ்ணுபிரசாத்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பல் போனால், சொல் போச்சு' என்று சொல்வார்கள். நம்முடைய உடலில் ஏற்படக்கூடிய அத்தனை infections-களும் oral cavity வழியாகத்தான் வருகிறது. எப்படி பொது மருத்துவமனைக்கு ஈடாக பல் மருத்துவமனை ஏற்படுத்தப்பட்டதோ, அதைப்போல மருத்துவப் பல்கலைக்கழகங்களுக்கு ஈடாக, பல் மருத்துவப் பல்கலைக்கழகங்களை ஏற்படுத்த இந்த அரசு முன்வருமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மருத்துவப் பல்கலைக்கழகம் இருக்கிறது. அதற்கே பணிகள் போதுமானதாக இருக்கின்றன. எதிர்காலத்திலே இப்படிப்பட்ட கல்லூரிகள் நிறைய வருகின்ற நேரத்திலே அரசாங்கம் ஆய்ந்து வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 176, திரு. ப. டில்லி பாபு, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**176—**

### தரம் உயர்த்துதல்

***20591—திரு. ப. டில்லி பாபு:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், அரூர் ஒன்றியம், கொளகம்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தருமபுரி மாவட்டம், அரூர் ஒன்றியம், கொளகம்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்த கருத்துரு எதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே தருமபுரி மாவட்டம், வாழ்க்கைத் தரம், கல்வி வளர்ச்சி இரண்டிலும் மிகவும் பின்தங்கியதாக இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நன்றாக அறிவார்கள். அவர் தருமபுரிக்கு வருகை தந்தபோது தருமபுரி மாவட்டத்திற்கு கல்வித் துறையில் கூடுதலாக கவனம் செலுத்துவதாக அறிவித்திருக்கிறார். ஏறக்குறைய அரூர் சட்டமன்றத் தொகுதியிலே, அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய கொளகம்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தக்கூடிய நேரத்தில் அரூர் பகுதியில் 58 சதவிகித மக்கள் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழக்கூடிய பகுதியாகும். மாவட்டத்தினுடைய தொடக்கப் பள்ளியினுடைய எண்ணிக்கைக்கு ஏற்ப அங்கு உயர்நிலைப் பள்ளிகள் அமையவில்லை. 159 தொடக்கப் பள்ளிகள் இருக்கக்கூடிய அந்த அரூர் ஒன்றியத்தில் வெறும் 10 உயர்நிலைப் பள்ளிகள் மட்டுமே இன்று வரை இருந்துகொண்டிருக்கின்றன. 6 அரசு மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. ஆக, 34 பஞ்சாயத்துகள், சுமார் 262 கிராமங்களை உள்ளடக்கியுள்ள அந்தப் பகுதிக்கு 6 கி.மீ. தூரம்வரை சென்றால்தான் உயர்நிலைப் பள்ளி என்ற நிலை இருந்துகொண்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கல்வி மேம்பாட்டைய பல்வேறுபட்ட நிதி ஒதுக்கீட்டினையும், ஆக்கபூர்வமான பல பணிகளை மேற்கொள்கிறபட்சத்தில் தற்போது 228 மாணவர்கள் பயில்கின்ற அந்தப் பள்ளியில் 40 மாணவர்கள் எட்டாம் வகுப்பு முடித்துவிட்டு உயர்நிலைப் பள்ளிக்குச் செல்ல வேண்டிய ஒரு நிலைமை இருக்கிறது. ஆகவே, ஏறக்குறைய இரண்டரை ஏக்கர் நிலத்தினை அங்கே அந்தப் பொது மக்கள் வாங்கி வைத்திருக்கிறார்கள். இப்போதுகூட எட்டு அறைகளைக் கொண்ட ஒரு கட்டடம் உள்ளது. அந்த அடிப்படையில் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டில்லி பாபு, கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அப்பள்ளியைத் தரம் உயர்த்தி உயர்நிலைப் பள்ளியாக அமைத்துத் தருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக கேட்க விரும்புகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த பல்வேறு கருத்துகள், அந்தப் பகுதியைப் பொறுத்தவரையில் நியாயமான கருத்துகள் என்பதை இந்த அரசு உணர்ந்து இருக்கிறது. அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய பள்ளிகளிலே, தருமபுரி மாவட்டத்தில் 10 பள்ளிகள்தான் இப்போது அங்கே உயர்நிலைப் பள்ளிகளாக இருக்கின்றன என்ற ஒரு தகவலை அவர் சொன்னார். நான் இந்த அவைக்குச் சொல்கிறேன். கடந்த முறை தலைவர் கலைஞர் அவர்கள், அந்த 10 பள்ளிகளிலே, 7 பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தி இருக்கிறார்கள் என்பதை நான் அவருடைய கவனத்திற்கும், இந்த அவையினுடைய கவனத்திற்கும் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இப்போதுகூட, கொளகம்பட்டியிலிருந்து பக்கத்திலே இருக்கக்கூடிய அரூர் செல்ல வேண்டுமென்று சொன்னால், 8 கி.மீ. செல்ல வேண்டும். அவர்கள் அதற்கான நிலத்தினை இலவசமாகக் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். பொதுமக்களுடைய பங்குத் தொகை இன்னும் செலுத்தப்படவில்லையென்று நான் அறிகிறேன். எனவே, அவற்றிற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, அரசுக்கு அந்த முன்மொழிவுகள் வருகிறபோது நிச்சயமாக இந்த ஆண்டு தரம் உயர்த்தக்கூடிய பள்ளிகளிலே உறுப்பினர் சொல்லக்கூடிய அந்தப் பள்ளிக்கும் முன்னுரிமை வழங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது மக்களுடைய நிதியும், அதற்குண்டான இடமும், அத்தனையும் இந்த ஆண்டிலேயே நாங்கள் வழங்குகின்றோம். ஆக, தரம் உயர்த்துகின்ற பள்ளிகளினுடைய பட்டியலிலே, கொளகம்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியைச் சேர்த்து தரம் உயர்த்துவதற்கு, மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்வந்ததற்கு நன்றி தெரிவித்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. ஹசன் அலி.

[2007 மே 7

**திரு. கு. ஹசன் அலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரத்திலே அரசு உதவிபெறும் தனியார் உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளே உள்ளன. நகராட்சியில் ஓர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி மட்டுமே உள்ளது. ஆண்களுக்குத் தனியாக அரசு உயர்நிலைப் பள்ளி அல்லது மேல்நிலைப் பள்ளி இல்லை. ஏழை மாணவர்கள் படிப்பதற்கு வசதியாக நகராட்சியில் உள்ள அறிஞர் அண்ணா நடுநிலைப் பள்ளியை வரும் ஆண்டில் அரசு ஆண்கள் உயர்நிலைப் பள்ளியாக மாற்றலாம். அதற்கு இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை உங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பள்ளியிலே பயிலக்கூடிய மாணவர்களுடைய எண்ணிக்கை மற்றும் போதுமான இடவசதியுடன், அங்கே அந்தப் பள்ளியை உயர்த்தக்கூடிய சாத்தியக்கூறுகள் அமையுமானால் நிச்சயமாக அரசு அதுகுறித்துப் பரிசீலனை செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. தங்கமணி.

**திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படவீடு பேரூராட்சி, பச்சாம்பாளையம் என்ற நடுநிலைப் பள்ளியினை, உயர்நிலைப் பள்ளியாக்க வேண்டுமென்று, அரசுக்கு ரூ. 1,01,000 பணம் கட்டி ஓராண்டிற்கு மேலாகிறது. அங்கிருந்து செல்கிறவர்கள் எல்லாம் 5 கி.மீ. தூரம் சென்றால்தான் மேல்நிலைப் பள்ளிக்குச் செல்ல முடியும் என்கிற காரணத்தால் மாண்புமிகு அமைச்சரவர்கள் அந்தப் பள்ளியைத் தரம் உயர்த்த முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நடுநிலைப் பள்ளியிலிருந்து 5 கி.மீ.-க்கு மேலே ஒரு உயர்நிலைப் பள்ளிக்குச் செல்லவேண்டிய சூழ்நிலை இருந்தால், அந்தப் பள்ளியைத் தரம் உயர்த்தக்கூடிய வாய்ப்பு நிச்சயமாக இருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடக்கூடிய அந்தக் கோரிக்கையினை அரசு நிச்சயமாகக் கனிவோடு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.



2007 மே 7]

*முற்பகல் 10-15*

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில், வயலூர் என்ற கிராமத்தில் ஒரு தனியார் நிதியுதவி பெறும் ஆரம்பப் பள்ளி இருக்கிறது. அதற்கு இடமோ, கட்டட வசதியோ செய்ய முடியாத காரணத்தால், மாணவர்கள் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, தனியார் நிதி உதவி பெறும் பள்ளி இருந்தாலும், அங்கே புதியதாக ஒரு ஆரம்பப் பள்ளியைத் தொடங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பள்ளி சரியாகச் செயல்பட முடியவில்லை என்று சொன்னால், அந்த நிர்வாகம் அப்பள்ளியை அரசுக்கே ஒப்படைக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருந்தால், அரசு ஏற்றுக்கொள்ள முடியும். அந்த நிலத்தையும், கட்டடத்தையும் அந்தப் பள்ளியே அரசுக்குத் தர முன்வந்தால் நலமாக அமையும். அவ்வாறு அந்தச் சூழ்நிலை ஏற்படாதபட்சத்தில், அங்கே புதிதாக ஒரு தொடக்கப் பள்ளியைத் தொடங்குவதற்கு என்னென்ன சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவோ அவற்றை நிச்சயமாக அரசு ஆராயும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பள்ளிக் கல்வித் துறையால் வழங்கப்படும் இலவச மிதி வண்டிகள் என்னுடைய தொகுதியில், குறிப்பாக, 50 விழுக்காட்டிற்கு மேற்பட்ட ஆதி திராவிட மாணவ, மாணவிகளுக்கு இதுவரை வழங்கப்படவில்லை. ஏற்கெனவே அமைச்சரிடம் முறையிட்டிருக்கிறோம். இந்த முறைகேடான கல்வித் துறை அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செல்வம், பள்ளியைத் தரம் உயர்த்துதல் சம்பந்தமான கேள்வி. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் செல்வம் அவர்கள் இதுகுறித்து ஏற்கெனவே என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தார்கள். அவர் கொண்டுவந்த உடனே அங்கு இருக்கக்கூடிய கல்வித் துறையினுடைய அதிகாரிகளையெல்லாம்

அழைத்து, அத்தகைய நிலை இருக்குமானால் உடனடியாக அந்தக் குறை போக்கப்பட வேண்டுமென்றும், அங்கே இருக்கக்கூடிய மாணவர்களுக்கு, குறிப்பாக, ஆதி திராவிட மாணவர்களுக்கு நிச்சயமாக அந்த சைக்கிள்களை உடனடியாக வழங்க வேண்டுமென்றும் நான் உத்தரவிட்டிருக்கிறேன். நிச்சயமாக அந்தப் பணியை விரைவாக நாங்கள் நிறைவேற்றி முடிப்போம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 177, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**177—**

## பாதுகாப்பு அகழி

***5345—திரு. ஓ.கே. சின்னராஜ்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி மலையோரக் கிராமங்களில் காட்டு யானைகள் சேதம் விளைவிப்பதால், அப்பகுதிகளில் அகழி வெட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மேட்டுப்பாளையம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் 2006-2007 ஆம் ஆண்டுகளில் யானைகளினால் ஏற்படும் சேதத்தைத் தடுக்க 15 யானை சேதத் தடுப்புக் காவலர்கள் நியமிக்கப்பட்டனர். மேலும், அதிக ஒளி உமிழும் விளக்குகள் 20 வழங்கப்பட்டன. இது தவிர, அகழிகள் வெட்டும் பணி 0.49 கிலோ மீட்டர் நீளத்திற்கு ரூபாய் 1.15 இலட்சத்தில் செய்யப்பட்டுள்ளது. 16.75 கிலோமீட்டர் நீளத்திற்கு ரூபாய் 26.8 இலட்சம் செலவில் சூரிய மின் வேலி அமைக்கப்பட்டுள்ளது. அகழியைவிட சூரிய மின் வேலி அமைப்பது சிறப்பாகக் காணப்படுவதால், 2007-2008 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து இப்பகுதிகளில் சூரிய மின் வேலி அமைக்கும் பணி தொடரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ்.



**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் தொகுதி, மேற்குத் தொடர்ச்சி மலையினுடைய அடிவாரத்தில் அமைந்திருக்கக்கூடிய பகுதி. முழுக்க, முழுக்க மலையும், மலையைச் சார்ந்த பகுதியாக இருக்கின்ற காரணத்தினாலே, மலையிலே ஏறத்தாழ 100-க்கு மேற்பட்ட குக்கிராமங்களில் 20 ஆயிரத்திற்கு மேற்பட்ட மலைவாழ் மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். அதேபோல, மலையினுடைய தாழ்வாரத்தில், நிலப்பரப்பில் ஏறத்தாழ 20 ஆயிரத்திற்கு மேற்பட்ட விவசாயக் குடும்பங்கள் ஆங்காங்கே குடியமர்ந்து அங்கே விவசாயம் செய்து வருகின்றார்கள். இரவு நேரங்களிலே, மலைப் பகுதியிலே வாழ்ந்து வருகின்ற யானைகள் தற்பொழுது கூட்டம், கூட்டமாக மக்கள் வாழ்கின்ற பகுதிக்கு வந்து, விவசாய விளைபொருட்களையும், உயிர்களையும் சேதப்படுத்துகின்ற நிலை தொடர்ந்து இருந்து வந்துகொண்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்கின்றபொழுது, மின் வேலி அமைத்துத் தந்திருப்பதாக இங்கே குறிப்பிட்டிருக்கின்றார்கள். 16 கிலோ மீட்டர் தொலைவிலே மின் வேலி அமைத்துத் தந்ததாகச் சொல்லி இருக்கின்றார்கள். குறிப்பாக, மின் வேலியை அமைத்துக் கொடுக்கின்றபொழுது, எனது தொகுதியிலே ஏறத்தாழ 100 கிலோ மீட்டர் சுற்றளவில் தற்போது 16 கிலோ மீட்டர் தொலைவிலேதான் அமைக்கப்பட்டிருக்கிறது. அப்படி அமைக்கப்பட்டிருந்தாலும்கூட, அந்த மின் வேலி முழுமையாகப் பயன்பட வேண்டுமென்று சொன்னால், அதற்கான பராமரிப்புக்குப் பணியாளர்களை நியமிக்கவேண்டும். ஏனென்று சொன்னால், அந்த மின் வேலி செயல் இழக்கின்ற நிலை ஏற்படுகிறது. மலைப் பகுதியிலே இருக்கிற செடி, கொடிகள் படர்கின்றபோது அந்த மின் வேலி செயலிழந்துப் போகிற சூழ்நிலை, தற்போது போடப்பட்டிருக்கிற 16 கிலோ மீட்டரிலும் இருக்கின்றது. ஆகவே, அந்த 16 கிலோ மீட்டர் போடப்பட்டிருக்கிற மின் வேலியை பராமரிக்கின்ற வகையிலே மின் வேலிக்குப் பராமரிப்புப் பணியாளர்களை நியமிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே தெரிவித்து, மலையிலே இருக்கிற நூற்றுக்கும் மேற்பட்ட குக்கிராமங்களிலே...

(முற்பகல் 10-20)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சின்னராஜ், கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** கேள்விதான். அந்தக் குக்கிராமங்களிலே வாழ்ந்து கொண்டிருக்கிற மக்கள், ஒவ்வொரு குடியிருப்பிலும் ஏறத்தாழ 20, 30 குடும்பம் என்று வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அந்தப்

பகுதியிலே மின் வேலியை அமைப்பதைவிட, அகழிகள் அமைக்கின்றபோது அந்தக் குடியிருப்புகளுக்கு யானைகள் செல்லாத ஒரு சூழ்நிலையை உருவாக்க முடியும். ஆகவே, அந்தப் பகுதிகளைக் கண்டறிந்து, மலைவாழ் மக்கள் வாழ்கிற அந்தப் பகுதிக்கு சுற்றுப்புறங்களிலே அகழி அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இவற்றுக்கும் மேலாக. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) என்னங்க, நீங்கள் சொல்லிக்கொண்டே அரை மணி நேரமாக ஒரே கேள்வியிலேயே இருந்தீர்கள் என்றால் எப்படி? (குறுக்கீடு) அமைச்சர் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற இடம் கோவை மாவட்டத்தினுடைய எல்லைப் பகுதி. அந்த எல்லைப் பகுதிகள் என்பது நம்முடைய தமிழகத்திலிருந்து யானைகள் கல்லாறு, ஜக்கனாரி யானை வழித்தடங்கள் மூலமாகக் கூட்டம் கூட்டமாக கேரளாவிற்கு இடம் பெயர்ந்து செல்லும். யானைகள் பொதுவாக ஓரிடத்தில் இருப்பது இல்லை. ஒரு நாளைக்கு 20 கிலோ மீட்டர் அளவிற்கு அவை இடம் பெயர்ந்து கொண்டிருக்கும். அந்த அளவிலே அது ஒரு யானை வழித் தடத்தின் அருகில் இருந்தது. சென்ற ஆண்டு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள்கூட அந்த யானை வழித் தடத்திற்கு, இதுவரை இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு, அந்த இடத்தையெல்லாம் அரசு கையகப்படுத்தி, அந்த யானைகள் எளிதாகச் செல்வதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று செய்து தந்தார்கள். எனவே, அந்தப் பகுதியில் யானைகள் இருக்கிற காரணத்தால் சில பாதிப்புகள் இருக்கும். எனவேதான், விவசாயிகளிடம் நாங்கள் வலியுறுத்தி இருக்கிறோம், யானைகள் விரும்பி உண்கின்ற உணவான கரும்பு, வாழை அல்லது சோளம் போன்ற பயிர்கள் பயிரிடுவதைத் தவிர்த்திட வேண்டுமென்று அவர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

இருந்தாலும், யானைகள் வராமல் இருப்பதற்கு சூரிய மின் வேலி அமைக்க இதுவரை அதிகமாக அந்த ஏற்பாட்டை யாரும் செய்யவில்லை. தலைவர் கலைஞர் அவர்கள்தான் சென்ற ஆண்டு 262½ கிலோ மீட்டர் அமைப்பதற்கு உத்தரவு தந்தார்கள். இந்த ஆண்டு 300 கிலோ மீட்டர் அளவிற்கு தமிழ்நாடு முழுவதும் வழங்குவதற்கும் உத்தரவு தந்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல அகழிகள் வெட்டுவது என்பது, அகழிகள் தூர்ந்து



விடுகின்ற தன்மை உள்ளவை. ஏனென்றால், ஒன்றரை மீட்டர் ஆழம் வெட்டுகிறோம், 2 மீட்டர் அகலத்திலே வெட்டுகிறோம். அது தூர்ந்து விடுகிற ஒரு தன்மை உள்ளது. மலைப் பகுதிகளிலே கல் இருந்தால் அந்த இடத்திலே அகழிகள் வெட்ட முடியாது. சமவெளி இல்லாமல், ஏற்றத்தாழ்வு இருந்தாலும் வெட்ட முடியாது. ஆனால், சூரிய மின் வேலியை எல்லா இடங்களிலும் அமைக்க முடியும். சில இடங்களிலே இதைப்போல் பழுது ஏற்படுமேயானால் அங்கிருக்கிற எங்களுடைய, வனத் துறைப் பணியாளர்கள் அவற்றையெல்லாம் சரி செய்கிறார்கள். சில நேரங்களிலே யானைகள்கூட சில மரங்களை அதன்மீது தள்ளிவிடும். இருந்தாலும்கூட, அதிக மின்சாரம் பாய்ச்சப்படுகிற காரணத்தாலே யானைகள் வெளியே வருவதற்கு வாய்ப்பு இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சின்னராஜ், நீங்கள் சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சூரிய மின் வேலி அமைப்பதுபற்றிச் சொன்னார்கள். ஆனால், சூரிய மின் வேலி அமைக்கப்பட்டிருக்கிற 16 கிலோ மீட்டரும் தற்போது செயல்பாட்டில் இல்லை என்பதை அவருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதேபோல, யானைகள் வெகு தொலைவிலிருந்து வருவதைக் கண்டறிவதற்காக, அங்கே torch-கள் வழங்குவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஏறத்தாழ, ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகிற அந்தப் பகுதியிலே, தற்போது வழங்கப்பட்டிருக்கிற எண்ணிக்கை 20 என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அது போதுமானதாக இல்லை. ஆகவே, தொடர்ந்து அங்கே இருக்கிற அனைத்துக் குடியிருப்புகளிலும் வாழ்கிற மக்களுடைய நலனைக் கருதி அவர்களுக்கு, வீட்டிற்கு ஒரு விளக்கு என்ற வகையிலே, ஒவ்வொருவருக்கும் ஒரு torch வழங்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** தேவையின் அடிப்படையில் அந்த விளக்குகள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 178, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

[2007 மே 7

**178—**

## சாலை வசதி

***1027—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தார் பாவும் இயந்திரம்மூலமாக மாவட்ட முதன்மைச் சாலைகளை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாநில நெடுஞ்சாலைத் துறையின்மூலம் பராமரிக்கப்பட்டு வருகின்ற தேசிய நெடுஞ்சாலை, மாநில நெடுஞ்சாலை, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற மாவட்ட முக்கியச் சாலைகள் மற்றும் இடைவழித் தடமாகவும், இரு வழித் தடமாகவும் உள்ள மாவட்ட இதரச் சாலைகளிலும் தார்க் கலவை பாவும் இயந்திரம்மூலம்தான் தார்ச் சாலை அமைக்கின்ற பணி நடைபெற்று வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

*முற்பகல் 10-25*

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே இந்தக் கேள்வியைப் பயன்படுத்திக்கொண்டு, என்னுடைய தொகுதிக்கு நெடுஞ்சாலைத் துறையின் சார்பாக புதிய உட்கோட்டம் ஒன்றை அமைத்துத் தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். 1996-லே கலைஞர் அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்ற பிறகு, உறுதியான சாலைகள், கண்ணாடி போன்ற சாலைகள் அமைய வேண்டுமென்ற நோக்கோடு, பேவர் இயந்திரங்கள்மூலமாக சாலை போடுகின்ற திட்டத்தை உருவாக்கினார்கள். இடையிலே அத்திட்டம் கைவிடப்பட்டது. மீண்டும் அத்திட்டம் இப்போது எடுத்துக்கொள்ளப்பட்டு, அது செயல்படுத்தப்பட்டு வருவதற்காக நான் என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். தாரைப் பொறுத்தவரையிலே விலையிலே மாற்றங்கள் இருக்கின்றன.



2007 மே 7]

விலையைக் குறிப்பிடும்போது ஒரு விலையும், அதேநேரத்திலே அதைச் செயல்படுத்துகின்றபோது ஒரு விலையும் நிலவுகிறது. இந்நிலையில் அரசாங்கமே தாரைக் கொள்முதல் செய்து நெடுஞ்சாலைத் துறைக்கு விநியோகிக்குமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தார்ச் சாலைப் பணிகளுக்காக அரசே முதலில் நேரடியாகத் தாரைக் கொள்முதல் செய்து, துறையின்மூலமாக ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கி வந்தது. அவற்றில் பல்வேறு சிரமங்களும், பல்வேறு முறைகேடுகளும் கடந்த காலங்களிலே நடந்த காரணத்தினால், அது நீக்கப்பட்டு, தற்போது ஒப்பந்ததாரரே அரசு நிர்ணயம் செய்திருக்கின்ற, மத்திய அரசைச் சார்ந்த Indian Oil Corporation, Bharat Petroleum போன்ற நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செய்து தார்ச் சாலை அமைக்கின்ற பணிக்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று அரசின் வழிகாட்டு நெறிமுறைகள் இருக்கின்றன. அதனடிப்படையிலே அந்த முறை பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாநில முதன்மைச் சாலைகளை, தேசிய நெடுஞ்சாலைகளாக மாற்றவேண்டிய அவசியமும் இருக்கின்றது. தேசிய நெடுஞ்சாலைகளை மிகச் சிறப்பாகப் பயன்படுத்தி, Tollgate-ல் வசூலிக்கப்படுகின்ற சுங்க வரிமூலம் அவை பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் மாநில முதன்மை நெடுஞ்சாலைகளைப் பராமரிப்பதற்கு, அரசாங்கம் ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா? அதைச் செயல்படுத்துமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்து அதிகமுள்ள மாநில நெடுஞ்சாலைகளை, தேசிய நெடுஞ்சாலைகளாகத் தரம் உயர்த்தி, வகைப்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஒப்புதலோடு, மாநில அரசிலிருந்து மத்திய அரசுக்கு கடிதம் அனுப்பப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அதுபற்றிய விளக்கங்களைத் தெரிந்துகொள்ள

தனிக் கேள்வி எழுப்பினால், பதில் தரத் தயாராக இருக்கின்றோம். அதேநேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, மாநில முக்கியச் சாலைகள் 200 கிலோ மீட்டருக்கு மேல் சில சாலைகள் உள்ளன. அதன் அடிப்படையிலே இதுபோன்ற முக்கியச் சாலைகளில் சுங்க வரி வசூலித்து, அந்தச் சாலைகளைப் பராமரிப்பதுபற்றி அரசு பரிசீலித்து வருகின்றது என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Central mixing plant-லிருந்து அவர்கள் தார்ச் சாலை போடுகின்ற site-க்கு அதை எடுத்துச் செல்வதற்கு 60 கி.மீ. தூரம் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. அவ்வாறு நிர்ணயிக்கின்றபோது, அந்தத் தாரை heat செய்கின்றபோது, ரோடுகளின் தரம் குறைவாக இருக்கின்ற ஒரு நிலை உருவாகிக்கொண்டிருக்கின்றது. ஆக, அந்த இலக்கைக் குறைத்து, 25 கி.மீ. தூரத்திற்கு அருகிலேயே வைத்து, தார்ச் சாலையை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை உங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தார்ச் சாலை அமைக்கின்றபொழுது Central Mixing Plant என்பது ஒரு குறிப்பிட்ட தூரத்தில் அமைய வேண்டுமென்று அரசின் வழிகாட்டுதல்கள் இருக்கின்றன. அது எப்படி இருந்தாலும், அங்கே கலவையைக் கலக்குகின்றபோது, வெப்பம் ஏறத்தாழ 150 டிகிரி சென்டிகிரேடுக்குக் குறையாமலும், 165 டிகிரி சென்டிகிரேடுக்கு மேற்படாமலும் இருக்கவேண்டும். அதேநேரத்திலே அந்தக் கலவையை வேறு வாகனங்களில் எடுத்து வந்து, தார்ச் சாலைப் பணி நடைபெறும் இடங்களிலே பரப்பி, அந்தச் சாலையை அமைக்கின்றபோது, வெப்பம் 100 டிகிரி சென்டிகிரேடுக்குக் குறையாமல் இருக்கவேண்டும். அதை அரசு அலுவலர்கள் கடந்த 10, 15 மாதங்களாக உன்னிப்பாகக் கண்காணித்து வருகின்றார்கள். நாங்களும் நேரம் கிடைக்கும்பொழுதெல்லாம், துறை அலுவலர்களும், செயலாளரும் ஆங்காங்கே பணி நடைபெறும்போது இதையெல்லாம் சோதனை செய்து வருகின்றோம். மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோல், கடந்த காலங்களில் நிலைமை எப்படி வேண்டுமானாலும் இருந்திருக்கலாம்.



இப்போது அது சரியாக நிர்ணயம் செய்யப்பட்டு வருகின்றது. மாண்புமிகு முதல்வர் அவர்கள், தரமாகவும் இருக்கவேண்டும், அதேநேரத்தில் தாமதம் இல்லாமல் பணிகளும் நடைபெற வேண்டுமென்று எங்களுக்கு வலியுறுத்தியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அமைக்கப்படுகின்ற தார்ச் சாலைகள் 6 மாதங்கள்கூடத் தாங்குவதில்லை. காங்கிரஸ் கட்சி ஆண்ட காலங்களிலே பரிசோதனைக்காக 21 கி.மீ., 21 கி.மீட்டராக தூரத்தை எடுத்து, சிமெண்ட் கான்கிரீட் சாலைகளை சில இடங்களிலே போட்டிருந்தார்கள். அந்த சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் 30 முதல் 35 ஆண்டுகளுக்கு பயனுள்ளவையாக, போக்குவரத்திற்கு ஏதுவாக நல்ல தரமான சாலைகளாக இருந்தன. அந்த அடிப்படையிலே தண்ணீர் அதிகமாகத் தங்குகின்ற சாலைப்புறங்கள்...

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** அதிகப் போக்குவரத்து உள்ள சாலைகள், வளைவுப் பகுதிகள் போன்றவற்றிலாவது நம்முடைய நெடுஞ்சாலைத் துறை சிமெண்ட் கான்கிரீட் சாலைகளை அமைக்க முன்வருமா? அப்படி அமைக்க முன்வருகின்றபோது தார்ச் சாலைகளைவிட 10 மடங்கு, 15 மடங்கு அதிகமான தரமான சாலைகளாக அமையும் என்பதால், அத்தகைய முயற்சிகளை மேற்கொள்ள அரசு முன்வருமா என்று தங்கள்மூலம் அறிய ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை நல்ல யோசனை. அது கடந்த காலத்திலே நடைமுறையிலே இருந்ததுதான். இப்போதும் மலைப் பிரதேசங்களிலே, கொண்டை ஊசி வளைவுப் பகுதிகளிலெல்லாம்கூட சிமெண்ட் கான்கிரீட் சாலைகள்தான் அமைக்கப்படுகின்றன. நீர் அதிகமாக உள்ள பகுதிகளில், டெல்டா

பகுதிகளில்கூட, நீளம் குறைவாக உள்ள பகுதிகளில்கூட அமைக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைப்பதற்கு அதிக முதலீடு தேவைப்படுகிறது. அரசினுடைய நிதியாதாரத்திற்கு ஏற்ப இப்பொழுது தார்ச் சாலை அமைக்கப்பட்டு வருகிறது. தேவையான இடங்களில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற முறையும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. நான்கூட அதைப் பார்த்திருக்கிறேன். நம்முடைய மாண்புமிகு ஜவஹர்லால் நேரு அவர்கள் பிரதமராக இருந்தபோது, சூலூர் விமான நிலையத்தில் வந்திறங்கி கோவைக்குச் சென்றபோது அந்தப் பகுதியிலே ஏறத்தாழ 20 கிலோ மீட்டர் அளவிற்கு கான்கிரீட் சாலை அமைக்கப்பட்டது. நான்கூட அதைப் பார்த்திருக்கின்றேன். அது கடந்த ஒருசில ஆண்டுகள் வரை பராமரிக்கப்பட்டு வந்தது. அந்த அளவிற்கு அது உறுதி வாய்ந்ததாக இருக்கிறது. நிதியாதாரம் அரசுக்கு ஒத்துவராத காரணத்தால்தான் தார்ச் சாலை அதிகமாக அமைக்கப்பட்டு வருகிறது என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்தில் எடுத்துரைத்து நிச்சயமாக அரசு இதுகுறித்துப் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை தியாகராசர் பொறியியல் கல்லூரியில் பேராசிரியராகப் பணிபுரிந்த திரு. வாசுதேவன், பிளாஸ்டிக் கழிவுகளைப் பயன்படுத்தி சாலைகளை அமைக்கலாம் என்று கண்டறிந்து, சோதனை முயற்சியாக அது சில இடங்களில் போடப்பட்டது. இப்போதும் அது பயன்படுத்தப்படுமா என்பதையும், இரப்பர் சாலைகளை அமைப்பது குறித்தும் மாண்புமிகு அமைச்சர் தெரிவிப்பாரா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிளாஸ்டிக் வேஸ்ட்டுகளைக்கொண்டு தார்ச் சாலைகள் அமைக்கப்படுகின்ற பணி குறித்துச் சொல்லியிருக்கின்றார்கள். அது சம்பந்தமாக, சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதாக அரசுக்குத் தாக்கீது வந்த காரணத்தால்தான் இப்போது அந்த முறை நிறுத்திவைக்கப்



பட்டிருக்கிறது. சுற்றுப்புறச்சூழல் பாதிப்பு இல்லாமல் அந்த முறையைப் பயன்படுத்தி சாலை அமைப்பதற்கு அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலைகள் அமைப்பதற்கான கட்டுமானப் பொருள்களுடைய விலை உயர்வு போன்றவை இப்போது காரணங்களாகக் காட்டப்படுகின்றன. ஆகவே, விலை உயர்வைக் கருத்தில்கொண்டு சாலைகளை அமைப்பதற்கு உரிய நிதி ஒதுக்கீடுகளுக்கான திட்ட மதிப்பீடுகள் மறுவரையறை செய்யப்பட்டிருக்கின்றனவா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய வழிகாட்டுதலின்பேரில் கட்டுமானப் பொருள்களின் விலை ஏற்றத்திற்கு ஏற்ப, வெளி மார்க்கெட்டிற்கு ஏற்ப அரசு விலை நிர்ணயம் செய்கின்ற முறையை பொதுப் பணித் துறை செய்து வந்திருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அறிவுறுத்தலின்பேரில் கடந்த ஆண்டில் மட்டும் இரண்டு முறை நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் விலை நிர்ணயம் செய்து தந்திருக்கின்றார்கள். இப்போது ஓரளவுக்குத் தார்ச் சாலை அமைப்பதற்கு போட்டிபோட்டுக்கொண்டு ஒப்பந்ததாரர்கள் முன்வருகின்றார்கள். பாலம் அமைக்கின்ற பணிகளிலும் இப்போது ஓரளவுக்கு ஆர்வம் ஏற்பட்டு, ஒப்பந்ததாரர்கள் அதிலே கலந்துகொண்டிருக்கிறார்கள்.

அதேபோல, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சொன்னபோது, தார்ச் சாலை அமைக்கப்படுவது 6 மாத காலத்திற்குத்தான் தாங்குகிறது என்று சொன்னார்கள். அப்போது குறிப்பிட விட்டுவிட்டேன். 6 மாத காலத்திற்கும் இல்லை. இப்போது 10 மாத காலமாக அமைக்கப்பட்டு வருகின்ற பணி—தற்போது தரமாக அமைக்கப்பட்டு வருகின்றது. இருந்தாலும், நம்முடைய கணக்கீடு சுமார் 10 டன் சுமையைக் கொண்ட வாகனம்தான் அதிலே செல்லும் என்று கணக்கிட்டு அந்தச் சாலையை அமைக்கின்றோம். ஆனால், எதிர்பாராத விதமாக கடுமையான சுமையைக் கொண்ட வாகனங்கள்—நான்கூட

காலையிலே ஊருக்குச் சென்றுவிட்டு இரயில் நிலையத்திலிருந்து வீட்டிற்கு வருகின்ற நேரத்திலே பார்த்தேன். ஏறத்தாழ ஒரு பெரிய பாறையையே ஒரு லாரி ட்ரெயிலரில் ஏற்றிக்கொண்டு வந்தார்கள். அந்த அளவுக்கு—கனரக வாகனங்கள், சுமை ஏற்றக்கூடிய வாகனங்கள் செல்கின்றன.

அதேபோல, திருநெல்வேலி மாவட்டத்திற்கு நான் சென்ற நேரத்திலே பார்த்தேன், பல சாலைகள், கிராமச் சாலைகள், மாவட்ட இதர சாலைகள் எல்லாம் பழுதடைந்திருந்தன. காரணம் கேட்டதற்கு அங்கே மின் காற்றாலைகள் அமைக்கப்படுவதற்காக அந்த கனரக வாகனங்கள் அந்தச் சுமையை ஏற்றிக்கொண்டு வருகின்ற காரணத்தால் சாலையினுடைய தன்மை அதற்கேற்ப இல்லை. மண்ணினுடைய தன்மையும் அதற்கேற்ப இல்லை. அந்த அடிப்படையில்தான் அந்தச் சாலைகள் பழுதடைகின்றன என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 179, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. மகேந்திரன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**179—**

## சத்துணவுக் கூடம்

***5439—திரு. இ. மகேந்திரன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, கோவிலாங்குளம் ஊராட்சி, நத்தப்பட்டிக்குச் சத்துணவுக் கூடம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உசிலம்பட்டி தொகுதி, கோவிலாங்குளம் ஊராட்சி நத்தப்பட்டிக்கிராமத்தில் பள்ளி சத்துணவு மையம் மற்றும் குழந்தைகள் மையம் ஆகியவை இயங்கி வருவதால், அக்கிராமத்தில் புதிதாக மையம் தொடங்கத் தேவை எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. மகேந்திரன்.



**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியம், கோவிலாங்குளம் ஊராட்சிக்கு உட்பட்ட நத்தப்பட்டி கிராமத்தில் சத்துணவு மையம் ஏற்கெனவே இயங்கி வருகிறது. அந்தச் சத்துணவு அங்கன்வாடிக்கு புதிதாகக் கட்டடம் கட்டுவதற்காகத்தான் கேள்வி எழுப்பியிருந்தேன். அந்தக் கேள்வி மாறுதலாக சத்துணவு மையம் அமைக்கப்படுமா என்று வந்திருக்கிறது. அங்கன்வாடி குழந்தைகள் கிட்டதட்ட 50-க்கும் மேற்பட்ட குழந்தைகள் அங்கு இருக்கிறார்கள். அந்தக் குழந்தைகள் அங்கு இருக்கின்ற மரத்தடியிலே உணவு சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் குழந்தைகளுக்கு அங்கன்வாடிக் கட்டடம் அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் முன்வருவாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகள் மையம் கட்டுவதற்குக் கண்டிப்பாக இந்த அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல உசிலம்பட்டி தொகுதியில், உசிலம்பட்டி ஒன்றியத்தில் உத்தப்பநாயக்கனூர் ஊராட்சியில் ரெத்தினசாமி நாடார் உயர்நிலைப் பள்ளி என்கின்ற ஒரு தனியார் பள்ளி இயங்கி வருகின்றது. அந்தப் பகுதியிலே கிராமங்களைச் சேர்ந்த ஏறக்குறைய 600-க்கு மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் அங்கு பயின்று வருகிறார்கள். தனியார் நடத்துகின்ற அந்தப் பள்ளியில் புதிதாகச் சத்துணவு மையம் அமைத்துத் தருவதற்கு இந்த அரசு முன்வருமா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நிதி பெறாத தமிழ் வழிக் கல்வி பயிற்றுவித்துத் தரும் தனியார் பள்ளிகளுக்குச் சத்துணவு வழங்குதல் குறித்து நமது முதல்வர் அவர்களுடன் கலந்து ஆலோசித்த பிறகு இவ்வரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 180, மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. செந்தமிழ்ச்செல்வன், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**180—**

## பால் குளிரூட்டும் நிலையம்

***20878—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, தாழங்குணம் பகுதியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மேல்மலையனூர் தொகுதி, தாழங்குணம் பகுதியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது மேல்மலையனூர் தொகுதிக்குட்பட்ட மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றியம் மிகவும் பின்தங்கிய பகுதி. அங்கே இருக்கிற விவசாய மக்கள் துணைத் தொழிலாக கால்நடையை வளர்த்து பால் உற்பத்தி செய்கிற பணியைச் செய்கின்றார்கள். அங்கே உற்பத்தியாகிற பால், ஏறக்குறைய 5,000 லிட்டருக்கு மேல் உள்ள பாலை தொலைதூரத்திற்குச் சென்று விற்க வேண்டிய ஒரு நிலை இருக்கிற காரணத்தினாலே, தாழங்குணம் பகுதியிலோ அல்லது எனது தொகுதியினுடைய தலைநகரான மேல்மலையனூரிலோ ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அவசியம் தேவை. அதை உணர்ந்து அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டத்திலுள்ள மேல்மலையனூர்



சட்டமன்றத் தொகுதியில், செஞ்சி ஊராட்சி ஒன்றியத்தில் 27 பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பெற்று, 25 சங்கங்களும், மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றியத்தில் அமையப்பெற்றுள்ள 9 சங்கங்களில் 3 சங்கங்களும் தற்போது செயல்பட்டு வருகின்றன. இந்தச் சங்கங்களிலிருந்து தினந்தோறும் 5,839 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. மேலும் மேல்மலையனூர் சட்டமன்றத் தொகுதியிலுள்ள மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஆலம்பூண்டி கிராமத்தில் செயல்பட்டு வரும் M.D. 33 ஆலம்பூண்டி பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் மற்றும் இத்தொகுதியிலுள்ள செஞ்சியில் செயல்பட்டு வரும் I.I. 42 செஞ்சி பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் ஆகிய இரண்டு சங்கங்களிலிருந்தும் தனித் தனியாக 5 ஆயிரம் லிட்டர் பாலைக் குளிர்விக்கும் திறன்வாய்ந்த 2 பால் குளிர்விப்பான்கள் நிறுவப்பட்டுள்ளன. இத்தொகுதியில் அமையப்பெற்றுள்ள மேலும் 7 பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து இப்பகுதியில் இயங்கிவரும் 2 பால் கொள்முதல் நிலையங்கள்வாயிலாக நாளொன்றுக்கு 1,430 லிட்டர் பாலை எவ்வித இடர்பாடுமின்றிக் கொள்முதல் செய்து, விழுப்புரம் பால் பண்ணையில் பால் பதனிட்டு உள்ளூர்த் தேவை நீங்கலாக, சென்னை மாநகர விற்பனைக்கு ஒன்றியம்மூலம் அனுப்பி வைக்கப்படுகிறது.

மேலும் விழுப்புரம் பால் பண்ணையில் பால் குளிரூட்டும் திறன் நாளொன்றுக்கு 1 இலட்சம் லிட்டர் கொள்ளளவுத் திறனோடும், செஞ்சி, ஆலம்பூண்டி பால் குளிர்விப்பான் மையங்களின் திறன் 10 ஆயிரம் லிட்டர் கொள்ளளவுத் திறனோடும் நல்ல முறையில் செயலாக்கத்தில் உள்ளன. தாழங்குணம் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள T.N.D.989 தாழங்குணம் பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் தற்போது செயலிழந்துள்ளது. மேல்மலையனூர் தொகுதி, விழுப்புரம் பால் பண்ணைக்கு அருகில் உள்ளதாலும், செஞ்சி, ஆலம்பூண்டி பால் குளிர்விப்பான் மையங்கள் நல்ல முறையில் செயல்பட்டு வருவதாலும், மேல்மலையனூர் தொகுதியில் அமையப்பெற்றுள்ள அனைத்து பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களிடமிருந்து இவ்வொன்றியம் தொடர்ந்து எவ்வித இடையூறுமின்றிப் பால் கொள்முதல் செய்து வருவதால், தாழங்குணம் பகுதியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. தகவல் கோரல்

### பூவிருந்தவல்லி நீதிமன்றங்களின் வழக்குகளை காஞ்சிபுரம் மாவட்ட நீதிமன்றங்களுக்கு மாற்றியது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள வழக்குகளைக் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள நீதிமன்றங்களுக்கு மாற்றியதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. டி. சுதர்சனம் மற்றும் திரு. சி. ஞானசேகரன், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜி.கே. மணி, திரு. கி. ஆறுமுகம் மற்றும் திரு. தி. வேல்முருகன் ஆகியோர் விதி 56-ன்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனை தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்துச் சுருக்கமாக மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

*(முற்பகல் 10-40)*

***திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூவிருந்தவல்லியிலே இருக்கின்ற நீதிமன்றம் சுமார் 125 ஆண்டுகள் பழமையான நீதிமன்றம். அந்த நீதிமன்றத்திலே இரண்டு குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களும், இரண்டு விரைவு நீதிமன்றங்களும், ஒரு சார்பு நீதிமன்றமும் இயங்கிக்கொண்டிருக்கின்றன. மேற்படி நீதிமன்றங்களின் அதிகார வரம்பு எல்லை, முதலிலே பொன்னேரி, கோயம்பேடு, வில்லிவாக்கம், ஈக்காட்டுத்தாங்கல், நீலாங்கரை மற்றும் இருங்காட்டுக்கோட்டை வரை இருந்தது. பல்வேறு கால கட்டங்களில் புதிய நீதிமன்றம் ஏற்பட்டதால், பூவிருந்தவல்லி நீதிமன்றத்தின் வரம்பு எல்லை பிரிக்கப்பட்டது. அவ்வாறு 1985 ஆம் ஆண்டு City Civil Court-உடன் பூவிருந்தவல்லி நீதிமன்ற எல்லைக்குட்பட்ட பகுதிகளான கோயம்பேடு, வில்லிவாக்கம், ஈக்காட்டுத்தாங்கல், வேளச்சேரி, கொளத்தூர், விருகம்பாக்கம், நெசப்பாக்கம், திருமங்கலம், திருவான்மியூர்



பகுதிகளைச் சார்ந்த வழக்குகள் இணைக்கப்பட்டபோது, ஏற்கெனவே நிலுவையிலிருந்த வழக்குகளை Chennai City Civil Court-க்கு மாற்றாமல், பூவிருந்தவல்லி நீதிமன்றத்திலேயே நடத்தும் வகையில் A.C.D 42/85 மூலம் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, இன்றுவரை அந்த வழக்குகள் அங்கேயே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

1996 ஆம் ஆண்டு செங்கல்பட்டு மாவட்டம், திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. இரண்டு மாவட்டங்களிலும் தனித் தனியாக மாவட்ட நீதிமன்றங்கள் அமைக்கப்படவில்லை. திருவள்ளூர் மாவட்டத்திலே இருக்கும் பூவிருந்தவல்லி நீதிமன்றத்திலேயே காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகாவில் அடங்கிய குன்றத்தூர், படப்பை, மாங்காடு, தண்டலம் பிர்காக்களைச் சார்ந்த 59 கிராம வழக்குகள், 31-11-2006 வரை நடைபெற்று வந்தன. 3-11-2006 அன்று திருவள்ளூர் மாவட்டத்திற்கென தனியாக முதன்மை மாவட்ட மற்றும் செசன்ஸ் நீதிமன்றம் ஏற்பட்டபோது, பூவிருந்தவல்லி நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்று வந்த ஸ்ரீபெரும்புதூர் வட்டத்தைச் சார்ந்த சிவில் மற்றும் குற்றவியல் வழக்குகள் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள நீதிமன்றங்களுக்கு மாற்றப்பட்டன. நிலுவையிலுள்ள சிவில் மற்றும் கிரிமினல் வழக்குகளை காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சார்ந்த தாம்பரம், செங்கல்பட்டு நீதிமன்றங்களுக்கு மாறுதல் செய்யக் கூடாது என்று பூவிருந்தவல்லி வழக்கறிஞர்கள் சங்கம் 3-11-2006 அன்றும், 22-11-2006 அன்றும் சென்னை உயர் நீதிமன்றத்திலே பழையபடி A.C.D. 42/85-ன்படி மேற்கோள் காட்டி மனு கொடுத்தார்கள். அதன்பேரில் நிலுவையிலுள்ள வழக்குகளை பூவிருந்தவல்லி நீதிமன்றத்திலேயே நடத்திக்கொள்ளலாம் என திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட நிர்வாக நீதியரசர்கள் ஓர் ஆணையைப் பிறப்பிக்கிறார்கள். ஆணை எண் R.o.c. No.2302/A/6, Judicial, dated 4-1-2007 மூலம் உத்தரவிடப்பட்டது.

அதற்குப் பின்னாலே, மிகவும் குறைந்த நேரத்திலே, தகுந்த காரணங்களின்றியும், சம்பந்தப்பட்ட நீதியரசர்கள் ஆலோசனையின்றியும், வழக்கறிஞர்கள் சங்கங்களைக் கலந்தாலோசிக்காமலும், சில தனிப்பட்ட நிர்பந்தங்கள் காரணமாக, மேற்படி உத்தரவு இரத்துச் செய்யப்பட்டு, நிலுவையிலுள்ள வழக்குகளை காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள நீதிமன்றங்களுக்கு மாற்ற, மறு உத்தரவு ஒன்று 1-3-2007 அன்று R.o.c.2302/A/6 மூலம் பிறப்பிக்கப்பட்டது என்று சம்பந்தப்பட்ட வழக்கறிஞர்கள் தெரிவிக்கிறார்கள். இதனால், பொதுமக்களுக்கு ஏற்படும் பாதிப்பைக் கருத்தில்கொண்டு, கடந்த 65 நாட்களாக, பூவிருந்தவல்லி வழக்கறிஞர்கள்

சங்கம், உண்ணாவிரதம், மனிதச் சங்கிலி போன்ற போராட்டங்களை உள்ளடக்கிய நீதிமன்றப் புறக்கணிப்புப் போராட்டத்தை நடத்தி வருகிறார்கள். இதனால், பூவிருந்தவல்லி நீதிமன்றத்தில் வழக்குகள் நிலுவையில் இருக்கும்போது, பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கும், இன்னல்களுக்கும் உட்பட்டு பதற்ற நிலையில் உள்ளனர். எனவே, சென்னை உயர் நீதிமன்றம் 4-1-2007 அன்று பிறப்பித்த உத்தரவை, அமல்படுத்த நடவடிக்கையை இந்த அரசு எடுக்க வேண்டுமென்ற வேண்டுகோளை வைப்பதோடு மட்டுமல்லாமல், நீதித் துறைக்கு நாம் இந்த ஆண்டு மட்டும், 275 கோடி ரூபாய் ஒதுக்கிக் கொடுத்திருக்கிறோம். ஆனால், நாம் எந்த நீதிபதிகளின் தீர்ப்பைப் பற்றியோ, நீதிபதிகளைப் பற்றியோ விமர்சிக்க விரும்பவில்லை. ஒன்பது மாத காலமாக பூவிருந்தவல்லி நீதிமன்றத்திற்கு ஒரு Sub-Magistrate போடப்படவில்லை. அந்த ஒன்பது மாத காலமாக, அங்கேயிருக்கின்ற மக்கள், தினமும் நீதிமன்றத்திற்கு வருகிறார்கள், வாய்தா போடுகிறார்கள், போய்விடுகிறார்கள். போகின்றபோது என்ன சொல்கிறார்கள் என்று சொன்னால், இந்த நீதிமன்றத்திலே நீதிபதியே நியமிக்கப்படாமல் இருக்கிறது, இதற்கு ஒரு சட்டமன்ற உறுப்பினர் இங்கே இருக்கிறார், எதற்காக இருக்கிறார் என்று எங்களைத் திட்டுகிறார்கள். அதே போன்று, நாடாளுமன்ற உறுப்பினர் இருக்கிறார், ஏன் இங்கே இருக்கிறார் என்று நாடாளுமன்ற உறுப்பினரைப் பார்த்துத் திட்டுகிறார்கள். ஆனால், நம்முடைய சட்டத் துறை அமைச்சரை யாரும் திட்டுவது இல்லை. முதலமைச்சரைத் திட்டுகிறார்கள். இப்படிப்பட்ட ஒரு நிலை எங்களுடைய பகுதியிலே இருக்கிறது.

முற்பகல் 10-45

நீதிமன்றங்களைப்பற்றி நான் விவாதிக்க விரும்பவில்லை. ஏனென்றால், அது வேறு விஷயம். அதைப்பற்றி நான் உள்ளே போக விரும்பவில்லை. 9 மாத காலமாக ஒரு Sub Magistrate போடவில்லை. இப்போது 65 தினங்களாக, வழக்கறிஞர்கள் சாலை மறியல் செய்கிறார்கள், கைது செய்யப்படுகிறார்கள், அந்த நீதிமன்றத்தினுடைய கதவைப் பூட்டுகிறார்கள், கைது செய்யப்படுகிறார்கள். 65 நாட்களாக போராட்டம் நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். இந்தப் போராட்டத்தைப்பற்றி நம்முடைய நீதிபதிகள் ஏதாவது கவலைப்பட்டிருக்கிறார்களா? இல்லை, நம்முடைய சட்டத் துறை அமைச்சர் ஏதாவது கவலைப்பட்டு இருக்கிறாரா; அல்லது இந்த 65 நாட்கள் நடைபெற்ற போராட்டத்திலே, அவர்களை அழைத்துப் பேசி, அவர்களுடைய குறைகளைத் தீர்ப்பதற்கு இதுவரை நம்முடைய சட்டத் துறை அமைச்சரும் முயற்சிக்கவில்லை, சம்பந்தப்பட்ட நீதிபதிகளும்



முயற்சிக்கவில்லை. இது எதைக் காட்டுகிறது என்று சொன்னால், ஏதோ அரசாங்கத்திற்கும், நீதிபதிகளுக்கும் இடையிலே ஓர் இடைவெளி இருப்பது போன்றும், நம்முடைய சட்டத் துறை அமைச்சருக்கு இதிலே எந்தவிதமான அதிகாரமும் இல்லை என்பது போலவும் ஒரு தோற்றம் இருக்கிறது. இதை இந்த அரசு, எப்படிச் செய்யப் போகிறது? நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஸ்ரீபெரும்புதூரிலே புதிய நீதிமன்றம் அமைக்கப்படும் என்று இந்த ஆண்டு உறுதி அளித்திருக்கின்றார்கள். அந்த நீதிமன்றம் அமைக்கப்படுகின்ற வரையாவது இந்தப் பழைய வழக்குகளை பூவிருந்தவல்லி நீதிமன்றத்திலேயே நடத்துவதற்கு ஆணை பிறப்பிக்கப்படுமா என்பதை நம்முடைய மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன், நீங்களும் அதைத்தானே சொல்லப்போகிறீர்கள்?

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூவிருந்தவல்லி நீதிமன்ற வழக்கறிஞர்கள் கடந்த 3-3-2007 முதல் இன்றுவரையில் பல்வேறுவிதமான போராட்டங்களை, தங்களுக்கான அந்த வழக்குகள், தங்களுக்கான உரிமைகள் பறிபோய்விட்டன என்ற அடிப்படையிலே தொடர்ந்து போராடி வருகின்றார்கள். அவர்கள் போராடுவதற்கான காரணம், கடந்த 125 ஆண்டுகளாக இயங்கி வருகின்ற அந்த நீதிமன்றங்கள், எந்த எந்தத் தாலுகா காவல் நிலையங்கள், எந்த எந்தக் காவல் நிலையங்களுடைய வழக்குகள், அவர்களுடைய விசாரணைக்குட்படுத்தப்பட்டு அந்த வழக்குகளில் அவர்கள் ஆஜராகி வந்தார்களோ, அவையெல்லாம் இப்போது பறிக்கப்பட்டு, அவை திருவள்ளூர் மாவட்டத்திற்கும், காஞ்சிபுரம் மாவட்டத்திற்குமாகப் பிரித்து அந்த வழக்குகள் செல்கின்ற காரணத்தினால், நாங்கள் வழக்குகளை வாதாடாத வழக்கறிஞர்களாக இங்கு அமரக்கூடிய ஒரு சூழல் இருக்கிறது. ஆதலால், இதில் அரசு உடனடியாக தலையிட்டு, நீதிமன்றத்தினுடைய நீதிபதிகளோடு கலந்து பேசி, எங்களையும் அழைத்துப் பேசி, இதற்கு ஒரு தீர்வு காண வேண்டும் என்கிற அடிப்படையிலே அவர்கள் கோரிக்கைகளை வைத்து அங்கே போராடிக்கொண்டிருக்கிறார்கள்.

நம்முடைய தமிழக அரசும், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களும் இதற்கு பூவிருந்தவல்லியில் ஒரு தீர்வு ஏற்படுவதோடு விட்டு விடாமல், என்னுடைய பண்ருட்டி தொகுதியிலேகூட, பண்ருட்டி வட்டம் இருக்கிறது என்று சொன்னால், நெல்லிக்குப்பம் காவல் நிலையத்திற்கு வருகிறது; நெய்வேலி காவல் நிலையத்திற்கு வருகிறது.

அந்த வட்டத்திற்குள்ளே இருக்கின்ற வழக்குகளையெல்லாம் அந்த வட்டாரத்தில் இருக்கின்ற சார்பு நீதிமன்றங்கள், குற்றவியல் நீதிமன்றங்கள், விரைவு நீதிமன்றங்களிலே அந்த வழக்குகளை நடத்துவதற்குப் பதிலாக, அருகில் இருக்கின்ற அந்த அந்த நீதிமன்றங்களுக்கு அந்த வழக்குகள் செல்கின்றன. அப்படிச் செல்கின்றபோது, அந்த வட்டத்தில் இருக்கின்ற வழக்குகளை விசாரிப்பதற்காக அவர்கள் நீதிமன்றங்களில் தங்களை வழக்கறிஞர்களாகப் பதிவு செய்துவிட்டு, காத்துக் கிடக்கின்ற அந்த வழக்கறிஞர்களுக்கு, போதிய வழக்குகள் வருவதில்லை. அதிகமான வழக்குகள் ஒரு குறிப்பிட்ட நீதிமன்றங்களுக்குச் சென்றுவிடுகின்ற காரணத்தாலே, அவர்கள் பாதிப்புக்குள்ளாகின்றனர் என்ற பரவலான குற்றச்சாட்டு தமிழகத்திலே ஆங்காங்கே இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இதையெல்லாம் மறு ஆய்வு செய்வதற்காக நம்முடைய தமிழக அரசு, அந்தத் தொகுதியினுடைய சட்டப் பேரவை உறுப்பினர்கள் அல்லது அந்த மாவட்டத்தினுடைய மாவட்ட நீதிபதிகள், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர், அரசு அதிகாரிகள், அந்தந்த சிட்டி சிவில் கோர்ட்டில் இருந்து, மாவட்ட நீதிமன்றங்களிலிருந்து அந்த வழக்கறிஞர்களுடைய Bar Association என்று சொல்லக்கூடிய அனைத்து—ஒவ்வொரு நீதிமன்றத்திற்கும் வழக்கறிஞர்கள் Association வைத்திருக்கின்றார்கள்—வழக்கறிஞர்கள் சங்கப் பிரதிநிதிகளையும் உள்ளடக்கி ஒரு குழு அமைத்து, தமிழ்நாட்டில் ஆங்காங்கே நீதிமன்றங்களிலே, வழக்கறிஞர்கள் புறக்கணிப்பு நடத்துவது, போராட்டங்கள் நடத்துவது, இதற்கெல்லாம் முடிவு கட்டி, அவர்களுடைய கோரிக்கை என்ன; அந்தக் கோரிக்கைக்கு அரசு நிரந்தரமான ஒரு தீர்வு ஏற்படுத்துவதற்கு அந்த நீதிமன்றத்தின் வளாகத்திற்கு உட்பட்ட பக்கத்திலே இருக்கின்ற கிலோ மீட்டர்களைக் கணக்கிட்டோ அல்லது இந்த இந்த காவல் நிலையத்தினுடைய வழக்குகள் இந்த இந்த நீதிமன்றங்களுக்கு வரவேண்டும் என்கிற அந்த அடிப்படையிலேயாவது ஒரு நிரந்தரத் தீர்வை இதுபோன்று இந்த வழக்கறிஞர்களுக்கு பாதிப்பு இல்லாமல் ஏற்படுத்துவதற்கு இந்த அரசு முன் வரவேண்டும் என்று இந்த அரசினுடைய கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கலைராஜன், உட்காருங்கள், (குறுக்கீடு) வேல்முருகன். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர்.

முற்பகல் 10-50

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பூவிருந்தவல்லியில் இருக்கிற வழக்கறிஞர்கள் சுமார் 60 நாட்களுக்கு மேலாக, (குறுக்கீடுகள்) ஒரு போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கலைராஜன், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு உறுப்பினர் சுதர்சனம் அவர்கள் இங்கே ஒரு சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்து ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. கலைராஜன் அவர்கள் எழுந்து ஏதோ சொன்னபோது மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் சொன்ன அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் சொன்ன அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** இந்த அவையினுடைய கவனத்தை ஈர்த்திருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையினுடைய முழு விவரத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் சுருக்கமாக எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டம் என்று இரண்டாகப் பிரிப்பதற்கு முன்னால் செங்கல்பட்டு மாவட்டமாக இருந்த காலத்தில், இந்த மாவட்டத்தை உள்ளடக்கிய எல்லா நீதிமன்றங்களும் செங்கல்பட்டில் இருக்கிற மாவட்ட நீதிமன்றத்தின்கீழ் இயங்கி வந்தன. பிறகு செங்கல்பட்டு, காஞ்சிபுரம் திருவள்ளூர் என்று இரண்டு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டவுடன், ஒவ்வொரு

மாவட்டத்திற்கும் ரெவின்யூ அடிப்படையில் எந்தெந்த தாலுகாக்கள் இந்த இந்த மாவட்டத்தைச் சார்ந்தது என்று ரெவின்யூவிலே பிரித்தார்கள். அப்படிப் பிரிக்கிறபொழுது திருப்பெரும்புதூர் தாலுகா காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு போய் விட்டது. பிரிப்பதற்கு முன்னால் திருப்பெரும்புதூர் தாலுகாவில் இருக்கிற 4 பிர்காக்களினுடைய வழக்குகள் எல்லாம் பூவிருந்தவல்லி நீதிமன்றத்தில் இருந்தது. இப்பொழுது திருப்பெரும்புதூர் தாலுகா முழுவதும் உள்ள வழக்குகள் காஞ்சிபுரம் மாவட்டத்திற்குப் போகின்றன என்று சொன்னவுடன் பூவிருந்தவல்லி தொகுதியில் இருக்கிறவர்கள் அப்படிப் போகக்கூடாது என்பதுதான் அவர்களுடைய கோரிக்கை; மாற்றக்கூடாது என்று அவர்கள் சொன்னார்கள்.

அந்தக் கோரிக்கை நியாயமா என்று விசாரிப்பதற்காக உயர் நீதிமன்றம் 2 நீதிபதிகளை அமைத்து அந்தக் கோரிக்கையைப்பற்றி விசாரித்து ஓர் அறிக்கை தரும்படி கேட்டார்கள். அந்த அறிக்கையின் அடிப்படையிலே உயர் நீதிமன்றம் ஓர் ஆணை பிறப்பித்தது. சரி, ஏற்கெனவே நடைபெற்றிருக்கிற வழக்குகள் திருப்பெரும்புதூர் தாலுகா உட்பட அந்த 4 பிர்க்காவிற்கு உட்பட்ட வழக்குகள் என்னென்ன வழக்குகள் பூவிருந்தவல்லி நீதிமன்றத்தில் நடக்கின்றனவோ, அவை பூவிருந்தவல்லி நீதிமன்றத்திலேயே நடக்கட்டும்; புதிதாக வழக்குகள் வந்தால், அவை காஞ்சிபுரம் மாவட்டத்திற்குப் போகட்டும் என்று ஓர் உத்தரவு பிறப்பித்தார்கள். இந்த உத்தரவைப் போட்டவுடன் காஞ்சிபுரத்தில் இருக்கிற மாவட்ட வழக்கறிஞர்கள் போராட்டத்தை ஆரம்பித்துவிட்டார்கள். எப்பொழுது திருப்பெரும்புதூர் தாலுகா காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு உள்ளே வந்ததோ, அப்பொழுதே திருப்பெரும்புதூர் தாலுகாவில் இருக்கிற அத்தனை வழக்குகளும் காஞ்சிபுரம் மாவட்ட நீதிமன்றங்களுக்குத்தான் வர வேண்டும். அவை தாம்பரத்திற்கோ அல்லது காஞ்சிபுரத்திற்கோ வர வேண்டும். ஆனால், அதைப் பிரித்து மறுபடியும் பழைய வழக்குகள் இங்கே இருக்கட்டும், புதிய வழக்குகள் அங்கே இருக்கட்டும் என்று சொன்னால், இதை நாங்கள் ஒத்துக்கொள்ள முடியாது என்று அவர்கள் மறுபடியும் தகராறு செய்தார்கள். இந்தத் தகராறை விசாரிப்பதற்கு மறுபடியும் ஒரு நீதிபதியை நியமித்தார்கள். அந்த நீதிபதி விசாரித்து விட்டு, இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது என்று சொல்லிவிட்டார். கடைசியிலே நீதிமன்றம் ஒரு முடிவுக்கு வந்து ஆணை போட்டது. பிரித்தது பிரித்ததுதான். திருப்பெரும்புதூர் தாலுகா காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு உள்ளே போய் விட்டது. எனவே, இந்த வழக்குகள் இனிமேல் அவை புதிய வழக்குகளாக இருந்தாலும், பழைய



வழக்குகளாக இருந்தாலும் காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு உட்பட்ட நீதிமன்றத்தில்தான் விசாரிக்கப்படும் என்று அந்த நீதிபதியினுடைய அறிக்கையை ஏற்று உயர் நீதிமன்றம் சொல்லி விட்டது.

அதை எதிர்த்துதான் இப்பொழுது வழக்கறிஞர் நண்பர்கள் பூவிருந்தவல்லியிலே உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டம், மற்றவற்றையெல்லாம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த நீதிமன்றங்களிலே நாம் இந்த வழக்குகளை மாற்றுவது, இவையெல்லாம் முழுக்க முழுக்க உயர் நீதிமன்றத்தினுடைய கட்டுப்பாட்டில் இருப்பது. இதில் முதலமைச்சரோ, தமிழக அரசோ, சட்டத் துறை அமைச்சரோ எதிலும் தலையிட முடியாது. இது அரசு அல்ல, Constitution, அரசமைப்புச் சட்டத்திலேயே இதைத்தான் தெரிவித்திருக்கிறார்கள். உயர் நீதிமன்றத்திற்கு வேண்டிய செலவுகளைச் செய்வது, வேண்டிய சௌகரியங்களை ஏற்படுத்திக் கொடுப்பது, மற்றவற்றை எல்லாம் அரசு செய்ய வேண்டும். ஆனால், நீதிபதிகளை நியமிப்பது, மாற்றுவது, வழக்குகளை எந்தெந்த இடத்திலே நடத்துவது என்பது முழுக்க, முழுக்க நீதிமன்றத்தினுடைய கட்டுப்பாட்டில்தான் இருக்கும் என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, 'சட்டத் துறை அமைச்சர் இதில் பேசாமல் இருக்கிறார்' என்று சொன்னால், நான் நீதிமன்றத்தினுடைய நடவடிக்கையில் தலையிட முடியாது. ஆனால், ஒரு பொதுப் பிரச்சினை எழுகிறபோது அந்தப் பிரச்சினையை நீதிமன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுபோவது என்னுடைய கடமை.

*முற்பகல் 10-55*

அப்படி உயர் நீதிமன்றத்தில் எந்தெந்த நீதிபதிகளை நியமித்தார்களோ, அந்த நீதிபதிகளோடு நான் பேசினேன். அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், எதற்கும் ஒத்துவரமாட்டேன் என்கிறார்களே, நாங்கள் என்ன செய்வது என்று சொல்கிறார்கள். இரண்டு மாவட்டங்கள் பிரிக்கப்பட்டன. அந்தத் தாலுகா அங்கே போய்விட்டது, ஆகையினால், இதற்கு ஒரு பரிகாரம் காணவேண்டும் என்றுதானே நாங்கள் சொன்னோம்! பழைய வழக்குகள் பூவிருந்தவல்லியில் இருக்கட்டும், புதிய வழக்குகள் காஞ்சிபுரம் போகட்டும் என்று சொன்னோம். அதை ஏற்றுக்கொள்ளமாட்டோம் என்கிறார்கள். முழுவதையும் அனுப்பலாம் என்றால், அங்கே இருப்பவர்கள் தகராறுக்கு வருகிறார்கள். ஆக, இந்தப் பக்கம் போனால் பூவிருந்தவல்லி வழக்கறிஞர்கள் தகராறு; அந்தப் பக்கம் போனால் காஞ்சிபுரம் மாவட்டத்தில் இருக்கிற வழக்கறிஞர்கள் தகராறு. இரு பக்கமும் வழக்கறிஞர்கள் இருக்கிற காரணத்தால் சட்டப்படி என்ன

சொல்லப்பட்டிருக்கிறதோ, அதை உயர் நீதிமன்றம் செய்கிறது என்றுதான் அவர்கள் என்னிடத்திலே தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, இதில் தனித்து முடிவு எடுப்பதற்கு அரசால் முடியாது. ஆகையினால், உயர் நீதிமன்றத்தினுடைய ஆணையைத்தான் நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியும்.

9 மாதங்களாக நீதிபதிகள் இல்லை என்று சொன்னார்கள். இந்த நாட்டில் பல துறைகளிலே ஆட்கள் நியமிக்கப்படவில்லை; அது ஒரு காலம். ஆனால், அவை எல்லாம் நிரப்பப்படலாம் என்று முதல்வர் அறிவித்திருப்பது இந்தக் காலம். அது எங்களால் முடியும். ஏனென்றால், அது அரசாங்கம் செய்ய வேண்டியது. ஆனால், உயர் நீதிமன்றத்தில் அப்படி அல்ல. இப்போதுகூட பல நீதிபதிகளை நியமிக்க வேண்டும். எங்களுக்கு 160 180, Magistrates வேண்டுமென்று கேட்டால் உடனே sanction கொடுத்துவிடுகிறோம். இப்போது Fast Track Court எல்லாம் ஆரம்பித்திருக்கிறோம், நிறைய நீதிபதிகளைப் போடவேண்டும். அவர்களை உடனே நியமிக்க வேண்டும் என்றார்கள். உடனடியாக நியமித்தோம். உயர் நீதிமன்றத்திலேயே தெரிவிக்கிறார்கள், இப்போதுதான் உயர் நீதிமன்றத்தினுடைய கோப்புகள் அரசாங்கத்திற்குப் போனால், போன வேகத்திலேயே pass செய்யப்பட்டு நீதிமன்றத்திற்கு வருகின்றன (மேசையைத் தட்டும் ஒலி) என்று நீதிபதிகளும், மற்றவர்களும் பெருமையோடு எங்களிடத்திலே சொல்கிறார்கள், மற்றவர்களிடத்திலே சொல்கிறார்கள். மற்ற இடங்களிலே பேசுகிறார்கள். இங்கே மட்டுமல்ல, உச்ச நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதி திரு. பாலகிருஷ்ணன் நடத்திய அந்த மாநாட்டிலேகூட இதை உயர் நீதிமன்றம் தெரிவித்திருக்கிறது. எனவே, இந்த அரசைப் பொறுத்தவரையில், நீதிமன்றங்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யும். இடங்களை நிரப்புவது, நீதிபதிகளை நியமிப்பது, வழக்குகளைப் பிரிப்பது, இவை முழுக்க, முழுக்க உயர் நீதிமன்றத்தின் கட்டுப்பாட்டில் இருப்பது.

இன்னொன்றுகூடச் சொல்கிறேன். எல்லோரும் சில நேரங்களிலே இதை மாற்றினார்கள் என்று சொன்னார்கள். நானே ஒத்துக்கொள்கிறேன். ஒரு நீதிபதி உத்தரவு மறு நீதிபதியால் மாற்றப்பட்டது. இந்தக் கூத்தெல்லாம் எங்கள் ஆட்சியிலே நடைபெறவில்லை. இவை எல்லாம் முன்னால் இருந்த ஆட்சியிலே நடைபெற்றன என்பதற்காகத்தான் நான் சுட்டிக்காட்டுகிறேன்.

(எதிர்க்கட்சி வரிசையில் பின்னாலிருந்து மேசையைத் தட்டும் ஒலி கேட்டது.)



பின்னாலிருந்து ஒற்றைக் கை தட்டுவது பெரிதல்ல. இந்தத் திட்டங்கள் போட்டது, முதல் நீதிபதி போட்டதும் முன்னாலிருந்த ஆட்சியின் சட்டம், இரண்டாவது நீதிபதி போட்டதும் கடந்த கால ஆட்சியின் கூத்துதான். ஆகவே, இந்த அரசைப் பொறுத்தவரையிலே இதிலே எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. ஆனால், இப்போது நாம் பேசுகிற இந்தப் பேச்சு, விடுக்கிற வேண்டுகோளைத்தான் உயர் நீதிமன்றம் மறுபடியும் எடுத்துக்கொள்ளும். அதேநேரத்திலே வழக்கறிஞர்களும் ஒரு சமரசத்துக்கு வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த அளவில் அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக நீதிமன்றத்துக்கு அதிகாரம் இருக்கிறது என்று சொன்னாலும்கூட, மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மக்கள் பாதிக்கப்படுகிறபோது—வழக்கறிஞர்கள் பாதிக்கப்படுவது என்பது வேறு விஷயம்—அதில் தலையிட வேண்டிய கடமை அரசுக்கு உண்டு. அந்த வகையிலே மாண்புமிகு நம்முடைய சட்டத் துறை அமைச்சர் அவர்கள் உயர் நீதிமன்ற நீதிபதியை தொலைபேசியிலே தொடர்பு கொண்டு, ஸ்ரீபெரும்புதூரிலே புதிய நீதிமன்றம் அமைக்கின்ற வரை பழைய வழக்குகளை பூவிருந்தவல்லியிலேயே நடத்துவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று ஓர் அன்பான வேண்டுகோளை வைத்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** இந்தப் பிரச்சினைக்கெல்லாம் ஓரே ஒரு பரிகாரம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னுடைய மானியக் கோரிக்கையின்மீது, மாண்புமிகு யசோதா அவர்கள் கோரிக்கை விடுத்ததை ஏற்றுக்கொண்டு, ஸ்ரீபெரும்புதூரிலே ஒரு நீதிமன்றம் அமைக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள்.

அதை விரைவில் அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று இந்த அரசு நீதிமன்றத்திலே வற்புறுத்தும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தைப்போல, ஸ்ரீபெரும்புதூரில் நீதிமன்றம் வருகிற வரையிலாவது இந்த வழக்குகளைப் பூவிருந்தவல்லியிலேயே நடத்துவதற்கு முடியுமா

என்பதை நான் அவர்களிடத்திலே கேட்டுப் பார்க்கிறேன். உயர் நீதிமன்றத்திலே இந்தக் கோரிக்கையை வைத்துப் பார்க்கிறேன். உயர் நீதிமன்றத்தில், அதற்குப் பிறகு அவர்கள் என்ன முடிவு தெரிவிக்கிறார்கள் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவிக்கிறேன். (குறுக்கீடுகள்)

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் தெளிவாகப் பதில் சொல்லிவிட்டார்கள். அதற்குமேல் அதில் என்ன சந்தேகம்? (குறுக்கீடுகள்) No, arguments over it. Sit down. Not permitted. (குறுக்கீடுகள்) It is within the exclusive jurisdiction of the High Court. தெரியுமா? உட்காருங்கள். (குறுக்கீடுகள்) 2007-2008 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 29... (குறுக்கீடுகள்) என்னங்க?

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைக்கு எடுத்தது இந்த ஒரு சப்ஜெக்ட் மாத்திரம்தான். மற்ற சப்ஜெக்ட்ஸ் முழுவதுமே என் ஆய்விலே இருக்கின்றன. பின்னாலே எடுத்துக்கொள்ளப்படும். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) வேறு எதுவும் இன்றைக்கு எடுப்பதாக இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாலேயிருந்த, ஆட்சியிலிருந்த சட்டத் துறை அமைச்சராக இருந்தாலும், இந்த ஆட்சியிலே இருக்கிற சட்டத் துறை அமைச்சராக இருந்தாலும் எல்லோருக்கும் ஒரே அதிகாரம்தானே தவிர, வேறே அதிகாரம் கிடையாது. (குறுக்கீடுகள்) நான் அதற்காகச் சொல்லவில்லை. No, No. நான் அதற்காகச் சொல்லவில்லை. ஆனால், மாண்புமிகு உறுப்பினர், முன்னாள் சட்டத் துறை அமைச்சர் அவர்களைப்பற்றிச் சொன்னபோது ஒரு தட்டுத் தட்டினார்களே, அது இந்த ஆட்சியாக இருந்தாலும், எந்த ஆட்சியாக இருந்தாலும் சட்டம் ஒன்றுதான்.



## 4. மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 29 – சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை)**

**(ஆ) கோரிக்கை எண் 28 – செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)**

**(இ) கோரிக்கை எண் 30 – எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)**

**(அ) கோரிக்கை எண் 29 – சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007-2008 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 29 சுற்றுலா - கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை). மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.13,89,01,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 308, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. கோவை தங்கம்] [2007 மே 7

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5364, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8903, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11152, திரு. து. அமரமூர்த்தி.

**திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



2007 மே 7]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11389, டாக்டர் இ.எஸ். எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5174, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5249, திரு. கு. பாண்டுரங்கன்.

**திரு. கு. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற .ரூ.13,89,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6170, திரு. ஆர். சின்னசாமி, இருக்கையில் இருக்கிறாரா?

**திரு. ஆர். சின்னசாமி:** நான் இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. செங்கோட்டையன் மறைத்துவிட்டார். அதுதான் நீங்கள் இருப்பதைக் கவனிக்கவில்லை. உட்காருங்கள். இடையிலே நின்ற திரு. செங்கோட்டையன் அவர்கள் மறைத்துவிட்டார். அதுதான் இருக்கிறீர்களா என்று பார்த்தேன். உட்காருங்கள்.

**திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8736, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8962, திரு. கே.வீ. ராமநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 10197, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10205, திரு. மு.க. பெரியசாமி.

**திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10406, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11752, திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10941, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *11858*, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *441*, திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதி, சிற்றாறு அணை-1-ஐயும், சிற்றாறு அணை-2-ஐயும் இணைக்கும் கானல் வழியாக படகு சர்வீஸ் இயக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *865* திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோபிசெட்டிபாளையம் தொகுதியிலுள்ள பாரியூர் கொண்டத்து காளியம்மன் கோயில், பச்சை மலை மற்றும் பவள மலைப் பகுதிகளைச் சுற்றுலா மையங்களாக உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1487*, திரு. கு. ஹசன் அலி.

**திரு. கு. ஹசன் அலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இராமேஸ்வரம், தேவிப்பட்டினம் (நவபாஷாணம்) ஆகிய ஊர்களைத் தூய்மைப்படுத்தி அங்கே வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு வசதிகளைப் பெருக்கிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2793*, திரு. பெ. மோகன்.

**திரு. பெ. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி, கயத்தாறு ஒன்றியம், கழுகுமலையில் உள்ள சுற்றுலாப் பூங்காவைச் சீரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3327*, திரு. தா. மலரவன்.

**திரு. தா. மலரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவையில் உள்ள அருங்காட்சியகத்தை மக்கள் பார்க்க வகை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. தா. மலரவன்] [2007 மே 7

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4169, திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்செந்தூர் நகரினை சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5326, திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தேனி மாவட்டம், சுருளி அருவி சுற்றுலாத் தலத்தினை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5406, டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி.

**டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுராந்தகத்தில் உள்ள மிகப் பெரிய ஏரியான மதுராந்தகம் ஏரியில் ஒரு படகு குழாம் அமைத்து அங்கு சுற்றுலாத் தலம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



2007 மே 7] [டாக்டர் (திருமதி) கே. காயத்ரிதேவி]

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/ -குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5508, செல்வி கே. பாலபாரதி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5646, திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்தணி நகரம் சிறப்பான சுற்றுலாத் தலமாக இருப்பதற்கு அரசு சிறப்புக் கவனம் செலுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5930, திரு. எல். ரவிச்சந்திரன்.

**திரு. எல். ரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சுற்றுலாப் பயணிகள் அதிகம் வரும் ஏற்காடு, கொல்லிமலை போன்ற இடங்களில் சுற்றுலாப் பயணிகள் மனம் கவரும்வண்ணம் அரசு சில திட்டங்கள் தீட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6019, திரு. க. இராஜேந்திரன்.

**திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஜெயங்கொண்டம் தொகுதியில் சுற்றுலாத் தலமான கங்கைகொண்ட சோழபுரத்தில் அருள்மிகு பிரகதீஸ்வரர் ஆலயம் உள்ளது. இங்கு நிலையான பயணியர் மாளிகை அமைக்க வேண்டியதன் அவசியம்

குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6051, திரு. ந. கணபதி, இருக்கையில் . . .(குறுக்கீடு) திரு. கணபதி, நீங்கள் போய் உங்கள் இடத்தில் உட்காருங்கள்.

**திரு. ந. கணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வானூர் தொகுதிக்குட்பட்ட ஆரோவில் பகுதியை சுற்றுலாத் தலமாக மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6096, திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேலூர் தொகுதி, அழகர்கோவிலிலுள்ள இயற்கைவளம் மற்றும் அதிசய தீர்த்தம் காண வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் அதிகம் வருவதால், அழகர்கோவிலை சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6142, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூரில் சுற்றுலா அலுவலகம் அமைத்து, சுற்றுலாத் துறை மூலம் 10 நவீன சொகுசுப் பேருந்துகளை திருத்தணி, திருப்பதி,



திருவண்ணாமலை, சோளிங்கர், காஞ்சிபுரம், படவேடு, பள்ளிகொண்டா, வெட்டுவாணம், வள்ளிமலை, மேல்மருவத்தூர், தெங்கால், ரத்னகிரி, கலவை, அரியூர் திருமலைக்கோடி ஆகிய தெய்வத் திருத்தலங்களுக்கு இயக்கி, சுற்றுலாப் பயணிகளுக்கு வசதி செய்துதர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6284, திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்கரன்கோவில் பகுதிகளில் குடியிருந்து வருகின்ற கிராமியக் கலைஞர்களுக்கு ஒரு கலைக்கூடம் கட்டிக்கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6363, திரு. ராம. சுப்புராம்.

**திரு. ராம. சுப்புராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருமயம் சட்டமன்றத் தொகுதி, திருமயம் ஒன்றியத்திலுள்ள கே.பள்ளிவாசல், வரலாற்றுச் சிறப்புமிக்க, சரித்திரப் புகழ்பெற்ற மசூதியைக் கொண்ட இஸ்லாமிய சமூக மக்கள் நிறைந்த ஊராகும். இதனை தமிழக அரசு சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

[2007 மே 7

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *6417*, திரு. ல. ராதாகிருஷ்ணன்.

**திரு. ல. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவில்பட்டியைச் சுற்றியுள்ள செவல்குளம், இலுப்பையூரணி, மஞ்சநாயக்கர்பட்டி, கரிசல்குளம், கூசாலிபட்டி போன்ற இன்னும் பல கிராமங்களில் வசிக்கும் நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு சுற்றுலாத் துறைமூலம் வேலைவாய்ப்பு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *6673*, திரு. பி. தங்கமணி.

**திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்செங்கோடு சட்டமன்றத் தொகுதி, திருச்செங்கோடு அர்த்தநாரீஸ்வரர் கோயிலை சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *6804*, திரு. செ. தாமோதரன்.

**திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிணத்துக்கடவு தொகுதியில் உள்ள பிரசித்திபெற்ற அருள்மிகு சூலக்கல் மாரியம்மன் கோயிலை சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."



2007 மே 7]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *7134*, திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தீரன் சின்னமலை வாழ்ந்த இடமான ஓடாநிலையை சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *7285*, திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேளாங்கண்ணியில் சுற்றுலாத் துறை சார்பில் தங்கும் விடுதி கட்ட நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *7306*, திரு. என்.ஆர். ரங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பட்டுக்கோட்டை பகுதியில் உள்ள மனோரா சுற்றுலாத் தலத்திற்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்து, சிறப்பாகப் பராமரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7486, திரு. ஆர். வைத்திலிங்கம்.

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் மாவட்டம், கல்லணைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் வசதிக்கு, தங்கும் விடுதி கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7498, திரு. ஓ.கே. சின்னராஜ்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேட்டுப்பாளையம் தொகுதி, கல்லாறு அரசு பழப் பண்ணையை சுற்றுலாத் தலமாக மாற்றி, அங்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7648, திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சோளிங்கர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சோளிங்கர் நகரைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7738, திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இராயபுரம் பகுதியில் உள்ள மீன்பிடித் துறைமுகத்தை ஒட்டியுள்ள கடற்கரையில் நீர் விளையாட்டுகள் (Water Sports) அமைத்து, சுற்றுலாவை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7784, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதி, மேல்சோழங்குப்பம் கிராமத்தில் உள்ள மிருகண்டா நதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அணையை மேம்படுத்தி, சுற்றுலாப் பயணிகள் பயன்பெறும் வகையில் சுற்றுலாத் துறையின்மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7830, திருமதி ரா. லீமா றோஸ்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குமரிக் குற்றாலம் எனப்படும் திற்பரப்பு நீர்வீழ்ச்சியில் சாரல் விழா கொண்டாட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

[2007 மே 7

முற்பகல் 11-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7612, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காவேரிப்பட்டணம் தொகுதி, பாரூர் ஏரியில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் நவீன சுற்றுலா மையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7662, திரு. பா. வேல்துரை, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7898, திரு. எஸ். ஜாண் ஜேக்கப்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிள்ளியூர் தொகுதிக்குட்பட்ட தேங்காய்பட்டணம் பகுதியில் இயற்கையாகக் காணப்படும் குழித்துறை ஆற்றுக்காலை சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7927, திரு. டி. மூர்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7944, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டத்தில் உள்ள அனுமன்தீர்த்தம் புண்ணிய தலத்தில் ஓய்வு இல்லம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



2007 மே 7] [திரு. ப. டில்லி பாபு]

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8240, டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கபிலர்மலை தொகுதியில் உள்ள ப.வேலூரில் தேசிய நெடுஞ்சாலையில் நான்கு வழிப்பாதை அமைக்கப்பட்டு வரும் காவிரி ஆற்றுப் பாலத்திற்கும், இப்பொழுது இருக்கும் காவிரி ஆற்றுப் பாலத்திற்கும் இடையில் சுற்றுலாத் துறையின்மூலம் ஒரு பூங்கா அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8421, திரு. செ.ம. வேலுசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8673, திரு. செ. சின்னசாமி.

**திரு. செ. சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மருங்காபுரி தொகுதி, வையம்பட்டி ஒன்றியம், வீரம்பூர் ஆலயத்தை சுற்றுலா மையமாக அறிவித்து, மணிமண்டபம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8924, திரு. டி. இராமச்சந்திரன்.

[2007 மே 7

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தளி சட்டமன்றத் தொகுதி, தளி பெரிய ஏரியில் படகுப் போக்குவரத்து, சுற்றுலாத் துறைமூலமாகச் செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9282, திரு. ந. சுப்ரமணியன்.

**திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதி, விராலிமலையில் மயில்கள் நிறைய இருப்பதால், விராலிமலையில் மயில்கள் சரணாலயம் அமைத்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9296, திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதியில் உள்ள பழவேற்காடு பகுதியில் பறவைகள் சரணாலயம் ஒன்று நவீன முறையில் அமைத்து பொது மக்கள் பயனடையச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9323, திரு. இல. வேலுசாமி.



2007 மே 7]

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம், தருமபுரி மாவட்ட எல்லைப் பகுதியில் உள்ள ஆனைமடுவு நீர்வீழ்ச்சிப் பகுதியை சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9429, திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இராசபாளையம் தொகுதியிலுள்ள சாஸ்தா கோவில் அணைக்கட்டுப் பகுதி மற்றும் அய்யனார் கோவில் ஆகிய இடங்களை சுற்றுலாத் தலங்களாக அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9512, திருமதி செல்வி ராமஜெயம்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புவனகிரி தொகுதியில் அமைந்துள்ள பிச்சாவரத்தில் சுற்றுலா மையம்மூலம் இயக்கப்படும் படகுகள் செல்ல முடியாதவாறு பக்கக் கால்வாய்கள் சேறும் சகதியுமாக உள்ள காரணத்தால் படகுகள் செல்வதற்கு ஏதுவாக இப்பகுதி முழுவதையும் தூர்வார வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9607, திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், அமிர்தி காட்டை சுற்றுலாத் தலமாகத் தரம் உயர்த்திட நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9809, முனைவர் கு. ஜெயக்குமார்.

**முனைவர் கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாமக்கல் மற்றும் சேந்தமங்கலம் (கொல்லிமலை) ஆகிய சுற்றுலா இடங்களை இன்னும் மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9849, திரு. எஸ். ஜெயபால்.

**திரு. எஸ். ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குளச்சல் சட்டமன்றத் தொகுதி, முட்டம் சுற்றுலா மையத்தில் காட்சிக் கோபுரம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9910, திரு. வை. காவேரி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 10622, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, சோலையார்பேட்டை ஒன்றியம், ஏலகிரி மலை சுற்றுலா மேம்பாட்டுப் பணியை விரைந்து முடிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10708, திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், சாத்தனூர் அணையில் இயங்காமல் நிறுத்திவைக்கப்பட்டுள்ள சிறுவர் இரயில், படகுப் போக்குவரத்து போன்றவற்றை மீண்டும் தொடங்கி சுற்றுலா வரும் பயணிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10831, திரு. ம. குணசேகரன்

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மானாமதுரை தொகுதியில் உள்ள இடைக்காட்டூர் சுற்றுலாத் தலத்தை விரிவுபடுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10955, திருமதி பெ. கமலாம்பாள், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 11533, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், பேரூர் தொகுதிக்குட்பட்ட குறிச்சி குளத்தில் படகுகள் சவாரி அமைத்து சுற்றுலாத் தலமாக மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11611, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிராமியப் பண்பாட்டு கலைகளை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,18,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,89,01,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

## (ஆ) கோரிக்கை எண் 28 – செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மானியக் கோரிக்கை எண் 28 - செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.33,42,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.87,60,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 309, திரு. கோவை தங்கம்

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,42,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,60,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5365, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,42,36,000/-, மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,60,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8809, திரு. விடியல் எஸ். சேகர். ,

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,42,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,60,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11154, திரு. து. அமரமூர்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 11388, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,42,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,60,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5188, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,42,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,60,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5248, திரு. கு. பாண்டுரங்கன்.

**திரு. கு. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ்



வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,42,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,60,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6169, திரு. ஆர். சின்னசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7745, திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,42,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,60,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8012, திரு. கே.வீ. ராமநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8604, திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8734, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,42,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,60,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10198, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,42,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,60,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10464, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,42,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,60,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11055, திருமதி பெ. கமலாம்பாள், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 11715, திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,42,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,60,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11857, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ்



வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,42,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,60,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5291, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழில் தயாரிக்கப்படும் குறும்படங்களை ஊக்குவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,42,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,60,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5332, திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தேனி மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பத்திரிகையாளர்களுக்கும், தொலைக்காட்சி நிருபர்களுக்கும் அரசு இலவசமாக வீடு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,42,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,60,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5504, செல்வி கே. பாலபாரதி. இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5645, திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்தணி நகரில் மட்டுமல்லாது பல இடங்களிலும், பள்ளி அருகிலும் சினிமா ஆபாச சுவரொட்டிகள் ஒட்டப்படுவதைத் தடை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,42,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,60,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6050, திரு. ந. கணபதி.

**திரு. ந. கணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்ட பத்திரிகையாளர்கள் மற்றும் தொலைக்காட்சி நிருபர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,42,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,60,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6115, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூரில் உள்ள அண்ணா கலையரங்கத்தைப் புதுப்பித்து அடுக்கு மாடிக் கட்டடமாக மாற்றி நவீன வசதியுடன் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,42,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,60,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6285, திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்கரன்கோவில் தொகுதியில் உள்ள மூன்று ஒன்றியங்களுக்கும்



செய்தி விளம்பர வாகனம் ஒன்று அரசுமூலம் வழங்கிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,42,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,60,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6392, திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்றம் நடைபெறும்பொழுது முழு நிகழ்ச்சிகளையும் பொதுமக்கள் காணும் வகையில் அனைத்துத் தொலைக்காட்சிகளுக்கும் ஒளிபரப்பும் உரிமையை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,42,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,60,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6806, திரு. செ. தாமோதரன்.

**திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதிக்குச் செய்திட்ட சாதனைகளை இலவசமாக விளம்பரம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,42,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,60,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7125, திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழறிஞர் கல்கி, 'பொன்னியின் செல்வன்' கதையை மொடக்குறிச்சி தொகுதி, கொளாநல்லியில் உள்ள முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. பெரியசாமி அவர்களின் வீட்டில் அமர்ந்து எழுதினார். "பொன்னியின் செல்வன்" கதை தோன்றக் காரணமான வீட்டை நினைவுச் சின்னமாக அங்கீகரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,42,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,60,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7286, திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகையில் தமிழ்த்தென்றல் மறைமலை அடிகள் அவர்களுக்கு நினைவு மண்டபம் கட்ட நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,42,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,60,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7307, திரு. என்.ஆர். ரங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் நினைவு மண்டபத்தில் ஒளி-ஒலிப் பேழை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,42,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,60,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7497, திரு. ஓ.கே. சின்னராஜ்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு செய்தித் துறையின்மூலம் எய்ட்ஸ் விழிப்புணர்வு, மதுவிலக்கு, குடிப்பழக்கத்தின் தீமை மற்றும் மத ஒற்றுமை குறித்து திரைப்படம் எடுத்து அதனைத் தமிழ்நாட்டின் அனைத்துத் திரை அரங்குகளிலும் கட்டாயமாகத் திரையிடப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,42,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,60,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7649, திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், வாலாஜா வட்டம், சோளிங்கர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட சோளிங்கர், காவேரிப்பாக்கம் மற்றும் நெமிலி ஒன்றியங்களில் தமிழ் வளர்ச்சி மையங்கள், நூலகங்கள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,42,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,60,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7655, திரு. பெ. மோகன்.

[2007 மே 7

**திரு. பெ. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நமது கலை மற்றும் பண்பாட்டைப் பேணி காக்கும் வகையில் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் நிகழ்ச்சிகளைத் தணிக்கை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,42,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,60,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7921, திரு. டி. மூர்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8424, திரு. செ.ம. வேலுசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8483, திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டத்தில் பணிபுரியும் பத்திரிகையாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,42,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,60,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8923, திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகம் முழுவதும் காலியாக உள்ள மக்கள் தொடர்பு அலுவலர் பணியிடங்களை உடன் நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



2007 மே 7] [திரு. டி. இராமச்சந்திரன்]

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,42,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,60,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9210, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசுப் பத்திரிகைகளில் குழந்தைத் தொழிலாளர்கள் ஒழிப்பு குறித்து விளம்பரம் மற்றும் செய்தி வெளியிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,42,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,60,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9310, திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பத்திரிகையாளர்கள் பணியில் இருக்கும்போது மரணம் அடைந்தால் ரூ.2 இலட்சம் வழங்கப்படுவதை ரூ.5 இலட்சமாக உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,42,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,60,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9410, திரு. எல். ரவிச்சந்திரன்.

**திரு. எல். ரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாநகரில் நடத்தப்படும் அரசுப் பொருட்காட்சியில் சில அரசுத்

துறைகள் சம்பந்தப்பட்ட அரங்கங்களை அமைத்து மிகப் பிரம்மாண்டமான பொருட்காட்சியாக நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,42,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,60,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9434, திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அறிவு சார்ந்த திரைப்படங்களைப் பள்ளிகளில் மாணவர்களுக்குத் திரையிட்டுக் காண்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,42,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,60,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9577, திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குடும்ப வன்முறை தடுப்புச் சட்டம் குறித்து பொதுமக்கள் மத்தியில் செய்தி மற்றும் விளம்பரத் துறைமூலம் போதிய விளம்பரம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,42,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,60,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9595, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசின் இலவசத் திட்டங்களான வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி மற்றும் இலவச எரிவாயு இணைப்பு வழங்குதல் திட்டங்களில் பயனடையும் பயனாளிகளின் பட்டியலை அந்தந்த ஊராட்சி மன்றத்தின் தகவல் பலகையில் விளம்பரப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,42,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,60,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9867, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு சுவர்களில் விளம்பரம் செய்யப்படுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,42,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,60,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10612, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் நகரப் பேருந்து நிலையத்தில் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. தி.க. ராஜா] [2007 மே 7

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,42,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,60,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10832, திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தின் பழங்கால நினைவுச் சின்னங்களை அனைத்து சினிமாத் தியேட்டர்களிலும் குறும்படமாகத் தயாரித்து செய்தி மற்றும் விளம்பரத் துறையின்மூலம் மக்களுக்கு விளக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,42,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,60,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10940, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. "பத்திரிகையாளர்களுக்கு அரசு வீடு கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,42,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,60,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11571, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், பேரூர் தொகுதி, பள்ளியில் படிக்கும் மாணவ, மாணவியரை ஊக்குவிக்கும் முறையில் தொலைக்காட்சியில் கல்வி



2007 மே 7] [திரு. சு.ப. வேலுமணி]

சம்பந்தப்பட்ட பாடங்களை ஒளிபரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,42,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,60,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11612, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு செய்திக் குறிப்புகள், நலத் திட்டங்கள் அடித்தட்டு மக்களுக்கு உடனுக்குடன் சென்றடைய நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,42,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,60,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

## (இ) கோரிக்கை எண் 30 – எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மானியக் கோரிக்கை எண் 30 - எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.65,33,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.8,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

[2007 மே 7

*முற்பகல் 11-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 328, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.65,33,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.8,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5363, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.65,33,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.8,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8864, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.65,33,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.8,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."



2007 மே 7]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11155, திரு. து. அமரமூர்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 11390, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.65,33,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.8,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5135, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.65,33,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.8,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5250, திரு. கு. பாண்டுரங்கன்.

**திரு. கு. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.65,33,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.8,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

[2007 மே 7

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8302, திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,33,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7045, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,33,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7028, திரு. டி. மூர்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8010, திரு. கே.வீ. ராமநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8638, திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8735, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



2007 மே 7] [திரு. தி. வேல்முருகன்]

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,33,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10107, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,33,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10965, திருமதி பெ. கமலாம்பாள், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 11706, திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,33,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10942, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,33,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *11610*, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,33,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *11859*, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,33,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *5331*, திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாணவ, மாணவிகளுக்கு அரசின் சார்பில் வழங்கப்படுகின்ற பாடப் புத்தகங்கள் இலவசமாக பைண்டிங் செய்வதற்கு மாவட்டந்தோறும் அரசு அச்சகம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,33,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *5647*, திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்தணி தொகுதியின் தலைநகரான திருவள்ளூர் போன்ற மாவட்டத் தலைநகரங்களில் எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை அலுவலகம் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,33,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *6140*, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசு அச்சகம் அமைத்து, அரசு சம்பந்தப்பட்ட புத்தகங்கள், விண்ணப்பப் படிவங்கள், காவல் நிலைய முதல் தகவல் அறிக்கைப் படிவங்கள் ஆகியவற்றை அச்சடித்து விநியோகம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,33,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *6183*, திரு. ஆர். சின்னசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *6898*, திரு. செ. தாமோதரன்.

[2007 மே 7

**திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்களின் அலுவலகங்களுக்கு எழுதுபொருட்கள் (stationery) வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,33,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7126, திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் வாழ்ந்து மறைந்த சித்தர்களின் பாடல்கள் மற்றும் நூல்களை அரசே வெளியிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,33,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7402, திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டம், உசிலம்பட்டியில் எழுதுபொருள் அச்சகம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,33,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7607, திரு. த.அ. மேகநாதன்.



2007 மே 7]

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு அச்சகத் தொழிலாளர்களின் சம்பளத்தை உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,33,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7744, திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு அச்சகங்களில் பணிபுரியும் ஊழியர்கள், அலுவலர்கள் நலன் கருதி கூடுதலான சலுகைகள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,33,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8922, திரு. டி. ராமச்சந்திரன்.

**திரு. டி. ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் மாவட்டந்தோறும் அரசு இதழ்களை அச்சிட அச்சகங்களை நிறுவ வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,33,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9408, திரு. எல். ரவிச்சந்திரன்.

**திரு. எல். ரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டத்தில் அரசுக்குச் சொந்தமான அச்சகங்களை விரிவுபடுத்தி வேலைவாய்ப்பை அதிகப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,33,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9430, திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கல்வி அறிவை வளர்க்கும்பொருட்டு கிராமப்புற ஏழை, எளிய மாணவர்களுக்கு அரசு இலவசமாக எழுதுபொருட்கள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,33,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10592, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் அரசு அச்சகம் ஒன்றைத் தொடங்கி அங்குள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,33,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10823, திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் அச்சுத் தொழிலை ஊக்குவிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,33,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11537, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், அரசு அச்சக அலுவலகத்தில் காலியாகவுள்ள பணி இடங்களை உடனே நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,33,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில்

கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்தபின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்தி மற்றும் விளம்பரம், எழுதுபொருள் மற்றும் அச்சு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை@@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்தபின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கெல்லாம் விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று மூன்று மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் மூன்று மானியக் கோரிக்கைகளின்மீதும் சேர்த்தே பேசலாம். முதலில், மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. கணபதி. திரு. கணபதி உங்களுக்காகப் பத்து நிமிடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

***திரு. ந. கணபதி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியாரின் துணிவையும், பேரறிஞர் அண்ணாவின் அறிவையும், புரட்சித் தலைவர் அவர்களின் கனிவையும் மொத்தமாகப் பெற்று, அந்த முப்பெரும் தலைவர்களின் ஒப்பற்ற உருவமாய்த் திகழ்ந்து, நம்மையெல்லாம் வழிநடத்திக் கொண்டிருப்பவர் நமது ஒப்பற்ற தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) வானூர் தொகுதியில் மீண்டும் இரண்டாவது முறையாக

@ 201 முதல் 268 வரையிலான பக்கங்களில் இணைப்புகள்-I மற்றும் II ஆக அச்சிடப்பட்டுள்ளன.

@@ 269 முதல் 328 வரையிலான பக்கங்களில் இணைப்புகள்-III மற்றும் IV ஆக அச்சிடப்பட்டுள்ளன.





என்னைப் போட்டியிட வைத்து, வெற்றி பெறச் செய்த மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சுற்றுலா, செய்தி மற்றும் எழுது பொருள் அச்சுத் துறை மானியக் கோரிக்கைகளில் நான் பேசுவதற்கு முழு முதற் காரணமாய் இருக்கின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இரண்டாவது முறையாக என்னைச் சலிப்பில்லாமல் தொடர்ந்து வெற்றி பெறச் செய்த வானூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், கூட்டணிக் கட்சியினருக்கும், பேச வாய்ப்பளித்த தங்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலா, செய்தி மற்றும் எழுதுபொருள் அச்சுத் துறை மானியக் கோரிக்கைகளின்மீது என்னுடைய கருத்துகளைப் பதிவு செய்ய விழைகிறேன்.

கடந்த 2001-2006 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் சுற்றுலாத் துறைக்கென ரூ.139.67 கோடி ஒதுக்கீடு செய்து, தமிழகத்தில் சுற்றுலாத் துறையை மேம்படுத்தியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த 5 ஆண்டு காலங்களில் அகமதாபாத், சண்டிகர், கவுகாத்தி, வாரணாசி, புவனேஸ்வர் ஆகிய ஊர்களிலும், ஆக்ரா மற்றும் ஜெய்ப்பூரில் சுற்றுலா அலுவலகங்கள் அமைக்கப்பட்டு, தமிழக சுற்றுலாத் துறையினை மேம்படுத்தியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆதிசங்கரர் மற்றும் விவேகானந்தா சுற்றுலாச் சாலைகளுக்கு ரூ.427.64 இலட்சமும், கிராமப்புற சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின்கீழ் கழுகுமலை மேம்பாட்டிற்கு ரூ.48.68 இலட்சமும், செட்டிநாடு மேம்பாட்டிற்கு ரூ.50.00 இலட்சமும், தீர்த்தமலை மேம்பாட்டிற்கு ரூ.50.00 இலட்சமும், திருக்குறுங்குடிக்கு ரூ.50.00 இலட்சமும், தேவிப்பட்டினத்திற்கு ரூ.75.60 இலட்சமும், திருப்புடைமருதூருக்கு ரூ.50.00 இலட்சமும் ஒதுக்கீடு செய்து சுற்றுலாத் துறையின்மூலம் சாதனை படைத்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மதுரை திருமலைநாயக்கர் மகாலில் ஒலி-ஒளி ... அமைக்க ரூ. 96.18 இலட்சம் செலவில் மாண்புமிகு ... புதுப்பிக்கப்பட்டது.

227667
சென்னை-600

64-வது ஸ்கால் மாநாடு 2003 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 19 முதல் 24 வரை சென்னையில் நடத்தி, மாண்புமிகு அம்மா அவர்கள் 38 நாடுகளிலிருந்து 700 முக்கியப் பிரமுகர்களோடும், அதன்பிறகு தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சிக்காக 7 அம்சத் திட்டத்தையும், 'மகிழ்வூட்டும் தமிழ்நாடு—நீங்களே அனுபவியுங்கள்' என்ற விளம்பர உத்தியையும் அறிமுகப்படுத்தி, இந்த மாநாட்டிற்கு மத்திய அரசு விருது வழங்கியது குறிப்பிடத்தக்கது.

சுனாமி தாக்கியவுடன் சுற்றுலாத் துறை நிவாரணப் பணிகளில் துரித நடவடிக்கை மேற்கொண்டு, இந்தியாவின் பிற பகுதிகள், வெளிநாடுகளில் வசிக்கும் சுற்றுலாப் பயணிகளின் உறவினர்களுக்குத் தகவல் அளிக்க தனி அலுவலர்களை நியமனம் செய்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆவார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் சுற்றுலாத் துறை 'ட்டி 3' அமெடியஸ் விருது, கலிலியோ எக்ஸ்பிரஸ் பயணம் மற்றும் சுற்றுலா விருது, PATWA சர்வதேச விருது போன்ற தேசிய மற்றும் உலக அளவில் பல பெருமைக்குரிய பாராட்டுகளையும், பரிசுகளையும் வென்றுள்ளது.

தமிழ்நாட்டின் முக்கிய சுற்றுலாத் தலங்களைப் பற்றிய விவரங்கள், விழாக்கள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் உணவகங்கள், தங்கும் விடுதிகள் பற்றிய விரிவான விளக்கங்களை உலகில் எந்த ஒரு மூலையில் இருக்கும் சுற்றுலாப் பயணியும் எளிதாக அறிந்துகொள்ளும் வண்ணம் சுற்றுலா வலைதளம் உருவாக்கியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2006-2007 ஆம் ஆண்டு சுற்றுலாத் துறையில் கீழ்க்கண்ட அறிவிப்புகளை மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் செய்தார்கள். அதில் நடந்தேறிய பணிகள் எவ்வளவு, நடக்காமல் உள்ள பணிகள் எவ்வளவு என்பதைத் தெரிவிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலைப் பகுதியில் சுற்றுலாப் பயணிகளுக்காகக் கூடுதல் அடிப்படை வசதிகளுக்கு ரூ.39.00 இலட்சமும், தூத்துக்குடி மாவட்டம், கழுகுமலை மேம்பாட்டுத் திட்டத்திற்கு ரூ.48.58 இலட்சமும், கொடைக்கானலில் வரவேற்பு மையம் அமைக்க ரூ.15.00 இலட்சமும், வேலூர் மாவட்டம், ஏலகிரி மலைப் பகுதியை ரூ.2.91 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்த, ரூ.100.60 இலட்சமும், தேனி மாவட்டம், சுருளி நீர்வீழ்ச்சி மேம்பாடு, சின்ன சுருளி நீர்வீழ்ச்சி



மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றிற்கு நிதி ஒதுக்கீடு செய்வதாகக் கூறிய பணிகள் இவையெல்லாம் என்ன நிலையில் உள்ளன என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய விழுப்புரம் மாவட்டம், வானூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருவக்கரை ஆன்மீகம் மற்றும் சிறந்த சுற்றுலாத் துறை மையமாக விளங்குகிறது. இங்குள்ள அருள்மிகு ஸ்ரீவக்கிரகாளியம்மன் திருக்கோயில் ஆன்மீக மையமாகவும், தொல்லியல் துறையின்கீழ் உள்ள கல் மரப் பூங்கா சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், சுற்றுலாப் பயணிகளைக் கவரும் சுற்றுலா மையமாகவும் உள்ளது. இந்த தேசியக் கல் மரப் பூங்காவின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பில் மேம்பட்ட கவனம் செலுத்த வேண்டியது மிகவும் முக்கியமான அம்சமாக உள்ளது. இதனைக் கவனத்தில்கொண்டு தமிழக அரசு ஆவன செய்ய வேண்டும்.

முற்பகல் 11-20

அடுத்ததாக, வானூர் தொகுதியில் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளையும், குறிப்பாக அனைத்து வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளையும் ஈர்க்கின்ற 'ஆரோவில் சர்வதேச நகரம்' என்ற சுற்றுலாத் தலமும் அமைந்துள்ளது. இந்த 'ஆரோவில் சர்வதேச நகரம்' 1969 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 22 ஆம் தேதி தொடங்கப்பட்டு இன்றுவரை தொடர் கட்டுமானப் பணிகளில் இருந்து வருகிறது. 1988 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட 'ஆரோவில் நிறுவனம்' குறித்த சட்டத்தின்மூலம் தன்னுடைய கண்காணிப்பின்கீழ் மைய அரசு கொண்டு வந்தது. பின்னர் இந்திய அரசின் மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின்மூலம் ஆரோவில்லின் அடிப்படை இலட்சியத்தை அடைய அனைத்து வகையான உதவிகளையும் செய்து வருகின்றது. இந்த நிலையில் சுமார் 38 ஆண்டுக் காலம் நடைபெறும் பணிகளின் அடிப்படையில் ஆரோவில்லின் இலட்சியத்தை, இலக்கை எட்டியுள்ளதா என தமிழக அரசு ஆய்வு செய்ய வேண்டும். புதுச்சேரி யூனியன் பிரதேச அரசு ஆரோவில்லை சுற்றுலா மையமாக, தலமாக ஏற்று தன்னுடைய தினசரி சுற்றுலாத் திட்டத்தில் இணைத்து, சுற்றுலாப் பயணிகளை அழைத்துச் சென்று தனது சுற்றுலாத் துறையை மேம்பாடு அடையச் செய்கிறது. பூகோள ரீதியாக தமிழகப் பகுதியில் அமைந்துள்ள இந்தப் பகுதியை தமிழக அரசின் சுற்றுலாத் துறையின்கீழ் கொண்டு வந்து, இப்பகுதியை சுற்றுலாத் தலமாக அறிவித்து, உள்நாட்டு, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் பயன்பெற வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் எனக் கோருகிறேன்.

[திரு. ந. கணபதி] [2007 மே 7

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மேலும் இந்த ஆரோவில் சர்வதேச நகரம் 'மாத்திர் மந்திர்' என்கிற இடத்தை மையமாகக் கொண்டு சுமார் 5,000 ஏக்கர் நிலப்பரப்பில் அமைய உள்ளதாக இத்திட்டத்தின் Master Plan கூறுகிறது. மனித குல ஒற்றுமையை வலியுறுத்த ஏற்படுத்தப்படுகின்ற இந்நிறுவனத்தின்கீழ் ஏராளமான அரசு சாரா தொண்டு நிறுவனங்களும், 100 சதவிகிதம் வரிவிலக்கு பெற்ற கைவினைப் பொருட்கள் ஏற்றுமதிக்கூடங்களும் செயல்பட்டு வருகின்றன. மேலும், எதிர்காலத்தில் இது ஒரு முக்கியமான ஆன்மீக மையமாக உருவாகும் எனவும் எதிர்நோக்கப்படுகிறது. இவ்வாறு பல்வேறு சிறப்பு அம்சங்களால் உலக சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்து ஈர்க்கின்ற இந்த ஆரோவில் நேரடியாக மாநில அரசின் கண்காணிப்பின்கீழ் கொண்டு வரப்பட்டு சுற்றுலாத் தலமாக செயல்பட்டால், பகுதி சார்ந்த சுற்றுலாத் தொழிலை மேம்படுத்திப் பயனடைய முடியும். எனவே, தமிழக அரசு இவ்விஷயத்தில் சிறப்புக் கவனம் செலுத்தி வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் சென்னை, மெரினா கடற்கரைக்கு வருகை தருகின்ற மக்கள் பயன்படுத்தி தூக்கி எறியும் பொருட்களான பிளாஸ்டிக், காகிதத் தாள்கள் மற்றும் சிறு சுற்கள் போன்றவை மணல் பரப்பில் தேங்கி அசுத்தம் ஆவதைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. மாண்புமிகு அம்மா அவர்கள் விலை உயர்ந்த வெளிநாட்டு இயந்திரங்கள்மூலம் மெரினா கடற்கரையை தினந்தோறும் சுத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்து அழகுபெறச் செய்தார்கள். இப்போது இந்த மெரினா கடற்கரை குப்பைமேடாகக் காட்சியளிக்கின்றது; தற்சமயம் சுத்தம் செய்கின்ற இயந்திரம் எங்கேயிருக்கிறது என்பதுகூட தெரியாமல் இருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ந. கணபதி:** இன்னும் ஒரு நிமிடத்தில் பேச்சை முடித்துவிடுகிறேன். புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் அரசு விழாக்கள் முறைப்படி அரசு விழாக்களாக நடைபெற்றன. ஆனால், தற்போது உங்கள் கட்சி விழாவாக நடைபெற்று வருகிறது. அரசு நிகழ்ச்சிகளுக்கு பிரதான எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு அழைப்பிதழும் அனுப்பப்படுவதில்லை; தகவலும் தெரிவிப்பதில்லை; உரிய மரியாதையோடு அழைப்பிதழ் கொடுத்தும் அழைக்கப்படுவதில்லை என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



2007 மே 7]

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** பேரவை ...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கன்னிப் பேச்சாம், விட்டுவிடுங்கள். (குறுக்கீடு)

**திரு. ந. கணபதி:** புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சில இடங்களிலே நாங்கள் அ.தி.மு.க.வைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினரின் பெயரைப் போடுகிறோம். ஆனால், அவர்கள் வருவதே இல்லை. கட்சியிலே ஒரு முடிவெடுத்து, ஆளும் கட்சி நடத்துகின்ற விழாக்களிலே, அரசு விழாக்களிலே, நாங்கள் கலந்துகொள்கிறோம் என்று கொறடா அவர்களோ, துணைத் தலைவர் அவர்களோ அவைக்குத் தெரிவித்தால், நிச்சயமாக அழைப்பிதழ்களிலே உறுப்பினரின் பெயரைப் போடுவதற்கு இந்த அரசாங்கத்திற்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. (குறுக்கீடு)

*முற்பகல் 11-25*

**திரு. ந. கணபதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் விழுப்புரம் மாவட்டத்தில் (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சில நிகழ்ச்சிகளினுடைய அந்த விளம்பரங்களைப் பார்க்கிறபோது, பெயர்களைப் பெயரிடுகிறபோது protocol இருக்கிறது. அதன் அடிப்படையிலே போடுவதில்லை. (குறுக்கீடு) இருக்கிறது, நிறைய இடத்திலே இருக்கிறது. அது மாதிரி போடுவதில்லை. சில இடங்களிலே தவறு நடைபெறுகிறது. ஆகவே, அந்த அடிப்படையிலே அவர்கள் போடாத காரணத்தினாலேதான், அதுபோன்ற நிலைமைகளிலே பல இடங்களிலே சட்டமன்ற உறுப்பினர்கள் அந்த நிகழ்ச்சிகளிலே கலந்துகொள்ளாத நிலை இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த கால ஆட்சியினுடைய அழைப்பிதழ்களைக் காட்டுகிறேன். அவற்றிலே என்ன protocol பின்பற்றப்பட்டதோ, அதே protocol இந்த ஆட்சியிலும் நாங்கள் பின்பற்றுவதற்குத் தயாராக இருக்கிறோம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** நாங்கள் ஒன்றைச் சொன்னால், அதற்கு மறுப்பாக அந்த ஆட்சியில் நடைபெற்றது, அந்த ஆட்சியில் நடைபெற்றது என்று சொல்லிக் கொண்டிருப்பதைக் காட்டிலும் இந்த ஆட்சியில் என்ன நடைபெறப் போகிறது என்பதை அமைச்சர் அவர்கள் விளக்கினால் நன்றாக இருக்கும். *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. சிவராஜ். *(குறுக்கீடு)*

**திரு. ந. கணபதி:** ஒரு நிமிடம், ஒரு நிமிடம். என் தொகுதிப் பிரச்சினை. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கரெக்டாக 10 நிமிடங்கள். உடனே பேசுங்கள்.

**திரு. ந. கணபதி:** நான் பேசவே இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நல்ல கருத்துகளையெல்லாம் சொல்லிவிட்டார். *(குறுக்கீடு)* பாருங்கள், திரு. அமரமூர்த்தி, உங்கள் உள்ளூர்க்காரர் என்பதால் அவருக்கு against-ஆகப் பேசாதீர்கள். திரு. சிவராஜ். *(குறுக்கீடு)* திரு. கலைராஜனுக்கு 15 நிமிடங்கள் நேரம் கொடுத்திருக்கிறோம். பேசுங்கள், திரு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுற்றுலா, செய்தி மற்றும் விளம்பரத் துறை மானியக் கோரிக்கைகளிலே பேச வாய்ப்பளித்த உங்களுக்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இப்போது நம்முடைய நாட்டில், உற்பத்தியாகக்கூடிய பொருள்களின் ஏற்றுமதியில் கிடைக்கக்கூடிய அந்நியச் செலாவணியைவிட, சுற்றுலாத் துறையின்மூலம் கிடைக்கக்கூடிய அந்நியச் செலாவணி என்பது இரண்டாவது இடத்திலே இருக்கிறது. அது நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பிலேகூடக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள்மூலம் 2005-2006 ஆம் ஆண்டிலே நமக்குக் கிடைத்த அந்நியச் செலாவணி ஏறத்தாழ 25,172 கோடி ரூபாய் என்று





குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதைப்போல 2006-2007 ஆம் ஆண்டிலே கிடைத்த அந்நியச் செலாவணி 29,604 கோடி ரூபாய் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதிலே தமிழ்நாட்டினுடைய பங்காகக் கிடைத்திருக்கிற அந்நியச் செலாவணி ஏறத்தாழ 30,020 கோடி ரூபாய் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆக, இப்படி நம்முடைய நாட்டிற்கு அந்நியச் செலாவணியை பெரிய அளவிலே ஈட்டிக் கொடுக்கின்ற துறையாக சுற்றுலாத் துறை விளங்கிக்கொண்டிருக்கிறது. ஆகவே, இந்தத் துறையை மேலும் வலுப்படுத்துவது என்பது இன்றியமையாத ஒன்று என்று நான் கருதுகின்றேன்.

அதைப்போல, இந்தியாவிலே வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையிலே தமிழகம் இரண்டாவது இடத்திலே இருக்கிறது என்றும், உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளுடைய எண்ணிக்கையிலே மூன்றாவது இடத்திலே இருக்கிறது என்றும், கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான் குறிப்பிட விரும்புவது என்னவென்றால், இந்த இரண்டிலும் தமிழகம் முதலிடத்திற்கு வர வேண்டும். அதை நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். அதைப்போல உலக நாடுகளிலே இன்றைக்குப் பல நாடுகள் சுற்றுலாமூலம் கிடைக்கக்கூடிய வருமானத்தைத்தான் பெரிய அளவிலே நம்பிக்கொண்டிருக்கின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் தாய்லாந்து, மொரீஷியஸ், மலேஷியா, சிங்கப்பூர் போன்ற நாடுகள் எல்லாம் பெரிய அளவிலே சுற்றுலா வருவாயைத்தான் நம்பியிருக்கின்றன. ஏன், இப்போது காஷ்மீர், இமாச்சலப் பிரதேசம் சிக்கிம், கோவா போன்ற மாநிலங்கள் எல்லாம், சுற்றுலாத் துறையின்மூலம் கிடைக்கின்ற வருவாயைக் கொண்டுதான் அந்த மாநில அரசினுடைய நிதிப்பற்றாக்குறையை ஈடு செய்யக்கூடிய அளவிற்கு இருந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, நாமும் நம்முடைய தமிழகத்திலே இந்தச் சுற்றுலாவை மேம்படுத்தக்கூடிய வழிகளை எண்ணிப்பார்க்க வேண்டும்.

எந்த மாநிலத்திற்கும் இல்லாத சிறப்பு நம்முடைய தமிழகத்திற்கு உண்டு. இங்கே, மிக நீண்ட கடற்கரை, ஏறத்தாழ 900 கிலோ மீட்டர் நீள கடற்கரை தமிழகத்திலே இருக்கின்றது. இந்தக் கடற்கரையினுடைய அழகை முழுமையாக சுற்றுலாவிற்குப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றோமா என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். கோவா போன்ற மாநிலங்களிலே, சிறிய அளவிலே தனித்தனி beach என்று, 27, 28 beaches இருக்கின்றன. அங்கே பார்த்தால், 10, 1 ஏக்கர்தான் இருக்கும்; அந்த beach-ல் மணற்பரப்பு இருக்கும். அங்கே அவர்கள் பெரிய நட்சத்திர ஓட்டல்கள், வணிக வளாகங்கள்

போன்றவற்றையெல்லாம் கட்டி, சுற்றுலாப் பயணிகளை ஈர்த்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால், நாம் சென்னையிலேயிருந்து பாண்டிச்சேரி வரையிலே, மிக நீண்ட, கடற்கரையைக் கொண்டிருக்கின்றோம். நம்முடைய அரசின்மூலமாகவும், தனியார் துறையின்மூலமாகவும், கோவா மாநிலத்தில் இருப்பதைப்போன்று, separate beaches-ஐ அங்கே அமைப்பதற்கு ஏற்பாடு செய்து, நடுத்தர வர்க்கத்தினரும், ஏழை மக்களும் தங்குகின்ற வகையிலே, அங்கே budget hotels-ஐ நீங்கள் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன். ஆகவே, இதுபோன்ற வசதிகளை நம்முடைய சுற்றுலாத் துறை ஏற்படுத்தித் தரவேண்டும்.

*முற்பகல் 11-30*

கிழக்குக் கடற்கரைச் சாலை என்பது இன்னும் முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை. பாண்டிச்சேரிக்கு அப்பாலே நாம் கன்னியாகுமரி வரையிலே நீண்ட கடற்கரையை வைத்திருக்கிறோம். அந்தக் கடற்கரை, எந்தெந்த மாவட்டங்களில் வருகின்றதோ, அந்த மாவட்டங்களிலுள்ள மாவட்ட நிர்வாகத்தின்மூலமாக இதுபோன்ற வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு நம்முடைய சுற்றுலாத் துறை முயற்சி எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

இப்போது இந்த Theme Parks மிகப் பெரிய பொழுதுபோக்கு அம்சமாக விளங்கிக் கொண்டிருக்கின்றன. அதை நடத்துகின்ற நிறுவனங்கள் பெரிய நிறுவனங்கள்; அங்கே வசூலிக்கப்படுகின்ற கட்டணங்கள் என்பது மிக அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், சாதாரண மக்கள் அந்த Theme Park-க்குச் சென்று, அதைப் பார்ப்பது என்பது அரிதாக இருக்கின்ற காரணத்தினாலே, நம்முடைய சுற்றுலாத் துறையின்மூலமாக கோவை, மதுரை, திருச்சி போன்ற பெரிய நகரங்களிலே இதுபோன்ற Theme Park-களைத் தொடங்குவதற்கு அரசு முயற்சி எடுக்கவேண்டும்; சுற்றுலாத் துறை முயற்சி எடுக்கவேண்டும்.

குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால், அமெரிக்காவில் இருப்பதைப்போன்ற ஒரு Disney Land, நம்முடைய சென்னைக்கு அருகில் மகாபலிபுரத்திலே தொடங்கப்பட வேண்டும். அதுவும் சுற்றுலாத் துறையின்மூலம் தொடங்கவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதைப்போல, நம்முடைய தமிழ்நாட்டிலே கோயில் நகரங்களாக இருக்கக்கூடிய மதுரை, தஞ்சை, இராமேஸ்வரம், திருச்செந்தூர்,



காஞ்சிபுரம், கன்னியாகுமரி போன்ற நகரங்களில், இந்தியா முழுவதும், உலகம் முழுவதும் பிரசித்திபெற்ற கோயில்கள் இருக்கின்றன. அதைப்போல, ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு, ஏலகிரி போன்ற இடங்கள் எல்லாம் மிகச்சிறந்த மலைவாசஸ்தலங்களாக இருந்துகொண்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் இணைத்து, சுற்றுலா உருவாக்கப்படும் என்று நம்முடைய மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள், ஏற்கெனவே அமைச்சராக இருந்தபோது, 1998 ஆம் ஆண்டிலேகூட அறிவித்திருக்கின்றார்கள். இராஜஸ்தான் மாநிலத்திலே palace on wheels என்று இப்போது சுற்றுலாவிலே ஏற்பாடு செய்து நடத்துகிறார்கள். அதைப்போல, heritage on wheels என்று நாம் தமிழகத்திலே தொடங்கவிருக்கின்றோம் என்று ஒரு திட்டத்தை அறிவித்தார்கள். ஆனால், அது நடைமுறைக்கு வரவில்லை என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதைப்போல, சென்னைக்கு அருகில் இருக்கக்கூடிய கொளவாய் ஏரி; அது மிகப் பெரிய ஏரி. 1998 ஆம் ஆண்டிலே நம்முடைய அமைச்சர் அவர்கள் அதுகுறித்தும் அறிவித்திருக்கின்றார்கள். அதை நவீனப்படுத்தி, அங்கே படகு சவாரி, wind surfing, jet ski, water ski, hovercraft போன்ற சாகச நீர் விளையாட்டுகளை ஏற்படுத்துவோம் என்றும் குறிப்பிட்டார்கள். ஆனால், அதுவும் நடைமுறைக்கு வரவில்லை என்பதை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். அங்கே படகு சவாரி அனுமதிக்கப்பட்டு, தற்போது படகு சவாரி நிறுத்தப்பட்டிருக்கின்றது. அது, தேசிய நெடுஞ்சாலையிலே இருக்கின்ற காரணத்தினாலே, அது ஒரு முக்கியப் பொழுதுபோக்குத் தலமாக வளரக்கூடிய இடம். ஆகவே, அமைச்சர் அவர்கள் 1998 ஆம் ஆண்டிலே அறிவித்ததை, வருகிற ஆண்டிலாவது நடைமுறைப்படுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

சுற்றுலாத் துறையின்மூலம் நடத்தப்படுகின்ற நம்முடைய Tamil Nadu Hotels; அந்த ஓட்டல்களிலே தனியார் நடத்துவதைப்போல, அறைகளைச் சுத்தமாகவும், தூய்மையாகவும் வைத்துக்கொள்வதில்லை என்ற பரவலான ஒரு அதிருப்தி சுற்றுலாப் பயணிகளிடத்திலே காணப்படுகின்றது. ஆகவே, அந்த ஓட்டல்களை நல்ல தரமுள்ள ஓட்டல்களாகவும், அறைகளைச் சுத்தமாகவும், தூய்மையாகவும் வைத்திருப்பதற்கு, அந்த நிர்வாகம் நடவடிக்கை எடுப்பதற்கு, இந்தத் துறை ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அதைப்போல அங்கே நடத்தப்படுகின்ற உணவகங்களிலே தரமான உணவுகள் வழங்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

இப்போது budget hotel பல நகரங்களிலே தொடங்கப்படும் என்று இரயில்வே துறையிலேகூட அறிவித்திருக்கின்றார்கள். நான் குறிப்பிட்ட முக்கிய நகரங்களான, கோயில் நகரங்கள், மலைவாசஸ்தலங்கள், இதுபோன்ற இடங்களிலே சுற்றுலாத் துறையின்மூலம் budget hotels தொடங்குவதற்கு சுற்றுலாத் துறை முன்வரவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல அண்டை மாநிலமாக இருக்கின்ற புதுச்சேரி மாநிலத்திலே இப்போது சுற்றுலாவை ஊக்குவிப்பதற்காக அங்கே ஓட்டல் கட்டுகின்றவர்களுக்கெல்லாம் 25 சதவிகிதத்தை மானியமாக வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள். ஒரு 5 கோடி ரூபாய் அளவிற்கு ஓட்டல் கட்டுவதற்கு அவர்கள் திட்டமிட்டிருந்தால், ஏறத்தாழ 1¼ கோடி ரூபாய், 5 கோடி ரூபாய்க்கு 25 சதவிகிதம் என்று மானியமாக வழங்குகின்றார்கள். அதைப்போல நம்முடைய தமிழக அரசும் சுற்றுலாவை ஊக்குவிப்பதற்கு இதுபோன்ற மானியங்களை, ஓட்டல்களைத் துவங்குகின்ற தனியாருக்கு வழங்குவதற்கு சுற்றுலாத் துறை முன்வரவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

*முற்பகல் 11-35*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. சிவராஜ் அவர்கள் நம்முடைய கடற்கரைகளை முறையாகப் பயன்படுத்த வேண்டுமென்றும், பட்ஜெட் ஓட்டல்களைத் தொடங்க வேண்டுமென்றும் எடுத்துச் சொன்னார்கள். கடற்கரையைப் பொறுத்தமட்டில் மாமல்லபுரத்தில் சுற்றுலாத் துறையின் சார்பாக ஓட்டல் ஒன்று நடைபெற்று வருகிறது. அந்த ஓட்டலைத் தரம் உயர்த்தக்கூடிய முயற்சிக்கு நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நிதியை ஒதுக்கீடு செய்து தந்திருக்கிறார்கள். அதற்கான பணிகளும் நடைபெறவிருக்கின்றன. 20 குடில்களை அமைக்கக்கூடிய பணிகள் நடைபெறவிருக்கின்றன. அதேபோன்று தனியார்கள் முன்வந்தால் அதற்கு subsidy வழங்க வேண்டுமென்ற கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். பாண்டிச்சேரி மாநிலத்தில் அதுபோன்ற நிலைமை இருக்கிறதென்று சொன்னார்கள். தமிழகத்திலும் கடந்த ஆண்டு நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்களுடைய



உத்தரவின்பேரில் 10 சதவிகிதம் மானியமாக வழங்கப்படுமென்று அறிவித்திருக்கின்றோம். தனியார்கள் யாராவது முன்வந்தால் நிச்சயமாக அந்த மானியத் தொகை வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்கள் நேரம் முடிந்துவிட்டது. *(குறுக்கீடு)*

**திரு. சு. சிவராஜ்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் குறிப்பிட்டேன். அங்கே வழங்குவதுபோன்று 25 விழுக்காடு மானியத் தொகை வழங்கவேண்டுமென்று குறிப்பிட்டேன்.

என்னுடைய தொகுதியிலேயுள்ள திருக்கோவிலூர் நகரம் ஒரு ஆன்மீக நகரம். அது வைணவ ரீதியாகவும், சைவ ரீதியாகவும் புகழ் பெற்ற நகரம். ஆழ்வார்களாலே, தமிழிலே பாசுரம் பாடப்பட்ட, அற்புதமான உலகளந்தபெருமாள் கோயில் ஒன்று அங்கே இருக்கின்றது. அதைப்போல, அஷ்டவீரட்டாணங்களிலே முக்கிய வீரட்டாணமாகிய வீரட்டேஷ்வரர் கோயில் அண்டகாசுரனை சம்ஹாரம் செய்த இடம். அப்படி சைவமும், வைணமும் ஒருங்கே அமையப்பெற்ற அந்த நகரத்தை ஆன்மீக நகரமாக அறிவிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன். அது சங்கப் புலவர் கபிலர் வாழ்ந்து மறைந்த இடம். அவர் வடக்கிருந்து உயிர் நீத்த இடம். அங்கே கபிலர் குன்று என்ற ஒன்று இருக்கின்றது. அந்தக் குன்றைச் சீரமைத்து அங்கே கபிலர் கோட்டம் ஒன்றை அமைத்துத்தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, எங்கள் மாவட்டத்திலே இருக்கக்கூடிய கல்ராயன் மலை. அந்த மலைப்பகுதி நல்ல சுற்றுலாத் தலமாகும். அதை மேம்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். அதைப்போல செஞ்சியிலே இருக்கக்கூடிய கோட்டை எங்கள் மாவட்டத்திலே இருக்கக்கூடிய மிகப் பெரிய சுற்றுலாத் தலம். அந்தக் கோட்டைக்கு ரோப் கார் வசதி செய்து தரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல், எங்களுக்கு அருகிலே இருக்கக்கூடிய பிச்சாவரம் பகுதி, சதுப்பு நிலப் பகுதி. மாங்குரோவ் காடுகள் நிறைந்த பகுதி. அங்கே சுற்றுலாத் துறையின்மூலம் கட்டப்பட்ட குடில்கள் இன்றைக்கு வனத் துறையிடத்திலே இருந்துகொண்டிருக்கின்றன. வனத் துறையிலே அந்த இடத்தை renewal செய்யவில்லை என்று வனத் துறைக்கும், சுற்றுலாத் துறைக்கும் பிரச்சினை இருக்கின்றது. ஆகவே, அந்தப்

[திரு. சு. சிவராஜ்] [2007 மே 7

பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன். அதைப்போல . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் ஆகிவிட்டது. கரெக்டாக time maintain பண்ண வேண்டும். திரு. அமரமூர்த்தி சீட்டு எழுதிக்கொடுத்துக்கொண்டேயிருப்பார். அவர் பெரிய எழுத்தாளர். (குறுக்கீடு) ஆமாம்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரே sentence-ல் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. சு. சிவராஜ்:** சுற்றுலாத் துறைமூலம் நடத்தப்படுகின்ற தமிழ்நாடு ஓட்டல்களிலே நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் தங்குவதற்கு சலுகைக் கட்டணம் வசூலிக்க ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக அரசின் திட்டங்களை மக்களுக்குச் செயல்படுத்தும் விதத்திலே செய்தி விளம்பரத் துறையின்மூலம் குறும்படங்களாகத் தயாரித்து அனைத்துத் திரையரங்குகளிலும் காட்டப்படவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு என். மாலைராஜா. பெயர் சொல்லிவிட்டேன் என்று evening-வரைக்கும் பேசக்கூடாது. (சிரிப்பு) Only ten minutes. திரு. மாலைராஜா, பேசுங்கள்.

**திரு. என். மாலைராஜா:** 'சமன்செய்து சீர்தூக்கும் கோல்' போல, இப்பேரவையின் நடுநாயகனாக வீற்றிருந்து, நடுநிலை பிறழாது நற்பணி ஆற்றிக் கொண்டிருக்கும் வணங்குதலுக்குரிய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் எண்ணத்தை, செயலை கண்போல் காத்துவரும், 'செய்வதைச் சொல்வோம், சொன்னதைச் செய்வோம்' என்றில்லாமல், சொல்லாத பிறவற்றை எல்லாம் தமிழக மக்களின் நலனிற்காக இரவு பகல் பாராது, அயராது பாடுபட்டு, வீழ்வது நாமாக இருப்பினும், வாழ்வது தமிழாக இருக்கட்டும் என்று வாழ்ந்து கொண்டிருக்கும், உலகத் தமிழர்களின் ஒப்புயர்வு பெற்றுள்ள தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி)



2007 மே 7] [திரு. என். மாலைராஜா]

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு"

என்ற வள்ளுவரின் வாக்கிற்கேற்ப வருவாய் வரக்கூடிய வழி அறிந்து சரியான திட்டம்மூலம் அந்த வருவாயைச் சரியான முறையில் பாதுகாத்து, வருவாய்க்குத் தகுந்த, நல்ல திட்டம் தீட்டி மக்களை மேன்மையடையச் செய்யக்கூடிய பணியைச் செவ்வனே செய்துவருகின்ற மாண்புமிகு நிதியமைச்சர், கலைஞரின் அன்பு நண்பர் பேராசிரியர் பெருந்தகை அவர்களுக்கும், தமிழகத்தின் எழு ஞாயிறு, கழகத் தொண்டர்களின் சுவாசக் காற்று, உள்ளாட்சியை தமிழகத்தில் தலைநிமிரச் செய்த மாண்புமிகு எங்கள் இனிய தளபதி அவர்களுக்கும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அண்ணன் ஆற்காட்டார் அவர்களுக்கும், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களுக்கும், செய்தித் துறை அமைச்சர் அவர்களுக்கும், அரசியலிலே நெல்லை மாவட்டத்திலே என்னை வழிநடத்திக்கொண்டிருக்கின்ற பாசமிகு அண்ணன் வணக்கத்திற்குரிய மேயர் A.L.S. அவர்களுக்கும் இந்த நேரத்திலே நன்றியைக் கூறி, இந்த மானியக் கோரிக்கையிலே எனக்குப் பேச வாய்ப்பளித்த உங்கள் அத்தனை பேருக்கும் முதலிலே என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-40

எங்கும் எதிலும் பரவியுள்ள சுற்றுலா சிறப்படைய—2000 ஆம் ஆண்டுகளுக்கு முன் தமிழ்க் கவிஞர் கணியன் பூங்குன்றனார் அவர்கள் கூற்றுப்படி "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்பதற்கேற்ப இந்தியத் துணைக் கண்டத்தில் இயற்கையின் வற்றாத எழில் பூத்துக்குலுங்கும் வனம், சரணாலயம், அருவிகள், கடல் வளம், மலை வளம், அற்புதச் சிலைகள், சிற்பங்கள், அருங்கலைகள், மரபையொட்டிய பண்டிகைகள், அழகான திருவிழாக்கள், சரித்திரச் சான்றுகள் இவற்றையெல்லாம் தமிழன் தொன்றுதொட்டு பாதுகாத்து வரும்பாங்கு, இவை இந்தியத் துணைக் கண்டத்தில் இன்ப நடமாடும் மாநிலத்திற்கு தமிழகத்திற்குத் தனி இடமும், சிறப்பும், தனித் தகுதியும் உண்டு என்றால் அது மிகையாகாது.

"தூரிகை சொல்லும் சித்திரம் ஆயிரம் வாசகத்திற்குச் சமமாகும்" என்பது முதுமொழி. தமிழகத்தில் காணக்கூடிய பல நூற்றாண்டுகளுக்கு முந்தைய கலைப்பொக்கிஷம், கண்கவர் கலைக்கூடம் தமிழனின், தமிழக மண்ணின் கலைச் சான்று என்றால் அது மிகையாகாது.

[திரு. என். மாலைராஜா] [2007 மே 7

அழிந்துவரும் புராதனச் சின்னங்கள் கலைக் கூடங்கள் காப்பாற்றப்பட வேண்டும். தமிழன் தமிழனாக வாழ வேண்டும். "தமிழன் என்று சொல்லடா, தலைநிமிர்ந்து நில்லடா" என்ற கவிஞர் பொன்மொழிக்கேற்ப

*"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்*
*திண்ணிய ராகப் பெறின்"*

என்ற வள்ளுவனின் வாக்கிற்கேற்ப மற்றவர்கள் முடிக்க முடியாது என்று எண்ணுகின்ற செயல்களையெல்லாம் தான் எண்ணியவாறு செய்து முடிக்கக்கூடிய செயல்திறன்மிக்க, தீரம்மிக்க தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் பூம்புகார் எனும் கலைக்கூடத்தை (மேசையைத் தட்டும் ஒலி) காவிரிப்பூம்பட்டினத்தில் நிர்மாணித்து தமிழர் பண்பாட்டைப் பேணிக்காத்தார்.

கடந்த ஆட்சியாளர்களால் இரவோடு இரவாக லாரி மோதி சிலை சேதமானது என்று உண்மைக்குப் புறம்பான செய்தியைக் கூறி, உயர்ந்தோர் ஏத்தும் உரைசால் பத்தினித் தெய்வமான கண்ணகி சிலையைப் பெயர்த்தெடுத்த அவலத்தை நீக்கி அதே இடத்தில் மீண்டும் நிறுவி தமிழரின் பெருமையை உலகளாவிய முறையில் செய்தவர் தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

2000 ஆம் ஆண்டில் வான்புகழ் கொண்ட வள்ளுவனுக்கு குமரி முனையிலே வான் பெரிதா? இச்சிலை பெரிதா என வியக்கும் வண்ணம் சிலையை நிறுவி அதனைத் தமிழக மக்களுக்கு அர்ப்பணித்தவர் தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமா? தலைவர் கலைஞர் அவர்கள் தமிழ் வளம் கொழிக்கும் புகழ் கொண்ட வள்ளுவர் கோட்டம் உருவாக்கினார். மக்கள் மனம் குளிரும் வகையில், அவர்கள் எண்ணங்கள் நிறைவேறும் வகையில் மகிழ்ச்சியாக குடும்பத்துடன் தங்களது நண்பர்களுடன் சென்று மனநிறைவு அடைந்துவரும் இடம்தான் சுற்றுலாத் தலம்.

நம் நாட்டைப் பொறுத்தவரை சுற்றுலாவிற்கு உண்டான இடம் தாராளமாக உள்ளது. கலைக்கூடம் காண்போர் நெஞ்சமெல்லாம் காலம் காலமும் அழியாப் புகழ்படைத்த சிற்பங்கள், சிலைகள், கல்வெட்டுகள், குகைக் கோயில்கள், ஓவியங்கள் பற்றிய செய்திகளை நமக்கு வழிகாட்டியாக இருந்து சொல்லுகின்ற அந்த 'வழிகாட்டி' என்று



2007 மே 7] [திரு. என். மாலைராஜா]

அழைக்கப்படுகின்ற பணியாளர்களை நியமனம் செய்திட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதன்மூலம் சுற்றுலா வருவாயைப் பெருக்கிடலாம்.

வெள்ளைக்காரர்களை எதிர்த்துப் போராடி வீரமரணம் அடைந்த வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு பாஞ்சாலங்குறிச்சியில் கோட்டை, தமிழக அரசு சார்பில் விழா. சங்க காலத்தில் புலவர் அரசர்களாகவும், அரசர்கள் பெரும் கவிஞர்களாகவும் இருந்ததுபோன்று நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் இயல், இசை, நாடகம் என்ற மூன்று துறைகளிலும் வித்தகராக, கவிஞராக, சிற்பியாக, பத்திரிகையாளராக, எழுத்தாளராக இன்று திறம்பட பன்முகக் கலைஞராகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்.

கலைத் துறை, வாழ்க்கையில் தனது வாழ்வை தமிழுக்காக, தமிழர்களுக்காக, தமிழக மக்களின் நலனுக்காக தன்னுடைய வாழ்நாளில் பெரும் பகுதியை அர்ப்பணித்து வாழ்ந்துகொண்டிருக்கும் தலைவர் கலைஞர் அவர்களுடைய பெயரால் கலைச் சேவை செய்வோருக்கு "கலைஞர் விருது" வழங்கிட வேண்டுமென்று அந்த வேண்டுகோளை இந்த மாமன்றத்தில் சமர்ப்பிக்கின்றேன்.

முற்பகல் 11-45

ஜனநாயகத்தைப் பாதுகாக்கக்கூடிய நான்கு மிகப் பெரிய தூண்களில் பத்திரிகையும் ஒன்று. இப்பத்திரிகை ஜனநாயகத்தின்மூலம், ஒரு நாட்டின், ஓர் ஆட்சியின் ஆக்கபூர்வமான செயல்கள், மக்களுக்கான நலத் திட்டங்கள், அடிப்படைத் தேவைகள், தேச ஒற்றுமை, மத நல்லிணக்கம் போன்றவற்றை, கோடானு கோடி மக்களுக்குக் காலையிலேயே சென்று சேர்க்கக்கூடிய மாபெரும் சக்தி, பத்திரிகைத் துறை. செய்தித் துறை, தமிழக அரசின் நலத் திட்டங்கள் பற்றிய விவரங்களைப் பாமர மக்களும் தெரிந்துகொள்ளும் வகையில், திட்டங்களைப் பயனாளிகளுக்குக் கொண்டு செல்கின்ற கருவியாக, விழிப்புணர்வுச் சாதனமாக, முன்னேற்றப் பாதையில் முடுக்கிவிடும் ஊக்கியாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது.

கடந்த கால ஆட்சியாளர்கள், செய்தித் துறையை எவ்வாறு பாழடித்தார்கள், வீணடித்தார்கள் என்பதை நாடறியும், நாமறிவோம். பாழ்பட்டுக் கிடந்த இந்தத் துறையைச் செம்மைப்படுத்தும்விதமாக, தலைவர் கலைஞர் அவர்களின் கடைக்கண் பார்வைமூலம் தடைக்கற்களைத் தகர்த்தெறிந்து. பீடுநடை போட ஆரம்பித்திருக்கிறது செய்தித் துறை. 1970-ல் தலைவர் கலைஞர் அவர்களால் நாட்டிற்கு

அர்ப்பணிக்கப்பட்ட செய்தித் துறையின் ஓர் அங்கம், தமிழக அரசின் 'தமிழரசு' என்னும் இதழ்.

"காரிருள் அகத்தில் நல்ல
கதிரொளி நீ தான்; இந்தப்
பாரிடைத் துயில்வோர் கண்ணிற்
பாய்ந்திடும் எழுச்சி நீ தான்;
ஊரினை நாட்ட இந்த
உலகினை ஒன்று சேர்க்கப்
பேரறி வாளர் நெஞ்சிற்
பிறந்த பத்திரிகைப் பெண்ணே"

என பெண்ணாகப் பாவித்து, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் பாடியுள்ளார்கள். தலைவர் கலைஞர் அவர்களுடைய உயிரோடும், உணர்வோடும், உதிரத்தோடும், ஊனோடும், கலந்திட்ட பேச்சாற்றல், எழுத்தாற்றல் ஆகியவை பத்திரிகையை மேன்மையடையச் செய்கிறது என்றால் அது மிகையாகாது. பழமையில் புரண்ட உலகைப் பகுத்தறிவுப் பாதைக்குப் புரட்டிப்போட்டது தலைவர் கலைஞர் அவர்களின் எழுத்தாற்றல். அவர்களுடைய தமிழ் வசனம், மக்களின் உள்ளங்களைக் கவர்ந்து, அறிவை வளர்த்து, முற்போக்கான முறையில் அவர்கள் உருவாக்கும் திரைப்படம், பத்திரிகை, இந்த இரண்டும் இத்துறையில் உள்ளன.

ஒரு பத்திரிகையாளராக இருந்து முதலமைச்சராக உயர்ந்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். அவருக்குப் பின், தமிழ்நாட்டில் அதிக நாட்கள் முதல்வராக, கலைத் துறையைச் சார்ந்த பல்துறை வித்தகர் என்ற பெருமையைப் பெற்றவர் நமது தலைவர் கலைஞர் அவர்கள் ஆவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஓர் ஆட்சி என்ன செய்கிறது என்பது, அது மக்களுக்குச் சென்றடைவதைப் பொறுத்துள்ளது. கலைவாணர் அண்ணன் என்.எஸ்.கே. அவர்கள் குறிப்பிட்டதைப்போல, லேபிள் இல்லாமல் ஒரு பொருளைப் போட்டால் காலணா, லேபிள் போட்டால் அரையணா என்ற நிலையாக, தமிழக அரசின் திட்டங்களை மக்கள் மத்தியில் விளம்பரமாகக்கொண்டு செல்வது செய்தித் துறை. சினிமா ஓர் முக்கியச் சாதனமாகும். அறிவு பெறுவதற்கும், நமக்கு இருக்கின்ற பழக்க வழக்கங்களை மாறுபாடு செய்வதற்கும் இயல்பாக உள்ளது.

தமிழகத்தின் வரலாற்று உண்மைகளை வருங்காலச் சந்ததியினர் தெரிந்துகொள்ள, தமிழகத்தில் ஒளிவு மறைவற்ற உன்னதமான ஆட்சி



நடத்தும் தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள், தமிழகத்தின் தற்போதைய அரசியல் வரலாற்று உண்மைகளை அனைவரும் அறிந்துகொள்ள காலப்பெட்டகம் ஒன்றை அமைத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஆட்சிக் காலத்தில், பத்திரிகையாளர்களுக்கு ஒதுக்கப்பட வேண்டிய வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகளை, (குறுக்கீடு) பொது ஒதுக்கீடு என்ற முறையில், தங்களுக்கு வேண்டியவர்களுக்கு ஒதுக்கீடு செய்து, பத்திரிகையாளர்களைப் புறந்தள்ளியது கடந்த கால அரசு. அதனைச் சரி செய்து, பத்திரிகையாளர்கள் குடியிருப்பு வேண்டி விண்ணப்பம் செய்தவுடன் விரைந்து, அவர்கள் விரும்பும் குடியிருப்புகளை ஒதுக்கீடு செய்திட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

பத்திரிகையாளர்கள் தங்கள் பணிக் காலத்தில் இயற்கை எய்தினால், தமிழக அரசு தற்போது வழங்கிவரும், 20 ஆண்டு காலம் பணிபுரிந்தால் ரூ.2 இலட்சம், 15 ஆண்டு காலம் பணிபுரிந்தால் ரூ.1½ இலட்சம், 10 ஆண்டு காலம் பணிபுரிந்தால் ரூ.1 இலட்சம், 5 ஆண்டு காலம் பணிபுரிந்தால் ரூ.50 ஆயிரம் என்ற அளவு இருக்கிறது. 5 ஆண்டு காலம் பணிபுரிந்திருந்தாலே, 2 இலட்சம் ரூபாய் வழங்கிட வேண்டுமென்று பத்திரிகை நண்பர்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

தலைவர் கலைஞர் அவர்கள், தன்னுடைய பொதுவாழ்வில் சக பத்திரிகை நண்பர்களால் எத்தனையோ விமர்சனங்கள் தன்மீது எழுதப்பட்டபோதும், அவற்றைப் பத்திரிகை தர்மம் என்ற அடிப்படையில், அந்தச் செய்திகளில் உண்மை இருக்குமேயானால், அதற்கு உடனடியாகத் தீர்வை ஏற்படுத்தி, தவறான தகவல்களானால், அதற்கும் தன் தீந்தமிழ் நகைச்சுவை உணர்வு கொண்ட பதிலால், உண்மையை உணர வைத்து, தன்னை வசை பாடுகிறவர்களுக்கும் இரங்குகின்ற தலைவர் கலைஞர் அவர்கள், தானும் ஒரு பத்திரிகையாளர் என்ற முறையில் அவர்களுடைய நீண்ட நாளையக் கோரிக்கையான பத்திரிகையாளர் நல வாரியம் ஏற்படுத்தி, பத்திரிகையாளர் நலன் காத்திட வேண்டுமாய் தங்கள் தாழ் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

தலைவர் கலைஞர் அவர்கள், சட்டமன்றப் பொன்விழா காண்கின்ற இந்த ஆண்டினையொட்டி பத்திரிகையாளர் குடியிருப்பினை வீட்டு வசதி வாரியம்மூலம் உருவாக்கிடவும், அதற்கு 'கலைஞர் பொன்விழா பத்திரிகையாளர் குடியிருப்பு' என பெயர் சூட்டி அழைத்திட வேண்டுமாயும் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-50

தென் மாவட்ட மாணவர்களின் கல்வியின் வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு, பொறியியல் கல்வியை விரைந்து அளிப்பதற்காக, எனது திருநெல்வேலி தொகுதியில் திருநெல்வேலி அண்ணா பொறியியல் பல்கலைக்கழகம் அமைக்க உத்தரவிட்ட தலைவர் கலைஞர் அவர்களுக்கும், பேராசிரியர் அவர்களுக்கும், உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தூத்துக்குடி மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் திரு. ஜாண் நிக்கல்சன் அவர்கள் ஒரு முன்னோடித் திட்டமாக... (மணியடிக்கப்பெற்றது) இரண்டே நிமிடங்களில் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் நிறையப் பேசிவிட்டீர்கள். பத்திரிகையாளர்களைப்பற்றிப் பேசியதனால், உறுதியாக பத்திரிகையில் வந்துவிடும்.

**திரு. என். மாலைராஜா:** இரண்டு நிமிடம், இரண்டு நிமிடம். (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் முடித்துவிடுங்கள்.

**திரு. என். மாலைராஜா:** "கிராமம் செல்வோம், மக்கள் மனதை வெல்வோம்" என்று கிராமம் கிராமமாகச் சென்று அவர்களுக்குத் தேவையான சட்ட ரீதியான குறைகளை நீக்கி, காவல் துறை மத்தியில் கிராமத்தில் உள்ள மக்களின் பயத்தையும், அறியாமையையும் நீக்கி, மக்களை புத்துணர்வு அடையச் செய்துள்ளார்.

உதாரணமாக 12 ஆண்டுகளுக்கு முன், கடந்த ஆட்சியாளர்களால் கொடியங்குளம் என்னும் ஆதி திராவிட இன மக்கள் அதிகம் வாழ்ந்த கிராமத்தில், கண்மூடித்தனமாக, மிருகத் தாக்குதல்களுக்கு ஆளாக்கப்பட்டு, நிலைகுலைந்து, நிம்மதியின்றி காவல் துறையாலேயே 12 ஆண்டு காலமாக அக்கிராமத்திற்குச் செல்ல முடியாத சூழ்நிலை இருந்தது. எனவே, ஜாண் நிக்கல்சன் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற அந்த மாவட்டத் திட்டங்களை, தமிழகம் முழுவதும் விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் முக்குலத்தோர் சமுதாயத்தைச் சார்ந்தவர்களை, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இணைத்து, அவர்களுக்கு கல்வி, வேலைவாய்ப்பில் பிரதிநிதித்துவம் கிடைத்திட உத்தரவு வழங்கிய தாங்கள், கள்ளர், மறவர், அகமுடையோர் என பல பிரிவுகளாகப்



பிரிந்திருக்கின்ற அந்தச் சமுதாயத்தை ஒன்றிணைத்து, தேவர் என்ற பெயரில் அழைத்திடவும், (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் அனைவரையும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இணைக்கவும் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தங்கள் காலத்தில்தான் இதைச் செய்ய முடியும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மாலைராஜா, முடித்து விடலாம்.

**திரு. என். மாலைராஜா:** எங்கள் இதயத்தின் கூட்டுக்குள் நீக்கமற நிறைந்திருக்கும், சட்டமன்றத்தில் 50 ஆண்டுகள் மக்கள் பணியாற்றிட்ட, சட்டமன்றப் பொன்விழா காண்கின்ற தலைவர் கலைஞர் அவர்களே, நீங்கள் முதல்வராக, எங்கள் தலைவராக இருக்கும் இந்த காலகட்டத்தில், நாங்களெல்லாம் சட்டமன்ற உறுப்பினர்களாக உள்ளதே, வாழ்வில் நாங்கள் பெற்ற பெரும் பேறு என எண்ணி, வாழ்த்த வயதில்லை, தங்கள் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

'என்ன வளம் இல்லை இந்த ஆட்சியிலே', 'ஏன் இந்தப் பொறாமை எதிர்க்கட்சியிலே?' 'ஆறு கோடி தமிழர்கள் கலைஞர் நெஞ்சத்திலே', 'தமிழகத்தின் இன்றைய நிலை இமயத்திலே' என்று கூறி, வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், சட்டமன்றத் தலைவர் அவர்களுக்கும் நன்றிகூறி அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செந்தமிழ்ச்செல்வன். (குறுக்கீடு) திரு. அன்பழகன் ஒரு clarification கேட்கிறார். எப்போதும் கேட்கவே மாட்டார்.

**திரு. கே.பி. அன்பழகன்:** இல்லை, ஒரே ஒரு point தான்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதனால்தான் நான் allow பண்ணுகிறேன்.

***திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபொழுது, கடந்த கால ஆட்சியிலே செய்தி மற்றும் விளம்பரத் துறையானது சீரழிக்கப்பட்டது என்று சொன்னார். 2006-2007, 2007-2008 இந்த இரண்டு ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்புகளைப் படித்துப் பார்த்தீர்களென்றால், புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டு நிதி ஒதுக்கப்பட்ட திட்டங்களைத்தான் செயல்படுத்தி

வருகிறீர்கள். உதாரணத்திற்கு இரண்டே இரண்டு சொல்கின்றேன். அதியமான் கோட்டமானது ஒரு கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் நிதி ஒதுக்கப்பட்டு, இன்று கட்டடமானது கட்டப்பட்டு வருகிறது. *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செந்தமிழ்ச்செல்வன். *(குறுக்கீடு)*

**திரு. கே.பி. அன்பழகன்:** தொடர்ந்து அதைத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறார்களே தவிர, புதிய திட்டம் ஏதும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பதில் சொல்லிவிடுவார். Reply பண்ணும்பொழுது அமைச்சர் சொல்லிவிடுவார். திரு. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுற்றுலா, கலை மற்றும் பண்பாடு, செய்தி மற்றும் விளம்பரத் துறை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் பேசுகிற வாய்ப்பளித்த தங்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மானியக் கோரிக்கைகள், கொள்கை விளக்கக் குறிப்புகள் அனைத்தையும் படித்துப் பார்த்தேன். அவை அனைத்தையும் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே பாராட்டி வரவேற்கிறேன். அதே வேளையில், பல்வேறு ஆலோசனைகளையும் இந்தத் துறைக்கு வழங்க, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே முற்பட விழைகிறேன்.

இந்தியாவிலுள்ள பிற மாநிலங்களைக் காட்டிலும், தமிழகம் சொர்க்க பூமியாக விளங்குவதை எண்ணி நாம் பெருமைப்பட வேண்டும். சென்னை மாநகரத்திற்கு அழகு சேர்க்கும் நீண்ட நெடிய கடற்கரை முதல், யாத்திரிகர்கள் வந்து செல்லும் குமரிமுனைவரை காணும் கண்கொள்ளாக் காட்சியாக விளங்கி வருகிறது. என்றாலும், மேலும் பல்வேறு பணிகளைச் சுற்றுலாத் துறையின்மூலம் ஆற்ற வேண்டிய கடமை அரசுக்கு இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழக முன்னேற்றத்தை ஊக்குவிப்பதிலும், தமிழகக் கலாச்சாரத்தை வளர்ப்பதிலும், சுற்றுலாத் துறை முக்கியப் பங்கு வகிக்கிறது. எனவே, இதற்கான நிதியை அரசு கூடுதலாகச் செலவிட வேண்டும். தற்பொழுது தமிழகத்திற்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 7-லிருந்து 9 விழுக்காடாக உள்ளது. இதனை, 10-லிருந்து 12 விழுக்காடாக உயர்த்த அரசு முயற்சி மேற்கொள்ள வேண்டும்.



நடப்பாண்டில் சுற்றுலா வளர்ச்சியைப் பெருக்கிட, தமிழகத்திலுள்ள சுற்றுலாத் தலங்களில் படகு தளங்கள், மர உயர வீடுகள், சூழல் நட்பு வீடுகள், மூன்று நட்சத்திர விடுதிகள் கட்டுவதற்கான மானியம் தனியாருக்கு வழங்கி ஊக்குவித்து, இந்தச் சுற்றுலாத் துறையை மேம்படுத்த முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-55*

சுற்றுலாத் தலங்களில் கேளிக்கைப் பூங்காக்களை ஏற்படுத்துவதோடு, சுற்றுலாத் தலங்களைச் சுற்றியுள்ள இடங்களில் தனியார் துறை பங்கேற்போடு பல்வேறு விளம்பர யுக்திகளைக் கையாள வேண்டும்.

இயற்கை எழில் கொஞ்சும் உதகமண்டலம், ஏற்காடு, கொடைக்கானல் போன்ற மலைப் பகுதிகளுக்கு கம்பி வட ஊர்திகள் அமைத்து சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும்.

கன்னியாகுமரி மற்றும் மகாபலிபுரம் உள்ளிட்ட இடங்களை சர்வதேச சுற்றுலாத் தலமாக உருவாக்கும் உரிய முயற்சிகளை அரசு மேற்கொள்ள வேண்டும். கன்னியாகுமரியிலுள்ள அய்யன் திருவள்ளுவர் சிலையைப் பராமரித்து வருவதோடு, அய்யன் திருவள்ளுவர் மையம் ஒன்றை அங்கே உருவாக்க அரசு முன்வர வேண்டும். திருவள்ளுவர் சிலையை அருகில் சென்று பார்ப்பதற்கு அதிநவீனப் படகு போக்குவரத்து வசதிகளைச் சுற்றுலாத் துறைமூலம் ஏற்படுத்த வேண்டும்.

சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வருகைதரும் முக்கிய வழிபாட்டுத் தலங்களான காஞ்சிபுரம், மேல்மருவத்தூர், திருவண்ணாமலை, தஞ்சை, மதுரை, திருச்சி, ஸ்ரீரங்கம், பழனி, இராமேஸ்வரம் போன்ற பகுதிகளில் அகக் கட்டுமானங்களை மேம்படுத்த வேண்டும்.

வேலூர் மாவட்டத்திலுள்ள ஏலகிரி, கடலூர் மாவட்டத்திலுள்ள பிச்சாவரம், தருமபுரி மாவட்டத்திலுள்ள ஒகேனக்கல் ஆகிய இடங்களில் உள்ள சுற்றுலாத் தலங்களுக்கு மேலும் நிதி ஒதுக்கீடு செய்து, மேலும் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கின்றவண்ணம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

நவீன அணுகுமுறைகளின்மூலம் இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் தமிழக சுற்றுலாத் தலங்கள் தொடர்பான விளம்பரங்கள் தீவிரமாக மேற்கொள்ளப்பட வேண்டும். சுற்றுலாத் தலங்களில் இருக்கக்கூடிய

[திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்] [2007 மே 7

வசதிகளையும், பணிகளையும் பராமரிப்பதில் துறை சார்ந்த அதிகாரிகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பதற்காக உருவாக்கப்பட்ட சுற்றுலாச் சட்டம் நன்கு பயன்படுத்தப்பட வேண்டும். மேலும், தமிழகத்தின் சுற்றுலாத் தலங்களைக் காணவரும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளையும், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளையும் ஈர்க்கின்றவிதத்தில் சுற்றுலாத் துறைமூலம் தங்கும் விடுதிகள் மற்றும் உணவகங்களையும் உலகத் தரமுள்ள அளவிற்கு அங்கே உருவாக்க வேண்டும்.

என்னுடைய விழுப்புரம் மாவட்டத்தில் இருக்கின்ற சுற்றுலாத் தலங்களில் மிகவும் முக்கியமான, புராதன சின்னமாக விளங்குவது செஞ்சிக் கோட்டை. எனவே, செஞ்சிக் கோட்டை, கல்வராயன் மலை, ஆரோவில், திருவக்கரை, மேல்மலையனூர் ஆகியவற்றை சுற்றுலாத் தலங்களாக அறிவிக்க அரசு முன்வர வேண்டும்.

விழுப்புரம் மாவட்டத்தின் புராதனச் சின்னமாக விளங்கும் செஞ்சிக் கோட்டை, இராஜா, இராணி கோட்டைகளை உள்ளடக்கிய ஒரு பகுதியாகும். எனவே, கோட்டைகளை உள்ளடக்கிய ஊராக இருக்கிற செஞ்சியை, செஞ்சிக் கோட்டை என்ற பெயர் மாற்றம் செய்துதருவதோடு அதைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டும். அதனைச் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதோடு, அங்கே கம்பி வட ஊர்தியினை ஏற்பாடு செய்து, சுற்றுலாப் பயணிகளை மேலும் ஈர்க்கிற விதத்திலே அந்தச் சுற்றுலாத் தலத்தை மேம்படுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

செஞ்சிக்கு அருகிலே இருக்கிற நகரம் திருவண்ணாமலை. ஆக, இரண்டும் பல்வேறு உள்நாட்டுப் பயணிகள், வெளிநாட்டுப் பயணிகள் வந்துபோகிற இடங்களாக இருப்பதால் அங்கே தமிழ்நாடு சுற்றுலாத் துறையின்மூலம் உணவு விடுதியும், தங்கும் விடுதியும் கட்டித் தர முன்வர வேண்டும் என்று நான் இந்த அரசை கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய மேல்மலையனூர் தொகுதி. மேல்மலையனூரில் உள்ள பிரசித்திபெற்ற அருள்மிகு அங்காள பரமேஸ்வரி திருக்கோயிலுக்கு தினந்தோறும் பல்லாயிரக்கணக்கான மக்கள் வருகிறார்கள். அங்கு அமாவாசைதோறும் பல இலட்சக்கணக்கான மக்கள் வந்துசெல்லும் ஒரு புண்ணியஸ்தலமாக என்னுடைய தொகுதி விளங்குகிறது. அங்கே அடிப்படை வசதி இதுவரை செய்துதரப்படவில்லை. எனவே, அதைச் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதோடு, அங்கே சுற்றுலாத் துறையின்மூலம் தமிழ்நாடு உணவு விடுதியும், தங்கும் விடுதியும் கட்டித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



2007 மே 7] [திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்]

அடுத்து, என்னுடைய மேல்மலையனூர் தொகுதியில் இருக்கின்ற மேல்மலையனூர் ஏரி மிகப்பெரிய ஏரியாக உள்ளது. அங்கே வந்து செல்கிற சுற்றுலாப் பயணிகளுக்கு பயன்படுகின்ற விதத்திலே அந்த ஏரியினுடைய நீர்ப்பிடிப்பை அதிகப்படுத்தி அங்கே சுற்றுலாப் பயணிகளுக்கு ஏற்றவகையில் படகு குழாம் ஏற்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, திருவண்ணாமலை ஓர் ஆன்மீக பூமி என்பது உலகம் அறிந்த உண்மை. எனவே, திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோவிலுக்கு வரும் உள்நாட்டு, வெளிநாட்டுப் பயணிகளின் எண்ணிக்கை நாளுக்குநாள் கூடுதலாகிக் கொண்டேயிருக்கிறது. ஆனால், அங்கே வந்து செல்பவர்களுக்கு தங்குவதற்கு வசதிகள் மிக மிகக் குறைவாக உள்ளது. எனவே, வெளிநாட்டுப் பயணிகளுக்கு ஏதுவாக உலகத் தரம் வாய்ந்த தங்கும் விடுதிகள், உணவு விடுதிகள் கட்டித் தர வேண்டும்.

அதேபோன்று, பௌர்ணமிதோறும் அங்கே ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வந்துசெல்கிற ஒரு நிலை இருக்கிறது. அங்கே கிரிவலம் வருகிற பக்தர்களுடைய நிலையைக் கருதி அந்த கிரிவலம் செல்லும் பாதையில் பூங்காக்களை அமைத்து சுற்றுலாத் துறைமூலமாக அந்தப் பகுதியை மேம்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழ் இசை. இன்றைய இளைஞர்களுக்கு ஆதி இசையாம் தமிழிசையின் தொன்மையை உணர்த்திட, பள்ளிகள்தோறும் தமிழிசையை ஒரு பாடமாகக் கற்பிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மாவட்டங்கள்தோறும் தமிழ் இசைக் கல்லூரிகளை அமைத்திட வேண்டும்.

பத்திரிகை மற்றும் தொலைக்காட்சிகளில் பெண்களை இழிவுபடுத்துவதற்கும், ஆபாசம் மற்றும் வன்முறைக்காட்சிகளுக்கும் தடையை விதிப்பதோடு, கடுமையான தணிக்கை முறையை அரசு கொண்டு வரவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

*நண்பகல் 12-00*

சிறந்த முறையில் தமிழில் பெயர் வைத்து திரையிடப்படும் நல்ல திரைப்படங்களுக்கு விருதுகளும், மானியமும் அதிக அளவில் அரசால் வழங்கப்பட்டு அவை ஊக்குவிக்கப்படவேண்டுமென்று நான் இந்த

நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) தமிழகத்தின் பிற மாநிலத்தவர்களும், வெளிநாட்டினரும் அதிக அளவில் வருகின்ற வகையில் சுற்றுலாத் துறையை மேம்படுத்தவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடம் இருங்கள். டாக்டர் இராமன் ஏதோ கேட்க விரும்புகிறார்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழிலே திரைப்படங்களுக்குப் பெயர் வைத்தால், சலுகை அளிக்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்த பிறகு, சிறந்த முறையிலே நல்ல மாற்றம் இருக்கிறது. ஆனால், எந்தெந்தப் பெயர்கள் தமிழ் என்பதை ஆராய்ந்து முடிவு செய்வதற்கு வல்லுநர்கள் குழு இருக்கிறதா? அதை யார் முடிவு செய்கிறார்கள் என்பதை அறிய விரும்புகின்றேன். உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால், வரவிருக்கின்ற 'சிவாஜி' என்ற திரைப்படத்தில், 'சிவாஜி' என்ற பெயரே தமிழ்ப் பெயர்தானா என்பதைத் தெளிவுபடுத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பிறகு சொல்வார்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** இதன்மூலம் தமிழகத்தின் பெருமை உயர்வதோடு வருவாயும் பெருகும். நமது பண்பாடும் உலகம் முழுவதும் பரவும். சுற்றுலாத் துறை வாகனங்களுக்கு அனுமதி வழங்குவதிலுள்ள விதிகளைத் தளர்த்தவேண்டும். சுற்றுலா வழிகாட்டிகளாக உள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பைப் பெருக்கும்விதத்தில் மானியத்துடன்கூடிய வாகனக் கடன் வழங்க அரசு முன்வரவேண்டும். அரசின் சார்பில் கூடுதலாக சொகுசு வாகனங்கள் வாங்கி சுற்றுலாத் துறையை மேம்படுத்த அரசு முன்வரவேண்டும்.

அடுத்து, செய்தி மற்றும் விளம்பரம். ஜனநாயகத்தின் நான்கு தூண்களில் ஒன்றான பத்திரிகை மற்றும் தொலைக்காட்சி ஊடகங்கள் மக்களை எளிதில் ஈர்க்கக்கூடியது. குறிப்பாக திரைப்படம், மக்களை விரைந்து ஈர்க்கக்கூடியது. திரைப்படத்தின் வாயிலாக மனிதனை பண்படுத்தக்கூடிய, அறிவுசார்ந்த நாட்டு வளர்ச்சிக்கான சேவை நோக்கத்தையும் நாட்டுப்பற்றையும் உருவாக்கிட முனையவேண்டும். திரைப்படமானாலும் அல்லது வேறு நிகழ்ச்சியானாலும், அவற்றில் நல்ல கருப்பொருள் முக்கியத்துவம் வாய்ந்ததாக இடம் பெறவேண்டும். அதுவன்றி, தற்போது வியாபார நோக்கோடு வெளிவரும் படங்களில், வன்முறை, தீவிரவாதம், மது அருந்துதல், புகைப்பிடித்தல், சூதாட்டம் காட்சிகள் இடம் பெறுவதுடன் ஆபாசம், போன்றவை மலிந்து





இளைஞர்கள் மனதில் வக்கிரத்தைத் தூண்டுவதாக இருப்பது மிகவும் கண்டிக்கத்தக்கது. யார் எப்படிக் கெட்டாலும் பரவாயில்லையென்று, தன்னுடைய இலாப நோக்கை மட்டும் மையமாக வைத்து எடுக்கப்படும் திரைப்படங்களை அனுமதிக்கக் கூடாது. பெண்களை இழிவுபடுத்துகின்ற பாலியல் பலாத்கார நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கும், திருட்டு, கொலை, கொள்ளை, வன்முறை போன்றவை நடைபெறுவதற்கும் காரணம், திரைப்படத்தைப் பார்ப்பதன்மூலம் இப்படிப்பட்ட நிகழ்வுகள் நிகழ்வதாக ஆய்வு செய்தவர்கள் ஆதாரத்தோடு குறிப்பிடுகின்றனர். ஆபாசத்தை மையமாக வைத்து வரும் திரைப்படங்கள், தொடர்கள், ஆகியவற்றை அரசு கூர்ந்து கவனித்து அவை வெளிவராமல் தடை செய்யவேண்டும். பெண்களை ஆபாசமாகச் சித்தரிக்கும் விளம்பரங்கள் வைக்கப்படுவதை தடுத்து நிறுத்தவேண்டும்.

தேர்தல் நேரங்களில் விளம்பரத்திற்கு சில கட்டுப்பாடும், தடையும் விதிக்கப்படுகின்றன. மற்ற நாட்களில் சென்னை உள்ளிட்ட மாநகர்களில் சுவர்கள் முழுவதும் விளம்பரங்களை எழுதி, மாதக் கணக்கில், வருடக் கணக்கில் அவை அசிங்கப்படுத்துகின்ற நிகழ்வுகளை நாம் பார்க்கின்றோம். சாலைகளிலும், பொது இடங்களிலும், பாலங்களிலும், மரங்களிலும் எழுதும் விளம்பரங்களை அரசு உடனே நெறிப்படுத்தி கட்டுப்படுத்தவேண்டும். குறிப்பிட்ட இடத்தில் விளம்பரம் செய்வதென்றால், உரிய அனுமதியைப் பெற்று குறிப்பிட்ட நாட்களுக்கு மட்டுமே இருக்க அனுமதிப்பதோடு, இதற்கொரு கட்டணத்தையும் அரசு வசூலிக்கவேண்டும். இதனால் துறையின் வருமானமும் பெருகும்.

தமிழ் இசையைப் பாதுகாக்கவும், இன்றைய தலைமுறையினர் தமிழ் இசை பற்றி அறியவும், பள்ளிப் பாடங்களில் தமிழ் இசையை ஒரு பாடமாகவும் தொடர்ந்து நீடிக்கச் செய்யவேண்டும்.

சேலம் மாவட்டத்திலுள்ள பூலாம்பட்டி என்ற ஊர், காவிரி ஆற்றின் ஓரமாக இயற்கை வளமுடன் அமைந்துள்ளது. அங்கு படகு சவாரி நடைபெற்று வருகிறது. எனவே, பூலாம்பட்டியை சுற்றுலாத் தலமாக அறிவிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து, அவை உறுப்பினர்களின் கோரிக்கை. அவையிலுள்ள உறுப்பினர்கள் தங்கள் குடும்பத்தோடு வெளி மாவட்டங்களுக்குச் செல்கின்றபோது, தமிழ்நாடு அரசு விடுதிகளில் தங்குவதற்கு சலுகைக் கட்டணத்தைத் துறை அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) (மணியடிக்கப்பெற்றது)

[திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்] [2007 மே 7

வண்டலூர் உயிரியல் பூங்காவில் சுற்றுலாப் பயணிகள் நலன் கருதி மின்கலத்தின்மூலம் இயங்கி வந்த வண்டிகள், டிராக்டர்கள்மூலம் இயக்கப்படுவதால் அதிக புகையும், அவை சத்தத்துடன் செல்வதால், மிருகங்களுக்கு இடையூறாகவும் உள்ளது. சிங்கப்பூரில் உள்ளதைப்போன்று இரவு சுற்றுலா நடத்த ஆய்வு செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா. (குறுக்கீடு) சார், 12 நிமிடங்கள் எடுத்துக்கொண்டிருக்கிறார். இன்னும் ஒரு நிமிடம் வேண்டுமானால் கொடுக்கலாம்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** பத்திரிகையாளருடைய சுதந்திரத்தைக் காப்பதற்காக இந்த அரசு பத்திரிகைத் தொழிலாளர்களுடைய கோரிக்கையை விரைந்து நிறைவேற்றி வருகின்றது. கடந்த கால ஆட்சியிலே திராவிட முன்னேற்றக் கழக அரசால் வழங்கப்பட்ட பல்வேறு சலுகைகள், அவர்களுக்குப் பாரபட்சம் காட்டப்பட்டு ஏறக்குறைய 100-க்கு 70 சதவீத பத்திரிகையாளர்கள் அந்த உரிமையைப் பெறாமல் உள்ளனர். அவர்களுக்கெல்லாம், அவற்றைப் பரிசீலித்து உடனுக்குடன் அவர்களுக்குச் சலுகைகளை வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பிற்கு நன்றிகூறி முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 12-05

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வாய்ப்பு தந்த தங்களுக்கு வணக்கத்தைக் கூறிக்கொள்கிறேன். தமிழ்நாடு என்றாலே பண்பாடு, கலாச்சாரம், அழகு, எழில் நிறைந்த தமிழ்நாடு. இந்தத் தமிழ்நாடு எழில் நிறைந்த, வளம் மிகுந்த, கடலால் சூழப்பட்ட நாடாக அமைந்திருக்கிறது. இதில், சுற்றுலாவிற்காக வருகின்ற வெளிநாட்டவர் முதன்முதலில் வருகின்ற இடமாக கேரளாவைத் தேர்வுசெய்கின்றனர், பின்னர் இலங்கைக்குச் செல்கின்றனர். இடைப்பட்டிருக்கின்ற தமிழ்நாட்டிற்கு அவர்களை வரவழைப்பதற்கான ஏற்பாட்டை தமிழக அரசு செய்யவேண்டும். சுற்றுலாத் தலங்களில் வெளிநாட்டவர் வந்து தங்கும் வசதி, போக்குவரத்து போன்ற வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டும்.



2007 மே 7] [திருமதி ஜி. லதா]

குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டம் சுற்றுலாத் தலமாக அறிவிக்கப்பட்டிருப்பதால், அந்தப் பகுதியில் விமான நிலையம் உட்பட எல்லா வசதிகளையும் ஏற்படுத்தி, அந்தச் சூழலை உருவாக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சுற்றுலாத் துறை என்பது அரசுக்கு வருவாயை ஈட்டித் தருகின்ற துறை. எனவே, மாவட்டந்தோறும் அரசே நிரந்தரமான பொருட்காட்சிகளை அமைத்துத் தரவேண்டும். அதற்காக திட்டமிட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். கடந்த முறை சுற்றுலாத் துறையில் அறிவிக்கப்பட்ட காளிகேசத்தில் எந்த வேலையும் ஆரம்பிக்கப்படாத நிலையில் உள்ளது. குமரி குற்றாலம் என்று அழைக்கப்படும் திற்பரப்பு நீர்வீழ்ச்சியில் சாரல் விழா நடத்தப்பட வேண்டும். ஏழைகளின் ஊட்டியான ஏலகிரியில் வனவிலங்குச் சரணாலயம் ஏற்படுத்த வேண்டும்.

கலை பண்பாட்டுத் துறையில் பகுத்தறிவுப் பகலவன் பெரியாரின் திரைப்படத்திற்கு வரி விலக்கு அளிக்கப்படவேண்டும். இந்தப் படத்தை கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் இலவசமாகத் திரையிடப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தொலைக்காட்சிகளில் பெண்களையும், குடும்பங்களைப் பற்றியும், ஆபாசமாகவும், மூடக் கருத்துகளை புகுத்துவதாகவும் நிலைமை இருந்து வருகிறது. இதைக் கட்டுப்படுத்துவதற்கான குழு ஒன்றை அமைக்க வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம்.

திரைப்படப் பாடல்களில் சில திரைப்படங்கள் கலாச்சாரச் சீரழிவை ஏற்படுத்தி வருகின்றன. அசிங்கமான வார்த்தைகளைக் கொண்ட பாடல் வரிகள் அமைக்கப்படுகிறது. இவற்றைக் களைந்தெறிவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

தீண்டாமையை எதிர்த்தும், முற்போக்கான கருத்துகளைப் புகுத்தியும், குழந்தைகளுக்கான படங்களை எடுக்கும் குறும் படங்கள் தயாரிப்பதற்கு அரசு நிதியுதவி அளித்து ஊக்கப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக அரசு, நாட்டுப்புறக் கலைகளைப் பாதுகாக்க நல வாரியம் அமைத்து அறிவித்துள்ளதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது. தமிழகக் கலாச்சாரத்தை உயர்த்திப் பிடிக்கும் நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு பென்ஷன் வழங்கப்படவேண்டும்.

[திருமதி ஜி. லதா] [2007 மே 7

இலவசமாக பஸ் பாஸ் வழங்கப்படவேண்டும். தமிழிசைக் கல்லூரிகளில், பல்கலைக்கழகங்களில் தமிழ் கலாச்சாரத்தை உயர்த்திப் பிடிக்கும் நாட்டுப்புறக் கலைகளைக் கற்றுத் தரக்கூடிய பாடப்பிரிவுகளைத் தொடங்கவேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம். நாட்டுப்புறக் கலைகளை ஆய்வு செய்வதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் அரசு நிதியுதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

தமிழக அரசு, அனைத்து முறைசாரா தொழிலாளர்களுக்கும் நலவாரியம் அமைத்தது போலவே, செய்தியாளர்களுக்கும் நல வாரியம் அமைக்க வேண்டும் என்பதை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம். தமிழ்நாட்டில், அனைத்து கிராமப் பகுதிகளிலும், தாலுகா பகுதிகளிலும், தலைநகரப் பகுதியிலும் உள்ள இடங்களில் பணியாற்றிவரும் செய்தியாளர்களுக்கு இலவசமாக பஸ் பாஸ், ஓய்வூதியம், இலவச வீட்டுமனைப் பட்டா இவற்றை வழங்கவேண்டும். வீடு கட்டுவதற்கான வங்கிக் கடனும் செய்தியாளர்களுக்கு வழங்கப்படவேண்டும். அவர்களுக்கு இருக்கின்ற உரிமையைப் பாதுகாக்கின்ற விதத்தில் சட்டபூர்வமான பாதுகாப்பை வழங்கவேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம்.

தமிழ்நாட்டில் டிஜிட்டல் விளம்பரம் என்பது வானளாவிய விளம்பரங்கள், பெருந்தலைவர்கள், குறுந்தலைவர்கள் விளம்பரங்கள் மற்றும் வியாபார நோக்குகொண்ட விளம்பரங்கள், போர்டுகள் என்பது அதிகரித்து வந்துகொண்டே இருக்கின்றன. இதற்குக் கால அவகாசங்களைக் கொடுத்து, அரசு இவற்றை முறைப்படுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறோம். செய்தி விளம்பரங்களில், வார இதழ்களின் விளம்பரங்கள், சென்னை போன்ற நகரங்களில், பெண்களை ஆபாசமாகச் சித்தரிப்பதும், வர்த்தக வியாபாரம் எனப் பார்க்கும் நோக்கை தமிழக அரசு கட்டுப்படுத்த வேண்டும். அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

*பிற்பகல் 12-10*

தமிழக அரசு அனைத்து பத்திரிகைகளிலும், மாவட்டங்கள் உள்ள பல்வேறு விளம்பரங்களை அரசு அளிக்கிறது. எனவே, பாரபட்சமின்றி, குறிப்பாக, மக்கள் மத்தியில் மக்களுக்காக வந்து கொண்டிருக்கின்ற நாளேடான 'தீக்கதிர்' பத்திரிகைக்குக் கட்டாயம் தமிழக அரசு, அரசு விளம்பரத்தைத் தர வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம்.



2007 மே 7] [திருமதி ஜி. லதா]

மதுரை திருமலைநாயக்கர் மகாலில் புனரமைப்பு வேலை என்பது நடந்து கொண்டிருக்கிறது. அந்த வேலையை வேகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி சுற்றுலாத் தலம் (மணியடிக்கப்பெற்றது) சிறப்பாக . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு விளம்பரங்களைப் பத்திரிகைகளுக்குத் தருவதில் எந்தவித பாரபட்சமும் கிடையாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த நாளேட்டுக்கும் எல்லா நாளேடுகளுக்கும் வழங்குவதுபோல அரசு விளம்பரங்களைக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பார்த்தீர்களா, கரெக்டாக இருக்கிறார்.

**திருமதி ஜி. லதா:** அமைச்சர் அவர்களுக்கு நன்றி. இவை மாவட்டங்களில் நடைபெறுவதில்லை என்பதனைக் குறிப்பாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மாநில அளவில் நடக்கிறது. மாவட்ட அளவில் அது புறக்கணிக்கப்படுகின்ற பத்திரிகையாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அங்கே தீக்கதிர் இருந்திருக்காது.

**திருமதி ஜி. லதா:** ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி சுற்றுலாத் தலமாக சிறப்பான முறையிலே அமைக்கப்பட்டிருக்கிறது. சுற்றுலா மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூபாய் 5 ஆயிரம் கோடி மத்திய அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அந்த ஒதுக்கீட்டின் பட்டியலில் ஒகேனக்கல் சுற்றுலாத் தலத்தை இணைத்துக் கொண்டு மக்களைக் கவரும்விதமாக அதைச் செயலுக்குக் கொண்டுவர வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை சீரணி அரங்கத்தை மீண்டும் கட்டி, அங்கு பொது நிகழ்ச்சிகளை நடத்த அரசு அனுமதிக்க வேண்டும் என்று தங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்டந்தோறும் கலை, இலக்கிய விழாக்கள், சென்னை சங்கம் போன்ற நாட்டுப்புற நிகழ்ச்சிகளை அரசே நடத்த வேண்டும். மாவட்டந்தோறும் கலை இலக்கிய விழாக்களை நடத்திட அரசு மனமகிழ் கலை அரங்குகளை அமைத்திட நிதியொதுக்கீடு செய்ய வேண்டும்.

தமிழ்நாட்டிலுள்ள அச்சகங்கள் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. ஆனால், அவற்றை முழுமையான அளவில் நவீன தொழில்நுட்பத்தோடு செயல்படுத்திட வேண்டும். அவற்றிற்கான நிதியொதுக்கீடு என்பதனைச் செய்ய வேண்டும். தமிழ்நாட்டு அச்சகங்களில் தருமபுரியில் உள்ள அச்சகம் செயல்படாத நிலையில் உள்ளதை சிறப்பாகச் செயல்படுத்திட தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி அய்யன் திருவள்ளுவர் சிலைக்காகப் பராமரிப்புப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற ஊழியர்கள் ஏறத்தாழ 15 ஆண்டு காலமாக கூலி வேலை செய்கிறார்கள். அவர்களுக்குப் பணி நிரந்தரம் என்பதனை அரசு செய்ய வேண்டும் என்பதனை தங்கள்வாயிலாக வலியுறுத்துகிறேன்.

கிருஷ்ணகிரி மாவட்டம், அரூர் தொகுதியில் அனுமன்தீர்த்தம் பகுதியில் சுற்றுலாத் தலத்தை அமைத்திட வேண்டுகிறேன். அதுமட்டுமல்ல, வேலூர் மாவட்டத்தில் கோட்டை என்பது வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த கோட்டை. அந்தக் கோட்டை சுற்றுலாத் தலமாக அறிவிக்கப்பட வேண்டும்.

குடியாத்தம் தொகுதியில் உள்ள மோர்தானா அணையைச் சுற்றுலாப் பகுதியாக அறிவிப்புச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அரிய வாய்ப்பை அளித்த உங்களுக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன். சார், உங்களுக்கு 7 நிமிடங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** 10 நிமிடங்கள் கொடுங்கள். நேரம் இருக்கிறது, நிறைய இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் 6 பேர் பேச வேண்டும்.



**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் அரசு ஓராண்டு காலப் பயணத்தை நிறைவு செய்கிற நேரம். ஆட்சிப் பொறுப்பேற்ற நேரத்திலிருந்து இன்றுவரை இந்த அரசின் சாதனைகள், செயல்பாடுகள் சிறப்புக்குரியவை. அவற்றில் ஓர் அங்கமாக உள்ள சுற்றுலா மற்றும் செய்தித் துறை அமைச்சர்களின் செயல்பாடுகளும், அத்துறைகளின் சார்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகளும் மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளன.

அதேவேளையில் சுற்றுலா என்பது மக்கள் வாழ்க்கை நிலைக்கேற்ற பல வகைகளில் அமைந்துள்ள நிலையில் சுற்றுலாவை ஊக்குவிக்க இன்னும் பல நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். பொதுவாக பொருளாதார நிபுணர்கள் பணம் என்பது ஓரிடத்தில் தேங்கிவிடாமல் மக்களிடையே சமூகத்தில் இடம் மாறிக் கொண்டே இருக்க வேண்டும் அப்பொழுதுதான் அதன் மதிப்பும், செல்வமும் வளரும் என்பார்கள். அதேபோல சுற்றுலா என்பது மனிதன் பெற்ற பணத்தை பல பயனுள்ள வகையில் இடம் பெயரச் செய்கிற துறையாகும்.

*பிற்பகல் 12-15*

சுற்றுலா வளர்ச்சியால் பல துறைகள் இயல்பாக வளர்ச்சி அடைவதோடு இலாபமும் ஈட்டுகின்றன. அதே நேரத்தில், மனிதர்களுக்கு சுற்றுலா மூலமாக அறிவு சார்ந்த சிந்தனைகள், புதிய அனுபவங்கள் ஏற்படுகின்றன. அதனால்தான் உலகமகா இலக்கிய மேதை ஷேக்ஸ்பியர், மக்களிடம் பாடம் கற்கப் போகிறேன் என்றார். உலகின் மிகவும் பின்தங்கிய, அடிமைப்பட்டு கிடந்த தென் அமெரிக்கா நாடான பொலீவியாவில் பிறந்த சேகுவாரா பல நாடுகளைச் சுற்றி மக்களின் வேதனைகளை, வரலாறுகளைப் பயின்று, புரட்சி என்பது நாடுகளை, இனங்களைக் கடந்த பொதுவானது என அதற்குத் தலைமை தாங்கப் புறப்பட்டார். இன்று உலகம் முழுவதும் சுற்றுலா என்பதில் மிகப் பெரிய விழிப்புணர்வும், வேட்கையும் மக்களிடையே ஏற்பட்டுள்ளது. ஒவ்வொரு நாட்டின் இனத்தின் வரலாறுகளை, இயற்கையை, பண்பாட்டை, நாகரிகங்களை, கலாச்சாரங்களை, நேரடியாகக் கண்டுணர்ந்து அதன்மூலம் புதிய அனுபவங்களை, சிந்தனைகளை ஏற்படுத்தக்கூடிய துறை சுற்றுலா. எனவே, அதைத் தமிழக மக்கள் சிறப்பாகச் செயல்படுத்துவதற்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு, தொடர்ச்சியான முன்னேற்றம் ஏற்பட நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

[திரு. சு. குணசேகரன்] [2007 மே 7

தமிழ் கலாச்சாரம், பண்பாடு, மொழிச் சிறப்பு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது. உலகின் பழமையான நாகரிகம், அதை முதன்மைப்படுத்தும் விதத்தில் சுற்றுலா மையம் அமைக்கப்பட வேண்டும். தமிழ்நாட்டின் இயற்கை வளங்கள், மலைகள், அருவிகள், கடல் சார்ந்த சுற்றுலாக்கள் மக்கள் மனம் கவரும் வகையில் அமைக்கப்பட வேண்டும்.

சுற்றுலாத் தலங்கள் என்பது பலதரப்பட்ட மக்கள் வந்து செல்லும் இடம். அந்த இடங்கள் சுகாதாரமாக, அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்கிற கட்டமைப்பு வசதிகளை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். உதாரணத்திற்கு, உலகிலேயே இரண்டாவது பெரிய கடற்கரையான மெரினா கடற்கரை இங்கிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. அது சுகாதாரமற்று, முகம் சுளிக்கிற வகையில் உள்ளது. அதே சமயத்தில், மேலை நாடுகளில் கடற்கரைகள் மிகவும் சுகாதாரமான முறையில் வைக்கப்பட்டுள்ளன. எனவே, சுற்றுலா அமைந்துள்ள கடற்கரைகளை, கடுமையான விதிகளைப் பின்பற்றி, சுகாதாரமாகப் பராமரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழகத்தில் அநேகமாக எந்தச் சுற்றுலாத் தலமும் முழுச் சுகாதாரமாக உள்ளதாக . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மெரினா கடற்கரையைப் பொறுத்தமட்டில் சுத்தமாக வைப்பதற்காகவும், வருகின்ற பயணிகள் எல்லாம் பாராட்டக்கூடிய அளவிற்கும் சுமார் ஐந்து கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன என்கிற செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. சு. குணசேகரன்:** மிக்க நன்றி. இன்றுகூட 'ஜனசக்தி' நாளிதழில் பொதிகை மலையின் அவலட்சணத்தைச் சுட்டிக்காட்டி எழுதப்பட்டுள்ளது. அபூர்வ மூலிகைகள் உள்ள பொதிகை மலை போன்ற இயற்கை சார்ந்த இடங்களைப் பராமரிக்காமல் விட்டுவிட்டால் வரலாறு நம்மை மன்னிக்காது.

தாமிரபரணி ஆறு தொடங்கும் பூங்குளம் கிராமத்தைத் தூய்மைப்படுத்த வேண்டும். சுற்றுலாத் தலங்களில் பொருட்களை வாங்குவதில் மக்கள் பன்னெடுங்காலமாகவே பழக்கம் உடையவர்கள். எனவே, சுற்றுலா மையங்களில் கடைகளை ஒழுங்குபடுத்துவதில், தரமான பொருட்கள் ஓரளவு நியாயமான விலையில் கிடைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.



2007 மே 7] [திரு. சு. குணசேகரன்]

தமிழகம், நீண்ட கடல் சார்ந்த பகுதிகளைக் கொண்டது. எனவே, கடல் சார்ந்த விளையாட்டுகளில் ஆர்வம் ஏற்பட்டுள்ள நிலையில், தமிழகத்தில் கடல் சார்ந்த விளையாட்டுகளை நடத்த ஏதுவான கடல் பகுதிகளைத் தேர்வு செய்து, சுற்றுலா மையத்தை உருவாக்க வேண்டும்.

தமிழக அரசு தற்போது ஆரம்பக் கல்வியில் செயல்முறைக் கல்வியையும், உயர் கல்வியில் ஒலி, ஒளிக் கல்வியையும் அமல்படுத்துகிற நேரத்தில், அறிவியல் மற்றும் வரலாற்றுச் சுற்றுலாக்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. எனவே, மாவட்ட அளவில் அதற்கான சுற்றுலா மையங்களை உருவாக்க முயற்சிகள் எடுக்க வேண்டும். மக்களுக்கு முழு மனநிறைவு ஏற்படக்கூடிய சுற்றுலா மையங்களைத் தேர்வு செய்து மேம்படுத்த வேண்டும்.

நாட்டுப்புறக் கலைகளை மேம்படுத்த அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். நாட்டுப்புறக் கலைகள் அழிந்துவிடாமல் பாதுகாக்க ஆய்வு செய்ய பல்கலைக்கழக அளவில் ஓர் அமைப்பை உருவாக்க வேண்டும்.

1272 ஆம் ஆண்டு மன்னர் முத்துவடுகனாதரை காளையார்கோவிலில் கொன்று சிவகங்கைச் சீமையை ஆங்கிலேயர்கள் கைப்பற்றினார்கள். வெள்ளையர்களை எதிர்த்து களத்தில் மறைந்த முதல் மன்னர் என்ற சிறப்பு உண்டு. அதே சமயம், ஆங்கிலேயரை எதிர்த்து போர்முனையில் விரட்ட வேண்டுமென்ற உத்வேகத்துடன் வீரமங்கை வேலு நாச்சியாரும், மருது சகோதரர்களும் திண்டுக்கல் ஜமீன் பாதுகாப்பில் ஹைதர்அலியைச் சந்தித்து, சிறு ரக பீரங்கிகளைப் பெற்று, 1780 ஆம் ஆண்டு வெள்ளைப் படையை நேருக்கு நேர் எதிர்த்துப் போரிட்டு வெற்றி பெற்றார்கள். அதில் குயிலி என்ற ஆதி திராவிட தாயும் முதல் மனித வெடிகுண்டாகச் செயல்பட்டுள்ளார். இந்தியாவிலேயே ஆட்சியை, இழந்த பகுதியை, மீட்ட பெருமை சிவகங்கை மண்ணுக்கே உண்டு. எனவே, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், ஆட்சியை மீட்ட நாளான 1780 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 12 ஆம் தேதியை, ஆட்சி உரிமை மீட்பு எழுச்சி நாளாக அறிவித்து, ஒவ்வொரு வருடமும் அரசு விழாவாக நடத்த வேண்டும். நமது முதல்வர் அவர்கள், பல தமிழக வரலாற்று நிகழ்வுகளுக்கு நினைவுச் சின்னங்கள் அமைத்து வரலாறுகளைப் புதுப்பித்ததுபோல, சிவகங்கை வரலாற்றை விளக்கும் விதமாக, வரலாற்றுப் பூங்கா அமைத்துத் தரும்படி இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றங்களின் சார்பாக கலைமாமணி விருது வழங்கப்படுகிறது. கடந்த காலங்களில் சினிமாக் கலைஞர்களுக்கு

[திரு. சு. குணசேகரன்] [2007 மே 7

அதிகமாக விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. சரியான படைப்பாளிகளை இனம் காண்பதில்லை. இடது சாரி இயக்கத்தில் மறைந்த அறந்தை நாராயணன் மட்டுமே கலைமாமணி விருது பெற்றுள்ளார். அதேபோல, தமிழ்நாட்டினுடைய நாட்டுப்புறக் கலை, இலக்கியங்களை ஆய்வு செய்த தொ.பு.சி. ரகுநாதன், பேராசிரியர் வானமாமலை போன்ற அறிஞர்களுக்கு கலைமாமணி விருது கொடுக்கப்படவில்லை. எனவே, வரும் ஆண்டுகளில் முற்போக்கான சிறந்த கலைஞர்களைத் தேர்வு செய்து விருது வழங்க வேண்டும். அரசு விழாக்கள் என்ற அடிப்படையில் (மணியடிக்கப்பெற்றது) 17 தலைவர்களின் பெயர்கள்...

*பிற்பகல் 12-20*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. வரதராஜன்.

**திரு. சு. குணசேகரன்:** ஒரு நிமிடம், ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை சார், அப்படித்தான் முடியும்.

**திரு. சு. குணசேகரன்:** ஒரு நிமிடம், முடிந்துவிடும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் 5 பேர் இருக்கிறார்கள். திரு. வரதராஜன் பேசுங்கள். (குறுக்கீடு) அவர் நிறைய pages வைத்து இருக்கிறார்.

**திரு. ரா. வரதராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சு. குணசேகரன், உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, வேண்டாம், உட்காருங்கள்.

**திரு. ரா. வரதராஜன்:** உலகத்திலேயே பிரான்ஸ் நாடுதான் அதிக சுற்றுலாப் பயணிகளை ஈர்த்துள்ளது. கடந்த ஆண்டு 26.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் அந்த நாட்டுக்குச் சென்று உள்ளனர்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வரதராஜன், தமிழ்நாட்டு சுற்றுலாத் தலங்களை மட்டும் எப்படி விரிவு பண்ண வேண்டும், develop பண்ண வேண்டும் என்று யோசனை சொல்லுங்கள்.

**திரு. ரா. வரதராஜன்:** ஆனால், 2.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகள்தான் நம் நாட்டுக்கு வந்துள்ளனர்.



2007 மே 7]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** என்ன திரு. வரதராஜன்?

**திரு. ரா. வரதராஜன்:** உள் நாட்டு சுற்றுலாப் பயணிகள், வெளி மாநில சுற்றுலாப் பயணிகள், பிற நாடுகளில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் ஆகியோருக்குத் தேவையான உணவு விடுதி, தங்கும் வசதி போன்ற வசதிகளைச் செய்து நம் பயணிகளை ஈர்க்கவேண்டும். சுற்றுலா, ஜாதி சமய வேறுபாடற்ற மனித நேயத்தை ஏற்படுத்துகிறது; அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகிறது; வேலைவாய்ப்பினைப் பெற்றுத் தருகிறது; கணவன் மனைவி பிணக்குகள் நீக்கி, இணக்கத்தை ஏற்படுத்துகிறது. கல்வி, ஆன்மீகம், மருத்துவம், மூலிகை, தொழில், இயற்கை போன்ற உன்னத விவரங்களை அறிந்துகொள்ள சுற்றுலா பயன்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பு ஒன்றியம், மேற்குத் தொடர்ச்சி மலையில் அமைந்திருக்கும் ஸ்ரீ சுந்தர மகாலிங்கம் திருக்கோயிலில், ஆடி அமாவாசை அன்று திருவிழா நடைபெறுகிறது. இந்தத் திருவிழாவிற்கு தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களில் இருந்தும் இலட்சக்கணக்கான பக்தர்கள் வந்து செல்கின்றனர். மாதம் இருமுறை பிரதோஷமும், ஒரு முறை அமாவாசையும் என மக்கள் கூட்டம் அதிகம் வந்து கொண்டிருக்கிறார்கள். மேற்படி மலைப்பாதை சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பு எப்படி இருந்ததோ அதேபோலத்தான் இன்றும் உள்ளது. அதைச் சுற்றுலாத் தலமாக்கி சீரமைத்து, சரி செய்து, மின் விளக்குக் கம்பம் அமைத்து, மக்கள் சிரமம் இல்லாமல் மலை ஏறி, சாமி தரிசனம் செய்வதற்கு ஏற்பாடு செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்றும் அதிகமான மக்கள் வர இருப்பதால், அதைச் சுற்றுலா மையமாக்கினால், வருமானமும் தமிழ்நாட்டிற்கு ஈட்டித் தரும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்திய சுதந்திரத்திற்கு 'வெள்ளையனே வெளியேறு' என்று முதல் முழக்கமிட்ட வீரபாண்டிய கட்டபொம்மன் ஆட்சி செய்த பாஞ்சாலங்குறிச்சி கோட்டை, கலைஞர் ஆட்சியில் புதுப்பிக்கப்பட்டு கட்டப்பட்டது. இரண்டு நாட்கள் அரசு விழாவாக நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு வருடமும், சித்திரை மாதம் கடைசி வெள்ளிக்கிழமை கட்டபொம்மன் கோட்டையில் இருக்கும் அருள்மிகு வீர ஜக்கதேவி ஆலயத்தில், இரண்டு நாள் விமரிசையாக விழா நடைபெறுகிறது. தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களில் இருந்தும், பல இலட்சக்கணக்கில் மக்கள் சாமி தரிசனம் செய்ய வந்து பின்பு திருச்செந்தூர் சென்று சாமி தரிசனம் செய்து வருகிறார்கள். அரசு

[திரு. ரா. வரதராஜன்] [2007 மே 7

விழா என்றாலும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளோ, அமைச்சர் பெருமக்களோ அந்த விழாவில் கலந்துகொள்வதில்லை. ஏனென்று தெரியவில்லை. அங்கே குடிநீர் வசதி இல்லை; கழிப்பிட வசதி இல்லை; பாதுகாப்பு வசதி இல்லை. எதையும் கண்டு கொள்ளவேயில்லை இந்த அரசு. எனவே, இந்த நிலையை மாற்றி, வரும் சித்திரை மாதம் கடைசி வெள்ளிக்கிழமை 29 ஆம் தேதி நடைபெறும் அரசு விழாவிற்கும், ஜனவரி 3 ஆம் தேதி நடைபெறும் வீரபாண்டிய கட்டபொம்மன் பிறந்தநாள் விழாவிற்கும் அமைச்சர் பெருமக்கள் தவறாது கலந்துகொண்டு விழாவினைச் சிறப்பிக்க அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மேலும், மதுரை, திருநெல்வேலி...

*(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. துரை சந்திரசேகரன் தலைமை)*

*பிற்பகல் 12-25*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை சந்திரசேகரன்):** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பாஞ்சாலங்குறிச்சி கோட்டையைப் பொறுத்தமட்டில் நம்முடைய முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட கோட்டை அது. கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகுதான் அங்கு தண்ணீர் வசதியும் செய்யப்பட்டிருக்கிறது. வருங்காலத்தில் அதைப் புதுப்பிக்கக்கூடிய பணிகளுக்காகவும் இந்தத் துறைக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்ற செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ரா. வரதராஜன்:** மேலும், திருநெல்வேலி தேசிய நெடுஞ்சாலையில் கயத்தாற்றில் வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கில் இடப்பட்டதை நினைவுகூரும் வகையில் நிறுவப்பட்ட வீரபாண்டிய கட்டபொம்மன் திருவுருவச் சிலை நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களால் நிறுவப்பட்டது ஆகும். அது அரசிடம் ஒப்படைக்கப்பட்டது. அந்த நினைவிடத்தில் அக்டோபர் 16 ஆம் தேதி வீர வணக்கம் செலுத்துவதற்காக தென் மாவட்டங்களில் இருந்து, பல்வேறு மாவட்டங்களிலிருந்து இலட்சக்கணக்கான அந்தச் சமுதாய மக்கள் கூடி அஞ்சலி செலுத்துகின்றனர். எனவே, வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட அக்டோபர் 16 ஆம் தேதியை நினைவு நாளாகக் கடைப்பிடிக்க விழா நடத்த வேண்டும். அந்த இடத்தில் பூங்கா அமைத்துப் பராமரிக்க வேண்டும். மேலும், ஆண்டுதோறும் நினைவு அஞ்சலி செலுத்த வருகை தரும் மக்களும்,



2007 மே 7] [திரு. ரா. வரதராஜன்]

தலைவர்களும் கூடும் வகையில் ஒரு திடல் அமைத்துத் தர வேண்டும். சுற்றுலா மையமாக்க வேண்டும். இந்தக் கோரிக்கையை எங்கள் தலைவர் மக்கள் தலைவர் வைகோ அவர்கள் தமிழக முதல்வர் அவர்களிடம் ஏற்கெனவே கொடுத்துள்ளார் என்பதை நினைவு கூர்கிறேன்.

மேலும், விருதுநகர் தமிழகத்தில் மிகச்சிறந்த வணிக நகரம் ஆகும். விருதுநகர் பெருந்தலைவர் காமராஜர் பிறந்த புண்ணிய பூமியாகும். விருதுநகர் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்றங்கள் கட்டப்பட்டுள்ளன. ஆனால் தற்போது ஸ்ரீவில்லிபுத்தூரில் மாவட்ட நீதிமன்றம் செயல்பட்டு வருகின்றது. விருதுநகர் மாவட்டத்தில் மக்கள் நலன் கருதி அவர்களது பிரயாண தூரத்தைக் குறைக்கும் வகையில் விருதுநகர் மாவட்டத்திலேயே மத்திய நகரமாக திகழ்கிறது. ஆனால், ஸ்ரீவில்லிபுத்தூர் ஒரு கடைசியில், ஒரு மூலையில் இருக்கிறது. ஆகவே, வீரசோழம், நரிக்குடி, திருச்சுழி, காரியாப்பட்டி, பரலட்சி ஆகிய ஊர்களிலிருந்து 110 கி.மீ. தூரம் செல்ல வேண்டியிருக்கிறது. எனவே, அவர்கள் பிரயாண தூரமும் அதிகமாகிறது, நேரமும் வீணாகிறது. சரியான நேரத்தில் நீதிமன்றத்திற்குச் செல்ல இயலவில்லை. எனவே, விருதுநகரில் மாவட்ட துணை நீதிமன்றம் அமைத்து அந்த மாவட்ட மக்களுடைய குறைகளைத் தீர்க்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை சந்திரசேகரன்):** உரையை முடியுங்கள், திரு. வரதராஜன். அடுத்தது மாண்புமிகு உறுப்பினர் திரு. எதிரொலி மணியன்.

***திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சுற்றுலா மற்றும் செய்தித் துறை, எழுதுபொருள் அச்சுத் துறை ஆகிய துறைகளின் மானியக் கோரிக்கைகளில் பேசுகிற வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு அண்டவெளியில் அளவிடமுடியாத இந்த மாபெரும் பிரபஞ்சத்தில், பூமி உள்ளிட்ட 9 கோள்களோடு சூரிய குடும்பம் இருப்பதும், அதில் மூன்றாவது கோளாக மனிதன் வாழ்ந்து கொண்டிருக்கிற பூமி கோளும் சூரியனைச் சுற்றி வருவதோடு மட்டுமின்றி தன்னைத்தானே சுற்றிக் கொண்டிருப்பதை, அதிலும் சாதாரண வேகத்தில் அல்ல 1 இலட்சத்து 86 ஆயிரம் கி.மீ. வேகத்தில் தன்னைத்தானே சுற்றிக்கொண்டே அது சூரியனையும் சுற்றி வருகிறது என்பதை இங்கே விஞ்ஞானிகள் கணித்து உள்ளார்கள். இப்படி இயந்திரத்தனமான இயக்கத்தில், வேகத்தில் உலகம்

[திரு. கோ. எதிரொலி மணியன்] [2007 மே 7

இருப்பதால் தானோ என்னவோ நாங்களும் அப்படி மாறி விட்டோம் என்பதுபோல மக்களும் இயந்திரத்தனமான வாழ்க்கையில் இயங்கத் தொடங்கிவிட்டார்கள்.

இந்த உலகத்தில் இந்த மனிதர்களுக்கு, எல்லாம் கிடைக்கிறது. பணம், பொருள், இடம், வீடு, வாசல், தோட்டம், துரவு எல்லாம் கிடைக்கிறது. ஆனால், அவனுக்கு கிடைக்காத ஒன்றே ஒன்று மகிழ்ச்சி மாத்திரமே. இப்போது அதைத்தான் மனிதன் தேடிக் கொண்டிருக்கிறான். மகிழ்ச்சியாக இருப்பவனுக்கு மட்டுமே ஆயுள் கூடுவதாக ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள். எனவே, அந்த மகிழ்ச்சியைத் தரக்கூடியது கலைகள் மாத்திரமே. அதிலும் குறிப்பாகத் தமிழனுடைய கலைகள் மாத்திரமே என்றால் அதை யாரும் மறுக்க முடியாது. கலைகள் இல்லாத உலகம் அலைகள் இல்லாத கடல் என்ற அற்புதமான வார்த்தைகளைக் கொள்கை விளக்கக் குறிப்பேட்டிலே கண்டேன்.

அப்படிப்பட்ட கலைகளை தமிழகத்தின் மூலை முடுக்குகளில் எல்லாம் இசை ஒலியும், நாத முழக்கமும், செந்தமிழ் ஓசையும் பரவும் பொருட்டு, ஓயாது உயிர்த் துடிப்போடு செயல்படும் துறை இந்தத் துறை என்று நீங்கள் குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆனால், தமிழகத்தின் ஆதி இசையான தமிழ் இசை இப்போது தமிழர்களுக்கு அன்னிய இசையாக மாறிவிட்டது. அன்னிய இசையான மேற்கத்திய இசை நமது இசையைப்போல் மாறிக் கொண்டிருக்கிறது. எனவேதான், இந்தத் தமிழ் இசையைக் காப்பாற்றும் விதமாக தமிழ் இசைப் பள்ளிகளை மாவட்டந்தோறும் திறந்தாலும்கூட, இசைப் பள்ளிகளிலே ஒரு பாடப் பிரிவாகக் கொண்டுவர வேண்டும்.

பிற்பகல் 12-30

தனியார் பள்ளிகளில் மாணவர்கள் விருப்பப்படுகிற ஏதேனும் ஒரு இசைக் கருவியை வாசிக்கக் கற்றுக்கொள்ள ஏற்பாடு செய்துள்ளதைப்போல, அரசுப் பள்ளிகளிலும் மாணவர்கள் தாங்கள் விரும்பப்படுகிற ஏதேனும் ஒரு இசைக் கருவியை இசைக்க, வாசிக்க அல்லது கற்றுக்கொள்ள இந்த அரசு ஏற்பாடு செய்ய வேண்டும்.

இன்றைக்கு நம்முடைய செந்தமிழ்ச்செல்வன், மாண்புமிகு உறுப்பினர் வைகோ ஆகியோர் பேசுகிறபோது தமிழர்களுடைய பண்பாடு, கலாச்சாரம் சீரழிக்கப்படுகிறது என்று சொன்னார்கள். குறிப்பாக, திரைப்படங்களைச் சுட்டிக்காட்டினார்கள். திரைப்படங்களில் இடம்



2007 மே 7] [திரு. கோ. எதிரொலி மணியன்]

பெறுகின்ற கேவலமான, கீழ்த்தரமான பாடல்களை, காட்சி அமைப்புகளை இந்த அரசு தணிக்கை செய்திருக்க வேண்டும். இதை அனுமதிக்கிறபோது, அதை பெரிய திரையில் ஒரு முறை காட்டிவிட்டுப் போகிறபோது, சின்னத் திரையைச் சேர்ந்தவர்கள் அதே பாட்டை, அதே அசிங்கத்தை, அதே கேவலத்தை சேனலுக்கு ஒரு முறை என்று, ஒரு நாளைக்கு 10 முறை காட்டி (மேசையைத் தட்டும் ஒலி) நமது பண்பாட்டை, கலாச்சாரத்தைச் சீரழித்துக் கொண்டிருப்பதை நாம் எல்லோரும் அறிவோம். திரையரங்குகளில் குடும்பத்தோடு உட்கார்ந்து படம் பார்க்க முடியவில்லை என்றால் டி.வி.-யிலும் இப்போது பார்க்க முடியவில்லை. பார்த்துக் கொண்டிருக்கும்போதே சேனலை மாற்றியாக வேண்டும். ஏனென்று சொன்னால், குழந்தை குட்டிகளை வைத்துக்கொண்டு டி.வி. பார்க்க முடியாது. இதை அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அதேபோல, சுற்றுலாத் துறையின்மூலம் தமிழகத்தில் உள்ள சுற்றுலாத் தலங்களை மேம்படுத்திட வேண்டும். புதிய, புதிய சுற்றுலாத் தலங்களை உருவாக்கிட வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு point குறிப்பாக, இப்படிச் செய்வதன்மூலம் வெளிநாட்டுப் பயணிகளை மட்டுமின்றி, பிற மாநிலப் பயணிகளையும் நம்மால் கவர முடியும். கடைசியாக ஒரு வேண்டுகோள். சுற்றுலாத் துறையின்மூலமாக நீங்கள் எந்தப் பூங்காவை உருவாக்குகிறீர்களோ இல்லையோ, எதைச் சீர் செய்கிறீர்களோ இல்லையோ, (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு நிமிடம்தான். ஒரே ஒரு நிமிடம் சார். (குறுக்கீடு)

## 5. விதி 110—ன்கீழ் அறிக்கை

### கிருஷ்ணா நதிநீர்க் கால்வாயை ஸ்ரீ சத்ய சாய்பாபா டிரஸ்ட் செப்பனிடுதல்—மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை சந்திரசேகரன்):** மாண்புமிகு பொதுப் பணி துறை அமைச்சர் அவர்கள் விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை தாக்கல் செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அனுமதி வழங்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சென்னை மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ஆந்திர மாநிலம் ஸ்ரீசைலம் அணைக்கட்டிலிருந்து தண்ணீரைக் கொண்டுவந்து பூண்டி நீர்த்தேக்கத்தில் தேக்குவதற்காக ஒரு கால்வாய்

[திரு. துரைமுருகன்] [2007 மே 7

ஸ்ரீசைலம் அணைக்கட்டிலிருந்து பூண்டிவரை வெட்டப்பட்டுள்ளது. இந்த கிருஷ்ணா நதிக் கால்வாயை ஆந்திர மாநில பகுதியில் செப்பனிட்டு, சிமெண்ட் கால்வாயாக மாற்றி அமைக்கின்ற ஒரு பெரும் பணியை புட்டபர்த்தி ஸ்ரீ சத்ய சாய்பாபா அவர்களின் பெயரால் இயங்குகின்ற ஒரு டிரஸ்ட் நிறைவேற்றி முடித்திருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவீர்கள்.

சமீபத்தில் ஜனவரி 21 ஆம் நாளன்று அருள்மிகு புட்டபர்த்தி சாய்பாபா அவர்கள் சென்னைக்கு வந்திருந்தபோது, அவர்களுக்குத் தரப்பட்ட வரவேற்பில், ஆந்திரா, தமிழ்நாட்டு எல்லைப் பகுதியிலிருந்து பூண்டிவரை உள்ள கால்வாய் செப்பனிடப்பட்டு, சிமெண்ட் கால்வாயாக மாற்றிக் கொடுக்கப்படும் என்று ஓர் அறிவிப்பைச் செய்தார்கள். அதன் அடிப்படையில் 29-4-2007 அன்று ஸ்ரீ சத்ய சாய்பாபா டிரஸ்டிலிருந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது. அந்தக் கடிதத்தில் தமிழ்நாடு, ஆந்திரா எல்லைப் பகுதியிலிருந்து-zero point-பூண்டிவரை உள்ள கால்வாய்களை செப்பனிட்டு, அகலப்படுத்தி. சிமெண்ட் கால்வாய்களாக மாற்ற ஸ்ரீ சத்ய சாய்பாபா அவர்களுடைய டிரஸ்ட் விரும்புவதாகவும், அதற்கு தமிழக அரசினுடைய அனுமதி வேண்டுமென்றும், அந்தப் பணியை Larsen & Toubro நிறுவனத்தின் மூலம் செய்யப்போவதாகவும், அந்தப் பணியைச் செய்கிறபோது, அந்தப் பணியைச் செய்வோருக்கு உதவுவதோடு, பணியினை மேற்பார்வையிடுகிற பொறுப்பை தமிழக பொதுப் பணித் துறை ஏற்க வேண்டுமென்றும் கேட்டிருக்கிறார்கள்.

6-5-2007 ஆம் தேதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஸ்ரீ சத்ய சாய்பாபா டிரஸ்ட்டின் கோரிக்கையை ஏற்பதாகவும், அவர்களுடைய வேண்டுகோளின்படி பூண்டி கால்வாயை சீர்படுத்துவதற்கு மட்டும் Larsen & Toubro இடம் ஒப்படைக்கப்படும் என்றும், அந்தப் பணியை மேற்கொள்கிறபோது, பொதுப் பணித் துறை தலைமைப் பொறியாளர், அவர்களோடு இணைந்து பணியாற்றுவதோடு மேற்பார்வையிடுகின்ற பொறுப்பையும் செய்வார் என்றும் ஸ்ரீ சத்ய சாய்பாபா டிரஸ்ட்டுக்கு கடிதம் எழுதியிருக்கிறார்கள். ஸ்ரீ சத்ய சாய்பாபா டிரஸ்டின் இந்த நல்லெண்ண சமிக்ஞையை அரசு வரவேற்பதன்மூலம், பூண்டி கால்வாயில் இனிமேல் தங்குதடையின்றி தண்ணீர் வருவதற்கு வழி ஏற்படும் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



2007 மே 7] பிற்பகல் 12-35

## 4. மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 29 – சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை)**

**(ஆ) கோரிக்கை எண் 28 – செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)** – தொடர்ச்சி

**(இ) கோரிக்கை எண் 30 – எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)**

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை சந்திரசேகரன்):** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. எதிரொலி மணியன், ஓரேயொரு நிமிடம்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கடைசியாக ஒரு வேண்டுகோள். சுற்றுலாத் துறையின் சார்பாக நீங்கள் எங்கே ஒரு பூங்காவை உருவாக்குகிறீர்களோ இல்லையோ அல்லது சீர் செய்வீர்களோ இல்லையோ, எங்களுக்குத் தெரியாது. ஆனால், ஓரேயொரு இடத்திலே கட்டாயம் சீர்செய்து பூங்கா அமைக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. அது வேறு எங்கும் அல்ல; தலைவர் கலைஞர் அவர்கள் 50 ஆண்டு காலம் பொன் விழா கண்டுகொண்டிருக்கிற இந்தக் கோட்டைக்கு முன்பு கம்பீரமாக இருக்கின்ற கோட்டையின் முன்பிருந்து தொடங்கி, போர் நினைவுச் சின்னம் வரையில் சாலையில் செல்வோர் மூக்கைப் பொத்திக்கொண்டே போக வேண்டும். அதுவும், இரு சக்கர வாகனங்களில் செல்வோர், இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் மிதி வண்டியில் செல்வோர் கைக் குட்டையை எடுத்து மூக்கை மூடிக்கொண்டுதான் போக வேண்டும். அந்த வழியாகப் போகிறவர்கள் எங்களிடம் கேட்பதெல்லாம், இதற்கு ஒரு

விடிவு இல்லையா என்பதுதான். இதை முதல்வர் அவர்களின் கவனத்திற்கு நீங்கள் கொண்டு செல்ல வேண்டுமென்று கேட்டார்கள். மரியாதைக்குரிய அமைச்சர் அவர்களே, தாங்கள் மட்டும் தயவு செய்து அந்த இடத்தைக் கடக்கிறபோது தெரியாத்தனமாக கார் கண்ணாடியை இறக்கிவிட்டால் போதும், அடுத்த முறை, கண்ணாடியை இறக்காமலேயே அந்த துர்நாற்றம் உங்கள் மூக்கைத் துளைத்துவிடும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பை வலியுறுத்துவதற்காக இந்தத் தொடர் முழுவதும் மிதி வண்டியில் வருகிற நாங்கள் படுகிற அவஸ்தை சொல்ல முடியாது. எங்களைவிட பாவம் அங்கே முதல்வர் அவர்களுடைய கான்வாயிலே இருக்கின்ற காவலர்கள். அவர்களின் மூக்கும், மனசும் என்ன பாடுபடும் என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதை நீங்கள் உடனடியாகச் சீர்செய்ய வேண்டுமென்று கேட்டு, தந்த வாய்ப்புக்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை சந்திரசேகரன்):** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. தமிழ்செல்வன்.

**திரு. சி. தமிழ்செல்வன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழினத்தின் பாதுகாவலனாக விளங்கிடும் மாண்புமிகு அண்ணாவின் தம்பி, டாக்டர் முத்தமிழ் அறிஞர் முதலமைச்சர் அவர்களே, மாண்புமிகு இனமானப் பேராசிரியர் பெருந்தகை அவர்களே, உள்ளாட்சியின் நல்லாட்சி நாயகர் மாண்புமிகு தளபதியார் அவர்களே, மாண்புமிகு சேலத்துச் சிங்கமும், மாவட்டச் சீராளருமான மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களே, உங்கள் அனைவரின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்குகிறேன்.

என் வெற்றிக்காகப் பாடுபட்ட ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கும், எனது ஏற்காடு தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் நன்றியைக் காணிக்கையாகச் செலுத்துகிறேன்.

செய்தி மற்றும் சுற்றுலாத் துறையில், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பதவியேற்ற பிறகு, பத்திரிகை ஆசிரியர்களுக்கும், பத்திரிகைகளுக்கும் பாதுகாப்பும் முன்னுரிமையும் வழங்கப்பட்டது. இந்த நிலையில், பணியிலிருக்கும்போது இறக்கும் பத்திரிகையாளர்களின் குடும்பத்திற்கு முதன்முதலாக நிதியுதவி மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் இரண்டு இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது. அதேபோல, ஓய்வூதியம், ஓய்வுபெற்ற





பத்திரிகையாளர்களுக்கு டாக்டர் கலைஞர் அவர்கள் 4,000 ரூபாய் வழங்கியுள்ளார்கள்.

ஏற்காடு தொகுதியில் மிக அதிகமாகப் பயணிகள் வருகிறார்கள். எனவே, மாண்புமிகு தலைவர் அவர்களும், சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களும் ஏற்காடு தொகுதியில் சுற்றுலாத் துறையின் சார்பாக, அந்தச் சுற்றுலாத் தலத்தை விரிவாக்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களே, ஏற்காடு தொகுதியில் இரண்டு அணைகள் இருக்கின்றன. ஆனைமுடி அணை ஒன்று. அதேபோல கரியகோயில் அணை ஒன்று. ஆனால், அந்தச் சுற்றுலா மையத்தில் பார்க் எதுவும் இதுவரை இல்லை. அங்கே மக்கள் அதிகமாக வந்து செல்கிறார்கள். உடனடியாக மரியாதைக்குரிய தலைவர் அவர்கள் அங்கே சுற்றுலா மையம் ஒன்றை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, எனது ஏற்காடு தொகுதியில் பலாப்பாடி, பாலூற்று, தாளூர், பண்ணைக்காடு, நெய்மலை, அக்கரைப்பட்டி, மண்ணூர் போன்ற கிராமங்களில் அதிகமாக மலைவாழ் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கு இதுவரையும், மின்சார வசதி, சுகாதார வசதி, சாலை வசதி, குடிநீர் வசதி போன்ற அடிப்படை வசதிகள் எதுவுமே இல்லை.

பிற்பகல் 12-40

அதேபோல் தலைவர் அவர்கள் இலவச வண்ணத் தொலைக்காட்சி கொடுக்கப்போகிறார்கள். அந்த வண்ணத் தொலைக்காட்சியைப் பெறுகின்ற மக்கள் நிறைய கோரிக்கை வைக்கிறார்கள். மின்சார வசதியே இல்லையே நாங்கள் எப்படி வண்ணத் தொலைக்காட்சி பார்ப்போம் என்று மிகவருத்தத்துடன் கூறுகின்றார்கள். உடனடியாகத் தலைவர் அவர்கள் அப்பகுதிக்கு மின்சார வசதி ஏற்படுத்தித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், ஏற்காடு, அருனூத்துமலை, கருமந்துறை போன்ற மலைக் கிராமங்களில் மலைவாழ் மக்கள் நிறைய வாழ்ந்துகொண்டு வருகிறார்கள். அவர்களுடைய நீண்டகால கோரிக்கையான ஜாதிச் சான்றிதழ் இதுவரையிலும் கிடைக்கப்பெறவில்லை. மலைவாழ் மக்கள் கோட்டாட்சித் தலைவரிடம் விண்ணப்பங்கள் கொடுத்தால் அந்த விண்ணப்பங்கள் இரண்டு, மூன்று மாதங்களாக, இரண்டு மூன்று

வருடங்களாக நடவடிக்கை ஏதுமின்றித் தேங்கிக் கொண்டிருக்கின்றன. இதுவரையிலும் எந்தப் பலனும் இல்லை. ஒரு கோட்டாட்சித் தலைவர் வந்தால் ஒரு வருடம்தான் இருக்கிறார். உடனே அவர் transfer வாங்கிக்கொண்டு போய்விடுகிறார். அதேபோல் இரண்டாவதாக வருபவரிடம் மனுக் கொடுத்தால் ஒரு வருடம், அல்லது இரண்டு வருடம்தான் இருக்கிறார். அப்படியே அவரும் transfer வாங்கிக்கொண்டு போய்விடுகிறார். இதுவரை ஒவ்வொரு கோட்டாட்சித் தலைவரிடத்திலும் இரண்டாயிரம், மூவாயிரம், ஐந்தாயிரம் என்று கொடுத்த மனுக்கள் அப்படியே தேங்கிக் கிடக்கின்றன. உடனடியாக அந்த மலைவாழ் மக்களுக்குச் சாதிச் சான்றிதழ் வழங்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், ஏற்காடு தொகுதியில், காபி, மிளகு அதிகமாக விளைகின்றது. அந்த விளைச்சலை அங்கேயே கொள்முதல் செய்வதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், அருனூத்துமலையில் ஒரு கால்நடை மருத்துவமனை இருக்கிறது. அதே பகுதியில் 50 கிலோ மீட்டரில் சேத்தன்சாவடி என்ற ஊரில் ஒரு கால்நடை மருத்துவமனை இருக்கிறது. அந்தப் பகுதியில் நிறைய கறவை மாடுகள் இருக்கின்ற காரணத்தால், அந்தப் பகுதியில் புளியங்கொட்டை கிராமத்திலே ஒரு கால்நடை மருத்துவ முகாம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், ஏற்காடு மலையில், அதிகமான மலைவாழ் மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். அந்த மலைவாழ் மக்கள் இருக்கின்ற இடத்தில் ஒரு குண்டு பல்பு தான் எரிகிறது. டியூப் லைட் என்பது இதுவரை எரிந்ததே கிடையாது. எனவே, அப்பகுதிக்கு மின்சார வசதி, துணை மின் நிலையம் போன்றவற்றை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், ஏற்காடு தொகுதியில் தீ விபத்து ஏற்பட்டால் சேலம், வாழப்பாடி, ஆத்தூர் இந்தப் பகுதிகளில் போனால் ஒரு தீயணைப்பு நிலையம் இருக்கிறது. சேலம் பகுதியில் ஒரு 50 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியிருக்கிறது. அதேபோல் அந்தப் பக்கம் ஆத்தூர் பகுதியில் ஒரு 50 கிலோ மீட்டர் தூரம் போக வேண்டியிருக்கிறது. இடையிலே ஒரு தீயணைப்பு நிலையம் எதுவுமே இல்லை. எனவே, தலைவர் அவர்கள் உடனடியாகத் தீயணைப்பு நிலையம் அமைத்துத் தந்தால் மக்களுக்கு நன்கு செயல்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





அதேபோல், ஏத்தாப்பூர் காவல் நிலையம். அந்தக் காவல் நிலையம் ரொம்ப மோசமாக இருக்கிறது. முட்டுக் கொடுத்துத்தான் அந்தக் காவல் நிலையக் கட்டடம் இருக்கிறது. அந்தக் காவல் நிலையத்திற்கு வெளியில்தான் ஒரு குடிசை கட்டி அந்த அதிகாரிகள் உட்கார்ந்துகொண்டிருக்கிறார்கள். எனவே, தலைவர் அவர்கள் அங்கே காவல் நிலையம் ஒன்று புதியதாகக் கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், எங்கள் அயோத்தியாபட்டணம் ஒன்றியத்தில் கோராத்துப்பட்டியில் பஞ்சாயத்து அலுவலகம் இல்லை. நீண்டகாலமாக இந்தக் கோரிக்கை இருக்கிறது. இந்த அலுவலகக் கட்டடம் இல்லாததால், பொதுக் கூட்டத்தினை மாரியம்மன் கோவிலில்தான் பஞ்சாயத்துத் தலைவர் அவர்கள் நடத்துகிறார்கள். எனவே, அந்தப் பஞ்சாயத்து அலுவலகத்தினை உடனடியாக கட்டித்தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், மக்கள் நிறையக் கோரிக்கைகளை வைத்துள்ளனர். மலைவாழ் மக்களுடைய நீண்டநாள் கோரிக்கை ஜாதிச் சான்றிதழ் கிடைக்காததுதான். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கு உடனடியாக ஆவன செய்யுமாறு கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை சந்திரசேகரன்):** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் கோபாலன்.

**திரு. போ. கோபாலன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இரண்டாவது முறையாகப் பேச வாய்ப்புத் தந்த தங்களுக்கும், இரண்டாவது முறையாக தேர்ந்தெடுத்த உதகமண்டலம் தொகுதியில் என்னுடைய பேச்சைத் தொடங்குகிறேன். முக்கியமான நினைவுகள் இந்த நாளில் எனக்கு வருகிறது. 1987 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 24 ஆம் தேதி விடிந்தும் விடியாத காலைப் பொழுதில் நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் புகைவண்டி நிலையத்திலே வந்து இறங்குகிறார்கள். ஒரு சோகச் செய்தியைச் சொல்கிறார்கள். எங்களுடைய உள்ளத்திலே நிறைந்து, உண்மையான அ.தி.மு.க. தொண்டர்களுடைய நெஞ்சிலே நிறைந்திருக்கக்கூடிய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் மாண்டுவிட்டார்கள் என்ற செய்தியைக் கலைஞர் சொல்கிறார்கள். காவல் துறையினரும் தடுத்துப்பார்க்கிறார்கள். நீங்கள் இப்பொழுது அங்கே செல்லவேண்டாம். பதற்றமான சூழ்நிலை இருக்கலாம். நீங்கள்

[திரு. போ. கோபாலன்] [2007 மே 7

போக வேண்டாம் என்று சொன்னபொழுது, அந்த அருமைத் தலைவர் அவர்கள், இராமாவரம் தோட்டத்திற்குப் போன காட்சியும், அங்கே தலைவருடைய உடலைப் பார்த்து அஞ்சலி செலுத்திய காட்சியும், உண்மையான எம்.ஜி.ஆர். தொண்டர்களுடைய உள்ளங்களிலே, இன்றும் ஆயிரக்கணக்கிலே, இலட்சக்கணக்கான தொண்டர்களின் எண்ணங்களிலே இருக்கிறது. அதுவும் மீண்டும் சொல்வேன். உண்மையான தொண்டர்களுடைய உள்ளங்களிலே இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-45

அதேபோல, இந்த வயதிலும் டாக்டர் கலைஞர் அவர்கள்—நேற்று பார்த்தேன்—கலைவாணர் அரங்கத்தில் ஒரு கவிஞர் பா. விஜய் என்று சொல்லக்கூடிய கவிஞருடைய நூல் வெளியீட்டு விழா. 10 நூல்களைப் படித்து, 10 மணி வரை அவர் பேசக்கூடிய அந்தக் காட்சியைப் பார்த்தேன். இன்று நம்முடைய தந்தை பெரியார் அவர்கள் இல்லை; மூதறிஞர் இராஜாஜி அவர்கள் இல்லை; பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் இல்லை; நம்முடைய அருமைத் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் இல்லை; எங்களுடைய அன்பிற்குரிய எம்.ஜி.ஆர். அவர்கள்கூட இல்லை; இன்று நீங்கள்தான் நம்பிக்கை நட்சத்திரமாக இருந்து கொண்டிருக்கிறீர்கள். எனவே, உங்கள் உடல் நலத்தை நீங்கள் பார்த்தாக வேண்டுமென்று (மேசையைத் தட்டும் ஒலி) நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், நீலகிரி மாவட்டம் என்று சொன்னால், மூன்றே மூன்றுதான். சுற்றுலா, தேயிலை, விவசாயம். அடுத்தது பால் வளம். கூட ஒன்று சேர்ப்பதானால் வனத் துறை என்று சொல்லலாம். இந்த நான்கையும் நம்பித்தான் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். சுற்றுலாத் துறையில் நான் ஒன்றே ஒன்றைக் கேட்டுக்கொள்கிறேன். போன முறை கேட்டவுடனேயே ரோப் கார் தருகிறோம் என்று சொல்லி, அதற்காக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

மீண்டும் மீண்டும் நான் கேட்பேன், ஒரு திரைப்பட நகரை ஊட்டியிலே உருவாக்குங்கள், உலகத்தின் எல்லா பகுதியிலிருந்தும் அங்கே வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பார்ப்பதற்கு, படம் எடுப்பதற்கு வசதிகள், போதிய சூழ்நிலைகள் இல்லை. எனவே, ஒரு திரைப்பட நகரை நிச்சயமாக ஊட்டிக்கு வழங்க வேண்டுமென்று என்னுடைய முக்கியக் கோரிக்கையாக நான் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.



2007 மே 7] [திரு. போ. கோபாலன்]

அதுமட்டுமல்லாமல், மார்ச், ஏப்ரல், மே மாதம் வெயில் கொளுத்துமேயானால், சென்னையில் வெக்கை அதிகரிக்குமேயானால், கொடைக்கானலும், மலைகளின் அரசி, மலைகளின் அரசி என்று சொல்லப்படும் ஊட்டியும்தான் ஞாபகத்திற்கு வருகிறதே தவிர, மற்ற காலங்களிலே அந்த மலைகளின் அரசி யாராலும் கவனிக்கப்படுவதில்லை. ஆனால், இப்பொழுது குன்னூருக்கும், ஊட்டிக்கும் சாலைகளைச் செப்பனிட 18 கோடி ரூபாயை அரசாங்கம் அள்ளித் தந்திருக்கிறது. சாலைகள் செப்பனிடப்பட்டு வருகின்றன. அதுமட்டுமல்லாமல், மத்திய அரசாங்கம் 340 கோடி ரூபாய் அளித்து மேட்டுப்பாளையத்திலிருந்து சாண்டிநல்லா வரை தேசிய நெடுஞ்சாலையை அகலப்படுத்தி, அதைச் சீராக்குவதற்கான பணி தொடங்கப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் பாராட்டிற்குரிய நிகழ்வுகள் என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, இரண்டு மாதங்களுக்கு முன்னால் ஊட்டியிலே, ஒரே நாளில் 30 புதிய பேருந்துகளை அளித்த அரசு, திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை நான் மனப்பூர்வமாகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நீலகிரி மாவட்டம் ஒரு சிறிய மாவட்டம். இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 3 தொகுதிகளை உள்ளடக்கிய அந்த மாவட்டத்திற்கு, ஏறக்குறைய கால்நடைத் துறைக்கு, விவசாயத் துறைக்கு, கல்வித் துறைக்கு, மற்ற துறைகளுக்கு என்று ஏறத்தாழ 200 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிற இந்த அரசாங்கத்தை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போதுதான் மலைகளின் அரசி என்பது உண்மையான அரசியாக மாறிக் கொண்டிருக்கிறது.

அதைச் சொல்லும்போது இன்னொன்றையும் நான் சொல்லியாக வேண்டும். பக்கத்திலே இருக்கிற நம்முடைய வால்பாறை தொகுதி எம்.எல்.ஏ., கோவை தங்கம் அவர்கள் போன ஆண்டிலே இருந்து சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எப்பொழுதும் தேயிலை வாங்கித் தருவார்கள். அங்கேயிருந்து முந்திரிப் பழம்கூட வாங்கி வருவார்கள். அவர்கள் கேட்கிறார்கள்; இரண்டே இரண்டு கோரிக்கைகள்தான். நான் சொல்லியாக வேண்டும் என்று. அந்த வால்பாறையிலே புல்மலைக்கு ரோப் கார் வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டே இருக்கிறார்கள் டாப் சிலிப்பையும், ஆழியாறு அணையையும் ஒரு சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டே இருக்கிறார்கள். கேட்டு கேட்டு, கேட்டுத்தான் கல்லூரியைப் பெற்றுவிட்டார்கள். எனவே, மீண்டும் இதைக் கேட்டுக் கேட்டு, அவர் பெற்றுவிடுவார் என்ற நம்பிக்கையோடு, நானும் என்னுடைய சிபாரிசை அவருக்காகச் செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. போ. கோபாலன்] [2007 மே 7

நீலகிரி என்று சொன்னால், பச்சைத் தேயிலைதான். இன்று எல்லாப் பயிர்களையும் அழித்துவிட்டு பச்சைத் தேயிலையை நம்பித்தான் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இன்று பச்சைத் தேயிலைக்கு வக்காலத்து வாங்கக் கூடியவர்கள், இரண்டு ஆண்டுகளுக்குமுன் ஊட்டிக்கு வந்துவிட்டு, மக்களைத் திரட்டி, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு முன்னாலேயே அரசு விழாவிலே சொன்னார்கள். தேயிலையை எல்லாம் வேரோடு பிடுங்கி எறிந்துவிடுங்கள், பூச்செடியை நடுங்கள் என்று சொன்னார்கள். அந்த வேதனையை எல்லாம் நீலகிரி மக்கள் மறப்பதற்குத் தயாராக இல்லை. அவர்கள் இன்று உண்ணாவிரதம் இருக்கிறார்கள், ஊட்டியிலே வந்து 200, 300 பேரை உண்ணாவிரதம் இருக்க வைத்துவிட்டு, தேயிலைக்கு விலை கொடுங்கள் என்று ஒப்பாரி வைத்த காட்சிகளை நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறோம். நீலகிரி மக்கள் இளிச்சவாயர்கள் அல்ல. அதையெல்லாம்தான் தாண்டித்தான் மூன்று பேரையும் உங்களுடைய கைகளிலே அந்த மாவட்டம் ஒப்படைத்திருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ** ஊட்டியிலும் இன்னும் நிலம் கிடைக்குமா என்று (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) தேடிக்கொண்டிருக்கிறார்கள். எங்கெங்கு பூமி கிடைக்குமோ அங்கெல்லாம் விடுபட்ட நிலங்கள், அவர்கள் வாங்காத நிலங்கள் இன்னும் மிச்சம் இருக்கின்றன. (கூச்சல்-குழப்பம்) நீலகிரியில் மீதம் இருக்கிற நிலங்களையாவது காப்பாற்றவேண்டும் என்று நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மிச்சம் இருக்கக்கூடிய அரசு நிலங்களையாவது... (கூச்சல்-குழப்பம்)

பிற்பகல் 12-50

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை சந்திரசேகரன்):** மற்ற உறுப்பினர்கள் எல்லாம் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. கே.ஏ. செங்கோட்டையன், நான் உங்களுக்குப் பேசுவதற்கு நேரம் கொடுக்கிறேன்.

**திரு. போ. கோபாலன்:** வெளிநாட்டிலிருந்தும் வருகிறார்கள், பல மாவட்டங்களிலிருந்தும் வருகிறார்கள். அவர்கள் எல்லாம் பார்ப்பதற்கு மிச்சம் மீதியுள்ள நிலங்களையாவது விட்டுவையுங்கள். அரசாங்கம் காப்பாற்றியாக வேண்டும் என்பதையும் என்னுடைய கோரிக்கையாக... (குறுக்கீடுகள்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2007 மே 7]

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை சந்திரசேகரன்):** உட்காருங்கள். மற்றவர்கள் எல்லோரும் நிற்கிறார்கள். அவர் உங்கள் யாரையும் பெயர் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. நான் சொல்கிறேன், உட்காருங்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**திரு. போ. கோபாலன்:** அதுமட்டுமல்ல. நாங்கள் தேயிலைக்கு ரூ. 27 கோடி மானியம் கொடுத்தோம் என்று சொல்கிறார்கள். ரூ.27 கோடி மானியம் அல்ல. அரசாங்கம் கூட்டுறவுக் கடனை நீலகிரியில்... (குறுக்கீடுகள்) நீலகிரிக்கு மட்டும் 80 கோடி ரூபாயைக் கூட்டுறவுக் கடனுக்காகத் தள்ளுபடி செய்து இருக்கிறது. 27 கோடி ரூபாய் கொடுத்துவிட்டு, நீலகிரியை நாங்கள் வாங்கிவிட்டோம் என்று சொல்கிறார்கள். 80 கோடி ரூபாய் கூட்டுறவுக் கடனை டாக்டர் கலைஞர் அவர்கள் தள்ளுபடி செய்திருக்கிறார்கள் என்பதையும் இந்த நல்ல நேரத்தில் தெரிவித்துக்கொண்டு, டாக்டர் கலைஞர் அவர்கள் அரசு அந்த நலிந்து போன தேயிலை விவசாயிகளுக்கு ஏதோ செய்திருக்கலாம், யாரோ செய்திருக்கலாம் என்றாலும், நம்முடைய ஆட்சியில் நீங்கள் 80 கோடி ரூபாய் கடனை இரத்து செய்திருப்பதை நன்றியோடு நாங்கள் நினைவுகூர்கிறோம். தயவுசெய்து வேறு ஒரு மானியத் தொகை கிடைப்பதற்கான ஏற்பாட்டை எங்களுடைய விவசாயிகளுக்குச் செய்து தாருங்கள் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். உங்களுடைய ஆட்சியிலேதான், கலைஞர் அவர்கள் இருந்தபோதுதான்.

(மணியடிக்கப்பெற்றது) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோபாலன், கொஞ்சம் நிறுத்துங்கள். திரு. செங்கோட்டையன் என்ன விஷயம் சொல்லுங்கள்? மற்றவர்கள் எல்லாம் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சார், ஒன்று சொல்கிறேன், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் இருக்கிறார், கொறடா இருக்கிறார். இரண்டு பேர்களிடமும் கேட்டுவிட்டு நான் முடிவெடுக்கிறேன். அமைதியாக எல்லோரும் உட்காருங்கள். சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோபாலன் அவர்கள் பேசுகிறபோது ஒரு கருத்தை இங்கே வெளியிட்டார்கள். (குறுக்கீடுகள்) சொல்கிறேன். (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்ற உறுப்பினர்கள் அனைவரும் அமைதியாக இருங்கள். திரு. செங்கோட்டையன், சொல்லுங்கள்.

[2007 மே 7

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** திரு. கோபாலனைப் பற்றி... (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அமைதியாக உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். திரு. சேகர்பாபு... (குறுக்கீடுகள்) உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். மற்ற எல்லோரும் உட்காருங்கள். திரு. செங்கோட்டையன், சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மற்றவர்கள் எல்லோரும் முதலில் உட்காருங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** நீலகிரி மாவட்டத்தில் இருக்கிற ** என்று சொன்னார். ** (கூச்சல்-குழப்பம்) சொல்கிறேன் இருங்கள். எங்களுக்குத் தெரியாதா? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சிக் கொறடா பேசிக்கொண்டிருக்கிறார். மற்ற எல்லோரும் அமைதியாக இருங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** ஒரு தவறான தகவலை இந்தச் சபையிலே அவர் பதிவு செய்திருக்கிறார். நான் அவரைப் பொறுத்தவரையிலும் சொல்கிறேன். முதலிலே அண்ணா தி.மு.க., அப்புறம் காங்கிரஸ், இப்போது தி.மு.க. ** (கூச்சல்-குழப்பம்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் தனிப்பட்ட முறையில் யாரையும் குற்றச்சாட்டு சொல்லக்கூடாது. அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அதை ஒத்துக்கொள்ள முடியாது.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** குற்றச்சாட்டு சொல்லவில்லை. பிறகு வேண்டுமானால் எடுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்ற எல்லோரும் உட்காருங்கள். யார் மீதும், யாரும் தனிப்பட்ட முறையில் குற்றச்சாட்டு சொல்லவேண்டாம். நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) எங்களுடைய கட்சியினுடைய உறுப்பினர் ஒரு கருத்தை இங்கே வெளியிட்டார். (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் கொஞ்சம் அமைதியாக இருங்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2007 மே 7]

**திரு. டி. சுதர்சனம்:** ஒரு கருத்தை இங்கே வெளியிட்டார்கள். அந்தக் கருத்தின்மீது உடன்பாடு இல்லாவிட்டால் எதிர்க்கட்சித் துணைத் தலைவரோ அல்லது கொறடாவோ எழுந்து அவர்களுடைய ஆட்சேபணையைத் தெரிவிக்கலாம். ஆட்சேபணையைத் தெரிவிப்பதிலே எங்களுக்கு ஆட்சேபணை ஒன்றும் இல்லை. ஆனால், அவர்கள் எந்தக் கட்சியில் இருந்தார்கள்-அண்ணா தி.மு.க.-வில் இருந்தார்களா, எங்கே இருந்தார்கள் என்பதுபற்றி அந்தக் கவலை மாண்புமிகு அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களுக்குத் தேவையில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தனிப்பட்ட முறையில் குற்றச்சாட்டு யார் மேலேயும், யாரும் சொல்ல வேண்டாம்.

**திரு. டி. சுதர்சனம்:** தேவையில்லாத கருத்துகளை இங்கே கூறுவதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். நேற்றைக்குக்கூட நான் சொன்னேன் எங்களுடைய உறுப்பினர்கள் பேசுகின்றபோது இங்கே இருக்கின்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூச்சல் போட்டுக் குழப்பம் விளைவிக்கிறார்கள். (குறுக்கீடுகள்) அதனாலே அவர்கள் பேசுகின்றபோது நாங்களும் கூச்சல் போடுவோம் என்று சொன்னோம். (குறுக்கீடுகள்)

*பிற்பகல் 12-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. செங்கோட்டையன், உட்காருங்கள். உறுப்பினர் சொல்லட்டும். அவருடைய கருத்தைச் சொல்லி முடிக்கட்டும்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சி உறுப்பினர் அவர்கள் ** (குறுக்கீடு) யார் என்று பெயரைச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** அவர் பெயரைச் சொன்னார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் . . .

**திரு. டி. சுதர்சனம்:** ** என்பது வேறு விஷயம். ** என்பதை அவர் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) ஆனால், இவர்களே எழுந்து, இவர்களே ஏதோ ** மற்ற . . . (குறுக்கீடுகள்)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விடியல் சேகர், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது யாருடைய பெயரையும் குறிப்பிடாமல்தான் சொன்னார். மூளி என்று சொன்னவுடன் காதைத் தொட்டுப் பார்த்துக்கொண்டால் அது யாருடைய குற்றம்? (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் நீண்ட நாட்களுக்கு முன்னாலே எங்கள் கட்சிக்கு வந்துவிட்டார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்தக் குறிப்பைப் பார்க்கிறேன். அதிலே யாருடைய பெயராவது, particular-ஆக, குறிப்பிடப் பட்டிருக்கிறதா என்று பார்க்கிறேன்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதிலே பெயர் குறிப்பிட்டு இருந்தது என்றால் அதைப் பார்த்துவிடுகிறேன்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நண்பர் கோபாலன் அவர்கள் காங்கிரஸ் கட்சியிலே, எங்கள் சின்னத்திலே போட்டியிட்டு வெற்றி பெற்றிருக்கிறார். நீண்ட நாட்களுக்கு முன்னாலே மாவட்டக் காங்கிரஸ் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கிறார். ஆனால், எங்கள் கட்சியிலே, I.N.T.U.C.-இலே இன்றைக்கும் துணைத் தலைவராக இருக்கின்ற ஒருவருக்கு (குறுக்கீடுகள்) நீங்கள் உங்கள் சின்னம் கொடுத்து, அவரைச் சட்டமன்ற உறுப்பினராக்கி இன்று வரை, இந்த நிமிடம் வரை எங்களுடைய I.N.T.U.C. கட்சியிலே துணைத் தலைவராக இருக்கின்ற சின்னசாமி அவர்களை (குறுக்கீடுகள்) இப்போதும் வைத்திருப்பது எந்த விதத்திலே நியாயம் இது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள், உட்காருங்கள், (குறுக்கீடுகள்) உட்காருங்கள், (குறுக்கீடுகள்) சரி, சொல்லுங்கள், சொல்லுங்கள்.





**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சின்னப்பனைப் பற்றிப் பேசினார்கள். (குறுக்கீடு) சின்னசாமியைப் பற்றிப் பேசினார்கள். அதேபோல இஸ்லாமியப் பெருமக்கள் சார்பாக வெற்றி பெற்றிருக்கிறவர் அங்கே அமர்ந்துகொண்டிருக்கிறார். அதற்கு இவர் என்ன பதில் சொல்லப் போகிறார்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன், அவர் சின்னசாமி என்று பெயரைச் சொல்லவில்லை. நீங்கள்தான், சின்னசாமிதான் அந்த உறுப்பினர் என்று காண்பிக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) No, no. அவர் சின்னசாமி என்று பெயரைச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்)

**திரு. கோ. அரி:** Sir, Speaker Sir...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் நீங்கள்.

**திரு. கோ. அரி:** Sir, ஒரு நிமிடம், Sir ஒரு நிமிடம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர், என்ன சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள்.

**திரு. டி. ஜெயக்குமார்:** பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் யாரும் சத்தம் போடக்கூடாது. (குறுக்கீடு) அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ** இன்றைக்குப் பதிவாகியுள்ளது. எல்லோருக்கும் தெரியும். இப்போதுகூட எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ** (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2007 மே 7

**மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்:** இப்போது சமீபத்தில் கடந்த வாரத்தில் அங்கே அண்ணா நகர் என்ற பகுதியில் அங்கு ஒரு கூட்டம் நடத்துவதற்கு ஆள்சேர்க்க முடியாமல்...

**திரு. ஆர். சின்னசாமி:** ஆதாரம் இல்லாமல் சொல்லக்கூடாது. (குறுக்கீடு) இல்லை, அமைச்சர் எந்த ஆதாரத்தை வைத்துக்கொண்டு சொல்கிறார்?

**மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்:** அந்தப் பக்கம் வந்தவர்களைத் தடுத்து நிறுத்தினார்கள் என்பது அனைவருக்கும் தெரியும்.

**திரு. ஆர். சின்னசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, எந்த ஆதாரத்தை வைத்துக்கொண்டு சொல்கிறார் அவர்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர், திரு. ராமச்சந்திரன், உட்காருங்கள். திரு. சி. ஞானசேகரன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மற்றவர்கள் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் ஒன்றைச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) சொல்கிறேன். திரு. ஜெயக்குமார், நான் proceedings-ஐப் பார்த்துவிட்டு, அவர் பேசியதிலே என்ன இருக்கிறது என்பதைப் பார்த்துவிட்டு, நான் முடிவு சொல்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) கொண்டு வரச் சொல்லியிருக்கிறேன் நான். (குறுக்கீடுகள்) அவர் என்ன சொல்லியிருக்கிறார். (குறுக்கீடுகள்) சரி, இரண்டையுமே கொண்டு வரச் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடுகள்) இரண்டையும் கொண்டு வரச் சொல்லியிருக்கிறேன். நான் பார்த்துவிட்டு முடிவு சொல்கிறேன். திரு. அரி, சொல்கிறேன், கேளுங்கள். அதாவது, அந்தக் குறிப்பை எடுத்துவரச் சொல்லியிருக்கிறேன். நடவடிக்கைக் குறிப்பை எடுத்துவரச் சொல்லியிருக்கிறேன். அதிலே என்ன இருக்கிறது என்பதைப் படித்துப் பார்த்து நடவடிக்கை எடுக்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மற்ற எல்லோரும் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர், உரையைச் சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. போ. கோபாலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யாருடைய பெயரையும் நான் சொல்லவில்லை. சொல்லாமல் இருக்கும்போது ஏன் இப்படிச் சிலருக்கு வயிறு எரிகிறது என்று புரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நேரம் ஆகிவிட்டது உட்காருங்கள்.



2007 மே 7]

**திரு. போ. கோபாலன்:** இப்பொழுதுகூட சொல்வேன்; ஆணித்தரமாகச் சொல்வேன். ** (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சின்னசாமி, உட்காருங்கள் நீங்கள்.

**திரு. போ. கோபாலன்:** அது யாருடையது என்பதில் எனக்குக் கவலையில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சின்னசாமி, உட்காருங்கள் நீங்கள்.

**திரு. போ. கோபாலன்:** நான் சொல்ல வந்த கருத்தெல்லாம் நீலகிரி மாவட்டத்தில் இருக்கக்கூடிய ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) நடவடிக்கை எடுப்பேன்.

**திரு. போ. கோபாலன்:** தோட்டங்களை, சுற்றுலாத் தலங்களைப் பார்க்க வருகிறார்கள். சிலர் ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோபாலன், உரையை முடித்துவிட்டீர்களா? (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அடுத்த உறுப்பினர்...

**திரு. போ. கோபாலன்:** வாங்கிக் கொண்டேயிருக்கிறார்கள். அங்கே சுற்றுலாப் பயணிகள் பார்ப்பதற்காகவாவது சில இடங்களை வைத்தாக வேண்டும் என்பதற்காகத்தான் நான் சொல்லிக்கொண்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்)

பிற்பகல் 1-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் வி.பி. கலைராஜன். (குறுக்கீடு)

**திரு. போ. கோபாலன்:** ஊட்டியே காணாமல் போய்விடும் என்ற நிலைகூட ... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், கோபாலன். உங்கள் நேரம் முடிந்தது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. போ. கோபாலன்:** இன்னும் ஒரே நிமிடம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. உங்கள் உறுப்பினரைப் பேசச் சொல்லியாகிவிட்டது. (குறுக்கீடுகள்) அதைப் பார்த்துவிட்டு முடிவெடுக்கிறேன் என்று சொல்லியாகிவிட்டது. (குறுக்கீடுகள்) யாருக்கும் அனுமதியில்லை. திரு. கலைராஜன் பேசுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. வி.பி. கலைராஜன்:** வாழும் வள்ளல், (குறுக்கீடுகள்) வாழ்த்தப்படும் வரலாறு, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அவருக்கு மணி 12-43-க்குப் பேச அனுமதி கொடுக்கப்பட்டது. இப்போது ஒரு மணியாகிவிட்டது. (குறுக்கீடுகள்) இல்லை. பார்க்கலாம். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். குறுக்கீடு இருந்திருக்கிறது. குறுக்கீடு எல்லாம் சேர்த்துதான். குறுக்கீடு எல்லாம் அந்த உறுப்பினர் time-லேதான் எடுக்கப்படும்.

**திரு. வி.பி. கலைராஜன்:** வாழும் வள்ளல், வாழ்த்தப்படும் வரலாறு, வாடிய மக்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கலைராஜன், உங்களுக்கு 15 நிமிடங்கள்தான்.

**திரு. வி.பி. கலைராஜன்:** 20 நிமிடங்கள் என்று சொன்னீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியாது. 15 நிமிடங்கள்தான்.

**திரு. வி.பி. கலைராஜன்:** என்ன இவ்வளவு மோசமாக இருக்கிறது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியாது.

**திரு. வி.பி. கலைராஜன்:** வாடிய மக்கள் தேடி வரும் முன்னரே நாடிச் சென்று உதவுகிற நல்ல மனம் கொண்டவர், நாடாண்ட நல்லவர், நாளை நாட்டை ஆளப் போகிற வல்லவர். (மேசையைத் தட்டும் ஒலி) வலியவன் வாழ்வதும், எளியவன் ஏங்குவதும் எந்தக் காலத்திலும் அனுமதியேன் என்று இன்றுவரை எதிர்த்து அரசியல் பணியாற்றிக்கொண்டிருக்கிற வீராங்கனை அம்மா அவர்களை நான் வணங்குகிறேன். அதைப்போல, காலத்தைக் காட்டி . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Mike off பண்ணினால் நான் பேசிக்கொள்கிறேன். நீங்கள் ஏன் இவ்வாறு பண்ணுகிறீர்கள்? (குறுக்கீடுகள்) ஓய், ஓய் என்று அங்கே ஏன் கத்திக்கொண்டு இருக்கிறீர்கள். அமைதியாக இருங்கள்.

***திரு. வி.பி. கலைராஜன்:** இதுவரை காலத்தைக் கணக்கில் எடுக்காமல், நான் எழுந்தவுடன் காலத்தைக் காட்டி மிரட்டுகிற, ஆனால் பாசமிகு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய அருங்காட்சியகம் இருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்களுடைய அருங்காட்சியகத்திலே அவருடைய பேச்சு எப்படி ஒலிபரப்பப்படுகிறதோ, அதைப்போல இப்போதும் நாட்டு மக்களால் என்றென்றும் மறக்க முடியாமல் அவர்களுடைய இதயங்களிலே வாழ்ந்துகொண்டிருக்கின்ற புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய படங்களிலே வந்த நல்ல தத்துவப் பாடல்களை எல்லாம் அந்த அருங்காட்சியகத்திலே ஒலிபரப்ப வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, இப்போது தமிழுக்காகப் பாடுபட்டவர்கள், தமிழ் மொழிக்காகத் தியாகம் செய்தவர்களுக்கு எல்லாம் அரசின் சார்பாக விழா எடுக்கப்படுகிறது. அந்த அடிப்படையிலே பார்ப்பீர்களானால், உலகத்திலே ஒரு மொழிக்காகத் தங்கள் இன்னுயிரை ஈந்தவர்கள் மாணவர்கள் என்று சொன்னால், தமிழ்நாட்டு மாணவர்களுக்குத்தான் அந்தப் பெருமை இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், திராவிட இயக்கம் வளர்வதற்கு ஆணி வேராக, அடி உரமாக இருந்தவர்கள் நம்முடைய தமிழகத்து மாணவர்கள். அந்த மாணவர்களுக்காக ஜனவரி 25 ஆம் தேதி நாம் வீர வணக்கம் செலுத்துகிறோம். எப்படி இப்போது பாதுகாப்புப் படையிலே இருந்து உயிர் நீத்தவர்களுக்கு War Memorial இருக்கிறதோ, அதைப்போல நம் தமிழ் மொழிக்காக உயிர் நீத்த மொழிப் போர்த் தியாகிகளுக்கு ஒரு நினைவுச் சின்னம் சென்னையிலே, தலைநகரிலே உருவாக்கி, அரசே அவர்களுக்கு மரியாதை செலுத்துகிற வகையிலே அரசு விழா எடுக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல பட்டுக்கோட்டை அழகிரி அவர்கள் நடைப் பயணம் மேற்கொண்டு திராவிட இயக்கத்திற்காகக் கடுமையாக உழைத்தவர்கள். அவருடைய நினைவாகப் பட்டுக்கோட்டையிலே நினைவு அரங்கம் ஒன்று கட்ட வேண்டுமென்று நான் கடந்தமுறை கோரிக்கை வைத்தேன். அந்தக் கோரிக்கை அப்படியே இருக்கிறது. அதைப்போல...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கலைராஜன் அவர்கள் மொழிப் போர்த் தியாகிகளைப் பெருமைப்படுத்துகிற வகையிலே ஒரு நினைவுச் சின்னம் எழுப்பப்பட வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதை வரவேற்கிறேன். அவருடைய தமிழ் உணர்வைப் பாராட்டுகிறேன். ஆனால், கடந்த காலச் சம்பவம் ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அன்னைத் தமிழைக் காக்க, ஆதிக்க இந்தியை எதிர்த்து இந்திய அரசியல் சட்டத்தின் நகலைக் கொளுத்திவிட்டு, நாங்கள் எல்லாம் சிறைச்சாலைக்குச் சென்றோம். இங்கு அமர்ந்திருக்கின்ற பேராசிரியர், நான் உட்பட 10 சட்டமன்ற உறுப்பினர்களை, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் நகலை எரித்த காரணத்திற்காக, அந்தப் போராட்டத்தில் கலந்துகொண்ட காரணத்திற்காக, இந்தியை எதிர்த்து தமிழ் காக்க, அந்தப் போராட்டத்தில் கலந்துகொண்ட காரணத்திற்காக 10 சட்டமன்ற உறுப்பினர்களை, இதே சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டுவந்து எங்களைப் பதவி நீக்கம் செய்தவர்கள்தான் இப்போது மொழிப் போர்த் தியாகிகளைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், கால மாறுதலுக்கேற்ப அவர்களும் இந்த வழிக்கு வந்திருப்பதிலே நான் மகிழ்ச்சியடைகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். திரு. கலைராஜன், நீங்கள் பேசுங்கள்.

*பிற்பகல் 1-05*

**திரு. வி.பி. கலைராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்; இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை எரித்தோம் என்று அவர்கள் துணிவோடு சொல்லியிருந்தால்கூட நாங்கள் பாராட்டலாம். நாங்கள் கொளுத்தியது காதல் கடிதம் என்று சொன்னவர்கள்தான், இப்போது பேசுகிறார்கள், நெஞ்சுரம் இல்லாமல். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, நீங்கள் மற்ற subject-க்குள்ளே போங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** அப்படியென்றால், இதே இந்திய அரசியலமைப்புச் சட்ட எரிப்புப் போராட்டத்தில், காளிமுத்து போன்றவர்கள் எல்லாம் கலந்துகொண்டார்கள். அவர்கள் கொளுத்தியதும் காதல் கடிதமா? (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** அப்படிப்பட்ட காளிமுத்துமேலே நீங்கள் வழக்குத் தொடர்ந்தீர்கள்; அது நியாயம்தானா? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. அமைச்சர், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. செங்கோட்டையன், உட்காருங்கள்.



**திரு. வி.பி. கலைராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு முதலமைச்சராக இருக்கின்றவர்கள், தன்னுடைய 'நெஞ்சுக்கு நீதி' மூன்றாவது பாகத்திலே, இப்போது பேசிக்கொண்டிருக்கிற என்னைப்பற்றி, நான் சட்டக் கல்லூரியிலே படிக்கிறபோது, தமிழ் மொழிக்காகத் தீக்குளிக்க முயன்றவர் என்று 76-வது அத்தியாயத்தில் பாராட்டி எழுதியிருக்கிறார் என்பதையும் நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள், மொழிக்காக எந்தத் தியாகத்தையும் செய்வதற்குத் தயங்கமாட்டோம் என்பதை நான் இங்கே பெருமையோடு கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல, 'கங்கைகொண்டான், கடாரம் வென்றான்' என்றெல்லாம் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொழிப் போராட்ட வீரர்களைப்பற்றி இங்கே பெருமையோடு, புகழோடு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கலைராஜன் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது, கடந்த காலத்தில் அப்பொழுது நான் சென்னை மாநகராட்சியினுடைய மேயர் பொறுப்பினை ஏற்றிருந்த நேரத்திலே, மாநகராட்சியின் சார்பிலே வேலைவாய்ப்பை வழங்கக்கூடிய ஒரு நிலையை ஏற்படுத்தி, சுதந்திரப் போராட்டத் தியாகிகளுடைய வாரிசுதாரர்களுக்கு, அதேபோல மொழிப் போராட்ட வீரர்களின் வாரிசுதாரர்களுக்கெல்லாம் வேலைவாய்ப்பை அரசினுடைய அனுமதியைப் பெற்று வழங்கினோம். ஆனால், கடந்த முறை நீங்கள் ஆட்சிக்கு வந்தவுடன், அந்த உத்தரவையே இரத்துச் செய்து, அந்தப் பெருமையை நீங்கள் தேடிக்கொண்டீர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும் உறுப்பினருடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

**திரு. வி.பி. கலைராஜன்:** அந்த மொழிப் போராட்ட வீரர்கள் பெயரிலே, தவறானவர்கள் பதவி பெற்றார்கள் என்பதற்காகத்தான், அது அப்போது நிறுத்தப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** என்ன தவறு என்பதைச் சொல்லமுடியுமா? எந்தத் தவறுமில்லாமல், அதற்கென்று ஒரு குழுவை அமைத்து, மொழிப் போராட்ட வீரர்களுடைய வாரிசுதாரர்களுக்கு

[திரு. மு.க. ஸ்டாலின்] [2007 மே 7

மட்டுமல்ல; சுதந்திரப் போராட்டத் தியாகிகளின் வாரிசுதாரர்களுக்குக்கூட அந்த வேலைவாய்ப்பை வழங்கியிருக்கிறோம். அவை அத்தனையையும் இரத்துச் செய்தது உங்களுடைய ஆட்சி என்பதை நான் மீண்டும் நினைவுபடுத்துகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. வி.பி. கலைராஜன்:** சரி, மொழிப் போராட்டத்தைப்பற்றிப் பேசுகிறபோது, வாதம் திசை திரும்பிச் செல்லவேண்டாமென்று நான் அதோடு ஒதுங்கி ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்குத்தான் நான் அப்பொழுதே சொன்னேன்; 'நீங்கள் subject-க்குள் பேசுங்கள், subject-க்குள் பேசுங்கள்' என்று சொன்னேன்.

**திரு. வி.பி. கலைராஜன்:** இல்லை. வாதம், பிரதிவாதம் என்றால் அப்படியே போய்க்கொண்டிருக்கும். எனக்கு நீங்கள் 15 நிமிடங்கள் கொடுத்திருக்கிறீர்கள். 5 நிமிடங்கள் கூடுதலாகக் கொடுத்துவிடுங்கள். ஏனென்றால், குறுக்கீடு அதிகம் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு 15 நிமிடங்கள்தான். அதிலே கூடுதலாகக் கிடையாது.

**திரு. வி.பி. கலைராஜன்:** இது என்ன? 'மாண்புமிகு அமைச்சர்', 'மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்'; இரண்டு பேருமே 'மாண்புமிகு'-தான். எனக்கு extra-வாக 5 நிமிடங்கள் கொடுத்துவிடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்கு வாய்ப்பே இல்லை. 15 நிமிடங்களில் உரையை முடியுங்கள்.

**திரு. வி.பி. கலைராஜன்:** அதைப்போல, 'கங்கைகொண்டான், கடாரம் வென்றான்' என்றெல்லாம் பெருமைக்குரியவர்கள் நம்முடைய மன்னர்கள். அதிலே இன்னும் சொல்லப்போனால், அன்றைக்குக் கல்லணையைக் கட்டினான் கரிகால் சோழன். 1,500 ஆண்டுகளுக்கும் மேலாகிவிட்டது. இன்றுவரையில், அது எந்தச் சேதாரத்திற்கும் ஆட்படாமல் இருக்கிறது. அந்த அளவிற்குத் தொழில்நுட்ப விவரத்தோடு இருந்தவர்கள், நம்முடைய தமிழ் மன்னர்கள். அதைப் பார்த்துத்தான், எகிப்திலேகூட அணை கட்டியதாக வரலாறு சொல்கிறது. ஆனால், இப்பொழுது நம்முடைய பெரியாறு அணை கட்டி நூறு ஆண்டுகள் ஆகவில்லை. அதற்குள் சேதம் விளைந்துவிட்டதாகச் சொல்கிறார்கள்.



2007 மே 7] [திரு. வி.பி. கலைராஜன்]

அதைப்போல, உள்ளாட்சியை நல்ல விதத்திலே தன்னுடைய ஆட்சிக் காலத்திலே நடத்தியவர்தான் மன்னர் இராஜராஜ சோழன். அவருடைய ஆட்சிக் காலத்தில், 3,000 ஆண்டுகளுக்கு முன்னாலே தமிழர்கள் பல நாடுகளோடு வாணிபத் தொடர்புகளையெல்லாம் வைத்திருந்தார்கள். இப்போது அப்படிப்பட்ட சோழ மன்னர்கள் எங்கு வாழ்ந்தார்கள் என்பதற்கு அடையாளமாக எந்த அரண்மனையும் இல்லை. இன்னும் சொல்லப்போனால், பிரகதீஸ்வரர் கோயில் இருக்கிறது. அங்கே மன்னன் வாழ்ந்தானா என்பது நமக்குத் தெரியவில்லை. நான் எதற்காக அதைச் சுட்டிக்காட்டுகிறேன் என்று சொன்னால், தஞ்சைக்குப் பக்கத்திலேயிருக்கிற வல்லத்திலே ஒரு அரண்மனை இருந்ததாகவும், அந்த அரண்மனை ஒரு போரிலே தகர்த்தெறியப்பட்டதாகவும் சொல்கிறார்கள்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னாலே, இராஜராஜ சோழனுடைய உடல் இங்குதான் புதைக்கப்பட்டது என்று சொல்லி, ஒரு வாரப் பத்திரிகையிலே வந்திருக்கிறது. எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசாங்கத்தின் சார்பாக, அந்தத் தமிழ் மன்னன் இராஜராஜ சோழன் அல்லது அவருடைய முன்னோர்கள், அவர்களுடைய உடல் எங்கே புதைக்கப்பட்டிருக்கிறது என்பதை ஆய்ந்து, ஆயிரம் ஆண்டுகள் கடந்து விட்டன; இப்போது நீங்கள் ய்யவில்லை என்று சொன்னால், எதிர்காலச் சந்ததியினருக்கு பர்களுடைய புகழ் தெரியாமல் போய்விடும். எனவே, அவர்களுடைய ல்களை அகழ்வாராய்ச்சி மூலம் கண்டுபிடித்து, அந்த இராஜராஜ ழனுக்குப் பெருமை சேர்க்கிறவிதத்திலே, ஒரு நினைவகத்தை கள் கட்டவேண்டுமென்று நான் உங்களைப் பணிவோடு டுக்கொள்கிறேன்.

அதைப்போல, டாக்டர் அம்பேத்கர் அவர்கள் ஒரு சட்ட மேதை. ருடைய பெயரிலே ஒரு திரைப்படம் எடுத்திருக்கிறார்கள். அதற்கு பிங் குரல் கொடுப்பதற்காக, 10 இலட்சம் ரூபாயை அரசாங்கம் ங்கியதாக நினைவிருக்கிறது. அந்தத் திரைப்படம் முழுவதுமாக க்கப்பட்டு வெளிவருமா? அப்படி வெளிவருவதற்கு இந்த அரசு ன செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களோடு சேர்ந்து திரப் போராட்டத்திலே தோளோடு தோள் நின்று, 'களமா, வா, சந்திக்கத் தயார்' என்று மிகக் கடுமையாக சொன்னவர்தான் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள். அவர்களுடைய பெயரிலே இப்போது நூற்றாண்டு விழா கொண்டாடப்படவிருக்கிறது.

[திரு. வி.பி. கலைராஜன்] [2007 மே 7

அந்த நூற்றாண்டு விழாவிற்கென்று 50 இலட்சம் ரூபாயை இந்த அரசு ஒதுக்கியிருக்கிறது. அந்த 50 இலட்சம் ரூபாய் போதாது என்று சொல்லிக்கொள்வதோடு, அவருடைய விழாவை பசும்பொன் என்கிற ஒரு சிறிய கிராமத்தில் மட்டும் கொண்டாடாமல், மாநிலம் முழுவதும் தேசியத்தையும், தெய்வீகத்தையும் இரண்டு கண்களாக நினைத்த அந்த மாபெரும் தலைவருக்கு நீங்கள் தமிழகம் முழுவதும் அவருடைய நூற்றாண்டு விழாவைக் கொண்டாட வேண்டுமென்று நான் ஒரு கோரிக்கை வைக்கிறேன்.

பிற்பகல் 1-10

அதேபோல, நேற்றைக்குப் பத்திரிகையிலே படித்தேன். டெல்லியிலே இருக்கிற தமிழ்நாடு இல்லத்திலே ஐ.ஏ.எஸ். படிக்கச் சென்ற தமிழகத்து மாணவர்களை அங்கிருந்த யாரோ, திருமணத்திற்காக வட நாட்டுக்காரர்களுடைய திருமணத்திலே கலந்துகொள்ள வந்தவர்களையெல்லாம் தங்கவைப்பதற்காக இரவோடு இரவாக விரட்டியடிக்கப்பட்டதாகச் செய்தி வந்திருக்கிறது. அந்தச் செய்தி, செய்தியாக இருக்காது. நிச்சயமாக உண்மையாகத்தான் இருக்கும். ஏன் இதைச் சொல்கிறேன் என்று சொன்னால், பொதுக் கணக்குக் குழு சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய தலைமையிலே நாங்களெல்லாம், எங்கள் கட்சி, தி.மு.க., உறுப்பினர்கள் அனைவரும் டெல்லிக்குச் சென்றிருந்தோம். எங்களைப் பார்ப்பதற்கு நாதிகூடக் கிடையாது. யாரும் எங்களை வந்து சந்திக்கக்கூட இல்லை. இரண்டு நாட்கள் நாங்கள் காத்திருந்தோம். இரண்டு நாட்கள் காத்திருந்தது மட்டுமல்ல. எங்களுக்கு அறைகூட அங்கே தமிழ்நாடு இல்லத்திலே ஒதுக்கப்படவில்லை. ஒதுக்கப்பட்ட அறைகளெல்லாம் வடக்கத்தியக்காரர்களுக்காகத்தான் இருந்தது. பேரறிஞர் அண்ணா அவர்கள் "வடக்கத்தவர்கள் நல்லவர்களும் அல்ல, நம்மவர்களும் அல்ல" என்றெல்லாம் சொல்லியிருக்கிறார். அந்த அண்ணாவின் பெயரைச் சொல்லுகிற இந்த ஆட்சிக் காலத்திலேதான் அங்கே டெல்லியிலே, தமிழ்நாடு இல்லத்திலே தமிழர்களுக்குத் தங்குவதற்கு இடம் இல்லை. ஆக, எங்களுடன் வந்த, பொதுக் கணக்குக் குழுவிலே வந்தவர்கள் அத்தனைபேர்களும் நன்றாக அறிவார்கள். அப்போது சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்து நாங்கள் எச்சரிக்கை செய்தோம். அவர்களும் அங்கே மன்னிப்புக் கேட்டார்கள். எனவே சொல்கிறேன். நேற்றைக்கும் ஒரு சம்பவம் நடந்திருக்கிறது. அங்கே ஆந்திராவிலே தங்குகிறவர்கள் ஆந்திர பவனுக்குப் போகிறவர்கள், ஆந்திராகாரர்களுக்கு அங்கே அந்த பவனத்தில் இடம் ஒதுக்கப்படுகிறது.



2007 மே 7] [திரு. வி.பி. கலைராஜன்]

தமிழ்நாட்டுக்காரர்கள்தான் அங்கே தங்குவதற்கு இடம் இல்லாமல் அலைந்துகொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எனவே, (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. வி.பி. கலைராஜன்:** நான் சொல்வது ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். அவர் பேசி முடிக்கட்டும். அதற்குப் பிறகு சொல்லுங்கள், உட்காருங்கள்.

**திரு. வி.பி. கலைராஜன்**: நான் சொல்வது, பேரறிஞர் அண்ணா சொன்னது, பாவம் அவர் காங்கிரசுக்குப் புதிதாக வந்திருக்கிறார். அவருக்குத் தெரியாது. அதே அண்ணாதான் ** என்று சொன்னார். இதெல்லாம் சொல்லக்கூடாதுதான். வேண்டாம். நான் திராவிட இயக்கம் சார்பாகப் பேசுகிறேன்.

இன்னும் ஒன்றைச் சொல்கிறேன். தமிழ்நாடு இல்லம் வட இந்திய நாட்டினுடைய ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பொறுப்பில் இருக்கிற காரணத்தினால்தான் தமிழர்களுடைய உணர்வு அங்கே மதிக்கப்படவில்லை என்பதை நான் இங்கே வைக்கிறேன். இதை ஏன் சொல்கிறேன் என்று சொன்னால் இரண்டு அதிகாரிகளும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் அல்ல. இன்னும் சொல்லப்போனால், தமிழ்நாடு இல்லத்திற்குச் சொந்தமான வாகனங்கள்கூட அந்த அதிகாரிகளுடைய வீட்டுக்காகப் பயன்படுகிற ? வாகனங்களில், ஒரு வாகனம்கூட எங்களுடைய பொதுக் கணக்குக் குழு அங்கே போனபோது உபயோகப்படுத்துவதற்குத் தரப்படவில்லை என்பதை இங்கே நான் உங்களுக்குத் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது என்னுடைய தொகுதிப் பிரச்சினைகளுக்கு வருகிறேன். இப்போது இரண்டு மூன்று நாட்களாக தி.நகர் தொகுதியைப் பொறுத்தவரையில் சூதாட்ட விடுதிகள், அதேபோல வீடியோ கேம்ஸ், அதேபோல ஒரு நம்பர் லாட்டரி, இவையெல்லாம் மிக அதிகமாக இருந்தன. இதே பொதுக் கணக்குக் குழுக் கூட்டத்திற்கு உள் துறைச் செயலாளரும், டி.ஜி.பி. அவர்களும் வந்திருந்தார்கள். கடந்த மாதம் அவர்களிடத்திலே அப்போது நான் கோரிக்கை வைத்தேன். இரண்டு நாட்களில் நடவடிக்கை எடுத்தார்கள். அதற்குப் பின்னாலே மீண்டும் அந்த விடுதிகள் எல்லாம் திறக்கப்பட்டன. இப்பொழுது மீண்டும்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அடைக்கப்பட்டிருக்கின்றன. நான் அரசாங்கத்தின்மீது குற்றச்சாட்டாக இதைச் சொல்லவில்லை. அவர்களிடம் கேட்கிறபோது காவல் துறை அதிகாரிகள் என்ன சொல்கிறார்கள் என்று சொன்னால்—நிரந்தரமாக வருங்காலச் சந்ததியினர் எந்தவிதமான சீரழிவிற்கும் ஆளாக்கப்படக்கூடாது என்பதற்காகத்தான் அதை நான் சொல்கிறேன்—நீதிமன்றத்தில் தடையாணை வாங்கிக் கொண்டு அவர்களெல்லாம் நடத்துகிறார்கள் என்று சொல்கிறார்கள். தடையாணையை உண்மையிலேயே அவர்கள் வாங்கியிருந்தால் அந்தத் தடையாணையை நீக்கி, சூதாட்ட விடுதிகளையெல்லாம் இங்கே சென்னையிலே இல்லாமல் இருப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, விளம்பர போர்டுகள் வைக்கப்பட்டிருக்கின்றன. எங்கு பார்த்தாலும் விளம்பர போர்டுகள். நான் அரசியல் கட்சிகள் வைக்கிற விளம்பர போர்டுகளைச் சொல்லவில்லை. அவர்கள் வைப்பார்கள், எடுத்து விடுவார்கள். விளம்பர போர்டுகளில் எத்தனை விளம்பர போர்டுகள் சென்னையிலே அனுமதி பெற்று வைக்கப்பட்டிருக்கின்றன? அதிலேயும் உச்ச நீதிமன்றத் தடையாணை பெற்று வைத்திருப்பதாக எல்லோரும் சொல்கிறார்கள். ஆக, எத்தனை விளம்பர போர்டுகள் இங்கே அனுமதி பெற்று வைக்கப்பட்டிருக்கின்றன? அனுமதி இல்லாமல் விளம்பர போர்டுகள் வைத்தவர்கள்மீது எல்லாம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த அரசைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, திரைப்படத் தொழிலாளர்கள் அதிகம் வசிக்கிற தொகுதி என்னுடைய தொகுதி. கடந்த காலத்திலே எங்களுடைய அம்மா முதலமைச்சராக இருந்தபோது திரைப்படத் தொழிலாளர்களுக்கெல்லாம் வீட்டுமனை கொடுப்பதாக ஒரு proposal இருந்தது. அதற்குப் பின்னால் ஆட்சி மாற்றம் வந்துவிட்டது. இப்பொழுது அந்தத் தொழிலாளர்களுக்கு இந்த ஆட்சியிலே வீட்டுமனை வழங்கப்படுமா என்பதை நான் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோல பெரியார் சிலை. தந்தை பெரியார் அவர்களுடைய சிலை பல இடங்களிலே சில தீய சக்திகளால் உடைக்கப்படுகின்றன. பகுத்தறிவுப் பகலவன், நாம் போற்றுகிற, திராவிட இயக்கத்திற்கே வித்திட்டவர் தந்தை பெரியார். அவரை மதிப்பதிலே எந்த மாற்றுக் கருத்தும் கிடையாது. அவருடைய சிலையை யாரோ உடைக்கிறார்கள்



என்பதற்காக என்னுடைய தொகுதியிலே இருக்கிற—பிராமண சமுதாயம் வாழுகிற தொகுதி என்னுடைய தொகுதி. அந்தத் தொகுதியில் உள்ள பிராமணர்களின்மீது அயோத்தியா மண்டபத்தின்மீது வெடிகுண்டு வீசப்பட்டது என்பது உங்களுக்கு எல்லாம் தெரியும். அதற்குப் பின்னாலே ஆங்காங்கே இருக்கிற பிராமணர்கள் சிலர் தாக்கப்பட்டார்கள்; யாரோ செய்கிற தவறுக்கு அப்பாவி பிராமணர்கள் தாக்கப்படுகிறார்கள். இந்த அரசு சட்டம்-ஒழுங்கைத் தன்னுடைய கரத்திலே வைத்திருக்கிற காரணத்தினால், இதுபோன்ற நடவடிக்கைகளுக்கெல்லாம், உடனடியாக நடவடிக்கை எடுத்து தண்டிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-15*

அதைப்போல எங்களுடைய தொகுதியிலே வெண்ணெய் கிடைக்கவில்லை; நெய் கிடைக்கவில்லை. நாமெல்லாம் vegetarian கிடையாது. நாமெல்லாம் N.V. எதை வேண்டுமானாலும் சாப்பிடலாம். அங்கே vegetarian people பிராமணர்கள் அதிகம் வசிக்கிறார்கள், என்ன வெண்ணெய் கிடைக்கவில்லை; நெய் கிடைக்கவில்லை. என்ன காரணம் என்றும் தெரியவில்லை. மொத்தமாக யாருக்காவது விற்றுவிட்டீர்களா அல்லது வேறு மாநிலத்திற்குப் போய்விட்டதா; இல்லை மாடுகளே தமிழ்நாட்டிலே இல்லையா? ஏன் என்று தெரியவில்லை.

அதைப்போல ஆவின் Ice Cream அருமையாக இருக்கும். அரசாங்க நிறுவனத்தின் Ice Cream வாங்கி சாப்பிட்டால் உடம்புக்குக் கெடுதல் இல்லை என்று நினைத்துக்கொண்டிருக்கிறோம். Ice Cream-மும் இப்போது கிடைக்கவில்லை. கோடைக்காலம் வந்துவிட்டது. எனவே, Ice Cream கிடைப்பதற்கும் நீங்கள் வழிவகை செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு (குறுக்கீடு) Ice Fruit என்று நாங்கள் சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள்தான் ஒருமுறை Ice Fruit பற்றி பேசினார்கள். காங்கிரஸ் உறுப்பினர்தான் Ice Fruit பற்றி பேசினார்கள். நாங்கள் Ice Cream பற்றி பேசுகிறோம்.

அதைப்போல இந்தச் சட்டமன்றத்தினுடைய உறுப்பினர் என்கின்ற அடிப்படையிலே கடந்த மாநகராட்சித் தேர்தலிலே நான் தாக்கப்பட்டேன். அது முடிந்த கதை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரம் முடிந்து விட்டது.

**திரு. வி.பி. கலைராஜன்:** ஒரு நிமிடம், ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரம் முடிந்து விட்டது.

**திரு. வி.பி. கலைராஜன்:** இது கில்லட்டினா, நேரம் கொடுங்கள். சட்டமன்றத்திலே் இருக்கிற உறுப்பினரான எனக்கும், ஒரு அமைச்சருக்கும் இங்கே வாக்குவாதம். அது எங்களுக்குள் நடந்த விஷயம். (குறுக்கீடு) விட்டுவிடுங்கள் என்று சொல்ல முடியாது. உங்கள் வீடுகளை அடித்தால் விட்டுவிடுவீர்களா, நீங்கள்? சும்மா இருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கலைராஜன்.

**திரு. வி.பி. கலைராஜன்:** அதிலே என்மீது குற்றம் இருந்தால் நீங்கள் நடவடிக்கை எடுக்கிறீர்கள். இந்த அவைக்குள் நடந்துள்ள விஷயம். அங்கே இரவோடு இரவாக எனது வீடு தாக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார்கள். இன்றைக்குவரை ஒருவர்மீதுகூட நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. எனக்கு இருக்கிற சந்தேகம் எல்லாம் நீங்கள் குற்றவாளிகளைத் தெரிந்தே விட்டுவிட்டீர்களா? இந்த சபையினுடைய உறுப்பினருக்குப் பாதுகாப்பே இல்லையா? இப்போது நாங்கள் தாக்கப்பட்டால், காலம் மாறி நாளைக்கு நீங்கள் தாக்கப்பட்டாலும் இதே நிலைதான் ஏற்படும். சட்டம்-ஒழுங்கு இப்போது இப்படித்தான் பாதுகாக்கப்படுகிறது. ஆளுகிறவர்களுக்கு அடிமைகள் இல்லை நாங்கள். நாங்களும் சட்டமன்ற உறுப்பினர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசுகின்ற அந்தப் பேச்சில் இருக்கக்கூடிய உணர்வுகளை நான் புரிந்து சொல்கிறேன். எந்தக் கட்சி உறுப்பினருடைய வீடுகள் தாக்கப்பட்டாலும் இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்றுதான் முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். சில நேரங்களிலே சமுதாய விரோதிகள் சில இடங்களிலே தாக்கிவிட்டு எங்கேயோ மறைந்துவிடுகிறார்கள். உதாரணத்திற்குச் சொல்கிறேன், கும்மிடிப்பூண்டி அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினரைக் கொன்றவரைக் கண்டுபிடிப்பதற்கே ஒன்றரை ஆண்டுகாலம் ஆயிற்று, உங்களுடைய ஆட்சியிலே, அப்படித் தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும்



நடவடிக்கை எடுக்கப்படும், குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள் என்று சொன்னதற்குப் பிறகு நோக்கம் கற்பிப்பது நல்லது அல்ல. அவருடைய வீட்டைத் தாக்கியவர்கள் யாராக இருந்தாலும் நிச்சயமாக இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

**திரு. வி.பி. கலைராஜன்:** நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 18 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. வி.பி. கலைராஜன்:** அடுத்து, பொதுவான கோரிக்கை. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருந்தபொழுது சொன்னார்கள். ஏனென்று சொன்னால் இரண்டு நாட்களுக்கு முன்னாலே மறைந்த தலைவர் கக்கன் அவர்களுடைய மகன் மனநோயால் பாதிக்கப்பட்டு பத்தாண்டுகளாகச் சிகிச்சை பெற்று வருகிறார் என்று சொன்னார்கள். அது பரிதாபப்படக்கூடிய நிகழ்ச்சியாக இருக்கிறது. ஏன் இதைச் சொல்கிறேன் என்று சொன்னால் நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருந்தபொழுது திருச்சியையோ அல்லது தஞ்சையையோ மையமாக வைத்து ஒரு மனநலக் காப்பக மருத்துவமனை அங்கே திறக்கப்படும் என்று சொன்னார்கள். அது அப்படியே இருக்கிறதா அல்லது கைவிடப்பட்டுவிட்டதா என்னவென்று தெரியவில்லை. இன்றைக்கு பேய், பிசாசு என்று சொல்லி அங்கே இருக்கிற மக்கள் எல்லாம் மனநலம் பாதிக்கப்பட்டதற்குப் பின்னால் என்ன செய்வது என்று தெரியாமல் பூசாரிகளைச் சென்று பார்க்கிற காரணத்தினால்தான் போலி சாமியார்கள் அதிகமாக உருவாகிறார்கள். ஏர்வாடி போன்ற பகுதிகளிலே எல்லாம் இப்போது அப்பாவிகள் அடித்து நொறுக்கப்படுகிறார்கள் என்று சொன்னால் அதற்குக் காரணம் பகுத்தறிவுச் சிந்தனை இல்லை. ஏன், இந்த வியாதி வருகிறது, எதற்காக இந்த வியாதி வருகிறது என்று சிந்திப்பதில்லை. மூடநம்பிக்கைக்கு அங்கே அடிபணிகிறார்கள். பாதிக்கப்பட்டவர்கள் கிட்டத்தட்ட 800 கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால் இருந்தெல்லாம் இங்கே சென்னைக்கு வருவதென்றால் நிச்சயமாக முடியாது. அப்படிப்பட்ட நோயாளிகள் எல்லாம் இன்றைய படித்த இளம் தலைமுறைகள்தான். அவர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லை போன்ற பல்வேறு காரணங்களால்தான் இப்போது அப்படிப்பட்ட நிலைக்கு ஆளாக்கப்படுகிறார்கள். எனவே, ஒரு மருத்துவமனை, மனநலக் காப்பகம் தஞ்சை மெடிக்கல் கல்லூரி இருக்கிற காரணத்தினால் அங்கே அமைக்க வேண்டுமென்று நான் இந்த அரசைக் கேட்டு, பேச வாய்ப்புத் தந்ததற்கு நன்றி கூறுவதோடு, மீண்டும் எங்கள் அம்மா அவர்களுக்கு

வாய்ப்புத் தந்ததற்காக ஆயிரம் கோடி நன்றிகளைக் கூறி முடிக்கின்றேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 1-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி டி. யசோதா, என்ன? சொல்லுங்கள்.

***திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்றபோது, வட இந்தியர்கள் நல்லவர்கள் அல்ல என்று கூறுகின்றார். **ஆனால்,** இவருடைய தலைமையோ, வடக்கே உத்தரப்பிரதேச மாநிலத்திலே நடைபெறுகின்ற தேர்தல் பிரச்சாரத்திற்குச் சென்று, ** முலாயம் சிங் யாதவிற்கு ஓட்டுப்போட வேண்டுமென்று, நல்லவர்களாக இல்லாத அந்த மக்களைப் பார்த்துக் கேட்கிறார். இந்த முரண்பாடு, இவருடைய தலைமைக்கும் இவருக்கும் ஏன் என்று உங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. செங்கோட்டையன், என்ன? நீங்கள் என்ன சொல்லப்போகிறீர்கள்?

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர், வட மாநிலங்களில் இருக்கிற தவறான சில குற்றவாளிகளைப்பற்றிச் சொன்னாரேதவிர, தேர்தலைப்பற்றிச் சொல்லவில்லை. தேர்தலில் யார் வேண்டுமானாலும், எந்த மாநிலத்தில் வேண்டுமென்றாலும் அவர்கள் பிரச்சாரம் செய்யலாம் என்று இந்திய அரசமைப்புச் சட்டத்திலே இருக்கிறது. ஆகவே, அவர்கள் பிரச்சாரம் செய்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது சொன்னது, தமிழ்நாடு இல்லத்திலே வட மாநிலத்தைச் சேர்ந்த அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்கள் தமிழர்களை மதிப்பதில்லை என்ற பொருள்படத்தான் பேசினார். ஆனால், பல ஆண்டுகளாக தமிழ்நாடு இல்லத்தில் வடநாட்டைச் சேர்ந்தவர்களைத்தான் நாம்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



நியமிக்கிறோம். ஏனென்று கேட்டால், அங்கே அவர்களுடைய வீடும், குடும்பமும் இருக்கின்ற காரணத்தினாலே அ.தி.மு.க. ஆட்சியாக இருந்தாலும், தி.மு.க. ஆட்சியாக இருந்தாலும், வடநாட்டைச் சேர்ந்த அதிகாரிகள், எங்களுக்குத் தமிழ்நாடு இல்லத்திலே பணி மாற்றம் செய்து தாருங்கள் என்று கேட்கிறார்கள். அதற்காகக் கொடுக்கிறோம். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினருடைய உணர்வுகளை இந்தச் சட்டசபையிலே பேசியதன்மூலமாக, அங்கேயிருக்கின்ற அதிகாரிகள் அப்படிச் செய்திருப்பார்களானால், எதிர்காலத்திலே, இனிமேல் செய்யாமல் பார்த்துக்கொள்வதற்கு இந்த அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** என்று அண்ணா சொன்னதாக இங்கே சொன்ன வார்த்தையைத் தயவு செய்து அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்று சொன்ன வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

## 6. அறிவிப்பு

### 11-5-2007 அன்று "சட்டமன்றத்தில் கலைஞர் பொன் விழா" நிகழ்ச்சியில் மேதகு ஆளுநர் அவர்கள் பாராட்டுரை வழங்குதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று 7-5-2007 அன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவிற்கிணங்க, 11-5-2007 அன்று நடைபெறவிருக்கும் "சட்டமன்றத்தில் கலைஞர் பொன் விழா" நிகழ்ச்சியில், மேதகு ஆளுநர் அவர்களும், சட்டமன்றக் கட்சித் தலைவர்களும் பாராட்டுரை வழங்க இருக்கிறார்கள். அன்றையதினம் ஏனைய அரசினர் அலுவல்கள் எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2007 மே 7

## 4. மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 29 – சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை)**

**(ஆ) கோரிக்கை எண் 28 – செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)**

**(இ) கோரிக்கை எண் 30 – எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)**

—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மூவாத் தமிழே, முதுமை மேவாத் தமிழே,
கோவா சென்று தொல்காப்பியம் கொணர்ந்த
பால் கோவாத் தமிழே,
அன்பு நிதி, பண்பு நிதி, அறிவு நிதி, உதய நிதி,
குணா நிதி, கலா நிதி, தயாநிதியென
ஏழு நிதிகளையும் தன்னுள் ஏந்திநிற்கும்
ஒரேநிதி, எங்களின் கருணை நிதி! (மேசையைத் தட்டும் ஒலி)
பொது வாழ்வைத் தம் வாழ்வாய் பொதுமறையே
வேதமென வாழ்வில் ஏற்று,
பொது வாழ்வைத் தம் வாழ்வாய் வரித்துக்கொண்டு,
பொதுப் பணியில் அமைச்சகத்தை ஆரம்பித்து,
ஐந்தாம் முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்று,
ஐம்பது ஆண்டுகள் மக்கள் பிரதிநிதியாய்ப் பணியாற்றி,
மக்கள் துயரங்கள், சாமானியனின் எதிர்பார்ப்புகளை,
ஏக்கங்களைப் பிரதிபலித்து அவையில் ஒலித்து,



2007 மே 7] [திரு. பரிதி இளம்வழுதி]

ஏழைகளின் கண்ணீரைத் துடைக்கும் கரங்களாய்,
அபலைகளின் துயரை நீக்கும் விரல்களாய்,
இளைஞர்களின் வாழ்வில் வெளிச்சக் கதிராய்,
மகளிர் மேம்பாட்டில் கலங்கரை விளக்காய்,
ஊடகங்கள்பல போற்றும் நல்பத்திரிகையாளராய்,
பாரபட்சமற்ற கருணைமிகு முதலமைச்சராய்,
தமிழகத்தின் ஒவ்வொரு முன்னேற்றத்திலும் மூலமாய் இருந்து,
ஆலமரமாய் விரிந்த ஒப்பற்ற தலைவரே!
உத்தம முதல்வரே! முத்தமிழறிஞரே!
முதுபெரும் கலைஞரே! (மேசையைத் தட்டும் ஒலி)
எனக்கு விலாசம் தந்த விசால இதயத்திற்குச் சொந்தக்காரரே
உம்மைச் சிரந்தாழ்த்தி வணங்குகிறேன்.

போற்றுதலுக்குரிய பேராசிரியருக்கும், அருமைமிகு ஆற்காட்டாருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். எழுச்சிமிக்க இளைஞர் பட்டாளத்தின் ஏற்றமிகு தளபதி, எதிர்காலத் தமிழகத்தின் நிகழ்கால நம்பிக்கை, உள்ளாட்சியில் நல்லாட்சி, நம்முடைய தளபதியார் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய நெஞ்சம் நிறைந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வாய்ப்பினை எனக்கு வழங்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சம் நிறைந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-25*

செய்தித் துறை குறித்த மானியக் கோரிக்கையில் எவ்வளவு சுருக்க முடியுமோ அவ்வளவு சுருக்கமாக—ஏனென்றால் இப்பொழுது மணி 1.25 ஆகிவிட்டது. எனக்குப் பின்னால் இன்னொரு அமைச்சர் பதில் சொல்ல வேண்டும். எனவே, எவ்வளவு சுருக்க முடியுமோ, அவ்வளவு சுருக்கி—உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

செய்தித் துறை குறித்த மானியக் கோரிக்கையில், கடந்திருப்பதோ ஓராண்டு காலம், நடந்திருப்பதோ பல்லாண்டு பணிகள். அரசுத் திட்டங்களை கடைக்கோடிப் பகுதிக்கும் கச்சிதமாகக் கொண்டு சேர்ப்பதிலே செய்தித் துறை எப்போதும் செம்மைத் துறை. கலைஞரின் அரசு, தினம் ஒரு திட்டத்தை அறிவிக்கும் அரசு. கால்நடைக்கும் திட்டம், காய்கறிக்கும் திட்டம், அரிசிக்கொரு திட்டம், எரிவாயுவிற்கு ஒரு திட்டம், தொழில் வளர்க்கத் திட்டம், எழில் செழிக்க ஒரு திட்டம்

[திரு. பரிதி இளம்வழுதி] [2007 மே 7

என்று எண்ணற்ற திட்டங்கள். அவற்றை மக்கள் அறிந்தும், புரிந்தும், சரியாக நுகர ஊடகங்கள்மூலம், நாடகங்கள்மூலம், பொருட்காட்சிகள்மூலம், முகாம்கள்மூலம் கொண்டு சேர்க்கின்ற மகத்தான பணியை செய்தித் துறை நாள்தோறும் செய்து வருகிறது.

பாரபட்சமின்றி பத்திரிகைகளுக்கு விளம்பரக் கட்டணம் உயர்த்தித் தந்தோம். பத்திரிகையாளர் நலன் கருதி, காத்திருந்த விண்ணப்பங்கள்மீது உடனடியாக ஆணைகள் பிறப்பித்தோம். பணியில் இருக்கும் பத்திரிகையாளர் இயற்கை எய்தினால், பணியாற்றிய காலத்தைக் கருத்தில் கொண்டு, குடும்ப நல நிதி நல்க ஆணை பிறப்பித்தோம். ஓய்வூதிய மனுக்களில் உடனடி நடவடிக்கை எடுத்தோம். இவையனைத்தும், நம் முதல்வர் முடுக்கிவிட்டதால், சொடுக்குப்போடுகிற நேரத்தில் நடந்த நிகழ்வுகள்.

பொன்னாடை, மாலைகளுக்குப் பதில் புத்தகங்கள் வழங்கும் போற்றுதலுக்குரிய நடைமுறை, சிலைகளைச் சேதப்படுத்தாமல் மலர் தூவி மரியாதை செய்யும் நெறி, கலைப் படங்களுக்கு மானியம், நினைவுச் சின்னங்களுக்குப் புதுப் பொலிவு, அரசுத் திட்டங்கள் மட்டுமல்லாமல் மருத்துவம், கல்வி, பெற்றோர் நலன் குறித்தும் மின்னணு ஊடகங்களில் விளம்பரங்கள், தலைமைச் செயலரின் செய்தியாளர் கூட்டங்கள் என்று பலவிதப் புதுமைகள் நம் முதலமைச்சர் அவர்கள் ஆணையின்படி நிறைவேறி, விழிப்புணர்வை ஏற்படுத்தி, வரவேற்பைப் பெற்றன.

தலைவர்களை நினைவுகூர்ந்து, அவர்கள் தொண்டுகளை மக்கள் மனதில் கொண்டு சேர்க்கும் பணியின் தொடர்ச்சியாக, இந்த ஆண்டு புத்தர் மகாபரி நிர்வாணம் அடைந்த 2550 ஆம் ஆண்டு நிறைவையொட்டி, தமிழக அரசின் சார்பில் செய்தித் துறை மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் விழாக்களை நடத்தி, புத்தரின் தத்துவங்களை மக்களிடம் சேர்க்கும் என்கின்ற சிறப்புச் செய்தியையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

வரும் நிதியாண்டில், செய்தித் துறையின் சார்பாக, பல புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட இருக்கின்றன. அதேபோல, எல்லோரும் மெச்சும்படி செய்தித் துறையின் கட்டுப்பாட்டில் செயலாற்றும் அச்சுத் துறையும் அடங்கும். இத்துறையானது, எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, அரசுத் துறை அனைத்திற்கும் தேவையான அரசிதழ்களை வெளியிடுவதற்கான பணியினை மேற்கொள்ளும்பொருட்டு 1831 ஆம் ஆண்டு, புனித ஜார்ஜ் கோட்டையில் 10 பணியாளர்களைக் கொண்டு தொடங்கப்பட்டது.



2007 மே 7] [திரு. பரிதி இளம்வழுதி]

ஆரம்ப காலத்தில், Treadle அச்சு இயந்திரத்தைக் கொண்டு பணிகள் நிறைவேற்றப்பட்டன. பின்னர், படிப்படியாக அரசுத் துறைகளின் தேவைக்கேற்ப Letter Press இயந்திரங்களின்மூலமும், அச்சுத் தொழில்நுட்ப மேம்பாட்டினையொட்டி உலோக எழுத்துக்களைத் தவிர்த்து, Offset, Sheetset, Web Offset, ஆகிய நவீன இயந்திரங்களைக் கொண்டும் அச்சடிக்கும் பணி நிறைவேற்றப்பட்டது. இவ்வாறு நாட்டின் விடுதலைக்கு முன்னரும், விடுதலைக்குப் பின்னரும், தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு அச்சுத் துறை தொய்வின்றிப் பணியாற்றி வருகின்றது.

இத்தகைய தொன்மை மிகுந்த துறையில், உலகத் தரம் வாய்ந்த அச்சு இயந்திரங்களைக் கொண்டு நவீனமயமாக்கும் திட்டம் விரைவில் செயல்படுத்தப்படும் என்பதை இம்மாமன்றத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின்பேரில், அமைக்கப்பட்ட உயர்நிலை வல்லுநர் குழு தனது விரிவான அறிக்கையினை ஒரு மாதத்திற்குள் அரசிற்கு சமர்ப்பிக்கவுள்ளது. அதன் அடிப்படையில், உலகத் தரம் வாய்ந்த உயர் தொழில்நுட்பத்தைக்கொண்டு அச்சு இயந்திரங்களும், அச்சடிப்பதற்கு முன்னர் பயன்படுத்தப்படும் இயந்திரங்களும் (Pre-press machines), அச்சடிக்கப்பட்ட பின்னர் பயன்படுத்தும் இயந்திரங்களும் (Post-press machines) நிறுவப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்படி இயந்திரங்களை இயக்குவதற்குத் தேவையான, திறன் மேம்பாட்டுப் பயிற்சி, பணியாளர்களுக்கு அளிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், நவீன இயந்திரங்களை நிறுவுவதற்குத் தேவையான புதிய உள் கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய கட்டடங்கள் கட்டப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்' என்ற ஆட்சிமொழித் திட்டத்தில் பல்வேறு நடவடிக்கைகள் அரசு எடுத்து வந்துள்ளது என்பதனை இந்த மாமன்றம் அறியும். குறிப்பாக, இதுவரை தனி நபர் பெயர் மாற்ற அறிவிக்கைகள் ஆங்கிலத்தில் மட்டுமே துறைமூலம் அரசிதழ்களில் பிறப்பிக்கப்பட்டு வந்தன. இதற்கான கட்டணம் ஒவ்வோர் இனத்திற்கும் 415 ரூபாய் வசூலிக்கப்பட்டு வந்தது. பள்ளியில் தமிழ், திருக்கோயிலில் தமிழ், கணினியில் தமிழ் என்று அனைத்துப் பகுதிகளிலும் தமிழ் ஆளுமையை வெற்றிகரமாகச் செயல்படுத்தி வரும் நமது அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, பெயர் மாற்றம் அரசிதழ்களில் தமிழில் பிரசுரிக்கப்பட்டு, மக்களிடத்திலே மாபெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

[2007 மே 7

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மேலும், ரூ.415 செலவில் செய்யப்படவேண்டிய பெயர் மாற்றம் தமிழில் செய்வதற்கு அஞ்சல் செலவு நீங்கலாக ரூ.50 மட்டுமே வசூலிக்கவும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் சார்பாக வரும் நிதியாண்டில் பல புதிய திட்டங்கள் செயல்படுத்தவிருக்கின்றன.

அரசு வெளியிடும் பெயர்மாற்ற அறிவிக்கைகள், தேர்வாணைய வெளியீடுகள் மற்றும் அரசிதழ் அறிவிக்கைகள் போன்றவற்றை பொது மக்களுக்கு விற்பனை செய்யும் அரசு வெளியீடுகள் நிலையத்தில் கணினிகள் நிறுவிட ரூ.12.65 இலட்சம் வழங்கப்படும்.

சென்னை அரசு மைய அச்சகப் பணியாளர்களின் பணியமைப்பு விவரம், சம்பளப் பட்டியல் மற்றும் அதற்கான அட்டவணைகள் தயாரிக்க கணினி மற்றும் அதன் உபகரணங்கள் வாங்க ரூ.21.25 இலட்சம் வழங்கப்படும்.

சென்னை அரசு எழுதுபொருள் அலுவலகத்திற்கு, சம்பளப் பட்டியல்கள் தயாரிக்கும் பணிக்காக கணினி மற்றும் இதர உபகரணங்கள் வாங்க ரூ.2.35 இலட்சம் வழங்கப்படும்.

சென்னை உயர் நீதிமன்ற கிளை அச்சகத்திற்கு, பணியாளர்களின் சம்பளப் பட்டியல்கள் மற்றும் அதற்கான அட்டவணைகள் தயாரிக்க கணினி மற்றும் அதன் இதர உபகரணங்கள் வாங்க ரூ.1.75 இலட்சம் வழங்கப்படும்.

விருத்தாசலம் அரசு கிளை அச்சகத்திற்கு, பணியாளர்களின் சம்பளப் பட்டியல் மற்றும் அட்டவணைகள் தயாரிக்க கணினி மற்றும் இதர உபகரணங்கள் வாங்க ரூ.3.25 இலட்சம் வழங்கப்படும்.

திருச்சி அரசு கிளை அச்சகத்திற்கு பணியாளர்களின் சம்பளப் பட்டியல் மற்றும் அட்டவணைகள் தயாரிக்க கணினி, அதன் துணை பாகங்கள் மற்றும் இதர உபகரணங்கள் வாங்க ரூ.1.75 இலட்சம் வழங்கப்படும்.



2007 மே 7] [திரு. பரிதி இளம்வழுதி]

சேலம் அரசு கிளை அச்சகத்திற்கு, பணியாளர்களின் சம்பளப் பட்டியல் மற்றும் அட்டவணைகள் தயாரிக்க கணினி மற்றும் இதர உபகரணங்கள் வாங்கவும், மாவட்ட அரசிதழ்கள், படிவங்கள் அச்சடிக்க ஒரு சிறிய ஆஃப்செட் இயந்திரம் வாங்கவும் மொத்தம் ரூ.10.25 இலட்சம் வழங்கப்படும்.

புதுக்கோட்டை அரசு கிளை அச்சகத்திற்கு, பணியாளர்களின் சம்பளப் பட்டியல் மற்றும் அட்டவணைகள் தயாரிக்க கணினி மற்றும் இதர உபகரணங்கள் வாங்க ரூ.2.75 இலட்சம் வழங்கப்படும்.

சென்னை உயர் நீதிமன்றம், மதுரை பெஞ்ச் கிளை அச்சகத்திற்கு பணியாளர்களின் சம்பளப் பட்டியல் மற்றும் அட்டவணைகள் தயாரிக்க கணினி, அதன் துணை பாகங்கள் மற்றும் இதர உபகரணங்கள் வாங்கவும், ஒளிநகல் இயந்திரம், பிளேட் பிராசசர் மற்றும் கம்பி அடிக்கும் இயந்திரங்கள் வாங்கவும் ரூ.15.35 இலட்சம் வழங்கப்படும்.

மதுரை அரசு கிளை அச்சகத்திற்கு, பணியாளர்களின் சம்பளப் பட்டியல்கள் மற்றும் அட்டவணைகள் தயாரிக்க கணினி, துணை பாகங்கள் மற்றும் இதர உபகரணங்கள் வாங்கவும், அரசிதழ்கள் மற்றும் குறைந்த எண்ணிக்கை-ஆஃப்செட் படிவங்கள் அச்சடிக்கவும் ஒரு சிறிய ஆஃப்செட் இயந்திரம் வாங்கவும் ரூ.8.25 இலட்சம் வழங்கப்படும்.

1831 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட அரசு அச்சகம் 175 வருடங்களாகச் செம்மையாகச் செயல்பட்டு வருகிறது. அதனை நினைவுகூரும் வகையில் அரசு அச்சகங்களில் பணிபுரியும் அனைவருக்கும் நினைவுப் பரிசாக ஒவ்வொரு பணியாளருக்கும் ரூ.500 மதிப்புள்ள அஞ்சல் சேமிப்பு பத்திரம் வழங்க ரூ. 11.10 இலட்சம் அரசு நிதி வழங்கப்படும்.

அரசு மைய அச்சகத்தின் இரகசிய பிரிவில், இரகசியம் பாதுகாக்கும் வகையில் அனைத்து சன்னல்கள் மற்றும் கதவுகள் மூடப்பட்டிருக்கும். இதனால் உள்ளே உருவாகும் வெப்பக் காற்று வெளியில் செல்ல உரிய வழியில்லாமல் உள்ளேயே சுற்றுவதால், இப்பிரிவில் பணிபுரியும் தொழிலாளர்கள் மிகுந்த சிரமத்துடன் பணியாற்றி வருவதனால் இவர்கள் உடல் நலம் பாதிக்கப்படுகிறது. இதனைப் போக்கும் வகையில் உள்ளே ஏற்படும் வெப்பக் காற்றினை வெளியேற்ற வளிப்போக்கி விசிறிகள் (Exhaust Fans) ரூ.3.00 இலட்சம் செலவில் பொருத்தப்படும்.

தொழிலாளர் மற்றும் பணியாளர் உடல் நலத்துடன் இருக்க, அவர்களின் பணி நேரம் முடிவடைந்தவுடன் நேரத்தைப் பயனுள்ளதாக்கும் வகையில் அரசு எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையினை சார்ந்த அனைத்து அரசு அச்சகங்களுக்கும் விளையாட்டுப் பொருட்கள் மற்றும் போட்டிகள் நடத்திட அரசு ஆண்டுதோறும் ரூ.45,000 ஒதுக்கீடு செய்துள்ளது. மேலும் பணியாளர்களை ஊக்குவிக்க, தலைவர்கள் மற்றும் பேரறிஞர்கள் நினைவாகப் போட்டி நடத்தி அவர்தம் வாழ்க்கையைப் பொது மக்களுக்கு அர்ப்பணித்ததை நினைவுகூரும் வகையில் தற்போது வழங்கும் ரூ.45,000 என்பதை உயர்த்தி ரூ.1.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

அரசு அச்சக ஆண் மற்றும் பெண் பணியாளர்களுக்கு தற்பொழுது இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை மூன்று ஜோடி சீருடைகள் வழங்கப்படுகின்றன. அதனை நான்கு ஜோடி சீருடைகளாக வழங்கவும், சீருடையின் நீளம் மற்றும் அகலத்தினை அதிகரித்து தையல் கட்டணத்தை உயர்த்தி வழங்கவும், சுமார் ரூ.7.00 இலட்சம் கூடுதல் தொகையினை அரசு ஒதுக்கீடு செய்திருக்கிறது.

விருத்தாசலம் அரசு கிளை அச்சகத்தில் கணினி வழி திட்டமிட்டு இயக்கப்படும் நவீன அச்சு இயந்திரம் வாங்க ரூ.35.00 இலட்சம் அரசு நிதி வழங்கப்படும்.

அரசு அச்சகங்கள் நவீனமயமாக்கல் குறித்து நியமிக்கப்பட்ட வல்லுநர் குழு அதனுடைய அறிக்கையை இம்மாத இறுதிக்குள் தாக்கல் செய்யும். அதனடிப்படையில் அரசு மைய அச்சகம் படிப்படியாக நவீனமயமாக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, பல்வேறு அறிவிப்புகள் செய்யப்பட வேண்டியிருக்கின்றன. நேரம் இல்லை. அவை •புத்தகமாக ஏற்கெனவே தமிழில் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்கள் அனைவருக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. அந்த அறிவிப்புகளை நான் இந்த மன்றத்தில் படித்ததாகக் கருதி அவைக் குறிப்பேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இங்கே மாண்புமிகு உறுப்பினர்களில் ஒருசிலர் எழுப்பிய கேள்விகளுக்கு மட்டும் என்னுடைய பதிலைத் தெரிவித்து விடைபெற விரும்புகிறேன்.

• 329 முதல் 333 வரையிலான பக்கங்களில் இணைப்பு -V ஆக அச்சிடப்பட்டுள்ளது.





பிற்பகல் 1-35

மாண்புமிகு உறுப்பினர் திரு. கலைராஜன் அவர்கள் அம்பேத்கர் அவர்களுடைய திரைப்படம் எப்பொழுது வெளியாகும் என்ற வகையிலே இங்கு ஒரு கேள்வியை எழுப்பினார்கள். அம்பேத்கர் திரைப்படம், தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகம் தயாரித்துள்ளது. அப்படம் இந்தியாவிலுள்ள அனைத்து மொழிகளிலும் மொழி மாற்றம் செய்யப்பட்டுள்ளது. தமிழிலும் மொழி மாற்றம் செய்யப்பட உள்ளது. அதற்காக 10 இலட்சம் ரூபாய் தமிழகத்தில் திரையரங்குகள் திரையிடப்படும் நாளன்று வழங்கப்படும் என்று ஏற்கெனவே அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் முன்னிலையில் இத்திரைப்படம் இந்தியா முழுவதும் திரையிடத் தயாராக உள்ளது என்று தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகம் தெரிவித்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் திரு. கலைராஜன் அவர்கள் மொழிப் போர்த் தியாகிகளைப் பாராட்டுகின்ற வகையிலே, அவர்களுக்கெல்லாம் ஒரு நினைவுச் சின்னத்தை எழுப்ப வேண்டுமென்று சொன்னார். அவருடைய அந்த நல்ல கோரிக்கையை, அவருடைய உணர்வை மதித்து, அந்தக் கருத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, முதலமைச்சருடைய ஆலோசனையைப் பெற்று, எதிர்காலத்திலே உரிய முறையிலே நிறைவேற்றுவதற்கு பரிசீலனை செய்யப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, நம்முடைய மாண்புமிகு இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் திரு. சிவராஜ் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே, அவருடைய தொகுதியைச் சேர்ந்த கபிலர் குன்றத்தை உள்ளடக்கி இருக்கின்ற, திருக்கோவிலூர், திருக்கோவில்கள் நிறைந்த பெருநகரமாக இருக்கின்ற காரணத்தால், அதைப் புராதன நகரமாக அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அவருடைய கோரிக்கையை ஏற்று, அதைப் புராதன நகரமாக அறிவித்து, அதற்கான உரிய 50 இலட்சம் ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, நம்முடைய வானூர் சட்டமன்ற உறுப்பினர் அன்பிற்குரிய சகோதரர் கணபதி அவர்கள் பேசுகின்ற நேரத்தில், அரசு விழாக்கள் கட்சி விழாக்கள் மாதிரி நடைபெறுகின்றன. Protocol பின்பற்றப்படவில்லை என்று சொன்னார். ஆனால், மாவட்டங்களில்,

அரசு விழாக்கள் நடைபெறும் தொகுதிகளிலுள்ள நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகளின் பெயர்கள், கட்சிப் பாகுபாடின்றி, அழைப்பிதழில் அச்சிட்டு அனைவருக்கும் வழங்கப்பட்டு விழாக்கள் நடத்தப்படுகின்றன. மாவட்ட அளவில் அரசு விழாக்கள் நடத்தப்படும்போது, அந்தந்த மாவட்ட அனைத்து நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகளின் பெயர்களை அழைப்பிதழிலே அச்சிட்டு அனைவருக்கும் வழங்கி விழாக்கள் நடத்தப்படுகின்றன என்பதை அவருடைய கனிவான கவனத்திற்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, நம்முடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் திருமதி லதா அவர்கள் உரையாற்றுகின்ற நேரத்திலே, பெரியார் திரைப்படத்திற்கு வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டார்கள். பெரியார் திரைப்படம் *1-5-2007* முதல் தமிழகத் திரையரங்கங்களிலே திரையிடப்பட்டு, தொடர்ந்து வரி விலக்கு அளிக்கப்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே, மாவட்டந்தோறும் அரசு பொருட்காட்சி அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். தற்போது அரசு, மதுரை, கோயம்புத்தூர், சேலம் ஆகிய மாநகராட்சிகளில் ஆண்டுதோறும் பொருட்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. இதுதவிர, திருநெல்வேலி, வேலூர் ஆகிய மாவட்டங்களில் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறையும் பொருட்காட்சி நடத்தப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, அனைத்து மாவட்டங்களிலும் அரசின் சாதனைகள், திட்டங்களை விளக்கும் பல்துறை பணி விளக்கக் கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதேபோன்று, மாவட்டங்களில் இவ்வாண்டும், ஊராட்சி ஒன்றிய அளவில் பல்துறை பணி விளக்கக் கண்காட்சிகள் நடத்திடத் திட்டமிடப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, இன்னும் பல்வேறு கோரிக்கைகளையெல்லாம் இங்கே வைத்தார்கள். நம்முடைய மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா அவர்களும், அதேபோல, மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினரும், திரு. விடியல் சேகர் அவர்களும், மற்ற உறுப்பினர்கள் எல்லோரும் இங்கே ஒரு



கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கை, மாவீரன் தீரன் சின்னமலையின் பிறந்த நாள் விழாவினை அரசு விழாவாகக் கொண்டாட வேண்டும், நிரந்தர அரசாணை வெளியிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, (மேசையைத் தட்டும் ஒலி) நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களும் கோரிக்கை வைத்தார்கள், திரு. அர. சக்கரபாணி அவர்களும் வைத்தார்கள். எல்லோரும் வைத்தார்கள். இவரும் வைத்தார், அவரும் வைத்தார், எல்லோரும் வைத்தார்கள். இவர்கள் எல்லோருடைய கோரிக்கையையும் ஏற்று, இந்த நிரந்தர அரசாணை வெளியிடப்படும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, நம்முடைய ராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு. அப்பாவு அவர்கள் இங்கே ஒரு கோரிக்கையை வைத்தார்கள். தமிழுக்குத் தொண்டாற்றி, ஒப்பிலக்கணம் தந்த கால்டு வெல் அவர்கள் வாழ்ந்து மறைந்த இடையன்குடி இல்லத்தை நினைவு இல்லமாக அறிவிக்க வேண்டும் என்று இங்கே அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கையை முறைப்படி நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, அதை உரிய முறையிலே பரிசீலித்து நடவடிக்கை எடுப்பதற்கு ஆவன செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) பேரவைத் தலைவருடைய கோரிக்கையும் இதில் இணைந்திருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தாயின் உள்ளத்தை, தந்தையின் இதயத்தை ஒருங்கே பெற்றவர் நம் ஒப்பற்ற தலைவர். சிலரது வாயில் வந்தால், வரம்கூட சாபமாகும். நம் தலைவர் வாயிலே நுழைந்தால், வசவுகூட கவிதையாகும்.

*பிற்பகல் 1-40*

கலீல் ஜிப்ரான் கூறுவதைப்போல, தலையெழுத்தை தன்னுடைய வியர்வையாலே அழிக்க முடியும் என்பதற்கு அவரே எடுத்துக்காட்டு. அதனால்தான், மக்கள் மன்றத்தில் பொன்விழா காணும் இப்புனிதரைப் போற்ற இந்நாள், அந்நாள் பிரதமர்கள்கூட வருகை புரிய இருக்கிறார்கள். தியாகச் சுடராய்த் திகழும் அன்னை சோனியா காந்தியும் வாழ்த்துவதற்கு வருகை தர இருக்கிறார்கள். அனைத்துத் தலைவர்களும் பாராட்ட இங்கே பறந்தோடி வருகிறார்கள் என்றால் அவர்தம் மேன்மையை இந்தியத் திருநாடே போற்றுகிறது என்றுதான் பொருள். இன்றைக்குக்கூட 'இந்து' பத்திரிகையிலே அவருடைய பேட்டியை முழுமையாக வெளியிட்டிருக்கிறார்கள். 'The Tamil Nadu Chief Minister Dr. M. Kalaignar is one of the India's senior most leaders and he

completes half a century as a Legislator this year' என்று மிக அற்புதமாக வெளியிட்டிருக்கிறார்கள். அவருக்கு வயது 84. அந்த 84-லே அவருடைய பொது வாழ்விற்கு வயது 70; அவருடைய சட்டமன்றப் பொன்வாழ்விற்கு வயது 50; இத்தனையும் உள்ளடக்கி முதலமைச்சராக வீற்றிருக்கிற அவரைப் பாராட்ட எல்லோரும் வருகிறார்கள். ஆனால், சிலபேர் தங்களுடைய பொறாமை, பொச்சரிப்பை வேறு வகையாகக் காட்டிக்கொண்டிருக்கிறார்கள். நான் அதற்கெல்லாம் ஒன்றும் சொல்ல விரும்பவில்லை.

*"தண்டா மரையி னுடன் பிறந்து*
*தண்டே நுகரா மண்டூ கம்*
*வண்டோ கானத் திடையிருந்து*
*வந்தே கமல மது வுண்ணும்*
*பண்டே பழகி யிருந் தாலும்*
*அறியார் புல்லோர் நல் லோரே!"*

என்ற விவேக சிந்தாமணியின் பாடலைத்தான் நான் சொல்கிறேன். நான் சொல்வது, விவேக சிந்தாமணி பாடல்தான், அபூர்வ சிந்தாமணி பாடல் அல்ல. ஆக, போற்றுவோர் போற்றட்டும், தூற்றுவோர் தூற்றட்டும், அதைப்பற்றிக் கவலை இல்லை. எங்கள் தலைவர் அவர்கள் நிரந்தரமாக, இன்னும் பல்லாண்டு காலம் வாழ்ந்து, இந்தத் தமிழ்நாட்டிற்கும், தமிழ் இனத்திற்கும் பாதுகாவல் அரணாக இருக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அந்தத் தலைவரின் வழிகாட்டுதலில் செய்தித் துறை ஏழைகளின் வாழ்வை வளப்படுத்தும், விழிப்புணர்வின் வீச்சை அதிகப்படுத்தும், ஊடகங்களை அரவணைத்து விழாக்களின் வழியாக, விளம்பரங்கள்மூலமாக, செய்தி ஊடகமாக அனைத்துத் திட்டங்களையும் உரியவர்களுக்குச் சேர்க்கும், அவர் வாழ்வில் உயர்வையும் சேர்க்கும் என்று பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போல ஒன்றே ஒன்றை மட்டும் தெரிவிக்க ஒரு நிமிடம் அவகாசம் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது நாட்டிலே பல பேர், மெஜாரிட்டி, மைனாரிட்டி என்பதற்கு என்ன அர்த்தம் என்றே தெரியாமல் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். தவித்துக்கொண்டிருக்கிற அவர்களுக்கு நல்ல அர்த்தத்தைக் கொடுக்கின்ற வகையிலே, இப்போது பெரியார் திரைப்படம் வெளிவந்திருக்கிறது. அந்தப் பெரியார் திரைப்படத்தை



சென்று பார்ப்பார்களேயானால், நிச்சயமாக, what is the difference between minority and majority என்பதை அவர்கள் நிச்சயமாகப் புரிந்துகொள்வார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், தந்தை பெரியார் அவர்கள் வீட்டில் கோபித்துக்கொண்டு காசிப்பட்டணத்திற்குச் செல்கின்ற நேரத்திலே அவரிடம் காசில்லாதபோது, அன்னதான தர்ம சத்திரத்தில் நுழைகின்றபோது, அங்கிருக்கின்ற சாதி ஆதிக்க வெறியர்கள், 'வெளியே போ' என்று துரத்தி விடுகிறார்கள்; சாப்பாடு போட மாட்டேன் என்று மறுக்கிறார்கள். அதுமட்டுமல்ல, பிடித்துத் தள்ளுகிறார்கள். தள்ளுகின்ற நேரத்தில் அவர் வந்து விழுகின்ற இடம் எதுவென்றால், குப்பைத் தொட்டி. அந்தக் குப்பைகளிலே, எச்சில் இலையிலே இருக்கிற எச்சில் சோற்றை எடுத்துச் சாப்பிட்டபோதுதான் அவருக்குப் புரிந்தது. மூன்றே விழுக்காடு இருக்கின்றவர்கள் 97 விழுக்காடாக இருக்கின்றவர்களை இந்த நிலைக்கு ஆளாக்கி விட்டார்களே (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை எண்ணிப்பார்த்ததன் விளைவுதான் திராவிட இயக்கம் உருவானது. தோழர்களே, நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். உலகத்திலே இயக்கங்கள் உருவாகிய வரலாற்றைப் பார்க்கின்றபோது, பெரும்பான்மை மக்களிடமிருந்து சிறுபான்மை மக்களை காப்பாற்றுவதற்குத்தான் இயக்கங்கள் தோன்றியிருக்கின்றன. ஆனால், இங்கே வேடிக்கை என்னவென்றால், வேதனை என்னவென்றால், தமிழ்நாட்டிலே சிறுபான்மை மக்களிடமிருந்து, மூன்றே விழுக்காடாக இருக்கிற சிறுபான்மை மக்களிடமிருந்து 97 விழுக்காடாக இருக்கிற பெரும்பான்மை மக்களைக் காப்பாற்றுவதற்குத்தான் திராவிட இயக்கம் உருவானது. (மேசையைத் தட்டும் ஒலி) தந்தை பெரியார் உருவானார், அறிஞர் அண்ணா பாடுபட்டார். எங்கள் தலைவர் கலைஞர் பாடுபட்டுக்கொண்டிருக்கிறார், தொடர்ந்து பாடுபட்டார், பேராசிரியர் பாடுபட்டுக்கொண்டிருக்கிறார். இதில் வேதனை என்னவென்றால், யார் மெஜாரிட்டியைச் சேர்ந்தவர்களோ, அந்த மெஜாரிட்டியைச் சேர்ந்தவர்கள், ஒரு மைனாரிட்டியின் தலைமையின்கீழ் நின்றுகொண்டு, மெஜாரிட்டியைப் பார்த்து, நீ மைனாரிட்டி என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்களே, (குறுக்கீடுகள்) இவர்களைப் பார்த்தால், ஒரு பெரியார் அல்ல, ஆயிரம் பெரியார் வந்தால்கூட இவர்களைத் திருத்த முடியாது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடுகள்) மேலும் (குறுக்கீடுகள்) மேலும், பேரவைத் தலைவர் அவர்களே ... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் நான் முழுமையாகப் படித்து கவனத்தில் கொண்டிருக்கிறேன். அவை எதிர்காலத்திலே சூழ்நிலைக்கேற்ப பரிசீலனை செய்து நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள் கொடுத்திருக்கிற அந்த வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் திரும்பப் பெற்றுக்கொண்டு, என்னுடைய மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டுமென்று பணிவோடு கேட்டு விடைபெற்றுக்கொள்கின்றேன். நன்றி, வணக்கம்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று கொண்டிருந்தனர்.)

*பிற்பகல் 1-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா அவர்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். முதலில் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. செங்கோட்டையன், என்ன? சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 97 சதவிகித மக்கள் இருக்கின்றபோது, 3 சதவிகித மக்கள் இருக்கின்றவர்களில் ஒருவர் தலைமையேற்றுக் கொள்கின்றவர் என்று சொல்வது . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் அமைதியாக இருங்கள். நீங்கள் சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** இந்திய அரசியல் சாசனச் சட்டத்தின்படி ஓர் அமைச்சர், தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றவர் யாராக இருந்தாலும், அவர்களைப்பற்றிச் சுட்டிக்காட்டுவதற்கு இந்தச் சபையிலே அவர்களுக்குத் தகுதி இருக்கிறதா என்பதை நான் இந்த நேரத்தில் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே அவையிலே அப்பொழுது எதிர்க்கட்சித் துணைத் தலைவர் இருந்திருக்கின்றார். அமைச்சர் யாரையும் தனிப்பட்ட முறையில் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. பொதுவாக சிலபேர் இருக்கிறார்கள், 97 சதவிகிதம் என்று சொன்னாரே தவிர, எந்தக்



கட்சியையோ, மற்றவர்களையோ, தனிப்பட்ட முறையில் யாரையும் சொல்லவில்லை. இதற்கெல்லாம் இங்கேயே உதாரணங்கள் இருக்கின்றன. உதாரணம் இருக்கிறது. (குறுக்கீடுகள்) இதற்கெல்லாம் உதாரணம் இருக்கிறது சார். நிறைய உதாரணங்கள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் செங்கோட்டையன் அப்பொழுது இந்த அவையில் இல்லை. இங்கேயே ஓர் அமைச்சர் பேசியபோது, வளர்மதி அமைச்சராக இருந்தபோது பேசியபோது, அன்றைய முதலமைச்சரே சொன்னார். "யாரையும் தனிப்பட்ட முறையில் சொல்லவில்லை. எனவே, அது அவைக்குறிப்பிலே இருக்கலாம்" என்று சொன்ன வரலாறெல்லாம் இருக்கிறது. இது ஜெயக்குமாருக்குத் தெரியும். மறக்காமல் இருந்திருந்தால், தெரிந்திருக்கும். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்கும் தெரிந்திருக்கும். ஆகையால், அமைச்சர் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. நான் இன்னொன்றையும் சொல்ல விரும்புகின்றேன். இதே சட்டமன்றத்திலே நான் பாப்பாத்திதான், பாப்பாத்திதான் என்று சொன்ன வரலாறும் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர், என்ன சொல்லப் போகிறீர்கள்? இன்னோர் அமைச்சர் பதில் சொல்லவேண்டியிருக்கிறது.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு செய்தித் துறை அமைச்சரவர்கள் பதிலுரையிலே minority, majority என்று பேச ஆரம்பித்து, அதை ஜாதி, மதத்திற்கு ஒப்பிட்டு, minority-யாக இருக்கின்றவர், majority-க்குத் தலைமை தாங்கலாமா என்ற கருத்தைப் பதிவு செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, ஆட்சேபனையில் இருக்கின்ற அந்தக் கருத்தை அவைக்குறிப்பிலிருந்து நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் யாருடைய பெயரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. பொதுவாக என்னுடைய கருத்தைச் சொன்னேன். (குறுக்கீடுகள்) இருங்கள். பொதுவாக என்னுடைய கருத்தைச் சொன்னேன். யாரையும் நான் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) இருங்கள், சொல்கிறேன். நான் தெரிவித்தது . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே சட்டமன்றத்திலே பல்வேறு (குறுக்கீடுகள்) ஒரு கொள்கை ரீதியில் (குறுக்கீடுகள்) என்ன? என்ன? இப்பொழுதே சொல்லுங்கள். அப்பொழுது நடந்ததும் தப்பு என்று எடுத்துக்

[டாக்டர் க. பொன்முடி] [2007 மே 7

கொள்ளலாமா? மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. கொள்கை ரீதியான விளக்கத்தைத்தான் கொடுத்திருக்கின்றாரே தவிர, (குறுக்கீடுகள்) ஆமாம், கொள்கைதான், கொள்கைதான். உங்களுக்கு திராவிட இயக்கக் கொள்கையைப்பற்றித் தெரியவில்லையென்றால், அதற்கு நாம் என்ன செய்ய முடியும்? கொள்கை இதுதான். கொள்கையைத்தான் அமைச்சர் சொல்கின்றாரே தவிர, யாரையும் தனிப்பட்ட முறையில் சொல்லவில்லை. பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு கட்சிகளில் சிறுபான்மையினர் தலைமை இருந்திருக்கலாம். அதில் இவர்களுக்கு ஏன் கோபம் வருகிறது? அதைத்தான் எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. அவர் உண்மையான கருத்தைச் சொல்கின்றார், கருத்தைச் சொல்கிறபோது இவர்களுக்கு ஏன் இந்த வேகம் வருகிறது? வேகம் வரவேண்டிய அவசியமே இல்லை. அவர் சொன்னதில் தனிப்பட்டவர்மீது குற்றச்சாட்டு இல்லை.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் தொடர்ந்து எழுந்து நின்று கொண்டிருந்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. பொள்ளாச்சி ஜெயராமன், உட்காருங்கள். திரு. ஜெயக்குமார், உட்காருங்கள். திரு. பன்னீர்செல்வம், சொல்லுங்கள். வேறு வேலை இருக்கிறது. சீக்கிரம் சொல்லி முடியுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைமை ஏற்கக்கூடிய தகுதி யாருக்கும் இருக்கலாம். ஆனால், அதை ஜாதி, மதத்தோடு ஒப்பிடுவதைத்தான் தவறு என்று சொல்கின்றோம். ஆகவே, அமைச்சர் சொன்னதை அவைக்குறிப்பிலிருந்து நீக்கவேண்டும்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் நான் தெளிவாகச் சொல்கிறேன். நான் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) கத்துவதால் எந்தப் பிரயோஜனமும் இல்லை. நான் என்ன சொல்கிறேன் என்று கேட்டுவிட்டுப் பேசுங்கள். நான் சொல்ல வந்தது, என்னுடைய இனத்தைச் சேர்ந்த என்னுடைய உடன்பிறப்பே, என்னைப் புரிந்துகொள்ளாமல் இருக்கிறானே என்ற வருத்தத்தில், 'இவர்கள் செய்வதை, இன்னது என்று அறியாமல் செய்கின்றார்கள், பிதாவே, இவர்களை மன்னியும்' என்ற அர்த்தத்தில்தான் சொன்னேனே தவிர, யாரையும் தனிப்பட்ட முறையில் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்)



2007 மே 7]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. இப்போது இங்கே ஜாதிச் சண்டையும் இல்லை, மதச் சண்டையும் இல்லை. யாரையும் குறிப்பிட்டு அவர் சொல்லவில்லை. நீங்கள், 'எங்கள் தலைவியை குறிப்பிட்டுச் சொல்கிறார்' என்கிறீர்கள். உங்கள் தலைவி என்று அவர் சொன்னாரா? அவர் பொதுவாகச் சொல்கிறார், அவ்வளவுதான். உட்காருங்கள். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1-50

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) தந்தை பெரியாருடைய படத்திலே வருகின்ற சில காட்சிகளை எடுத்துச் சொல்லிவிட்டு, சிறுபான்மை மக்கள், பெரும்பான்மை மக்களை எப்படி வஞ்சிக்கிறார்கள் என்ற காட்சியையும் எடுத்துச் சொல்லிவிட்டு, அவர் பொதுவாகத்தான் சொன்னார். பொதுவாக இந்தச் சட்டமன்றத்திலே எந்தவொரு உறுப்பினராக இருந்தாலும் நான் குறிப்பிட்டு யாரையும் குற்றம் சுமத்தவில்லை என்று சொன்னால் அதை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதுதான் இந்த அவையினுடைய மரபு. அவரே சொல்லிவிட்டார். அம்மையாரையோ அல்லது எந்தக் கட்சிக்காரர்களையோ அவர் குறிப்பிடவில்லை என்று சொன்னதற்குப் பிறகு, (குறுக்கீடுகள்) அதை ஏற்றுக்கொள்வதுதான் இந்த அவையினுடைய மரபு. எத்தனையோ தீர்ப்புகள் இந்த மன்றத்திலே எனக்குத் தெரிந்து, நான் 1967 ஆம் ஆண்டு முதல் இந்த அவையிலே இருந்திருக்கின்றேன். ஓர் உறுப்பினர் இன்னார்மீது நான் குற்றம் சொல்லவில்லை என்று குறிப்பிட்டு சொன்னால் அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று பல தீர்ப்புகள் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க் கட்சித் துணைத் தலைவர், இதைவிட உங்களுக்கு என்ன விளக்கம் சொல்லவேண்டும். (குறுக்கீடுகள்) என்ன மைனாரிட்டி தலைமையை ... (குறுக்கீடுகள்) அது கிடையாது. நான் சொல்கிறேன் கேளுங்கள். (குறுக்கீடுகள்) உங்களை அவர் குறிப்பிட்டுச் சொல்லவில்லை.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைனாரிட்டி, மெஜாரிட்டி என்கிற பிரச்சினை இப்போதும் இருந்து வருகிறது. அது ஒன்றும் தவறான வார்த்தையே கிடையாது. சிறுபான்மை, பெரும்பான்மையை ஏமாற்றுகிறது என்பது வரலாற்று ரீதியாக இயக்கங்களிலே சொல்லப்படுகிற உண்மை. இதிலே எந்தவிதமான வரலாற்றுப் பிழையும் கிடையாது. எந்தச் சாதியையும் குறிப்பிட்டுச் சொல்லவும் கிடையாது (குறுக்கீடுகள்)

[2007 மே 7

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குறிப்பிட்டுச் சொல்லவில்லை. யாரையும், எந்தக் கட்சியையும் சொல்லவில்லை. உங்களைச் சொல்லவில்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மீண்டும் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) நான் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. இன்னும் சொல்ல வேண்டுமானால் ஆண்டாண்டு காலமாக, ஆயிரம் காலமாக வஞ்சிக்கப்பட்ட சமுதாயத்தின் பிரதிநிதியாக நான் பேசிக்கொண்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்) வர்ணாஸ்ரம தர்மத்தின் அடிப்படையிலே சொன்னார்களே, இந்த நான்காவது வர்ணம் சூத்திரன் என்று, நாங்கள் அதில்கூட சேர்ந்தவர்கள் கிடையாது. நாங்கள் அதற்கும் கீழே உள்ளவர்கள். அந்த வேதனையில், அந்த ஆதங்கத்தில்தான் சொல்கிறேனே தவிர (குறுக்கீடுகள்) தந்தை பெரியார் என்ற ஒருவர் மட்டும் இந்த நாட்டில் பிறக்காமல் இருந்தால், நீங்களும் இங்கே இருக்க முடியாது. நானும் இங்கே நின்று பேசிக்கொண்டிருக்க முடியாது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர், சொல்கிறேன் கேளுங்கள். அவர் பொதுவாகச் சொல்லியிருக்கிறாரே தவிர, உங்கள் கட்சியையோ உங்கள் தலைவியைப்பற்றியோ சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் தவறாகப் புரிந்துகொண்டு பேசுகிறீர்கள். அவர் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. மீண்டும் explanation சொல்லிவிட்டார். அவர்தான் சொல்லிவிட்டார். யாரையும் தனிப்பட்ட முறையில் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்று சொல்லிவிட்டார் அல்லவா? (குறுக்கீடுகள்) இதைவிட வேறு என்ன வேண்டும் உங்களுக்கு? (குறுக்கீடுகள்) மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் பதிலுரை. (குறுக்கீடுகள்)

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் அனைவரும் அவையைவிட்டு வெளியேறினர்)

***மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அயராத உழைப்பு, அசையாத கொள்கை, தளராத உள்ளம், சளையாத தொண்டு, பழகுவதில் இனிமை, அணுகுவதில் எளிமை, கோப்புகளெல்லாம் கையொப்பத்திற்காக தோப்புக் கரணம் போட்ட நிலை மாறி, சென்ற வேகத்தில் துரிதமாகத் துள்ளிவரும் நிர்வாகத் திறமை, அனைத்தும் ஒருங்கே அமையப்பெற்று, பேரவையில் 50



2007 மே 7] [திரு. என். சுரேஷ் ராஜன்]

ஆண்டுகாலம் பணியாற்றி, பொற்கால ஆட்சி தந்த பொன்விழா நாயகரே, தமிழக முதல்வரே, (மேசையைத் தட்டும் ஒலி) நட்பின் இலக்கணமாகத் திகழும் மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியப் பெருந்தகை அவர்களே, அருளாளர் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அண்ணன் ஆற்காட்டார் அவர்களே, நாளைய தமிழ் மண்ணை ஆளப்போகும் எங்கள் இதய மன்னர், தளபதியார் அவர்களே, ஏழாவது முறையாக இம்மாமன்றத்தில் சுற்றுலாத் துறைக்கான மானியக் கோரிக்கைகளைத் தாக்கல் செய்யும் மகத்தான வாய்ப்பினை வழங்கிய உங்களை வணங்கி, மானியக் கோரிக்கைகளுக்கான பதிலுரையைத் தொடங்குகிறேன்.

சுற்றுலா என்பது மனிதனின் மனத்தை விரிவுபடுத்தும் சாதனம். சுற்றுலா ஒவ்வொரு பகுதியுமே இயற்கைப் படைப்பின் நூதனம். பொழுதுபோக்கல்ல, செலவல்ல, முதலீடு. விரயம் அல்ல, கிரயம். இன்று உலகம் முழுவதும் சுற்றுலா மாபெரும் பொழுதாக்கம். நாற்பது ஆண்டுகளுக்குமுன்பே வளர்ச்சியை அடைந்து வருகிறது. நம்முடைய சுற்றுலாவின் மேன்மையை தீர்க்கதரிசனத்தால் உணர்ந்தவர், முதல்வர் கலைஞர் அவர்கள். ஆதலால்தான் பூம்புகார் கண்டார். வள்ளுவருக்குச் சிலையும் வள்ளுவருக்கு கோட்டம் கண்டார். கண்டார். பாஞ்சாலங்குறிச்சியில் கோட்டையும் கண்டார்.

பிற்பகல் 1-55

கடற்கரையை எழில்படுத்தும் திட்டங்கள். கலை உலகை செழிக்கச் செய்யும் சட்டங்கள், திறன்மிகு சிற்பங்கள், உயிரோட்டமுள்ள ஓவியங்கள், செம்மாந்து நிற்கும் கட்டடங்கள் என்று முதன்முறையாக முதலமைச்சர் ஆனபொழுதே முனைப்புடன் மும்முரமாய் முயற்சி செய்து சிகரம் போல் தமிழகத்தில் அடுக்கடுக்காய்ப் பணியாற்றி, அழகூட்டி, செழிப்பூட்டி, எழில்கூட்டி, திசையெல்லாம் திரும்பிப் பார்க்கும் நேர்த்தியை ஏற்படுத்தினார். அவர் வழியில், அவர் கை காட்டும் இடங்களில் வியத்தகு வளர்ச்சியை விளைவித்த பாரதத் திருநாட்டில் பல்லோரும் போற்றும்படி இத்துறை செயல்பட்டு வருகிறது.

புராதனச் சின்னங்களைப் போற்றுதல், வரலாற்றுச் சின்னங்களைப் பலப்படுத்துதல், வழிபாட்டுத் தலங்களை மேம்படுத்துதல், மலையக, அலையக, கலையகப் பகுதிகளில் கட்டுமான வசதிகளை உருவாக்கித் தருதல், சாலைகளைச் செப்பனிடுதல், அடிப்படை வசதிகளை அதிகரித்தல், கோடையில் இளைப்பாறக்கூடிய விதத்தில் அதிகம் பேர்

அறியாத மலைப் பகுதிகளைப் பன்னாட்டினரும் அறியும்வண்ணம் பிரபலப்படுத்துதல், அருவிகள், வனங்கள், சரணாலயம், அகழ்வாராய்ச்சி மையங்கள், பண்பாட்டுக் குறியீடுகள் ஆகியவற்றை மாசுபடாமல், மருவு கெடாமல் பாதுகாத்தல் என்று ஏராளமான பணிகளை இத்துறை கடந்த ஓராண்டு காலமாக நிறைவேற்றி வருகிறது.

முடக்கி வைத்த பணிகளை முடுக்கிவிட்டுப் பல்வேறு திட்டங்களுக்கு அரசாணை பல கோடி ரூபாய்க்குப் பிறப்பித்து, குளமாய்த் தேங்கி இருந்த செயல்களை அருவியாய் குதித்தோடச் செய்திருக்கிறோம். அந்நிய நாட்டிலிருந்து திரளாக வருகின்ற பயணிகள் நம் விருந்தோம்பல் உணர்வுகளைக் கண்டு பெருமிதம் அடைந்திட வேண்டும், சுற்றுலாப் பண்பாடு என்பது அனைவரிடமும் பூத்துக் குலுங்கி நந்தவனமாய் நறுமணம் வீச வேண்டும் என்ற அடிப்படையில், 'விருந்தினர் போற்றுதும், விருந்தினர் போற்றுதும்' என்ற புதிய திட்டத்தை சிலம்பு மேல் பற்றுக் கொண்ட நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்களுடைய அறிவுரையின்பேரில் அமைத்திட்டோம். ஆதலால், பலர் உள்ளம் சுற்றுலாவிற்கு உகந்தவாறு சமைத்திட்டோம்.

கன்னியாகுமரியில் ஒலி, ஒளிக் காட்சிப் பணிகளை விரைவுபடுத்துதல்; தஞ்சாவூர் பெரிய கோவிலில் ஒலி, ஒளிக் காட்சிகளில் எழுத்தோவிய வடிவமைப்பை இறுதி செய்தல்; அய்யன் திருவள்ளுவர் சிலையைச் சுற்றிக் கூடுகிற கூட்டத்திற்குக் கூடுதல் வசதிகள் அளித்திட 133 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு.

தூக்குக் கயிற்றின் நுனியில் வீரத்தைக் கக்கிய கட்டபொம்மன் கோட்டையை புதுப்பொலிவுச் செய்திட திட்டம்; தஞ்சை மாநகரில் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகளை அமைத்துத்தர 427 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு; சிலம்பொலித்த மதுரை மீனாட்சி அம்மன் கோவிலைச் சுற்றி வசதிகள் செய்துதர 478 இலட்சம் ரூபாய் ஒப்பளிப்பு; கன்னியாகுமரியில் வசதிகளை மேம்படுத்தி பல்வேறு பணிகளை மேற்கொள்ள 258 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு; புளியஞ்சோலைப் பகுதிகளில் புதுப்பொலிவு சேர்த்திட 97 இலட்சம் ரூபாய் அனுமதி; காஞ்சி திருக்கழுக்குன்றம் சுற்றுலா வட்டத்தை மேம்படுத்துவதற்காக 453 இலட்சம் ரூபாய் நிதியொதுக்கீடு என்று மாபெரும் திட்டங்கள் இப்போது பல்வேறு முறைகளில் இந்தத் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதுபோன்று நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தமட்டிலும் மிக நீளமான கடற்கரையைக் கொண்ட மெரினாவை மெருகேற்றுதல்,





திருவரங்கத்தை மேம்படுத்துதல், ஏலகிரி சுற்றுலாத் தலத்தை ஏற்றம்பெறச் செய்தல், உதகை, முதுமலை ஆகிய பகுதிகளில் சுற்றுச்சூழல் சுற்றுலாவை உருவாக்கி பெருந்திட்டங்கள் மைய அரசு உதவியோடு 20 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படவுள்ளன.

இந்த நிதியாண்டில் கோவை குற்றாலம் பகுதிகளைச் சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வருமளவில் செம்மைப்படுத்துதல்; பிள்ளையார்பட்டி, குன்றக்குடி ஆகிய வழிபாட்டுத் தலங்களிலும் வசதிகளை உருவாக்கித் தருதல்; குற்றாலத்தில் கட்டமைப்பு வசதிகள் செய்து தருதல்; கல்லணைப் பகுதிகளில் மேம்பாட்டுப் பணிகள் செய்தல் ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளன.

இம்மாமன்றத்தில் நான் ஏற்கெனவே அறிவித்தவாறு தமிழக சுற்றுலாத் துறை பல பன்னாட்டுச் சுற்றுலா மேம்பாட்டு முகாம்களில் கடந்த ஆண்டு கலந்துகொண்டு, நம் தமிழகத்தின் அரிய பகுதிகளைப்பற்றியும், செரிந்த கலை-பண்பாட்டுத் தொடர்ச்சிகளைப் பற்றியும் எடுத்துக்கூறி அதன்மூலம் நம் மாநிலத்திற்கு வருகின்ற பயணிகளது எண்ணிக்கைகளை இப்போது அதிகப்படுத்தி இருக்கின்றோம். அதிகப்படுத்திய காரணத்தால்தான் உள்நாட்டுப் பயணிகளுடைய எண்ணிக்கை அதிகமாகி, இப்போது 3 கோடியே 92 இலட்சம் பேர் தமிழகத்திற்கு வருகிறார்கள்.

வெளிநாட்டுப் பயணிகளைப் பொறுத்தமட்டில் 13½ இலட்சம் பேர் நம்முடைய மாநிலத்திற்கு வருகை தருகிறார்கள். இப்போது நம்முடைய மாவட்டத்திற்கு வருகை தருகின்ற வெளிநாட்டுப் பயணிகளுடைய எண்ணிக்கையை ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது இரண்டாவது இடமாகவும், அதுபோன்று உள்நாட்டுப் பயணிகளுடைய எண்ணிக்கைகளைப் பொறுத்தமட்டில் மூன்றாவது மாநிலமாகவும் தமிழகம் இப்போது உயர்ந்திருக்கிறது என்று சொன்னால் பல்வேறு பணிகளைத் தொடர்ந்து இந்தத் துறை செய்து கொண்டிருக்கிறது என்பதால்தான்.

சென்ற நிதியாண்டில் மும்பை, கொல்கத்தா, அலகாபாத், ஜெய்ப்பூர், ஹைதராபாத், டெல்லி ஆகிய இடங்களில் விளம்பர முகாம்கள் நடத்தினோம். சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளில் விளம்பரப் பட்டறைகளை நடத்தி, புலம் பெயர்ந்த தமிழர்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தினோம். சுற்றுலாத் துறையை வளர்ந்து வரும் துறையாகக் கருதி, அதற்குப் பல சலுகைகளை அளிப்பதற்கு அரசு ஆயத்தமாக உள்ளது. இவற்றின்மூலம் சுற்றுலா என்பது ஒரு மாபெரும் தொழிலாக,

[திரு. என். சுரேஷ் ராஜன்] [2007 மே 7

கலை-பண்பாட்டுச் சாதனமாக, எண்ணப் பரிமாற்றமாக, அந்நியச் செலாவணிகளை ஈட்டும் உபாயமாக, மக்களிடம் அன்பையும், பண்பையும் விளைவிக்கும் வயலாக மாறும் என்பதை உறுதியுடன் கூற விரும்புகிறேன். இப்பணிகள் மற்ற முதலீட்டாளர்களுக்கு முன்மாதிரியாகவும், வழிகாட்டியாகவும் இருக்கும்.

*பிற்பகல் 2-00*

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கடந்த ஆண்டில் அபரிமிதமான வளர்ச்சிகளை அடைந்திருக்கிறது. 10 புதிய பேருந்துகள், ஒரு வோல்வா பேருந்து, பல விடுதிகளில் அறைகள் சீரமைப்பு, இதுவரை இல்லாத அளவுக்குச் சுற்றுலாத் தொழில் பொருட்காட்சிகளில் இலாபம், படகுத் துறைகளில் புதிய படகுகள், ஏரிகளின் கரைகளை சீரமைத்து செம்மைப்படுத்துதல் என்று கழக வளர்ச்சிகளில் சுற்றுலாத் துறை பல்வேறு வளர்ச்சிகளை அடைந்திருக்கிறது. இப்படிப் பல்வேறு வளர்ச்சிகளை இந்தத் துறை செயல்படுத்திக்கொண்டிருக்கிறது.

அதேபோன்று, கலை-பண்பாட்டுத் துறையைப் பொறுத்தமட்டில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆணைக்கிணங்க, கலை-பண்பாட்டுத் துறையினுடைய மானியக் கோரிக்கைகளிலும் சில கருத்துகளைக் கூற விரும்புகிறேன். சிற்பம் என்பது நீக்க நீக்க வருவது. ஓவியம் என்பது சேர்க்கச் சேர்க்க வருவது. கலைகள் இல்லா உலகம், அலைகள் இல்லா கடல், வண்ணம் இல்லாத கருப்பு வெள்ளை உலகம், இலக்கியமும், கலையும், கவிதையும், நடனமும், நாட்டியமும், சிலையும், சிற்பமும், ஓவியமும், காவியமும், இசையும், இனிமையும் நம் வாழ்க்கையில் ரசவாதத்தை நிகழ்த்துகின்றன. கல்லாக இருக்கின்ற நாமே சிற்பமாகிவிடுகிறோம். காகிதமாக இருக்கின்ற நாமே கவிதையாகிவிடுகிறோம். ஆதலால்தான் கலையையும், பண்பாட்டையும் பேணிக் காக்கின்ற பெரும் பொறுப்பை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்வசம் முடிந்து வைத்திருக்கிறார்கள். கலையும், பண்பாடும் ஒரு நிமிடமும் தன்னை விட்டு நீங்காமல் வாழ்கின்ற உத்தமத் தலைவர் நம்முடைய கலைஞர் அவர்கள். நம் அடுத்த தலைமுறை கணினியை மட்டும் கண்டு வாழ்க்கையைக் குறுக்கிக்கொள்ளக் கூடாது. நம் பண்பாட்டுச் சாளரங்கள் வழியாகப் பார்வைகளைச் செலுத்துகின்ற வாய்ப்பை அவர்களுக்கு நாம் வழங்கியாக வேண்டும். தமிழகத்தின் மூலைமுடுக்குகளில் எல்லாம் இசையினாலும், கலையினாலும் நிரம்பி வழிந்த காலம் ஒன்று உண்டு. உதிர்கின்ற ஒவ்வொரு சொல்லுமே சொலவடையாக உருமாறுகிற மொழி வளம் நம்மிடம் இருந்தது.



2007 மே 7] [திரு. என். சுரேஷ் ராஜன்]

மறுபடியும் அதை மீட்டெடுத்து நமக்குள்ளே குழலும், யாழும் ஒலிக்கும் உன்னதத்தை நிகழ்த்துவதுதான் கலை-பண்பாட்டுத் துறையினுடைய உயரிய நோக்கமாகும்.

இயல், இசை, நாடக மன்றங்கள்மூலமாக கலைஞர்களை ஊக்குவித்தல், கலை நிகழ்ச்சிகளை நடத்துதல், நலிந்த கலைஞர்களுக்கு ஊக்கத் தொகை கொடுத்து ஊன்றுகோலாக இருத்தல், ஆக்கபூர்வமான செயல்களுக்கு உதவித் தொகை வழங்குதல் ஆகிய பணிகளை இந்த அரசு, இதுவரை இல்லாத அளவுக்கு, பெருமளவு செய்து வருகிறது. சென்ற ஆண்டு இந்த மாமன்றத்தில் அறிவித்ததற்கிணங்க, நலிந்த கலைஞர்களுக்கான உதவித் தொகையை இரட்டிப்பாக்கி, ஆயிரம் ரூபாயாக அறிவித்து அரசாணை பிறப்பித்ததற்கிணங்க, மேலும் 500 கலைஞர்களுக்கு புதியதாக வழங்கியும், அவர்களது வாழ்க்கையில் ஒளியேற்றி இருள் அகற்றி, நம்பிக்கை வெளிச்சத்தைப் பாய்ச்சியிருக்கிறோம்.

இத்துறையின்மூலமாக பல புதிய முயற்சிகள், கலையிலும், இலக்கியத்திலும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்த நிதியாண்டிலும், கலை-பண்பாட்டுத் துறை எண்ணற்ற பரிசோதனை முயற்சிகளையும், திருப்புமுனை செயலாக்கத்தினையும் மேற்கொள்ளவிருக்கிறது. அதேபோன்று, இங்கு பேசிய சட்டமன்ற உறுப்பினர்கள் பல்வேறு கருத்துகளை, அரிய பெரிய கருத்துகளை எடுத்துக் கூறினார்கள். அவர்களுடைய கருத்துக்களை எல்லாம் நிச்சயமாக இந்தத் துறை கவனத்தில் ஏற்றுக்கொண்டு, வருங்காலத்தில் ஒரு குறையும் இல்லாமல், நம்முடைய மாநிலத்தை மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, முதல் மாநிலமாக விளங்கக்கூடிய அளவிற்கு, இந்தத் துறை பணிகளை மேற்கொள்ளும் என்ற உறுதியை இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேநேரத்தில், சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. கணபதி அவர்கள் ஒருசில குறைகளையும் எடுத்துச் சொன்னார்கள். அதற்கான பதிலை மட்டும் நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அவருடைய அம்மா ஆட்சிக் காலத்தில் அதிகமான நிதியை ஒதுக்கியது போலவும் கலைஞருடைய ஆட்சிக் காலத்தில் குறைவான நிதி ஒதுக்கப்பட்டது போலவும் எடுத்துக் கூறினார்கள். கலைஞருடைய ஆட்சிக் காலத்தில், சுமார் ஓராண்டுக்கு மட்டும், கடந்த ஆண்டு 63.57 கோடி ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

[திரு. என். சுரேஷ் ராஜன்] [2007 மே 7

அதேபோன்று, கடந்த காலத்தில்தான் இந்தத் துறைக்கு விருதுகள் கிடைத்தன என்றும், இப்போது அந்த விருதுகள் கிடைக்காத அளவிற்குத் துறை, பின்தங்கி இருக்கின்றது என்றும் எடுத்துக் கூறினார்கள். 2007 ஆம் ஆண்டு மாமல்லபுரம், பாரம்பரிய சுற்றுலாத் தலங்களைச் சிறப்பாக மேம்படுத்த, சுற்றுலாப் பயணிகளை அதிக அளவு ஈர்த்திட முயற்சிகளை மேற்கொண்டதற்காக PATWA விருதுக்கு தமிழகம் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது என்ற செய்தியையும் இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று அ.தி.மு.க. ஆட்சியில் அதிகமான இலாபம் ஈட்டியதைப் போலவும், ஏதோ திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிகளில் இலாபம் இல்லாததைப் போலவும் எடுத்துக் கூறினார்கள். கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில், சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினுடைய வரலாற்றிலேயே அதிக நஷ்டத்தை சந்தித்தது, 1995-96 ஆம் ஆண்டு மட்டும் 90 இலட்சம் ரூபாய் நஷ்டத்தை ஈட்டியது. ஆனால், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் 1996-97 ஆம் ஆண்டு இலாபத்தை ஈட்டத் தொடங்கியது. அதன்படி சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 43 இலட்சத்தை இலாபமாக ஈட்டியிருக்கிறது.

பிற்பகல் 2-05

2006-2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக வரலாற்றிலேயே அதிக அளவு ரூ.438 இலட்சம் இலாபத்தை ஈட்டியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று 2005-2006 ஆம் ஆண்டிலும் இலாபத்தை ஈட்டி இருக்கிறது. ஆனால், சுற்றுலாத் துறையினுடைய வரலாற்றை ஒப்பிட்டுப் பார்க்கும்போது 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.438 இலட்சம் இலாபம் ஈட்டி இருக்கிறது என்ற செய்தியையும் இந்த நேரத்திலே கூறிக்கொள்கிறேன்.

பல்வேறு அறிவிப்புகள், புத்தகமாக இந்தத் துறையின் சார்பாக, இங்கே அனைத்து மாமன்ற உறுப்பினர்களுக்கும் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அந்த அறிவிப்புகளை எல்லாம் @ நான் இந்த அவையில் படித்ததாகக் கருதி பதிவு செய்துகொள்ள வேண்டும் என்றும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

@ 334 முதல் 341 வரையிலான பக்கங்களில் இணைப்பு VI ஆக அச்சிடப்பட்டுள்ளது.



2007 மே 7] [திரு. என். சுரேஷ் ராஜன்]

பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள், இங்கே நேரடியாக என்னிடத்திலே பல கோரிக்கைகளையும் தந்து இருக்கிறார்கள். குறிப்பாக, எதிர் வரிசையிலே அமர்ந்திருக்கின்ற ஸ்ரீபெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் திருமதி யசோதா அவர்களும், வால்பாறை சட்டமன்ற உறுப்பினர் திரு. கோவை தங்கம் அவர்களும், அதேபோன்று ராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு. அப்பாவு மற்றும் பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்களும் பல்வேறு கோரிக்கைகளைத் தந்திருக்கிறார்கள். இந்தத் துறையைப் பொறுத்தமட்டில் உங்களுடைய கோரிக்கைகளையெல்லாம் நிச்சயமாக எங்களுடைய துறையினுடைய அதிகாரிகள் கருத்திலே எடுத்துக்கொண்டு பல்வேறு பணிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். நிச்சயமாக உங்களுடைய கோரிக்கைகள் எல்லாம் இந்தத் துறை நிறைவேற்றக்கூடிய அளவுக்கு பணிகளை மேற்கொள்ளும். நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள்கூட என்னிடத்தில் நேரடியாக இந்தத் துறையை முதல் இடத்தில் கொண்டுவரக்கூடிய அளவுக்கு உன்னுடைய பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று என்னிடம் கட்டளையிட்டிருக்கிறார்கள். எனவே, அவர்களுடைய கட்டளையை நிறைவேற்றுகின்றபோது நிச்சயமாக உங்களுடைய கோரிக்கைகளெல்லாம் அதில் அடங்கக்கூடிய அளவிற்கு, இந்தத் துறை பணிகளை மேற்கொள்ளும். நீங்கள் கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை எல்லாம் முழுவதுமாக படித்துப் பார்த்து இருக்கின்றேன். எனவே, அந்த வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் திரும்பப் பெற்று, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டும் என்று அன்போடு கேட்டு, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா அவர்கள் பேசும்போது ** முலாயம்சிங் யாதவ் என்று அந்த வார்த்தையைச் சொல்லி இருக்கிறார். அந்த ** என்கிற வார்த்தை அவைக்குறிப்பில் இருந்து நீக்கப்படுகிறது.

அடுத்தாற்போல, மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. கோபாலன் அவர்கள் பேசும்போது ** என்று அந்த வார்த்தையைச் சொல்லி இருக்கிறார். அந்த நிலம் சம்பந்தப்பட்டவைபற்றி நீதிமன்றத்திலே வழக்கு இருப்பதால் அந்த வார்த்தை அவைக்குறிப்பில் இருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) சொல்லுங்கள், இப்போது மணி 2-07. திரு. சி. ஞானசேகரன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2007 மே 7

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாரப் பத்திரிகை நிருபர்களுக்கு Accreditation card கொடுக்க வேண்டும் என்ற ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். தினப் பத்திரிகையாளர்களுக்கு எப்படிக் கொடுக்கிறார்களோ, அதேபோல மாண்புமிகு அமைச்சர் அவர்கள், வாரப் பத்திரிகை நிருபர்களுக்கும் Accreditation card கொடுப்பதற்கு முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

***திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொங்கு மண்டலத்திலே முதல் சுதந்திரப் போராட்ட வீரன், தீரன் சின்னமலையினுடைய நினைவாகக் கொண்டாடப்படுகிற விழாவிற்கு, நிரந்தர ஆணையை வழங்கிய நம்முடைய அமைச்சர் அவர்களுக்கும், முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், எங்களுடைய நெஞ்சார்ந்த நன்றியை ஈரோடு மாவட்ட மக்கள் சார்பிலும், கொங்கு மண்டல மக்கள் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் வாரப் பத்திரிகையைச் சார்ந்த நிருபர்களுக்கு Accreditation card கொடுக்கப்படுமா என்று கேட்டார். அது பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட அளவிலே இருக்கின்ற பத்திரிகையாளர்களுக்கு இலவச பஸ் பாஸ் தரப்படுகின்றது. இது தாலுகா அளவில் இருக்கின்ற பத்திரிகையாளர்களுக்கும் தரப்படுமா என்பதனைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா சமூக அமைப்பிலும் சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்குச் சிலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. வீரபாண்டிய கட்டபொம்மன் படையிலே இருந்த அருந்ததியர் சமுதாயத்தைச் சார்ந்த வீரன் ஒண்டிமுத்து அவர்களுக்கு எதிர்காலத்தில் ஏதாவது ஒரு நினைவுச் சின்னம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.



2007 மே 7]

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு உறுப்பினர் பாலபாரதி அவர்களுடைய கருத்தை கவனத்தில் கொண்டு எதிர்காலத்தில் அது பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட அயர்லாந்தில் பிறந்து, இலண்டனில் படித்து, இந்தியாவிற்கு வந்து தமிழகத்தில் தென் மாவட்டமான திருநெல்வேலியிலே இடையன்குடியிலே தமிழையும் கற்று தமிழுக்குப் பெருமையும் சேர்த்த கால்டு வெல் ஐயா அவர்களுக்கு, அவர் வாழ்ந்த இடையன்குடி வீட்டை நினைவுச் சின்னமாக, மாண்புமிகு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரோடு கலந்து பேசி அறிவிப்பதாக அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், இந்த அரசுக்கும் நன்றிகூறி அமர்கிறேன்.

பிற்பகல் 2-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. (குறுக்கீடு) திரு. பெ.சு. விஜயகுமார், என்ன, சொல்லுங்கள். ஒவ்வொருவராக எழுந்து கொண்டிருந்தால் பேரவையை எப்பொழுது முடிக்க முடியும்? சொல்லுங்கள்.

***திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 8 மாவட்டங்களிலே பெரும்பான்மையாகவுள்ள மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சமுதாயத்தினரின் தலைவராக விளங்கிய இராமசாமி படையாச்சியார் அவர்களுக்கு அரசு விழாவாக அறிவிக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருந்தேன். அதை அரசு கனிவோடு பரிசீலிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள். விவாதம் முடிவுற்றது. இப்பொழுது வாக்கெடுப்பு.

## (அ) கோரிக்கை எண் 29 - சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 29-சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை), வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறுகின்றனவா என அறிய விரும்புகின்றேன்.

[பேரவைத் தலைவர்] [2007 மே 7

*(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)*

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.65,18,85,000/-, மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.13,89,01,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

## (ஆ) கோரிக்கை எண் 28–செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 28-செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை), வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறுகின்றனவா என அறிய விரும்புகின்றேன்.

*(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)*

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.33,42,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.87,60,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



2007 மே 7] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

## (இ) கோரிக்கை எண் 30–எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 30-எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை), வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறுகின்றனவா என அறிய விரும்புகின்றேன்.

*(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)*

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.65,33,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.8,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

## 7. அரசினர் தீர்மானம்

### விதி 32-ஐத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாளை, 8-5-2007 அன்று வினாக்கள்-விடைகள் நேரம் ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையில் முதல் ஒருமணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ, 8-5-2007 (செவ்வாய்க்கிழமை) அன்று தளர்த்தி, அந்நேரம் அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை (8-5-2007) வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (8-5-2007) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-13 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

82. 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் விதிகளில் திருத்தம் செய்தது குறித்து உள் (போ.வ.V) துறையின் 6-12-2006 ஆம் நாளிட்ட





1170 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1988 ஆம் ஆண்டு இயக்கூர்திகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 59/1988) 212 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

222. மானியக் கோரிக்கை எண் 29-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2007-2008. (தமிழ், ஆங்கிலம்)

223. மானியக் கோரிக்கை எண் 29-சுற்றுலா (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2007-2008. (தமிழ், ஆங்கிலம்)

224. மானியக் கோரிக்கை எண் 28-செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2007-2008. (தமிழ், ஆங்கிலம்)

225. மானியக் கோரிக்கை எண் 30-எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2007-2008. (தமிழ், ஆங்கிலம்)

226. எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை பற்றிய "மக்கள் சாசனம்". (தமிழ், ஆங்கிலம்)

227. உயர் கல்வித் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2007-2008. (தமிழ்)

228. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்று வாரியத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2007-2008. (தமிழ்)

229. இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2007-2008. (தமிழ்)

230. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் குறித்த சிறு நூல். (தமிழ்)

231. தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் குறித்த சிறு நூல். (தமிழ்)

232. கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களில் வழங்கப்படும் கடன்களுக்கு வட்டி கணக்கீடு செய்யும் முறை தொடர்பான விளக்கம் குறித்த சிறு நூல். (தமிழ்)



## இணைப்பு-I

*(100 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## மானியக் கோரிக்கை எண் 29–சுற்றுலா

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2007–2008

மனிதகுலம் அறிந்த உலகின் மிகப் பழமையான தொழில்களில் சுற்றுலாவும் ஒன்று. மேலும் மக்களின் மனமகிழ்வுக்கு மூலக்கூறாக சுற்றுலா இருப்பதால்தான் இன்றைய முன்னணித் தொழில் பிரிவுகளான தகவல் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள், வாகன உற்பத்தி போன்றவற்றிற்கு இணையான வளர்ச்சியை சுற்றுலா பெற்று வருகிறது. இத்துடன் மிகக் குறைந்த செலவில், எந்தவொரு சாதாரண மனிதனும் புத்துணர்வு பெறும் அனுபவத்தைச் சுற்றுலா வழங்குகிறது. 2006-2007ஆம் ஆண்டில் மனிதர்களால் உருவாக்கப்பட்ட இடையூறுகள் மற்றும் இயற்கைப் பேரிடர்கள் மிகக் குறைந்த அளவில் மட்டுமே நிகழ்ந்ததால், அந்த ஆண்டில் சுற்றுலா மிகப் பெரிய வளர்ச்சியைக் கண்ட ஆண்டாக அமைந்துவிட்டது. இயற்கை இடர்கள் மனித சக்திக்கு அப்பாற்பட்டவைதான்; ஆனால், சுற்றுலாவின் வளர்ச்சிக்கு மனிதர்களால் உருவாக்கப்படும் தடைகளை முழுமையாகத் தடுக்க முடியாவிட்டாலும், குறைந்தபட்சம் அவற்றைக் கட்டுப்படுத்தவாவது முடியும். உலகின் சில பகுதிகளில் நிகழ்ந்த பயங்கரவாத நடவடிக்கைகளைத் தவிர, வேறு எந்தவித பெரிய தொல்லையும் கடந்த ஆண்டில் சுற்றுலாவிற்கு ஏற்படவில்லை. 2007-2008 ஆம் ஆண்டும் இதுபோன்றே சுற்றுலாவிற்கு உகந்த ஆண்டாக இருக்கும் என்ற நம்பிக்கை உள்ளது. சாதி, மத, இன வேறுபாடின்றி சகோதரத்துவத்துடன் மக்கள் அமைதியான வாழ்க்கை நடத்துவதன் மூலமே இது சாத்தியமாகும்.

**உலக அளவில் சுற்றுலா :**

உலக நாடுகள் அனைத்திலும் அந்த நாட்டின் ஆட்சி அமைப்பு எந்த வகையாக இருந்தாலும் அந்தந்த நாடுகளின் சிறப்பான கவனத்தைச் சுற்றுலா தொடர்ந்து பெற்று வருகிறது. பயணமும், சுற்றுலாவும் உலகின் மிகப் பெரிய தொழில் குழுமங்களில் ஒன்றாக அதிவேகத்துடன் வளர்ந்து வருகிறது. அவை 21 ஆம் நூற்றாண்டில் உலகின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 11 சதவிகிதத்தையும்,

[2007 மே 7

200 மில்லியன் வேலைவாய்ப்புகளையும் உருவாக்கி, மிகப் பெரிய தனித் தொழில் பிரிவாக மாறிவரும் என்று பரவலாக கணிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாகவே ஒவ்வொரு நாடும், "வந்தவுடன் விசா" வழங்குவது போன்ற 'Visa on Arrival' நல்லிணக்க நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துவதில் போட்டி போட்டு வருகின்றன. சுற்றுலாவிற்கு எல்லை வானமல்ல, அதைத் தாண்டிய விண்வெளிதான் என்பார்கள். ஆனால், 2006 ஆம் ஆண்டில் "அனுஷே அன்சாரி" என்ற பெண் அந்த விண்வெளியையும் எளிதாக ஊடுருவி 'முதல் விண்வெளி பெண் பயணி' என்ற பெருமையைப் பெற்றுவிட்டார். மிகச் சிறிய நாடுகளும் அதிக அளவிலான அந்நியச் செலாவணியை ஈட்ட சுற்றுலா துணை புரிகிறது. துருக்கி நாட்டின் சுற்றுலாத் தொழில் மதிப்பு ஆண்டு ஒன்றுக்கு 10 பில்லியன் பவுண்டுகள் இதற்குச் சான்றாகத் திகழ்கிறது. ஆண்டுதோறும் 2 மில்லியன் இங்கிலாந்து நாட்டினர் துருக்கி நாட்டுக்கு வந்து செல்கிறார்கள். இங்கிலாந்து இந்தியாவையும், சீனாவையும் முக்கிய பயணச் சந்தைகளாகக் கருதுகிறது. உலகின் மிகச் சிறந்த 10 கடற்கரைகளில் அந்தமான் கடற்கரை முதன்மையானது என ஜெர்மானிய வல்லுநர் ஒருவர் தெரிவிக்கிறார்.

**இந்தியாவில் சுற்றுலா :**

**2006 ஆம் ஆண்டில், அதிக அளவிலான வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை ஈர்த்த இந்தியாவின் சாதனை:**

வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளைப் பொறுத்தவரை, 2006 ஆம் ஆண்டில் 13.0 சதவீத வளர்ச்சியை இந்தியா பெற்றுள்ளது. 2005 ஆம் ஆண்டில் வருகை தந்த வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் 3.92 மில்லியன் என்றிருந்த எண்ணிக்கை 2006 ஆம் ஆண்டில் 4.43 மில்லியன் வரை உயர்ந்துள்ளது. சுற்றுலா மூலமான அந்நியச் செலாவணியின் வருவாயும் 2005 ஆம் ஆண்டில், ரூபாய் 25,172 கோடி என்ற அளவு, 2006 ஆம் ஆண்டில் ரூபாய் 29,604 கோடியாக அதிகரித்து 17.6 சதவீத அளவிற்கு உயர்ந்துள்ளது.

அண்மையில் உலகச் சுற்றுலா நிறுவனம் வெளியிட்ட புள்ளி விவரப்படி கடந்த ஆண்டில் உலக அளவில் சுற்றுலா மேற்கொண்ட பயணிகளின் எண்ணிக்கை 842 மில்லியன் ஆகும். இதில் இந்தியாவின் பங்கு 0.52% ஆகும். சிங்கப்பூர் போன்ற மிகச் சிறிய நாடுகளுக்குச் செல்லும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை இருமடங்கு அதிகரித்துள்ளது என்றாலும் சிங்கப்பூரில் சுற்றுலாப் பயணி ஒருவர் தங்கும் கால அளவு சராசரியாக 4.2 நாட்கள் மட்டுமே. ஆனால்,



2007 மே 7]

இந்தியாவைப் பொறுத்தவரை, சுற்றுலாப் பயணிகள் தங்கிச் செல்லும் கால அளவு 26 நாட்கள் என்று அதிகாரபூர்வக் குறிப்பு ஒன்று தெரிவிக்கிறது. இந்தியச் சுற்றுலாத் தொழில் அமைப்பின் குறிப்புப்படி இது 12 நாட்களாகும்.

2006 ஆம் ஆண்டு நடைபெற்ற உலகப் பயணச் சந்தையில், உலகப் பயண விருதுகள் நான்கினை, இந்தியச் சுற்றுலா பெற்றபோது அனைவரின் பார்வையும் இந்தியாவின்மீது விழுந்தது. "ஆசியாவின் முன்னணி பயணச் செல்லிடம்", (Asia's Leading Destination) "ஆசியாவின் முன்னணிச் சுற்றுலா மற்றும் பாரம்பரிய அமைப்பு" (Asia's Leading Tourism & Convention Bureau), 'கற்பனைக்கெட்டா இந்தியா' (Incredible India) பிரச்சாரத்திற்காக "உலகின் முன்னணி செல்லிடம் தொலைக்காட்சி வர்த்தக விளம்பரம்" (The World's Leading Travel Destination, TV Commercial), Endogenous சுற்றுலாத் திட்டத்திற்காக "உலக முன்னணி பொறுப்புமிக்க சுற்றுலாத் திட்டம்" (World's Leading Responsible Tourism Project) என்பவை இந்த நான்கு விருதுகள்.

தாஜ்மகால், நாடு முழுவதும் பரந்து நிற்கும் செழுமையான பாரம்பரியமிக்க பண்பாடு, கம்பீரத் தன்மை கொண்ட இமயமலை, புத்தமத அடிச்சுவட்டின் யோகம், ஆயுர்வேதம், தியானம் போன்ற சிறப்புக்களின் காரணமாக 'செல்லிடம் இந்தியா' (Destination India) என்னும் சுற்றுலாத் திட்டம் மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றுள்ளது.

இந்திய சுற்றுலா கூட்டம், ஊக்கம், மாநாடு, கண்காட்சி Meetings, Incentives, Conventions & Exhibitions (MICE) போன்ற மற்ற பிரிவுகளிலும் கவனம் செலுத்தி வருகிறது. ஐதராபாத்தில் உள்ள பன்னாட்டுக் கூட்ட மையம் (International Convention Centre) போன்ற உலகத் தரம்வாய்ந்த கூட்ட மையங்களைப் பெற்றிருப்பதோடு சுற்றுலா வளர்ச்சிக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் கொண்ட சிறந்த தலமாக இந்தியா விளங்குகிறது.

நமது நாட்டின் முக்கிய கருவூலமாகத் திகழும் கிராமப்புற இந்தியா, இன்றும் சுற்றுலாப் பயணிகளின் கவனத்தை அதிக அளவில் ஈர்க்கிறது. எனவே, கிராமப்புறச் சுற்றுலாத் திட்டம், 20 மாநிலங்களில் 36 கிராமப்புறப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இங்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட கைவினைஞர்கள் நம் நாட்டுக்கே உரித்தான செழுமை வாய்ந்த கலை மற்றும் கைத்திறன் படைப்புகளை வெளிப்படுத்தி வருகிறார்கள்.

[2007 மே 7

**தமிழ்நாட்டில் சுற்றுலா :**

பல்வேறு சிறப்புக்களில் இந்தியாவின் நட்சத்திர மாநிலமாக, அதிலும் குறிப்பாக சுற்றுலாப் பயணிகளின் பார்வையில் மேலும் சிறப்பாகத் தமிழ்நாடு திகழ்கிறது. கற்றோர், கல்லாதோர், இருப்போர், இல்லாதோர் போன்ற எல்லாவிதமான சுற்றுலாப் பயணிகளுக்கும் தமிழ்நாடு, ஏதாவது ஒன்றை வழங்குகிறது. சுற்றுலாப் பயணிகள் எனப்படுவோர் ஆண், பெண் என்ற தனித்தனி பால் இனத்தவராகவும், வெவ்வேறு வயதுடையவராகவும், சமூகத்தின் பலதரப்பட்டவராகவும் இருக்கிறார்கள். இதன் காரணமாக சுற்றுலாப் பயணிகள் ஆண்டு முழுவதும் தமிழ்நாட்டிற்கு வருகை தந்த வண்ணம் உள்ளனர்.

விரிந்த கடற்கரைகள், விழுகின்ற அருவிகள், எழுச்சிமிகு ஆலயங்கள், கொண்டாட்டம் நிறைந்த ஆலயத் திருவிழாக்கள் போன்றவற்றைக் காண்பதில் உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். இவர்கள் பெரும்பாலும் ஒரே நாளில் தங்களது சுற்றுலாப் பயணத்தை முடித்துக் கொள்கிறார்கள் அல்லது தங்கள் பயணத்திற்கான நாட்களாக சனி, ஞாயிறு போன்ற வார இறுதி நாட்களைத் தேர்ந்தெடுக்கின்றனர்.

தமிழ்நாடு நீங்கலாக மற்ற மாநிலங்களில் இருந்து வரும் தேசிய சுற்றுலாப் பயணிகள், குறிப்பாக வட மாநிலங்களிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகள், தமிழ்நாடு முழுவதையும் கண்டுகளிக்க விரும்புகிறார்கள். இவர்கள் பொதுவாக, உயிரியல் பூங்காக்கள், வன விலங்குக் காப்பகங்கள், வணிக மையங்கள் போன்றவற்றிற்கு அதிகம் செல்ல விரும்புகிறார்கள். இவர்கள் இரு வார இறுதி நாட்களை இணைத்துக்கொண்டு, ஒரு வார காலத்திற்கு தமிழ்நாட்டில் சுற்றுலாப் பயணத்தை மேற்கொள்ள விரும்புகிறார்கள். வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளோ வரலாற்று நினைவுச் சின்னங்கள், பாரம்பரியத்துவம் மிக்க இடங்கள், சுற்றுச்சூழல் பாதுகாப்பிடங்கள், கிராமியச் சுற்றுலா இடங்கள் போன்றவற்றைக் காண்பதில் விருப்பம் காட்டுகின்றனர். இவர்கள் குறைந்தது 15 நாட்கள் முதல் 30 நாட்கள் வரை இந்தியாவில் தங்கிச் செல்கின்றனர். இந்த நாட்களில் குறைந்தது ஒரு வாரம் இவர்கள் தமிழ்நாட்டில் தங்கிச் செல்வதில் தயக்கம் காட்டுவதில்லை.

மேலே கூறப்பட்ட தமிழ்நாட்டின் அரும்பெரும் சுற்றுலாச் செல்வங்களே தமிழ்நாட்டின் மிகப் பெரிய கருவூலங்கள் என்பதில் ஐயமில்லை. சுற்றுலாச் செல்வங்கள் எனப்படுபவை, இயற்கையாக இருக்கலாம்; மனிதர்களால் உருவாக்கப்பட்டவையாக இருக்கலாம்.



2007 மே 7]

ஆனால், அவை மட்டுமே முழுமையான அம்சம் என்று கருதிவிட முடியாது. பல ஆண்டுகளாக சுற்றுலாப் பயணிகளிடம் மேற்கொள்ளப்பட்ட தொடர்பின் காரணமாக, சுற்றுலாத் தலங்களில் அடிப்படை வசதிகளை சுற்றுலாப் பயணிகள் அவசியமாக எதிர்பார்க்கிறார்கள் என்பதை சுற்றுலாத் துறை உணர்ந்தது.

சுற்றுலா தொடர்பான விருந்தோம்பலில் தமிழ்நாடு 2006-2007 ஆம் ஆண்டில் சமச்சீரான நிலையில் தொடர்ந்து இருந்து வருகிறது. தமிழ்நாட்டை நோக்கிச் சுற்றுலாப் பயணிகளை அதிக அளவில் ஈர்த்தல், தமிழ்நாட்டில் அவர்களை அதிக நாட்கள் தங்கியிருக்கச் செய்தல், உலகத் தரம்வாய்ந்த அடிப்படை வசதிகளை அவர்களுக்கு ஏற்படுத்தித் தருதல் போன்ற முப்பெரும் திட்டங்களைச் சுற்றுலாத் துறை முனைப்பாகச் செயல்படுத்தி வருகிறது.

சுற்றுலாச் சந்தைகளின்மூலம் ஏற்படும் சவால்களைச் சமாளிக்க சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் பாரம்பரிய முறைகள், போட்டிகள் நிறைந்த இந்த சூழலில் போதுமானதாக இல்லை என்பதை உணர்ந்து, மதுரையிலிருந்து ஹெலிகாப்டர் சேவை, பழவேற்காட்டில் படகுச் சேவை (புலிக்காட் ஏரி), மாமல்லபுரத்தில் நகர்ப்புறக் கண்காட்சித் திடல் போன்ற புதுமையான பல திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை சுற்றுலாத் துறை ஆராய்ந்து வருகிறது. எதிர்வரும் ஆண்டுகளில், சென்னைக்கான சிறப்பு விற்பனை அம்சங்களை மையப்படுத்தி, சென்னையின் தனித்தன்மையை வெளிக்காட்டும் திட்டங்களுக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன.

புதுமையும், பழமையும் இணைந்த அழகுக் கலவை, மிகச் சிறப்பான இணையத் திறன், உயர் கல்வியறிவு பெற்ற மனித உழைப்புத் திறன், தொழில்நுட்பங்களுக்கான அடித்தளம் போன்ற உலக மாநகரமாக மாறுவதற்குத் தேவையான திறன்களை சென்னை பெற்றுள்ளது. எந்தவித பயங்கரவாத நடவடிக்கைகளும் அற்ற அமைதியான சூழலை, தமிழ்நாடு சுற்றுலாப் பயணிகளுக்குத் தொடர்ந்து அளித்து வருகிறது. தகவல் தொழில்நுட்பம், மருத்துவம், வாகனங்கள் உற்பத்தி, தொலைத்தொடர்பு, வங்கிகள் போன்ற வசதிகள் தமிழ்நாட்டில் இருப்பதால் தொழில் முனைவோர், தமிழ்நாட்டைக் கண்டுகளிக்க விரும்புகின்றனர். சுற்றுலாவை மேலும் மேம்படுத்துவதற்கான புதிய திட்டங்களை வடிவமைப்பதற்கு அரசு வழங்கி வரும் ஆதரவு மற்றும் வழிகாட்டும் தன்மை காரணமாக, "தமிழ்நாடு சுற்றுலா" வருங்காலத்தில் மிகப் பெரியதொரு வெற்றி இலக்கை அடைய உள்ளது.

**சுற்றுலாப் பயணிகளின் வருகை :**

தமிழ்நாட்டில் பயணம் மேற்கொண்ட சுற்றுலாப் பயணிகள் தொடர்பான ஒரு புள்ளி விவரம்:

| ஆண்டு | உள்நாட்டினர் (இலட்சத்தில்) | வெளிநாட்டினர் (இலட்சத்தில்) | மொத்தம் (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 2002 | 246.61 | 8.05 | 254.66 |
| 2003 | 270.59 | 9.02 | 279.61 |
| 2004 | 300.77 | 10.58 | 311.35 |
| 2005 | 323.39 | 11.79 | 335.18 |
| 2006 | 392.14 | 13.35 | 405.50 |

சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்ததன் காரணமாக, வெளிநாட்டுப் பயணிகளை ஈர்த்ததில், இந்தியாவிலேயே தமிழ்நாடு இரண்டாம் இடத்தையும், உள்நாட்டுப் பயணிகளை ஈர்த்ததில், இந்தியாவிலேயே தமிழ்நாடு மூன்றாம் இடத்தையும் அடைய முடிந்தது. 2005 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின்மூலம், இந்த நிலையை அறிய நேர்ந்தது. **உள்நாட்டு, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகையில் முதலிடத்தைப் பெறுவது என்பதே தமிழ்நாடு சுற்றுலாவின் முடிவான குறிக்கோளாகும்.**

**தமிழ்நாட்டில் சுற்றுலாப் பயணிகள் தங்கிச் செல்லும் கால அளவு:**

உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் தமிழ்நாட்டில் தங்கிச் செல்லும் கால அளவு சராசரியாக 4-லிருந்து 5 நாட்களாகும். வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளோ, 7 நாட்கள் வரை தங்கிச் செல்கிறார்கள். இவ்வாறு தங்கிச் செல்லும் உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் செலவிடும் தொகை நாளொன்றுக்கு ரூ.711/-. வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் செலவிடும் தொகை ரூ.2,252/-. இதன்மூலம் தமிழ்நாடு 2006 ஆம் ஆண்டில், அந்நியச் செலாவணிக்கு ரூ.3,020 கோடி பங்களித்துள்ளது.

**தமிழ்நாட்டின் சுற்றுலா வகைகள்:**

தமிழ்நாட்டில் சுற்றுலா என்பது உள்நாட்டளவில் (தமிழ்நாட்டிற்குள்ளேயே) தேசிய அளவில் (இந்தியாவின் மற்ற மாநிலங்களிலிருந்து வந்து தமிழகத்தில் மேற்கொள்ளும் சுற்றுலா) வெளிநாடுகளிலிருந்து தமிழகம் வந்து செல்லும் சுற்றுலா என்று மூன்று



விதங்களாக வகைப்படுத்தப்படுகிறது. சுற்றுலாப் பயணிகளைப் பொதுவாக பின்வருமாறு இருவகைப்படுத்தலாம்: (அ) தமிழ்நாட்டின் சுற்றுலா வளங்களைக் கண்டுகளிக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் வந்து செல்பவர்கள் (ஆ) வழிபாடு, வணிகம், மருத்துவச் சிகிச்சை போன்ற நோக்கங்களுடன் சுற்றுலாவையும் இணைத்து வந்து செல்பவர்கள்.

**தமிழ்நாட்டிற்குள் நிலவும் பல்வேறு வகைச் சுற்றுலாக்கள்:**

**(அ) பொழுதுபோக்குச் சுற்றுலா:** பொழுதுபோக்கிற்காக தமிழ்நாட்டின் சுற்றுலா மையங்களுக்கு வந்து செல்லும் சுற்றுலாப் பயணிகள் இவர்கள். இவர்கள்தான் அதிக அளவில் இருக்கிறார்கள். இவர்கள் பொதுவாக மலைவாழிடங்கள், கடற்கரைப்பகுதி வளாகங்கள், அருவிகள், உயிரியல் பூங்காக்கள், பறவைகள் சரணாலயங்கள், தாவரவியல்/தோட்டக்கலைப் பூங்காக்கள் போன்ற இடங்களையே சுற்றிப் பார்ப்பவர்கள்.

**(ஆ) ஆன்மீகச் சுற்றுலா:** தமிழ்நாட்டிற்கு அதிக எண்ணிக்கையில் வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகள் என்ற வகையில் அடுத்த இடத்தைப் பிடிப்போர் சமய வழிபாட்டாளர்களாவர். இவர்கள், தங்களின் மத நம்பிக்கைக்குரிய வழிப்பாட்டு இடங்களுக்குச் செல்கின்றனர். அதே நேரத்தில் இவர்கள், மற்றவர்களின் மத நம்பிக்கைக்குரிய வழிபாட்டு இடங்களுக்கும் செல்கின்றனர்.

**(இ) பாரம்பரியச் சுற்றுலா:** தமிழ்நாட்டில் மாமல்லபுரம், தஞ்சாவூர், கங்கைகொண்டசோழபுரம், தாராசுரம் மற்றும் நீலகிரி மலை இரயில் ஆகியவற்றை உலகப் பாரம்பரிய மையத்தின் நினைவுச் சின்னங்களாக, யுனெஸ்கோ அறிவித்திருப்பதிலிருந்து, தமிழ்நாடு பராம்பரியச் செல்வங்கள் நிறைந்த மாநிலம் என அனைவராலும் அறிய முடிகிறது. இத்துடன் எண்ணிலடங்கா பாரம்பரிய மையங்கள் தமிழ்நாட்டில் உள்ளன. தமிழ்நாட்டிலுள்ள 47 நகரங்களை அவற்றின் விலைமதிப்பற்ற பாரம்பரியத்தன்மை காரணமாகப் பாதுகாக்கும், பராமரிக்கும் எண்ணத்துடன், அவற்றைப் பாரம்பரிய நகரங்களாக தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. இதன் இணைப்பில் அந்நகரங்களின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

**(ஈ) சாகச சுற்றுலா:** சாகசங்களை விரும்பும் சுற்றுலாப் பயணிகள் பெரும்பாலும் இளைஞர்களாகவே இருப்பார்கள். மலை ஏறுதல், வான்/நீர் விளையாட்டுக்களில் ஈடுபடுதல் போன்றவற்றின்மூலம் தமது சாகசப் பசியை தீர்த்துக்கொள்ள விரும்புவோர் இவர்கள்.

***(உ) கப்பல் சுற்றுலா:*** ஆண்டொன்றுக்கு 500 பில்லியன் டாலருக்கும் அதிகமாக முதல் ஈட்டித்தரும் கப்பல் போக்குவரத்து, உலகளவில் வளர்ச்சியடைந்துவரும் பிரிவுகளில் ஒன்றாக இருந்து வருகிறது. சுற்றுலாப் பயணிகளைக் கப்பல்மூலம் அழைத்துச் சென்று காண்பிப்பதன்மூலம் தமிழ்நாட்டின் பாரம்பரியத்தை அவர்கள் காண வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்படுகிறது.

***(ஊ) கிராமப்புற சுற்றுலா:*** மக்களின் வாழ்க்கைமுறை, கலை, பண்பாடு, நினைவுச் சின்னங்கள் போன்ற அந்தந்த கிராமங்களின் தனித்தன்மையை எடுத்துக்காட்டும்வகையில் இச்சுற்றுலாவிற்கு முக்கியத்துவம் தரப்படுகிறது.

***(எ) தொழில் சுற்றுலா:*** தொழில் சார்ந்த காரணங்களுக்காகவோ, கருத்தரங்குகள், மாநாடுகள் போன்றவற்றில் கலந்துகொள்ளவோ, தமிழ்நாட்டில் பயணம் மேற்கொள்ளும் உயர் அலுவலர்கள், தங்கள் தொழில் பயணத்துடன் சுற்றுலாவையும் இணைத்துக் கொள்கிறார்கள்.

***(ஏ) மருத்துவச் சுற்றுலா:*** இந்தியாவின் மிகச்சிறந்த மருத்துவ முறைகளில் சில (அலோபதி, ஆயுர்வேதம், சித்த வைத்தியம், யுனானி போன்றவை) தமிழ்நாட்டில் உள்ளன. இந்த மருத்துவ வசதிகளும், தமிழ்நாட்டிற்கே உரித்தான விருந்தோம்பலும் இணைந்து, பிற மாநிலங்களில் உள்ள உடல்நலக் குறைவு கொண்டோரைத் தமிழ்நாட்டின் பக்கம் ஈர்க்கின்றன. சிகிச்சை மேற்கொண்டு, முழுமையாக உடல்நலம் பெற்றதும், இவர்களும் இவர்களுக்குத் துணையாக வந்தவர்களும், தமிழ்நாட்டின் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைக் காணப் பயணம் மேற்கொள்கின்றனர். உடல்நலம் செறிந்த சுற்றுலா, (Wellness Tourism) தமிழ்நாட்டில் அதிவேகமாகப் பரவி வரும் சுற்றுலாவாகத் திகழ்ந்து வருகிறது. செலவு குறைந்ததும், உலகத் தரத்திலுமான தமிழ்நாட்டின் மிகச் சிறந்த மருத்துவமனைகளுக்கு சிகிச்சை மேற்கொள்ள வரும் நோயாளிகளையும், அவர்கள் குடும்பத்தினரையுமே இந்திய மருத்துவச் சுற்றுலா சார்ந்துள்ளது.

திறமைவாய்ந்த மருத்துவ வல்லுநர்களிடம் சிகிச்சை மேற்கொள்வதற்காக, இந்தியாவின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும், உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், உடல்நலம் நாடும் சுற்றுலாப் பயணிகள், ஆயிரக்கணக்கில் தமிழ்நாட்டிற்கு வந்து செல்கின்றனர். மருத்துவச் சுற்றுலா, இங்குள்ள மருத்துவக் கல்லூரிகள், நிறுவனங்கள் வரை நீள்கிறது. தமிழகத்தின் மிக உயர்ந்ததான மருத்துவக் கல்வியின்



தரம், மாணவர்களையும், ஆராய்ச்சி அறிஞர்களையும் வெகுவாக ஈர்த்துவருகிறது. தங்களது ஆரோக்கியத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் சுற்றுலாப் பயணிகளுக்கு தமிழ்நாடு உற்சாகமூட்டும் சுற்றுலா செல்லிடங்களை வழங்குகிறது. உலகெங்குமிருந்து வரும் மக்கள் உடல்நலம் பெற, சிகிச்சை அளிக்கும் பல்நோக்குச் சிறப்பு மருத்துவமனைகள் தற்பொழுது மேலும்மேலும் தேவைப்படுகின்றன. மாமல்லபுரம் மற்றும் பிற பகுதிகளிலுள்ள சுற்றுலா வளாகங்கள் பலவும் உலகின் வேறு எங்கிலும் உள்ளவற்றை ஒப்பிடக்கூடிய சிறந்த ஆயுர்வேத சிகிச்சையை வழங்கி வருகின்றன. தமிழ்நாட்டிற்கு வருகை தரும் வெளிநாட்டுப் பயணிகளில் இரண்டு சதவீதத்தினர் மருத்துவச் சிகிச்சைக்காகவே வருகின்றனர் என அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது.

(ஐ) (i) **கண்காட்சிகள்/விழாக்கள் சுற்றுலா:** பொதுவாக, தீபாவளி, கிறிஸ்துமஸ், ரம்ஜான், பொங்கல் போன்ற முக்கிய பண்டிகைக் காலங்களில்தான் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகமாக உள்ளது. சென்னை தீவுத்திடலில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் நடைபெறும் பொருட்காட்சி போன்ற கண்காட்சிகளும் குறிப்பிட்டுக் கூறும் அளவிலான சுற்றுலாப் பயணிகளை ஈர்த்து வருகின்றன.

(ii) ***சமூக நிகழ்ச்சிகள்:*** தமது நண்பர்கள் அல்லது உறவினர்களின் அழைப்பிற்கிணங்க, திருமணம் போன்ற நிகழ்ச்சிகளுக்காக வெளியூர் செல்வோர், நிகழ்ச்சிக்கு முன்னரோ அல்லது நிகழ்ச்சி முடிந்த பின்னரோ அருகிலுள்ள சுற்றுலா இடங்களுக்குச் செல்வர்.

(ஒ) **கல்விச் சுற்றுலா:** கல்வி நிலையங்களின் சார்பில் மாணவர்கள், தங்கள் படிப்பு தொடர்பான பகுதிகளுக்குச் சுற்றுலா செல்கின்றனர். அதுபோன்ற பயணங்களில், தங்கள் பாடப் பகுதியுடன், சுற்றுலாவையும் இணைத்துக் கொள்கின்றனர். சென்னையில் அரசு அருங்காட்சியகம், கோளரங்கம் பாம்புப் பண்ணை, கோட்டை அருங்காட்சியகம், போன்றவை மாணவர்களை ஈர்க்கும் கல்வி தொடர்பான சுற்றுலா இடங்களாகும்.

(ஓ) **சுற்றுச்சூழல் சுற்றுலா:** சுற்றுச்சூழல் சுற்றுலா என்பது சுற்றுச் சூழல் மற்றும் சமூக உணர்வுகளை நோக்கமாகக் கொண்ட சுற்றுலாவின் மற்றொரு வடிவம். ஒரு கோட்பாட்டைக் கொண்ட சுற்றுலா இயக்கமாகவும், சுற்றுலாவின் மற்றுமொரு பிரிவாகவும் இது வழங்கப்படுகிறது. பொதுவாகக் கூறுவதென்றால், சுற்றுச்சூழல் சுற்றுலா

எனப்படுவது, அந்தப் பகுதியின் பண்பாட்டுப் பெருமை, கானகச் சாகசங்கள் (Wilderness adventures), தன்னார்வத் தொண்டுணர்வு, சுய வளர்ச்சி, இவ்வுலகில் வாழ்வதற்கான புதிய வழிமுறைகளைப் பயிலுதல், பண்பாட்டுப் பாரம்பரியங்களை முக்கிய ஈர்ப்பிடமாகக் கொண்ட செல்லிடங்களுக்குப் பயணம் செய்தல் ஆகியவற்றை மையமாகக் கொண்டதே ஆகும். பொறுப்பு வாய்ந்த சுற்றுச்சூழல் சுற்றுலா என்பது இயற்கைச் சூழல் பாதிக்கப்படாமல் உள்ளூர் மக்களின் பண்பாட்டு ஒருமைப்பாட்டை அதிகரிக்கும் திட்டங்களைக் கொண்டதாகும்.

**(ஔ) வனவிலங்குச் சுற்றுலா:** வனவிலங்குச் சுற்றுலா என்பது கட்டுப்படுத்தப்பட்ட சூழலிலும், கானகச் சூழலிலும் உள்ளதொரு சுற்றுச்சூழல் மற்றும் விலங்கினங்களுடனான நட்புணர்வுச் சுற்றுலா ஆகும். அண்மைக் காலங்களில் இச்சுற்றுலா உலகளவில் மிக வேகமான வளர்ச்சியைக் கண்டு வருகிறது. வனவிலங்குச் சுற்றுலா என்பது வனவிலங்குகளை இயற்கையான வாழிடங்களில் கண்டு களிப்பது ஒவ்வொரு பயணிக்கும் சுவாரசியத்தை வழங்குகிறது.

## சுற்றுலா ஆணையரகம் மற்றும் அதன் கட்டுப்பாட்டிலுள்ள அலுவலகங்கள்:

சுற்றுலா ஆணையரைத் தலைவராகக் கொண்ட சுற்றுலா ஆணையரகத்தில் ஓர் இணை இயக்குநர், இரண்டு துணை இயக்குநர்கள், மூன்று உதவி இயக்குநர்கள், ஒரு வெளியீட்டு அலுவலர், ஒரு கணக்கு அலுவலர் மற்றும் இருநூற்றுக்கும் மேற்பட்ட அமைச்சுப் பணியாளர்கள் பணிபுரிகின்றனர். களப்பணி அலுவலகங்களில் 20 சுற்றுலா அலுவலகங்களும் (தமிழ்நாட்டில்-14, வெளிமாநிலங்களில்-6) 27 சுற்றுலாத் தகவல் மையங்களும் (தமிழ்நாட்டில்-19, வெளிமாநிலங்களில்-8 இயங்கிவருகின்றன.

சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான தகவல்களை அளிப்பதோடு, அவர்களுக்கான உறைவிடம், உணவு, முக்கிய இடங்களைச் சுற்றிப்பார்க்கச் செய்தல், அங்காடிகளில் பொருட்கள் வாங்கல், வழிபாடு, பொழுதுபோக்கு போன்றவற்றில் உதவி புரிதல், இவ்வலுவலகங்களின் முக்கியப் பணிகளுள் சிலவாகும். இவை மட்டுமின்றி தமிழ்நாட்டின் சுற்றுலா வளங்களை விளம்பரப்படுத்துதல், சுற்றுலாத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் மாவட்ட ஆட்சித் தலைவர், பொதுப் பணித் துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைந்து செயலாற்றுவது, இவ்வலுவலகங்களின் பணிகளாகும்.



### சுற்றுலாப் பயனாளிகள்:

சுற்றுலாவுடன் தொடர்புடைய பயனாளிகள் என, எளிய வாகன ஓட்டுநர் முதல் செல்வாக்குள்ள ஓட்டல் அதிபர் வரை பலரைக் குறிப்பிடலாம். சுற்றுலா வளமிக்க எந்தவொரு குடிமகனும் சுற்றுலாப் பயனாளிகள் என்ற பிரிவின்கீழ் இடம் பெறுகிறார். தான் வாழும் பகுதியைப் பற்றி முழுமையாக அறிந்த ஒருவரால்தான் சுற்றுலாவிற்கு நிறைய பங்களிப்பு வழங்க முடியும். சுற்றுலாப் பயணிகள் செல்லுமிடத்திற்கு வழிகாட்டக் கைகொடுக்கும் நட்புரீதியான மனப்பாங்கு ஒவ்வொரு தனி மனிதனின் கடமையாகக் கருதப்படுகிறது.

## நிதி ஒதுக்கீடு:

கடந்த மூன்று ஆண்டுகளில் சுற்றுலா மேம்பாட்டிற்காக தமிழ்நாடு அரசு ஒதுக்கிய நிதி விவரம் பின்வருமாறு:

| ஆண்டு | நிதி ஒதுக்கீடு (ரூபாய் கோடியில்) | செலவிடப்பட்டது (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 2004-2005 | 30.35 | 31.29 |
| 2005-2006 | 32.42 | 37.04 |
| 2006-2007 | 46.04 | 63.57 |

### வேலைவாய்ப்புகள்:

சுற்றுலாவிற்காகச் செலவிடப்படும் ஒவ்வொரு 10 இலட்சம் ரூபாய்க்கான முதலீடும், 47.5 வேலைவாய்ப்புகளை உருவாக்குகிறது என்று மத்திய அரசின் சுற்றுலா அமைச்சகம் கணக்கிட்டுள்ளது. இதே அளவுத் தொகையைத் தயாரிப்புத் தொழில்களில் முதலீடு செய்தால் 12.6 வேலைவாய்ப்புகளையே உருவாக்க முடியும். உலகச் சுற்றுலாக் கவுன்சில், "Tourism Satelite Accounts" என்ற முறையில் ஆய்வொன்றை நடத்தியது. சுற்றுலா உருவாக்கிய வேலைவாய்ப்புகள் அடுத்த 10 ஆண்டுகளில் இன்றைய 2.4 சதவீதத்திலிருந்து 6.8 சதவீதமாக உயரும், அதாவது 80 இலட்சம் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் என்று அந்த ஆய்வு தெரிவிக்கின்றது.

அதைப் போலவே ஓட்டல் தொழிலில் ரூ.10.00 இலட்சம் முதலீடு செய்தால் அது 12 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பை வழங்கும் என்றும், 5 நட்சத்திர ஓட்டலில், ஐந்து அறைகள் சராசரியாக 8 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பை வழங்கும் என்றும் இந்த ஆய்வு தெரிவிக்கிறது.

## 2006 ஆம் ஆண்டு மே திங்கள் முதலான சுற்றுலாத் துறையின் சாதனைகள்:

*2006-2007* ஆம் ஆண்டுக்கான சுற்றுலா மானியக் கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டபோது, சுற்றுலா மேம்பாட்டிற்காக 23 திட்டங்கள் அறிவிக்கப்பட்டன. இவற்றுள் 20 திட்டங்களுக்கான ஆணைகள் வெளியிடப்பட்டு, பணிகள் தொடங்கி அவை பல்வேறு நிலைகளில் உள்ளன.

1. கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலைப் பகுதியைச் சுற்றி கூடுதல் வசதிகளை ஏற்படுத்தித் தரும் பணிகளுக்காக ரூ.133.00 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

2. தூத்துக்குடி மாவட்டம் கழுகுமலை மேம்பாட்டிற்காகவும், கொடைக்கானலில் சுற்றுலாத் தகவல் மையம் அமைப்பதற்காகவும், தேனி மாவட்டத்தின் சுருளி நீர்வீழ்ச்சி மேம்பாட்டிற்காகவும் நிதி வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

3. வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு, வேலைவாய்ப்பு அளிக்க ஏதுவாக அவர்களுக்கு சுற்றுலா வழிகாட்டிப் பயிற்சி வழங்க முடிவு செய்யப்பட்டது. அதற்கேற்ப ஆணைகள் வெளியிடப்பட்டன. இதற்கென 500 விண்ணப்பங்கள் வரப்பெற்றதில், 200 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். தேர்வு செய்யப்பட்ட இவர்களுக்கு பயிற்சி வகுப்புகளை நடத்துமாறு அண்ணா மேலாண்மை பயிற்சி நிறுவனம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

4. சுற்றுச்சூழல் சுற்றுலாவின்கீழ், பிச்சாவரம், முத்துப்பேட்டை, கோடியக்கரை மற்றும் பழவேற்காடு (புலிகாட்) மேம்பாட்டிற்காக நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுவிட்டது. இவ்விடங்களில் அனைத்துப் பணிகளும் நிறைவுபெறும் தருவாயில் உள்ளன. இவை மட்டுமின்றி, தமிழ்நாட்டில் சுற்றுச்சூழல் சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக வனத் துறை ரூ. 45.00 கோடி மதிப்பீட்டில் திட்டம் ஒன்றைத் தயாரித்து அனுப்பியுள்ளது. இதற்கான ஒப்பளிப்பு வழங்குவது குறித்து, 2007-2008 ஆம் ஆண்டு முதற்கொண்டு படிப்படியாக பரிசீலிக்கப்படும்.

5. சுற்றுலாப் பயணிகளின் பார்வையில் வரக்கூடிய சுமை தூக்குவோர், உணவகங்களில் பரிமாறுவோர், ஆட்டோ ஓட்டுநர்கள் போன்றோர் சுற்றுலாப் பயணிகளிடம் அன்பாக, இதமாக, இனிமையாக, நாகரிகமாக, பொறுப்புணர்வுடன் நடந்து கொள்வதற்கென "விருந்தினர் போற்றுதும், விருந்தினர் போற்றுதும்"



என்ற தலைப்பில் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. அவை அனைவராலும் வெகுவாகப் பாராட்டப்பட்டன. தொலைக்காட்சியிலும் இதன் முக்கியத்துவத்தைக் குறிக்கும் வகையில் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. இது போன்ற கருத்தரங்குகளை இத்துறை தொடர்ந்து நடத்த உள்ளது. மேலும், "விருந்தினர் போற்றுதும், விருந்தினர் போற்றுதும்" என்ற அதே தலைப்பில், பல்வேறு பருவ இதழ்களில் விளம்பரங்களையும் சுற்றுலாத் துறை வெளியிட்டு உள்ளது.

6. 'பழமையான வாகனங்களை நீக்கி புதுமையான வாகனங்களைப் புகுத்துதல்' என்ற தனது திட்டத்தின்கீழ் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 'வோல்வோ' பேருந்து ஒன்றினை ரூ. 61.25 இலட்சம் செலவில் வாங்கியுள்ளது. இது மட்டுமின்றி 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.171.00 இலட்சம் செலவில் குளிர்சாதன வசதி கொண்ட மற்றும் குளிர்சாதன வசதியற்ற 10 பேருந்துகளையும் கீழ்க்கண்டவாறு வாங்கிப் பயன்படுத்தத் தொடங்கி உள்ளது:—

| | | |
|---|---|---|
| 10 இருக்கை கொண்ட பேருந்து (குளிர்சாதன வசதி கொண்டது) | - | ஒன்று |
| 35 இருக்கை கொண்ட பேருந்து (குளிர்சாதன வசதி கொண்டது) | - | இரண்டு |
| 35 இருக்கை கொண்ட பேருந்து (குளிர்சாதன வசதியற்றது) | - | மூன்று |
| 18 இருக்கை கொண்ட பேருந்து (குளிர்சாதன வசதி கொண்டது) | - | இரண்டு |
| 18 இருக்கை கொண்ட பேருந்து (குளிர்சாதன வசதியற்றது) | - | இரண்டு |

7. தஞ்சாவூர் பெரிய கோயில் வளாகத்தில் ஒலி-ஒளி காட்சி அமைப்பதற்கான எழுத்து வடிவங்கள் தயாரிக்கப்பட்டுவிட்டன. இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறையிடம் கோரப்பட்டுள்ள அனுமதி பெறப்பட்டவுடன், ஒலி-ஒளிக் காட்சி அமைக்கப்பட்டு விடும்.

8. தமிழ்நாட்டின் சுற்றுலா வளங்களை வெளிக்காட்டும் 2007 ஆம் ஆண்டிற்கான மாத நாட்காட்டி தயாரிக்கப்பட்டு, இந்தியா மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த பயண முகவர்கள், சுற்றுலாப் பயண இயக்குநர்கள், ஓட்டல் உரிமையாளர்கள் போன்றோருக்கும், வெளிநாடுகளிலுள்ள மத்திய அரசின் சுற்றுலா அலுவலகங்களுக்கும் வழங்கப்பட்டன.

[2007 மே 7

9. தமிழ்நாட்டில் பயணம் மேற்கொள்ளும் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பிற்காக, தமிழ்நாட்டின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள 5 முக்கிய செல்விடங்களில் "சுற்றுலா காவலர்கள்" என்ற அமைப்பை உருவாக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன:

(அ) மாமல்லபுரம்
(ஆ) உதகமண்டலம்
(இ) கொடைக்கானல்
(ஈ) மதுரை
(உ) கன்னியாகுமரி

10. சுற்றுலாத் திட்டங்களில் தனியார் முதலீடு செய்வதை ஊக்கப்படுத்த சலுகைகள், மானியங்கள் வழங்குவது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

**குறிக்கோளும் கோட்பாடுகளும்:**
**(Vision with a Mission)**

**மேம்பாடு மற்றும் வர்த்தகம்:**

தமிழ்நாட்டின் சுற்றுலா வளங்கள் தொடர்பான தகவல்களைப் பரப்புவதற்காக கையேடுகள், பதாகைகள் (Banners), விளம்பரப் பலகைகள், பத்திரிகைகளில் விளம்பரங்கள், தொலைக்காட்சி, வானொலி, இணையதளங்கள், தொடுதிரை, கணினிகள், குறுந்தட்டுகள் போன்ற பலவகையான விளம்பரச் சாதனங்களையும் அதிகபட்ச அளவில் தமிழ்நாடு சுற்றுலா பயன்படுத்தி வருகிறது. எனினும், விளம்பரத்திற்கென பயன்படுத்தப்படும் மேலே கூறப்பட்ட மற்றெந்த சாதனங்களையும் விட தொலைக்காட்சி மட்டுமே பெருவாரியான மக்களைச் சென்றடையக்கூடிய சிறந்த விளம்பரச் சாதனமாக தனித்து நிற்கிறது. இந்தியாவில் 112 மில்லியன் இல்லங்களைத் தொலைக்காட்சி சென்றடைகிறது. பெரிய நிறுவனங்கள் தற்போது டி.டி.எச். (DTH) எனப்படும் வீட்டிற்கே நேரடித் தொடர்பு வழங்கும் செயற்கைக் கோள் தொலைக்காட்சி சேவையை அளிப்பதால் அடுத்த இரண்டொரு ஆண்டுகளில் தொலைக்காட்சி நேயர்களின் எண்ணிக்கை அதிக அளவில் உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் தொலைகாட்சியானது ஒரு வணிக நிறுவனத்தின் பெயரை (brand) நிலைப்படுத்தி காட்டுவதற்கோ அல்லது குறிப்பிட்டதொரு நிகழ்ச்சியின்மீது ஆர்வத்தை உருவாக்குவதற்கோ மிகச் சிறந்த ஊடகமாக விளங்குகிறது. இதனைக் கருத்தில் கொண்டு, தமிழகத்தின் சுற்றுலாப்



2007 மே 7]

பகுதிகளை மையப்படுத்தி 20 வினாடிகள் ஓடக்கூடிய விளம்பரப் படங்களைச் சுற்றுலாத் துறை தயாரித்துள்ளது. இவ்விளம்பரப் படங்கள் 2007-2008 ஆம் ஆண்டில் முன்னணி தொலைக்காட்சிகளில் திரையிடப்படும்.

**(i) ஆன்மீகத் தலங்கள் பற்றிய திரைப்படங்கள்:**

கடந்த சில ஆண்டுகளாக ஆன்மீக வழிபாட்டுத் தலங்களுக்குச் செல்லும் பயணிகளின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது. இவர்கள் பொதுவாக விடுமுறைக் காலங்களிலும், நவம்பர் மற்றும் பிப்ரவரி மாதங்களிலும் வருகிறார்கள். வழிபாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்யவும், ஆன்மீக மையங்களை மேம்படுத்தும் விதமாகவும், நவக்கிரக சுற்றுலா சுற்றுச்சாலை, அறுபடை வீடுகள் சுற்றுலா சுற்றுச்சாலை ஆகியவற்றைப் பற்றிய விளக்கப்படங்கள் 2007-2008 ஆம் ஆண்டில் தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**(ii) நேரடி வியாபாரப்படுத்துதல்:**

நேரடி வியாபாரப்படுத்துதல் என்பது ஒரு சுற்றுலாப் பயணியை, அவருக்குத் தேவைப்படும் தகவலுடன், அவருடன் நேரடித் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ளக் கூடியதான ஊடகம் ஒன்றைப் பயன்படுத்தித் தொடர்புகொள்வதாகும். இவ்வகையில் தமிழ்நாடு சுற்றுலா தற்போது சேவைப்பிரிவில் அதிக அளவில் ஈடுபடுத்தப்படும் இ-மெயில், தொலைபேசி, அலைபேசி (Mobile Marketing) போன்ற வசதிகளைப் பயன்படுத்தி நேரடி வியாபாரப்படுத்துதல் முறையை அறிமுகப்படுத்தக் கூடிய சாத்தியக்கூறுகளை ஆராய உள்ளது.

**(iii) விளம்பர முகாம்களை நடத்துதல்:**

தமிழ்நாட்டிற்கு வருகை தரும் உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக, சுற்றுலாத் துறை 2006-2007 ஆம் ஆண்டில் பின்வரும் இடங்களில் விளம்பர முகாம்களை நடத்தியுள்ளது:—

(அ) மும்பை
(ஆ) கொல்கத்தா
(இ) அகமதாபாத்
(ஈ) ஜெய்ப்பூர்
(உ) ஐதராபாத்
(ஊ) தில்லி

இதுபோன்ற முயற்சிகளை இத்துறை மேற்கொண்டதன் காரணமாக தில்லி, மும்பை, கொல்கத்தா, அகமதாபாத், ஐதராபாத், ஜெய்ப்பூர் ஆகிய நகரங்களிலிருந்து இரயில்-சாலை வழி சுற்றுலாக்களைப் பயன்படுத்தியவர்களின் எண்ணிக்கை 412-லிருந்து 1262-ஆக அதிகரித்துள்ளது. இதன்மூலம் 2006-2007 ஆம் ஆண்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்குக் கிடைத்த வருவாய் ரூபாய் 31 இலட்சத்திலிருந்து ரூபாய் 93 இலட்சமாக உயர்ந்துள்ளது.

2007-2008 ஆம் ஆண்டில் பின்வரும் இடங்களில் விளம்பர முகாம்கள் நடத்தப்பட உள்ளன:—

(அ) சண்டிகார்

(ஆ) லக்னோ

(இ) விசாகப்பட்டினம்

(ஈ) தில்லி

(உ) மும்பை

(ஊ) கொல்கத்தா

(எ) ஜெய்ப்பூர்

(ஏ) ஐதராபாத்

(ஐ) அகமதாபாத்

(ஒ) கோவா

**(iv) பன்னாட்டு பயணச் சந்தைகளில் பங்கேற்பு:**

வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிப்பதற்காக இத்துறை 2006-2007-ஆம் ஆண்டில் பின்வரும் பன்னாட்டு பயணச் சந்தைகளில் பங்கேற்றுள்ளது:—

(அ) ஹாங்காங்கில் நடைபெற்ற பசிபிக் ஆசிய பயணச் சங்கம் (Pacific AsiaTravel Association)

(ஆ) இலண்டனில் நடைபெற்ற உலகப் பயணச் சந்தை (World Travel Mart)

இத்துறை 2006-2007 ஆம் ஆண்டில் கோலாலம்பூர் மற்றும் சிங்கப்பூரிலும் விளம்பர முகாம்களை நடத்தியுள்ளது. வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்காக 2007-2008 ஆம் ஆண்டில்



பின்வரும் பன்னாட்டுப் பயணச் சந்தைகளில் கலந்துகொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது:—

(அ) பசிபிக் ஆசிய பயணச் சங்கம் (PATA)

(ஆ) இலண்டனில் நடைபெறும் உலகப் பயணச் சந்தை (World Travel Mart)

(இ) சர்வதேச சுற்றுலாச் சந்தை (ITB-Berlin)

(ஈ) துபாய் பயணச் சந்தை (Dubai Travel Mart)

பாரம்பரியச் (Ethnic) சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்காகப் பின்வரும் நாடுகளில் விளம்பர முகாம்கள் நடத்தப்பட உள்ளன:—

(அ) தென் ஆப்பிரிக்கா

(ஆ) இலங்கை

(இ) மொரீசியஸ்

**அடிப்படை வசதிகள்**

**மத்திய அரசின் உதவித் திட்டங்கள்**

**சுற்றுலாத் தல மேம்பாடு (Destination Development):**

செல்லிடம் (Destination) எனப்படுவது சுற்றுலாப் பயணி விரும்பிச் செல்லும் இடமாகும். அந்த இடம் மாநிலத்தில் பெரும்பாலோர் வருகை தரும் இடமாகவோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட பாரம்பரிய நினைவிடமாகவோ இருக்கும் அல்லது ஒரே கிராமம், ஒரே நகரம், ஒரே மாநகரத்தின் சுற்றுலா ஈர்ப்பிடங்களின் தொகுப்பாக இருக்கும். இத்திட்டத்தின்கீழ் 2006-2007 ஆம் ஆண்டில் மதுரை, கன்னியாகுமரி, புளியஞ்சோலை மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்கள் மேம்பாட்டிற்காக எடுத்துக்கொள்ளப்பட்டன.

2007-2008 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் மெரினா கடற்கரையை அழகுபடுத்துதல், திருவரங்கம், ஏலகிரி ஆகிய இடங்களை மேம்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. இவ்விடங்களை மேம்படுத்துவதற்கான அவசியம் தகவலுக்காகத் தரப்படுகின்றது.

[2007 மே 7

**மெரினா கடற்கரையை அழகுபடுத்தும் திட்டம்:**

தமிழ்நாட்டிற்கு வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகளின் பயணத் திட்டத்தில் முக்கிய இடம் பெறும் இடங்களில் ஒன்று நமது கடற்கரைகள். நாம் பெற்றிருக்கும் இந்தக் கடற்கரைகள் மிகச் சிறந்த இயற்கை ஈர்ப்பிடங்களில் ஒன்றாகும். உலகின் மிக நீளமான இரண்டாவது கடற்கரை என்ற சிறப்பை மெரினா பெற்றிருப்பதால், அது சுற்றுலாப் பயணிகளை அதிக அளவில் ஈர்க்கும் முக்கிய இடமாக இருந்து வருகிறது. மற்ற ஈர்ப்பிடங்கள் அல்லாமல், தென்னிந்தியாவிற்கு வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகள் கடற்கரைகளையே அதிகம் விரும்புகின்றனர். இவற்றை மனதில்கொண்டு தமிழ்நாட்டிலுள்ள கடற்கரைகளைத் தேசிய தரத்திலும், பன்னாட்டுத் தரத்திலும் உயர்த்தி மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. முதற்கட்டமாக மெரினா கடற்கரையை 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.5.00 கோடி செலவில் மேம்படுத்தும் திட்டம் எடுத்துக்கொள்ளப்படும்.

**திருவரங்கம் மேம்பாடு:**

திருவரங்கம் தமிழ்நாட்டிலுள்ள மிக முக்கிய ஆன்மீக மையமாகும். இவ்வூர் ஒருபக்கம் காவிரி ஆறு சூழ்ந்திருக்க மற்றொரு பக்கம் கொள்ளிடம் ஆறு சூழ்ந்திருக்க, திருச்சியிலிருந்து 7 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. திருமாலின் பெரிய திருக்கோயில்களில் ஒன்றாகக் கருதப்படும் அருள்மிகு அரங்கநாதர் திருக்கோயிலின் ஏழு சுற்று மதில்கள் திருவரங்கத்தின் எல்லைகளாக அமைந்துள்ளன. 108 திவ்ய தேசங்களைச் சேர்ந்த வைணவப் பிரிவின் முதன்மை இடமாகத் திருவரங்கம் திகழ்கிறது. 21 அழகிய கோபுரங்களில் முக்கியமானதான இராஜகோபுரம், 13 அடுக்குகளைக் கொண்டுள்ளது. 1987 ஆம் ஆண்டு கட்டப்பட்ட இக்கோபுரத்தின் உயரம் 72 மீட்டர். ஏனைய கோபுரங்கள் 14 மற்றும் 17 ஆம் நூற்றாண்டுகளில் கட்டப்பட்டவையாகும். இந்த வகைச் சிறப்புமிக்க திருவரங்கத்தை சுற்றுலாத் தல மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.5.00 கோடி செலவில் மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

**வேலூர் மாவட்டத்திலுள்ள ஏலகிரி மேம்பாடு:**

வார இறுதி நாட்களைக் குதூகலமாகக் கொண்டாட ஏற்றதான இடம் ஏலகிரி. உதகை, கொடைக்கானல் அல்லாமல், மலைகளின் அமைதியான சூழல் இங்கு பாதுகாக்கப்பட்டு வருகிறது. ஏலகிரி



2007 மே 7]

மலைக்குச் செல்லும் வழியிலுள்ள 14 கொண்டை ஊசி வளைவுகளுக்கு பழந்தமிழ் அறிஞர்களின் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன. மலையில் உள்ள ஏரியில் படகு சவாரி செய்யும் வசதியும் உள்ளது. காட்சிக்கோபுரத்திலிருந்து ஏலகிரியின் அழகைக் கண்டுகளிக்கும் வசதிகளும் உள்ளன. இவ்வசதிகளின் காரணமாகவும், சென்னைக்கு அருகில் இருப்பதாலும் ஏலகிரியைக் குடும்பத்துடன் செல்லுமிடமாகக் கருதி, அதனை மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.192.60 இலட்சம் ஏலகிரி மேம்பாட்டிற்காக ஒப்பளிக்கப்பட்டுள்ளது. 2007-2008 ஆம் ஆண்டில் ஏலகிரி மேம்பாட்டிற்கென ரூ.5.00 கோடி செலவிடப்படும்.

**சுற்றுலா சுற்றுச்சாலை மேம்பாடு (Tourist Circuit):**

குறைந்தது மூன்று முக்கிய சுற்றுலா ஈர்ப்பிடங்களைக் கொண்டு, ஆனால் அவை ஒரே கிராமத்தில், ஒரே நகரத்தில், ஒரே மாநகரத்தில் இல்லாமல் இருக்கும் சாலை, சுற்றுலா சுற்றுச்சாலை என அழைக்கப்படுகிறது. அதே சமயத்தில் அவை ஒவ்வொன்றுக்குமான தூர இடைவெளி அதிகமாக இருக்கக்கூடாது. ஒவ்வொன்றின் சுற்றுலா சுற்றுச்சாலை தொடங்கும் இடமும், அது முடிவுறும் இடமும் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கப்பட வேண்டும். சுற்றுலா சுற்றுச்சாலையில் நுழைபவர்கள் அச்சாலையில் இருக்கும் அனைத்துச் சுற்றுலா ஈர்ப்பிடங்களையும் கண்டு வரும் வகையில் தூண்டப்பட வேண்டும். சுற்றுலா சுற்றுச்சாலையின் முக்கிய நோக்கம் என்னவென்றால், அந்தச் சுற்றுலா சுற்றுச்சாலையிலுள்ள ஈர்ப்பிடங்களை அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் காண வரவேண்டும் என்பதாகும்.

2006-2007 ஆம் ஆண்டில் பூந்தமல்லி மற்றும் திருக்கழுக்குன்றத்தை உள்ளடக்கிய சென்னை-காஞ்சிபுரம்-மாமல்லபுரம் சுற்றுலா சுற்றுச்சாலை திட்டம் ரூ.452.78 இலட்சம் செலவில் மேம்படுத்த எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

**2007-2008 ஆம் ஆண்டில் சுற்றுச்சூழல் சுற்றுலா சுற்றுச்சாலை மேம்பாடு:**

இந்தியப் பாரம்பரியம், இயற்கைக்கு எப்போதும் மரியாதை கலந்த மதிப்பைக் கொடுத்து வந்துள்ளது. இயற்கை வழிபாடும், கானகத்தின் மீதான ஈர்ப்பும், பாரம்பரியம் பேணலும் தமிழ்ப்பண்பாட்டுடன் ஒன்றிக் கிடப்பனவாகும். வாழ்க்கை முறைகள் தரம் தாழ்ந்ததும், உலகத்தின் வெப்பநிலை அதிகரிப்பு, சுனாமி போன்ற அதி பயங்கர

இடர்பாடுகளும் இயற்கையின்மீது மனிதன் காட்ட வேண்டிய அக்கறையையும், சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் ஆர்வத்தையும் மீண்டும் தூண்டியுள்ளது. சுற்றுச்சூழல் சுற்றுலா என்பது இயற்கையின் வனப்புமிக்க பகுதியில் அல்லது சுற்றுச்சூழல் மீதான அக்கறை கொண்டு மேற்கொள்ளும் பயணத் திட்டமாகும். சுற்றுச்சூழலின் அவசியம் பற்றி அறிவதும், அதன் பாதுகாப்பில் அக்கறை கொண்டு சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதன் மூலம், உள்ளூர் மக்கள் வாழ்வதற்கான வாய்ப்புகளை மேம்படுத்துவதும், சுற்றுச்சூழல் சுற்றுலாவின் நோக்கங்களாகும்.

தமிழ்நாட்டில் சுற்றுச்சூழல் வளங்கள் பெருமளவில் காணப்படுகின்றன. சான்றாக மலைவாழிடங்கள், சதுப்பு நிலக்காடுகள், 5 உயிரியல் பூங்காக்கள், 8 வனவிலங்குக் காப்பகங்கள், 12 பறவைச் சரணாலயங்கள் (நீலகிரி, மன்னார் வளைகுடா ) முதலியன.

**மேம்பாட்டிற்காகக் கண்டறியப்பட்ட 10 சுற்றுலா சுற்றுச்சாலைகள் :**

| வ. எண். | முதன்மை வனவிலங்குப் பகுதி/வனப்பகுதி/ சுற்றுலா சுற்றுச்சாலை | சுற்றுலா மேம்பாட்டிற்கு முக்கியத்துவம் தரப்படும் இடங்களின் உள், வெளிப்பகுதிகள் |
|---|---|---|
| 1 | முதுமலை வனவிலங்குச் சரணாலயம் | உதகமண்டலம், தெப்பக்காடு, மசினகுடி, கூடலூர், தேயிலைத் தோட்டங்கள் |
| 2 | ஆனைமலை வனவிலங்குச் சரணாலயம் | டாப்சிலிப், ஆழியாறு அணை, வால்பாறை தேயிலைத் தோட்டங்கள் |
| 3 | களக்காடு முண்டன்துறை புலிகள் காப்பகம் | களக்காடு, முண்டன்துறை மற்றும் குற்றாலம் |
| 4 | மன்னார் வளைகுடா | இராமநாதபுரம், பாம்பன், தனுஷ்கோடி, இராமேஸ்வரம் |
| 5 | கோடியக்கரை வனவிலங்கு சரணாலயம் | கோடியக்கரை, வேதாரண்யம் உப்பளம், முத்துப்பேட்டை |
| 6 | கொடைக்கானல் | கொடைக்கானல், பாம்பாறு, சோலா, சில்வர் காஸ்கெட், பெர்ஜாம் ஏரி |
| 7 | ஒகேனக்கல் | தொப்பூர், ஒகேனக்கல், பிலிகுண்டு |
| 8 | பிச்சாவரம் | சிதம்பரம், பிச்சாவரம் சதுப்புநிலக் காடுகள் |
| 9 | சத்தியமங்கலம் | திம்பம், ஹசனூர், மீஞ்சுக்குழிப்பள்ளத்தாக்கு, தெங்குமரட்டா, பவானிசாகர் அணை |
| 10 | பழவேற்காடு - சென்னை | சென்னை, வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா, கிண்டி தேசியப் பூங்கா, பழவேற்காடு ஏரி |



இந்த சுற்றுலா சுற்றுச்சாலைகளை மேம்படுத்த தோராயமாக ஆகும் செலவு ரூ.45.00 கோடி. **2007-2008 ஆம் ஆண்டில் உதகமண்டலம் சுற்றுலா சுற்றுச்சாலை ரூ.5.00 கோடி செலவில் மேம்பாட்டிற்காக எடுத்துக்கொள்ளப்பட உள்ளது.**

**ஊரகச் சுற்றுலா:**

அந்தந்தக் கிராமங்களிலேயே கிராம வாழ்க்கை, கலை, பண்பாடு, அதன் பாரம்பரியம் இவற்றை வெளிக்காட்டி, அதன்மூலம் உள்ளூர் மக்களின் வாழ்க்கைத் தரத்தை, பொருளாதார நிலையை உயர்த்துவதும், உள்ளூர் மக்களுக்கும், சுற்றுலாப் பயணிகளுக்கும் இடையே கலந்துரையாடி வளமான சுற்றுலா அனுபவங்களைப் பெற உதவக்கூடிய எந்தவொரு செயல்பாடும் கிராமப்புறச் சுற்றுலாவாகும். ஊரகச் சுற்றுலா என்பது முக்கியமாகத் தேவைப்படும் நகரங்களின் எல்லை ஓரம் நிகழும் சுற்றுலாவாகும். இச் சுற்றுலா பன்முகப் பரிமாணம்

கொண்டதொரு, பண்ணை அல்லது வேளாண்மைச் சுற்றுலாவாக அல்லது பண்பாட்டுச் சுற்றுலாவாக, இயற்கைச் சுற்றுலாவாக அல்லது சாகசச் சுற்றுலாவாக சுற்றுச்சூழல் சுற்றுலாவாகவும் இருக்கலாம். மரபு சார்ந்த சுற்றுலாவிற்கு மாறாக, கிராமப்புறச் சுற்றுலாவிற்குச் சில சிறப்பம்சங்கள் உள்ளன. கிராமப்புறச் சுற்றுலா அனுபவம் சார்ந்தது; குறைந்த மக்கள் தொகை கொண்டது; இயற்கையான சூழலில் அமைந்திருக்கக் கூடியது; அதனதன் பருவகாலம், உள்ளூர் நிகழ்ச்சிகளைச் சார்ந்தது; பண்பாடு, பாரம்பரியம் இவற்றைப் பாதுகாத்து வருவதாகும்.

கடந்த 2006-2007 ஆம் ஆண்டில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களுக்கான மேம்பாட்டுப் பணிகள் ஊரகச் சுற்றுலாவின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டன.

தடியன்குடிசை (திண்டுக்கல் மாவட்டம்)

கோம்பை (தேனி மாவட்டம்)

2007-2008 ஆம் ஆண்டில் கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களை ஊரகச் சுற்றுலாவின்கீழ் மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது:—

(அ) அம்மையப்பன் (திருவாரூர் மாவட்டம்) (கைத்தறிப் புடவைகளுக்குப் பெயர் பெற்றதாகும்)

(ஆ) நாச்சியார்கோவில் (தஞ்சாவூர் மாவட்டம்) (ஆலயமணி, வெண்கலப் பாத்திரங்கள்)
திருபுவனம் (தஞ்சாவூர் மாவட்டம்) (பட்டுப் புடவைகளுக்குப் புகழ்பெற்ற இடம்)

**மாநில அரசின் நிதி உதவி பெறும் திட்டங்கள்:**

**அதிக அளவில் பிரபலமாகாத பகுதிகளுக்கான மேம்பாடு:**

சுற்றுலாப் பயணிகள் அருகிலிருக்கும் சுற்றுலாத் தலங்களுக்குச் சென்று வருவதை ஊக்கப்படுத்துவதற்காக, மாவட்ட ஆட்சித் தலைவர்களோடு கலந்தாலோசித்து சுற்றுலாத் துறை, அந்த மாவட்ட சுற்றுலாத் தலங்களை மேம்படுத்தி வருகிறது. இதற்காகும் மொத்தச் செலவில் 50 சதவீதத்தைச் சுற்றுலாத் துறையும், எஞ்சிய 50 சதவீதத்தை



மாவட்ட நிர்வாகமும் ஏற்றுக்கொள்கின்றன. 2006-2007 ஆம் ஆண்டில் பின்வரும் திட்டங்கள் மாநில அரசு நிதி உதவியுடன் மேம்பாட்டிற்காக எடுத்துக்கொள்ளப்பட்டன:—

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மாவட்ட நிர்வாகத்தின் பங்கு | சுற்றுலாத் துறையின் பங்கு | மொத்தத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| | **பகுதி - 2 திட்டங்கள்** | | | |
| 1. | தூத்துக்குடி மாவட்டம் கழுகுமலை மேம்பாடு | — | 13.00 | 13.00 |
| 2. | திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் சுற்றுலா தகவல் மையம் கட்டுதல் | — | 10.00 | 10.00 |
| 3. | வேலூர் மாவட்டம் ஏலகிரி மேம்பாடு | — | 100.60 | 100.60 |
| 4. | தேனி மாவட்டம் சுருளி நீர்வீழ்ச்சிப்பகுதி மேம்பாடு | — | 19.50 | 19.50 |
| 5. | தேனி மாவட்டம் சின்ன சுருளி நீர்வீழ்ச்சிப் பகுதி மேம்பாடு | — | 10.85 | 10.85 |
| 6. | கன்னியாகுமரியில் உள்ள திருவள்ளுவர் சிலைப் பகுதியில் கூடுதல் அடிப்படை வசதிகள் செய்தல் | — | 39.00 | 39.00 |
| | **மாவட்ட நிர்வாகமும் சுற்றுலாத் துறையும் இணைந்து செயற்படுத்தும் திட்டங்கள் (50 : 50)** | | | |
| 7. | கன்னியாகுமரியில் உள்ள திருவள்ளுவர் சிலையைச் சுற்றி உள்ள பகுதிகளுக்கு அடிப்படை வசதிகள் | 46.81 (த. நா. சு.வ. கழகம்) | 46.81 | 93.62 |
| 8. | திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாது மலை மற்றும் சாத்தனூர் பகுதி மேம்பாடு | 54.00 | 54.00 | 108.00 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மாவட்ட நிர்வாகத் தின் பங்கு | சுற்றுலாத் துறையின் பங்கு | மொத்தத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| | பகுதி - 2 திட்டங்கள் | | | |
| 9. | காஞ்சிபுரம் மாவட்டம் கொட்டிவாக்கம் கடற்கரையில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல் | — | 17.05 | 17.05 |
| 10. | தஞ்சாவூர் மாவட்டம் அருள்மிகு புன்னைநல்லூர் மாரியம்மன் திருக்கோயில் பகுதியில் அடிப்படை வசதிகள் | 48.70 | 25.00 | 73.70 |
| 11. | ஈரோடு மாவட்டம் கொடிவேரி அணைப்பகுதியில் அடிப்படை வசதிகள் | 12.50 | 12.50 | 25.00 |
| 12. | கரூர் மாவட்டம் பொன்னானியாறு அணைப் பகுதியில் அடிப்படை வசதிகள் | 12.50 | 12.50 | 25.00 |
| 13. | விழுப்புரம் மாவட்டம் பூவரசன் குப்பம் அருள்மிகு இலட்சுமி நரசிம்மர் திருக்கோயில் பகுதியில் அடிப்படை வசதிகள் | 8.50 | 8.50 | 17.00 |
| 14. | கடலூர் மாவட்டம் செயங்கொண்டபட்டினம் மேம்பாடு | 15.00 | 15.00 | 30.00 |
| 15. | நவக்கிரகத் தலங்களில் கூடுதல் அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல் (இரண்டாம் கட்டம்) | — | 50.00 | 50.00 |
| 16. | வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் அடிப்படை வசதிகள் | — | 23.00 | 23.00 |



| வ. எண் | திட்டத்தின் பெயர் | மாவட்ட நிர்வாகத் தின் பங்கு | சுற்றுலாத் துறையின் பங்கு | மொத்தத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| | பகுதி - 2 திட்டங்கள் | | | |
| 17. | வேலூர் மாவட்டம் ஏலகிரி மலை மேம்பாடு | 46.00 | 46.00 | 92.00 |
| 18. | விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூார் அருள்மிகு அங்காள பரமேஸ்வரி அம்மன் கோயில் பகுதியில் அடிப்படை வசதிகள் | 31.19 | 31.18 | 62.37 |
| 19. | வேலூர் மாவட்டம் ஏலகிரி மலையில் உள்ள 'கோல்ப் மைதானம்' மேம்பாடு | — | 1.00 | 1.00 |
| 20. | தூத்துக்குடி மாவட்டம் பாஞ்சாலங்குறிச்சியில் உள்ள கட்டபொம்மன் நினைவுக் கோட்டையில் குடிநீர் வசதி | — | 7.50 | 7.50 |
| 21. | தஞ்சாவூர் மாவட்டம் மனோரா மேம்பாடு | — | 31.95 | 31.95 |
| 22. | திருவண்ணாமலை மாவட்டம் அகரம்பள்ளிப்பட்டு அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் மற்றும் கன்னமடை அருள்மிகு அய்யனார் திருக்கோயில் பகுதிகளில் அடிப்படை வசதிகள் | 17.50 | 17.50 | 35.00 |
| 23. | நாகப்பட்டினம் மாவட்டம் தகட்டூர் அருள்மிகு பைரவநாத சுவாமி திருக்கோயில் மற்றும் ஆயக்காரன்புலம் அருள்மிகு கலிதீர்த்த அய்யனார் திருக்கோயில் பகுதியில் அடிப்படை வசதிகள் | 23.15 | 23.15 | 46.30 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மாவட்ட நிர்வாகத்தின் பங்கு | சுற்றுலாத் துறையின் பங்கு | மொத்தத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| | பகுதி - 2 திட்டங்கள் | | | |
| 24. | மதுரை மாநகராட்சிப் பகுதிகளில் அடிப்படை வசதிகள் | 17.68 | 17.67 | 35.35 |
| 25. | தஞ்சாவூர் மாவட்டம் அருள்மிகு முல்லைவனநாதர் திருக்கோயில் பகுதியில் அடிப்படை வசதிகள் | 11.75 | 11.75 | 23.50 |
| 26. | திருவாரூர் மாவட்டம் கேக்கரை மற்றும் குருவி இராமேசுவரம் மேம்பாடு | — | 77.35 | 77.35 |
| 27. | திருவாரூர் மாவட்டம் திருப்பாம்புரம் அருள்மிகு சேஷபுரீஸ்வரர் திருக்கோயில் மேம்பாடு | 9.40 | 9.40 | 18.80 |
| 28. | அனந்தமங்கலம் அருள்மிகு இராஜகோபாலசுவாமி திருக்கோயில், ஒழுகைமங்கலம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் மற்றும் திருப்பங்கூர் அருள்மிகு திவலோகநாதசுவாமி திருக்கோயில் பகுதிகளில் அடிப்படை வசதிகள் | 10.05 | 10.05 | 20.10 |
| 29. | தஞ்சாவூர் மாவட்டம் திருவலஞ்சுழி மற்றும் திருநாகேஸ்வரம் புனிதத் தலங்களில் அடிப்படை வசதிகள் | 26.32 | 26.32 | 52.64 |



| வ. எண் | திட்டத்தின் பெயர் | மாவட்ட நிர்வாகத்தின் பங்கு | சுற்றுலாத் துறையின் பங்கு | மொத்தத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| | பகுதி - 2 திட்டங்கள் | | | |
| 30. | விழுப்புரம் மாவட்டம் திருவக்கரையில் அடிப்படை வசதிகள் | 23.50 | 23.50 | 47.00 |
| | மொத்தம் | 414.55 | 791.63 | 1206.18 |

மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் கலந்தாலோசித்து 2007-2008 ஆம் ஆண்டில் மேலும் பல இடங்கள் மேம்படுத்தப்படும்.

## சிறப்புத் திட்டங்கள் :

### சிறப்புப் பேருந்து சுற்றுலா (Hop on Hop off Tour) சென்னையில் அறிமுகம்:

தமிழ்நாட்டின் தலைநகரமாகிய சென்னை தென்னிந்தியாவின் நுழைவாயில். மற்ற முக்கிய நகரங்களுடன் சென்னை, சாலை, இரயில், வான்வழிகளில் இணைக்கப்பட்டுள்ளதாலும், துறைமுகம் ஒன்றைக் கொண்டிருப்பதாலும் முக்கியதொரு வணிக நகராகத் திகழ்கிறது. கபாலீஸ்வரர் கோயில், பார்த்தசாரதி கோயில், புனித ஜார்ஜ் கோட்டை, கோட்டை அருங்காட்சியகம், குழந்தைகள் பூங்கா, மெரினா கடற்கரை போன்ற எண்ணற்ற சுற்றுலாத் தலங்களையும், வழிபாட்டுத் தலங்களையும் சென்னை தன்னகத்தே கொண்டுள்ளது. எனவே, சுற்றுலாப் பயணிகள் சென்னையின் சுற்றுலாப் பகுதிகளைக் கண்டுகளிக்க, மாநில போக்குவரத்துக் கழகத்தின் உதவியுடன் சிறப்புப் பேருந்துச் சுற்றுலா ஒன்று அறிமுகப்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின்கீழ், சுற்றுலாப் பயணிகள் எந்தவொரு நிறுத்தத்திலும் பேருந்தில் ஏறலாம், தாங்கள் காண வேண்டிய சுற்றுலாத் தலம் இருக்குமிடம் அருகே இறங்கிக்கொள்ளலாம். இத்திட்டத்தில் சுற்றுலாப் பயணி குறிப்பிட்ட இடத்தை குறிப்பிட்ட நேரம்தான் பார்க்க வேண்டும் என்ற கட்டுப்பாடு இல்லை.

### மாமல்லபுரத்தில் சிறப்புப் பூங்கா:

மாமல்லபுரத்திற்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயணிகள்)

ஆண்டுக்காண்டு அதிகரித்து வருகிறது. விவரம் பின்வருமாறு :—

| ஆண்டு | உள்நாட்டவர் | வெளிநாட்டவர் | மொத்தம் |
|---|---|---|---|
| 2001 | 6,88,821 | 71,447 | 7,60,268 |
| 2002 | 7,23,526 | 72,302 | 7,95,828 |
| 2003 | 8,59,768 | 79,224 | 9,38,992 |
| 2004 | 9,51,066 | 91,421 | 10,42,487 |
| 2005 | 9,20,045 | 1,00,357 | 10,20,402 |
| 2006 | 11,42,690 | 1,18,885 | 12,61,575 |

மாமல்லபுரத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில்கொண்டு, மாமல்லபுரத்தின் கடற்கரைக் கோயில் மற்றும் ஐந்து ரதம் உள்ள பகுதிகளில் வாகனங்கள் நிறுத்துமிடம் ஆகியவை நிலச்சீரமைப்பு போன்ற வசதிகளுடன் ரூ.5.00 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளன. இம் மேம்பாட்டுத் திட்டத்தில் 100 அங்காடிகள் கட்டுவதும் அடங்கும். இரண்டாம் கட்டப் பணிகளுக்காக மைய அரசு ரூ.432.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது. இரண்டாம் கட்டப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மாமல்லபுரம் மேம்பாட்டின் ஒரு பகுதியாக சுனாமியால் பாதிக்கப்பட்ட மாமல்லபுரம் சிற்பிகள் மற்றும் கைவினைஞர்களுக்காக "சிற்பிகள் பூங்கா" ஒன்றினை உள்ளாட்சித் துறை மூலம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் முக்கிய நோக்கம், காஞ்சிபுரம் மாவட்டத்தின் மாமல்லபுரத்திற்கு அருகில் உள்ள பூஞ்சேரியில், சிற்பிகள் தங்கள் கைவினைத் திறனைக் காட்சிப்படுத்துவதும், உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்து தங்களது வருவாயைப் பெருக்கிக் கொள்வதுமாகும். இவ்வசதி 2004 ஆம் ஆண்டில் சுனாமியால் பாதிக்கப்பட்ட, 10 உறுப்பினர்களைக் கொண்ட 125 பணிக் குழுக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும். இங்கு 125 பணிக் குழுக்களுக்கும் தொழில் இடம், கச்சாப் பொருட்களை தொழிலிடத்திற்குள் கொண்டுவர தனித்தனி வாயில்கள், பெரிய பெரிய கற்களைச் சீரமைப்பது போன்ற பொதுவான வேலைகளுக்குப் பொதுவான தொழிலிடம் போன்ற வசதிகள் இருக்கும்.

கல் கட்டிடக் கலையின் சரித்திரச் சிறப்பைச் சுற்றுலாப் பயணிகள் அறிந்துகொள்ளவும், இக்கலையை ஆவணப்படுத்தி விளம்பரப்படுத்தவும் இப்பூங்கா பயன்படும். மேலும், இப்பூங்காவில் உணவகம், வரவேற்பறை, சுற்றுலாத் தகவல் மையம், பொழுதுபோக்கு வசதிகள், கழிப்பறை



வசதிகள், சிற்பிகள் சங்கத்திற்கான அலுவலகம் ஆகியவையும் இடம் பெறும்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட சிற்பிகள் மற்றும் கைவினைஞர்களுக்காக நிறுவப்படும் இந்தச் சிற்பிகள் பூங்காவிற்கான செலவு மதிப்பீடு ரூ. 10.00 கோடி ஆகும்.

**கண்காட்சிகள் மற்றும் விழாக்கள்:**

தமிழ்நாட்டின் செழுமையான பண்பாடும், பாரம்பரியமும் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் புகழ் பெற்று விளங்குகின்றன. இங்கு இசை, நாட்டியம், நாடகம் ஆகியவை மக்கள் வாழ்வில் ஓர் அங்கமாகத் திகழ்கின்றன. ஆண்டு முழுவதும் வகைவகையான கண்காட்சிகளையும் திருவிழாக்களையும் ஏற்பாடு செய்வதிலும், அதில் கலந்துகொள்வதிலும் தமிழர்களுக்கு ஆர்வம் அதிகம். மிகச் சிறிய திருவிழாக்களில் கூட பண்பாட்டு நிகழ்ச்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுவிடும். எந்தவொரு மாதமும் ஏதாவது ஒரு திருவிழாவைக் காணாமல் கடந்ததில்லை. ஒவ்வொரு திருவிழாவிலும் இசை, நாட்டியம், மற்றும் நாடகம் இணைந்த நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும். இவ்விழாக்களின் போது, உற்றார் உறவினர் அனைவரும், அவர்கள் எங்கிருந்தாலும் சரி, ஒன்றுசேர்ந்துவிடுவார்கள். இவ்விழாக்கள் அனைத்துத் தரப்பினரையும், அனைத்து வயதினரையும் ஈர்ப்பனவாகும்.

கண்காட்சிகள் மற்றும் திருவிழாக்களைப் பிரபலப்படுத்தி சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் நடவடிக்கைகளை தமிழ்நாடு சுற்றுலாத் துறை ஏற்கெனவே தொடங்கிவிட்டது.

**(அ) கோடை விழாக்கள்:**

கோடை விழாக்கள் மே மற்றும் ஜூன் திங்கள்களில் உதகமண்டலம், சிறுமலை, ஏற்காடு, கொடைக்கானல், சுருளி அருவி, ஏலகிரி, கொல்லிமலை, நாகப்பட்டினம் கடற்கரை, வால்பாறை, ஜவ்வாதுமலை, பச்சமலை, வெள்ளிக் கடற்கரை (கடலூர்), பாஞ்சாலங்குறிச்சி கட்டபொம்மன் நினைவுக் கோட்டை ஆகிய இடங்களில் நடத்தப்படுகின்றன.

**(ஆ) சாரல் விழா:**

குற்றாலம் நீர்வீழ்ச்சிகளுக்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளை மகிழ்ச்சிப்படுத்த சாரல் விழா நடத்தப்படுகிறது.

[2007 மே 7

**(இ) நாட்டிய விழாக்கள்:**

1. நாட்டிய விழா - மாமல்லபுரம் : டிசம்பர் / சனவரி
2. நாட்டியாஞ்சலி விழா - சிதம்பரம் : பிப்ரவரி / மார்ச்

**(ஈ) மற்ற விழாக்கள் நடத்தப்படும் இடங்கள், காலங்கள் :**

| வ. எண் | விழா | இடம் | மாதம் |
|---|---|---|---|
| 1. | சந்தனக்கூடு திருவிழா | ஏர்வாடி | மார்ச் |
| 2. | சித்திரை முழுநிலவு விழா | மதுரை மற்றும் பூம்புகார் | ஏப்ரல்/மே |
| 3. | தேர்த் திருவிழா | திருவாரூர் | மே |
| 4. | சித்திரை விசு திருவிழா | திருநெல்வேலி | மே |
| 5. | ஆடிப் பூரத் திருவிழா | மேல்மருவத்தூர் | ஜுலை |
| 6. | ஆடிப்பெருக்குத் திருவிழா | பவானி கூடுதுறை மற்றும் ஒகேனக்கல் | ஜுலை/ ஆகஸ்டு |
| 7. | வேளாங்கண்ணி மாதா திருவிழா | வேளாங்கண்ணி | ஆகஸ்டு/ செப்டம்பர் |
| 8. | கந்தூரி திருவிழா | நாகூர் | ஆகஸ்டு/ செப்டம்பர் |
| 9. | வல்வில் ஓரி விழா | கொல்லிமலை | ஆகஸ்டு/ செப்டம்பர் |
| 10. | சதயத் திருவிழா | தஞ்சாவூர் | அக்டோபர்/ நவம்பர் |

**அறுவடை விழாக்கள்:**

1. பொங்கல் விழா (அனைத்துச் சுற்றுலா மையங்களிலும்)- சனவரி
2. தேயிலை மற்றும் சுற்றுலா விழா - சனவரி(உதகமண்டலம் / கூடலூர்)
3. மாம்பழத் திருவிழா (கிருஷ்ணகிரி) - ஜுன்



2007 மே 7]

**கலாச்சார விழாக்கள்:**

1. தேசியச் சுற்றுலா மற்றும் பண்பாட்டு விழா, கன்னியாகுமரி - சனவரி
2. தேசிய புனிதப் பயணியர் விழா, இராமேஸ்வரம் - சனவரி
3. நவராத்திரித் திருவிழா, மதுரை - செப்டம்பர்/அக்டோபர்

2007-2008 ஆம் ஆண்டில், மிகவும் சிறப்பான வகையில் இத்திருவிழாக்களையும் கண்காட்சிகளையும் நடத்த இத்துறை தொடர்ந்து ஆதரவு அளிக்கும்.

**தங்கும் வசதி :**

தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியானது விருந்தோம்பல் பிரிவின் தேவைகளைத் தமிழ்நாட்டில் அதிகரித்துள்ளது. தகவல் தொழில்நுட்பம், மருத்துவம், வாகன உற்பத்தி, தொலைத் தொடர்பு, வங்கிகள் போன்ற துறைகள் தமிழ்நாட்டை தாங்கள் விரும்பிச் செல்லும் இடமாக உருவாக்கி உள்ளன. 2006 ஆம் ஆண்டில் ஓட்டல் பிரிவு 80 சதவீதம் தங்குதலைப் பெற்றுள்ளது. 2006 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட/ தரவரிசைப் படுத்தப்படாத ஓட்டல்களின் விவரம் பின்வருமாறு:

| வகை | ஓட்டல்களின் எண்ணிக்கை | அறைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 5 நட்சத்திரம்( சொகுசு) | 5 | 695 |
| 5 நட்சத்திரம் | 7 | 988 |
| 4 நட்சத்திரம் | 10 | 925 |
| 3 நட்சத்திரம் | 74 | 4467 |
| 2 நட்சத்திரம் | 44 | 1699 |
| 1 நட்சத்திரம் | 39 | 1569 |
| பாரம்பரிய வகை | 2 | 74 |
| வரையறுக்கப்படாதவை | 16 | 703 |
| மொத்தம் | 197 | 11120 |

இவையன்றி, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும் 55 ஓட்டல்களை நடத்தி வருகிறது.

மத்திய அரசின் சுற்றுலாத் துறை தமிழ்நாட்டில் 29 ஓட்டல்களைக் கட்டுவதற்கான திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. இவற்றுள் 6 ஐந்து நட்சத்திர ஓட்டல்களும், 2 நான்கு நட்சத்திர ஓட்டல்களும், 3 மூன்று நட்சத்திர ஓட்டல்களும், 2 ஒரு நட்சத்திர ஓட்டல்களும் அடங்கும். 2010 ஆம் ஆண்டு வரையிலான சுற்றுலா வளர்ச்சியின் தொடர்பாக சுற்றுலாப் பயணிகள் சென்னையில் தங்குவதற்கு மட்டும் 4,000 அறைகள் தேவைப்படுகின்றன. இவ்வளர்ச்சி இரண்டடுக்கு நகரங்களிலும் (Two Tier Cities) காணப்படுவதால், இந்நகரங்களில், குறிப்பாக சுற்றுலாத் தலங்களுக்கு அருகிலிருக்கும் இடங்களில், ஓட்டல்கள் கட்டுவதற்கு தனியார் முதலீட்டாளர்கள் ஊக்கப்படுத்தப்படுவார்கள். இம்முயற்சியில் இவர்களுக்கான வசதிகளை ஏற்படுத்தித் தரும் துறையாக சுற்றுலாத் துறை செயல்படும். ஓட்டல்கள் கட்டுவதற்கான அந்தந்த திட்டங்களின் சிறப்புக்கேற்ப முக்கிய இடங்களில் உள்ள அரசு நிலங்களை நீண்ட கால குத்தகைக்கு வழங்குவதற்கான வாய்ப்புகளைப் பற்றி சுற்றுலாத் துறை ஆய்வு செய்யும்.

## உணவுடன் கூடிய உறைவிடத் திட்டம் (Bed & Breakfast)

2010 ஆம் ஆண்டில் சென்னையில் மேலும் 4,000 அறைகள் தேவைப்படும் என்ற நிலையை மனதில் கொண்டு **'உணவுடன் கூடிய உறைவிடத் திட்டத்தைச்'** செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம், திறன் மற்றும் தேவைக்கும் இடையே உள்ள இடைவெளியை வெகுவாகக் குறைப்பதோடு, இல்லத்தரசிகளுக்கு வேலைவாய்ப்பினையும் வழங்கும். குறைந்த கட்டணத்தில் தூய்மையான தங்கும் வசதியை அளிப்பதோடு அல்லாமல், உள்ளூர் மக்களுடன் தங்கி தமிழர்களின் பழக்க வழக்கங்கள், பாரம்பரியம், தமிழர்களின் உணவு முறைகள் போன்றவற்றை அனுபவித்து மகிழும் அருமையான வாய்ப்பினை வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்குவதும் இத்திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும்.

இத்திட்டம் அறைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதோடு மட்டுமல்லாமல், பெண்களுக்கு, குறிப்பாக இல்லத்தரசிகளுக்கு எதில் அதிக திறமை உள்ளதோ அதைச் செய்யவும், வீட்டிலிருந்தபடியே அவர்கள் வருவாய் ஈட்டவுமான வாய்ப்பை உருவாக்கித் தரும்.



## தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்:

தமிழ்நாட்டில் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான அடிப்படை-
வசதிகளை ஏற்படுத்தி சுற்றுலாவை வணிக அடிப்படையில்
மேம்படுத்தும் முக்கிய நோக்கத்தோடு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்
கழகம் 1971 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. தமிழக அரசு நடத்திவந்த
ஐந்து சுற்றுலா மாளிகைகளைப் பெற்று இரு பேருந்துகளுடன் இக்கழகம்
சிறிய அளவில் செயல்படத் தொடங்கியது. தமிழ்நாடு சுற்றுலா
வளர்ச்சிக் கழகம் விரைவாக வளர்ந்து இன்று இந்தியாவிலேயே மிக
அதிகமாக 55 ஓட்டல்களை தன்னகத்தே கொண்டு சிறப்புடன்
செயல்பட்டு வருகிறது. சுற்றுலாப் பேருந்துகளின் எண்ணிக்கை 21 ஆக
உயர்ந்துள்ளது. இம் மாநிலத்திலுள்ள முக்கிய சுற்றுலாப் பகுதிகளில்
சுற்றுலாப் பயணிகளின் நன்மைக்காக கீழ்க்காணும் வசதிகளை
இக்கழகம் செய்துள்ளது:

(1) ஓட்டல்கள்
(2) இளைஞர் விடுதிகள்
(3) உணவகங்கள்
(4) படகு இல்லங்கள்
(5) தொலைநோக்கி இல்லங்கள்
(6) ஏரிப்பூங்கா
(7) பெட்ரோல் பங்க்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் இளைஞர்
விடுதிகளில் நடுத்தர வருவாய் சுற்றுலாப் பயணிகளுக்கு குறைந்த
கட்டணத்தில் பலர் தங்கும் அறையில் (Dormitory) இடவசதி
அளிக்கப்படுகிறது. உதகமண்டலம், கொடைக்கானல், ஏற்காடு போன்ற
இடங்களில் ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான சுற்றுலா பருவ
காலங்களிலும் குறைந்த செலவில் இடவசதியைப் பெறுவதற்கு
சுற்றுலாப் பயணிகளுக்கு இவ்வசதி பயனுள்ளதாய் உள்ளது.

## நிதி நிலவரம்:

2006-2007 ஆம் ஆண்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக
தனது வருவாயைக் கணிசமான அளவில் பெருக்கி உள்ள
2006-2007-ல் ரூ.4,970.00 இலட்சம் வருவாயை ஈட்டியது. 2005-2006 ஆ
ஆண்டின் வருவாய் ரூ.4,342.00 இலட்சம் மட்டுமே. இது முந்தை
ஆண்டைக் காட்டிலும் 14 சதவீத வளர்ச்சியைக் காட்டுகிற

2006-2007 ஆம் ஆண்டின் மொத்த லாபம் ரூ.705.00 இலட்சமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. ஆனால் 2005-2006 ஆம் ஆண்டின் மொத்த லாபம் ரூ.589.70 இலட்சம் மட்டுமே. 2006-2007 ஆம் ஆண்டின் நிகர லாபமும் (வருமான வரி மற்றும் தள்ளப்பட்ட வரிக்கும் பிந்தையது) ரூ.263.00 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. 2005-2006 ஆம் ஆண்டில் ரூ.192.60 இலட்சம் மட்டுமே நிகர லாபமாக ஈட்டப்பட்டுள்ளது.

2006-2007 ஆம் ஆண்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் அனைத்து பெரிய ஓட்டல்களின் செயல்பாடுகளின் மூலம் கிடைத்த வருவாய்தான் இவ்வளர்ச்சிக்குக் காரணம் எனக் கருதப்படுகிறது. 2006-2007 ஆம் ஆண்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல்களில் தங்கியோரின் எண்ணிக்கை (Percentage of Occupancy) அதற்கு முந்தைய ஆண்டுகளைக் காட்டிலும் 5 சதவீதம் அதிகரித்துள்ளது.

**ஓட்டல் பிரிவின் சாதனை:**

2006-2007 ஆம் ஆண்டில் ஓட்டல் பிரிவின்மூலம் கிடைக்கும் வருவாய் ரூ.3,555.00 இலட்சமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 2005-2006 ஆம் ஆண்டில் இதன் அளவு ரூ.3,046.00 இலட்சம். இது அதற்கு முந்தைய ஆண்டைக் காட்டிலும் 17 சதவீத வளர்ச்சியைக் காட்டுகிறது. **கடந்த பத்தாண்டுகளில் ஓட்டல் பிரிவு இதுபோன்ற சாதனையைச் செய்யவில்லை.** 2006-2007 ஆம் ஆண்டில் தங்குமிடம், உணவகம், மதுபானம் விற்பனை மற்றும் படகுச் சவாரி ஆகிய பிரிவுகளின்மூலம் கிடைத்த வருவாய் குறிப்பிடத்தகுந்த அளவுக்கு அதிகரித்துள்ளன. முக்கிய ஓட்டல்களை மேம்படுத்துவது மூலமாகவும், தன்னார்வ ஓய்வுத் திட்டத்தில் பணியிலிருந்து சென்ற 'டி' பிரிவு ஊழியர்களுக்குப் பதிலாக அவ்வேலைகளைச் செய்ய தருவித்தல் (Outsourcing) மூலமாக பணியாளர்களை நியமித்து வாடிக்கையாளர் சேவையை உயர்த்துவது மூலமாகவும் இவ்வளர்ச்சியை தொடர்ந்து தக்கவைத்துக் கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல்கள் மற்றும் உணவகங்களை குத்தகைக்கு விடுதல்:**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தனது 31 ஓட்டல்களையும், 10 உணவகங்களையும் தனியாருக்கு குத்தகைக்கு விடுவதற்கு அரசு ஏற்கெனவே அனுமதி அளித்துள்ளது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் இயக்குநர் குழுமத்தின் சிபாரிசின் அடிப்படையில் குத்தகை



நிபந்தனைகளில் சில மாறுதல்களைச் செய்து கொள்ள அரசு தனது சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறையின் 8-2-2007 ஆம் நாளிட்ட ஆணை எண் 17 மூலம் ஒப்புதல் கொடுத்துள்ளது. இந்தத் திருத்தங்களின் மூலம் குத்தகைத் தொகையில் 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை 15 சதவீத அதிகரிப்பை ஏற்படுத்திக்கொள்ள முடியும். இந்தத் திருத்தப்பட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் அரசு ஒப்புதல் அளித்த மீதமுள்ள ஓட்டல்களையும், உணவகங்களையும் குத்தகைக்கு விட ஒப்பந்தப் புள்ளிகள் கோரி அழைப்பு விடப்பட்டுள்ளது. அரசு அங்கீகரித்த இந்தத் திருத்தங்களின் காரணமாக இவ்வொப்பந்தப்புள்ளிகளுக்கு நல்ல வரவேற்பு இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**போக்குவரத்துப் பிரிவின் சாதனை:**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ½ நாள் முதல் 14 நாட்கள் வரையிலான திட்டமிட்ட 37 வகை சுற்றுலா பயணத் திட்டங்களை நடத்தி வருகிறது. இச்சுற்றுலா திட்டத்தில் தமிழ்நாட்டிலுள்ள சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் மட்டுமல்லாமல் தென்னக மாநிலங்கள் (அனைத்தும்), மகாராஷ்டிரம், மத்தியப்பிரதேசம், உத்திரப்பிரதேசம் மற்றும் ஒரிசா ஆகிய மாநிலங்களும் இடம்பெற்றுள்ளன. மேலும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மலேசியா, சிங்கப்பூர், மொரீசியஸ், தென் ஆப்பிரிக்கா ஆகிய இடங்களிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளுக்குச் சிறப்பு சுற்றுலாக்களை ஏற்பாடு செய்து வருகிறது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பின்வரும் சுற்றுலாப் பயணத் திட்டங்களை நடத்தி வருகிறது:

1. ½ நாள் சென்னை சுற்றுலா
2. 1 நாள் மாமல்லபுரம் சுற்றுலா (நாள் முழுவதும்)
3. 1 நாள் புதுச்சேரி சுற்றுலா
4. 1 நாள் திருப்பதி சுற்றுலா (பகல் சுற்றுலா)
5. 1 நாள் திருவண்ணாமலை கிரிவலம் சுற்றுலா
6. 1 நாள் சுருட்டப்பள்ளி சுற்றுலா
7. 1 நாள் சக்தி சுற்றுலா (தேவியர்கள் தரிசனம்)
8. 1 நாள் திருமலை தரிசனம் சுற்றுலா
   (ஒன்பது வைணவத் திருக்கோயில்கள்)

9. 1 நாள் கொளவாய் ஏரி, வண்டலூர் உயிரியல் பூங்கா மற்றும் கிஷ்கிந்தா சுற்றுலா
10. 1 நாள் கேளிக்கைச் சுற்றுலா
11. 1 நாள் நவக்கிரகச் சுற்றுலா (சென்னையைச் சுற்றி)
12. 3 நாள் நவக்கிரகச் சுற்றுலா (தஞ்சாவூரைச் சுற்றி)
13. 3 நாள் நவதிருப்பதிகள் சுற்றுலா (திருநெல்வேலி)
14. 3 நாள் பஞ்ச பூத தலங்கள்
15. 4 நாள் அறுபடை வீடு சுற்றுலா (முருகக் கடவுள் சுற்றுலா)
16. 6 நாள் தென்னிந்தியச் சுற்றுலா
17. 7 நாள் மூகாம்பிகைச் சுற்றுலா
18. 7 நாள் கோவா-மந்திராலயம் சுற்றுலா
19. 7 நாள் ஆந்திரா சுற்றுலா
20. 8 நாள் கிழக்கு, மேற்கு கடற்கரைச் சுற்றுலா
21. 8 நாள் தமிழ்நாடு சுற்றுலா
22. 14 நாள் மும்பை – அஜந்தா – எல்லோரா சுற்றுலா
23. 14 நாள் சன்னி சௌத் சுற்றுலா
24. 14 நாள் பூரி–கயா–காசி – அலகாபாத் சுற்றுலா

**பருவகால சுற்றுலாக்கள்:**

25. ஊட்டி சுற்றுலா
26. கொடைக்கானல் சுற்றுலா
27. ஏற்காடு ஒகேனக்கல் சுற்றுலா
28. மைசூர் சுற்றுலா
29. ஏலகிரி சுற்றுலா
30. குற்றாலம் சுற்றுலா
31. 3 நாள் மூணாறு சுற்றுலா
32. தொண்டைநாட்டுத் திருப்பதிகள் சுற்றுலா
33. 1 நாள் தென்னாங்கூர்-உத்திரமேரூர்-மதுராந்தகம் சுற்றுலா
34. 4 நாள் சோழநாட்டுத் திருப்பதிகள் சுற்றுலா
35. 5 நாள் பாண்டியநாட்டுத் திருப்பதிகள் சுற்றுலா



**போக்குவரத்துப் பிரிவின் நிதி செயல்பாடு:**

*2006-2007* ஆம் ஆண்டில் போக்குவரத்துப் பிரிவு ரூ.*712.00* இலட்சம் வருவாயை ஈட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. *2005-2006* இல் போக்குவரத்துப் பிரிவின் மூலம் கிடைத்த வருவாய் ரூ.*636.00* இலட்சம் மட்டுமே; *2006-2007* இன் இந்த வருவாய் அதற்கு முந்தைய ஆண்டான *2005-2006*-ஐக் காட்டிலும் *12* சதவீதம் அதிகமாகும். *2006-2007* இல் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தனது பழைய *10* பேருந்துகளுக்குப் பதிலாக, புதிய *10* பேருந்துகளை வாங்கியுள்ளது.

**மதிப்புக் கூடிய சுற்றுலாக்கள்:**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் *2002* ஆம் ஆண்டில் புது தில்லி, மும்பை, கொல்கத்தா மற்றும் அகமதாபாத் ஆகிய பிற மாநில முக்கிய நகரங்களிலிருந்து தமிழ்நாட்டிற்கு இரயில்-சாலை வழி சுற்றுலாவினைத் தொடங்கியது. இந்தச் சுற்றுலாவில் கலந்து கொள்ளும் சுற்றுலாப் பயணிகள் சென்னை புகைவண்டி நிலையத்தில் வரவேற்கப்பட்டு அதி நவீன வசதி பேருந்தில் தமிழ்நாடு முழுவதும் சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டு மீண்டும் சென்னை இரயில் நிலையத்தில் அவர்கள் திரும்ப வழியனுப்பப்படுவார்கள். இச்சுற்றுலாக்களில் கலந்து கொள்வோர்களுக்கு உறுதி செய்யப்பட்ட இரயில்வே பயணச் சீட்டு வழங்கப்படுகின்றன.

*2006-2007* ஆம் ஆண்டில் இந்த இரயில் மற்றும் சாலை வழி சுற்றுலாக்கள் அதற்கு முந்தைய ஆண்டின் வருமானமான ரூ.*31* இலட்சத்தை விட *200%* அதிக வளர்ச்சி பெற்று ரூ.*93.00* இலட்சம் வருவாயை ஈட்டியுள்ளது. நாளிதழ்களில் கொடுக்கப்பட்ட தொடர் விளம்பரங்களின் மூலமாகவும், கொல்கத்தா, மும்பை, அகமதாபாத், ஐதராபாத், ஜெய்ப்பூர், புதுதில்லி ஆகிய நகரங்களில் நடத்தப்பட்ட விளம்பர முகாம்களின் விளைவாகவும் வருவாய் அதிகரித்துள்ளது. இந்தச் சிறப்பு சுற்றுலாக்களுக்கு சுற்றுலாப் பயணிகளிடமிருந்து கிடைக்கும் சிறப்பான வரவேற்பை கருத்தில் கொண்டு இதுபோன்ற சுற்றுலாக்களை மேலும் அதிகரிப்பதற்கு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

**பொருட்காட்சிப் பிரிவு:**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் *1974* ஆம் ஆண்டு முதல் சென்னை தீவுத்திடலில் இந்தியச் சுற்றுலா மற்றும் தொழில்

பொருட்காட்சியினை நடத்தி வருகிறது. 2007 ஆம் ஆண்டு பொருட்காட்சி 30-12-2006 அன்று தொடங்கப்பட்டது.

2007 ஆம் ஆண்டு பொருட்காட்சிதான் அதிக அளவில் பார்வையாளர்களை ஈர்த்த பொருட்காட்சி எனக் கருதப்படுகிறது. 2006 ஆம் ஆண்டு 10.40 இலட்சம் பார்வையாளர்களை ஈர்த்த பொருட்காட்சி, 2007-ல் 12 இலட்சம் பார்வையாளர்களை ஈர்த்துள்ளது. இது 14 சதவீதம் அதிகமாகும்.

இதேபோன்று 2007 ஆம் ஆண்டு பொருட்காட்சியில் தனியாருக்காக அமைக்கப்பட்ட அனைத்துக் கடைகளும் 13 ஆண்டுகளுக்குப் பிறகு முழுவதுமாக விற்பனை செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் இந்த இந்தியச் சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சிக்கு மக்களிடம் இருக்கும் வரவேற்பை இது தெளிவாகக் காட்டுகிறது. இப்பொருட்காட்சி மூலம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இதுவரை அடையாத ரூ.136 இலட்சத்தை இலாபமாக ஈட்டியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல்கள் மற்றும் திட்டமிட்ட சுற்றுலாக்களுக்கு கணினி மூலம் பதிவு செய்தல்:**

கணினி வழியில் சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல்கள் மற்றும் திட்டமிட்ட சுற்றுலாக்களுக்கு பதிவு செய்வதை 2-7-2004-ல் அறிமுகப்படுத்தியதன் மூலம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சுற்றுலா வளர்ச்சிக் கழகங்களின் முன்னோடியாகத் திகழ்கிறது. கணினி வழி பதிவு முறை (Web site) http://www.ttde.online புதிய இணையதள முகவரியில் தொடங்கப்பட்டுள்ளது.

2004 ஜூலை முதல் 2006 மார்ச் வரை கணினி வழிப் பதிவு மூலம் கிடைத்த வருவாய் ரூ. 47.85 இலட்சம். ஆனால் 2006-2007 இல் கணினி வழிப்பதிவு மூலம் கிடைத்த வருவாய் அதற்கு முந்தைய ஆண்டின் வருமானமான ரூ.33.00 இலட்சத்திலிருந்து 155 சதவீதம் அதிகரித்து ரூ.84.00 இலட்சம் என்ற இலக்கை அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உலகின் எந்தப் பகுதியிலிருந்தும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல்கள் மற்றும் சுற்றுலாக்களுக்கு கணினி வழி பதிவு செய்துகொள்ளும் இவ்வசதிக்கு சுற்றுலாப் பயணிகளிடையே உள்ள வரவேற்பை இது எடுத்துக்காட்டுகிறது.



**கன்னியாகுமரி அய்யன் திருவள்ளுவர் சிலை பராமரிப்பு:**

கன்னியாகுமரியில் உள்ள அய்யன் திருவள்ளுவர் சிலையைப் பராமரிக்கும் பொறுப்பு 2002 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டிலான பல மேம்பாட்டுப் பணிகள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் மேற்கொள்ளப்பட்டன. ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டிலான மேம்பாட்டுப் பணிகள் பொதுப் பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டு அப்பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் திருவள்ளுவர் சிலையினைச் சுற்றி சுற்றுலாப் பயணிகளுக்குக் கூடுதல் வசதி ஏற்படுத்த ரூ.133.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இதில் ரூ.28.00 இலட்சம் மதிப்பீட்டிலான பணிகளை மேற்கொள்ள பணி ஆணைகள் ஏற்கெனவே வழங்கப்பட்டு விட்டன.

**தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் செயல்பாட்டினை அதிகரிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்:**

1. பத்து பழைய பேருந்துகளுக்குப் பதிலாக புதிய ஹைடெக் பேருந்துகள் ரூ.171.00 இலட்சம் செலவில் வாங்கப்பட்டுள்ளன. பயணம் செய்யும் சுற்றுலாப் பயணிகளின் வசதியைக் கருத்தில் கொண்டு 35 இருக்கைகள் கொண்ட பேருந்துகள் அனைத்திலும் Air Suspension-கள் பொருத்தப்பட்டுள்ளன.

2. குளிர்சாதன வசதி படைத்த வோல்வோ பேருந்து ஒன்று ரூ.61.25 இலட்சம் செலவில் வாங்கப்பட்டு, 2006 டிசம்பர் மாதத்திலிருந்து திருப்பதி சுற்றுலாவிற்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது. வோல்வோ மூலம் நடத்தப்படும், இத்திருப்பதி சுற்றுலாவிற்கு மிகுந்த வரவேற்பு கிடைத்துள்ளது. இச்சுற்றுலா 5 நாட்களுக்கு முன்னதாகவே முற்றிலும் பதிவு செய்யப்பட்டுவிடுகிறது. வோல்வோ பேருந்தை வாங்கியதற்குண்டான செலவு 1½ ஆண்டுகளுக்குள்ளாக ஈட்டப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

3. திருச்சி, கன்னியாகுமரி, மாமல்லபுரம் (கடற்கரை வளாகம்), கோயம்புத்தூர், இராமேஸ்வரம், ஆகிய இடங்களில் உள்ள ஓட்டல்களில் 75 புதிய குளிர்சாதனப் பெட்டிகள் ரூ.22.50 இலட்சம் செலவில் பொருத்தப்பட்டுள்ளன. இதனால் 2006-07 ஆம் ஆண்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தங்குமிட வசதி வருவாய் 17 சதவீதம் அதிகரித்துள்ளது.

4. ஒகேனக்கல் ஓட்டலில் தடைபடா மின்வசதி வழங்குவதற்காக 62.5 KVA ஜெனரேட்டர் ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

5. உதகமண்டலம், கொடைக்கானல், ஏற்காடு, முட்டுக்காடு, பிச்சாவரம் ஆகிய இடங்களில் உள்ள படகு குழாம்களுக்காக 105 படகுகள் ரூ. 60.00 இலட்சம் செலவில் வாங்கப்பட்டன. இது 2006-2007-ல் படகுசவாரி மூலம் கிடைத்த வருவாய் 34 சதவீதம் அதிகரிக்க உதவியது. படகு குழாம்கள் அதிக அளவு (80 சதவீதம்) லாபத்துடன் செயல்பட்டு பிற பிரிவுகளுக்கு வழிகாட்டியாய் திகழ்வதுடன் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மொத்த இலாபமீட்டும் திறன் அதிகரிக்கவும் உதவியாக உள்ளது.

6. சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கும் வகையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் வாயுவைப் பயன்படுத்தி இயங்கும் இயந்திரப் படகுகளை உதகமண்டலத்தில் அறிமுகப்படுத்தியுள்ளது. இதுவரை பெட்ரோல் மற்றும் மண்ணெண்ணையால் இயக்கப்பட்ட 16 இயந்திரப் படகுகள் வாயுமூலம் இயக்கப்படும் எந்திரப் படகுகளாக மாற்றப்பட்டுள்ளன. இது 100 சதவீதம் மாசு படா சுற்றுச்சூழலை அளித்ததோடு மட்டுமில்லாமல், 30 சதவீத செலவையும் குறைத்துள்ளது.

7. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தனது வரலாற்றில் முதன்முறையாக மிதிபடகுகளை (Pedal Boats) முட்டுக்காட்டில் அறிமுகப்படுத்தியுள்ளது. இது ஒரு மாபெரும் வெற்றியாக அமைந்ததோடு மட்டுமில்லாமல், முட்டுக்காடு படகு குழாம் 2006-2007 ஆம் ஆண்டில் அதன் முந்தைய ஆண்டு வருமானத்திலிருந்து 77% அதிகரிக்க உதவியுள்ளது. மேலும், 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.50.00 இலட்சம் லாபம் ஈட்டியுள்ளது. இது கடந்த ஆண்டு ஈட்டியுள்ள ரூ.30.00 இலட்சம் இலாபத்தை விட 67 சதவீதம் அதிகமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

8. கொடைக்கானல் இளைஞர் விடுதியில் மேம்பாட்டுப் பணிகள் ரூ.28.00 இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

9. கொடைக்கானல் படகு குழாம் ரூ.13.00 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளது.

10. ஒகேனக்கல் ஓட்டல் ரூ.16.00 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளது.

11. ஏற்காடு படகு குழாம் ரூ.25.00 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளது.



12. திருச்சி ஓட்டல் ரூ.18.00 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளது.

**2007-2008 ஆம் ஆண்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் செயல்பாடுகளை அதிகரிக்க மேற்கொள்ளப்படவிருக்கும் திட்டங்கள்:**

1. 2006-2007 ஆம் ஆண்டில் பெற்ற வளர்ச்சியைத் தக்க வைத்துக் கொள்வதற்காக, காஞ்சிபுரம், கோயம்புத்தூர், கொடைக்கானல், இராமேஸ்வரம், கன்னியாகுமரி, மதுரை-2, தஞ்சாவூர், ஏற்காடு ஆகிய இடங்களில் உள்ள ஓட்டல்களை ரூ.300.00 இலட்சம் செலவில் மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

2. மாமல்லபுரத்திலுள்ள கடற்கரை வளாகத்தில் சுனாமியால் முற்றிலுமாக அழிக்கப்பட்ட 37 குடில்களை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ரூ.180.00 இலட்சம் செலவில் புதுப்பித்துள்ளது. நவீன அறைகலன்களுடன் புதுப்பிக்கப்பட்ட, இந்தக் குடில்கள் அனைத்தும் குளிர்சாதனவசதி பொருத்தப்பட்ட குடில்களாக மாற்றப்பட்டுள்ளன. இந்தப் புதுப்பிக்கப்பட்ட குடில்களுக்கு சுற்றுலாப் பயணிகளிடையே மிகுந்த வரவேற்பு ஏற்பட்டுள்ளது. 2006-2007-ல் மாமல்லபுரம் கடற்கரை வளாகம், அதற்கு முந்தைய ஆண்டில் ஈட்டிய அதிகபட்ச இலாபமான ரூ.23.00 இலட்சத்தையும் தாண்டி ரூ.50.00 இலட்சம் லாபத்தை ஈட்டியுள்ளது. புதுப்பிக்கப்பட்ட குடில்களுக்கு சுற்றுலாப் பயணிகளிடமிருந்து கிடைத்திருக்கும் மிகச்சிறந்த ஆதரவு காரணமாக, 20 சிக்கனக் குடில்களை புதுப்பிப்பதோடு மட்டுமில்லாமல், மேலும் 20 கூடுதல் குடில்களை ரூ.200.00 இலட்சம் செலவில் கட்ட தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் திட்டம் தீட்டியுள்ளது.

3. முட்டுக்காடு படகுகுழாம் பெற்றுவரும் வளர்ச்சியை தக்கவைத்துக் கொள்ளும் முயற்சியின் ஓர் அங்கமாக முட்டுக்காடு படகு குழாமில் ரூ.45.00 இலட்சம் செலவில், வாகனங்கள் நிறுத்துமிடத்தை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் 2007-2008 இல் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கூடுதல் வருவாயை ஈட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

4. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அண்மையில் வாங்கிய வோல்வோ (Volvo) பேருந்துக்கு நல்ல வரவேற்பு இருப்பதால் ரூ.61.25 இலட்சத்தில் மேலும் புதிதாக ஒரு வோல்வோ (Volvo) பேருந்து வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

5. 15 வருடங்களுக்குப் பிறகு முக்கியமான ஓட்டல்களுக்கு 1066 லேடெக்ஸ், பின்கோர் வகை மெத்தைகள் ரூ 59.00 இலட்சம் செலவில் வாங்கி வழங்கப்பட உள்ளன.

6. மாமல்லபுரம் கடற்கரை வளாகத்தில் தங்குதடையில்லா மின்வசதி அளிப்பதற்காக ரூ.18.00 இலட்சம் செலவில் 250 KVA ஜெனரேட்டர் நிறுவப்படவுள்ளது.

7. 2006-2007 இல் கொடைக்கானல் ஓட்டல் 22 சதவீதம் அதிக வருவாயை ஈட்டியுள்ளது. கொடைக்கானல் ஓட்டலில் 3 தளங்கள் உள்ளன. எனவே அங்கு ஒரு மின்தூக்கியை ரூ.15.40 இலட்சம் செலவில் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.

8. படகுப் பிரிவின் மூலம் கிடைக்கும் வருவாயை அதிகரிக்கும் நோக்கோடு ரூ.30.00 இலட்சம் செலவில் 68 புதிய படகுகள் வாங்கப்படவுள்ளன.

**எதிர்காலத் திட்டங்கள்:**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தனது வருவாயை அதிகரித்து, இலாபம் ஈட்டும் தன்மையை உயர்த்திக் கொள்வதற்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அனைத்து மிகப்பெரிய ஓட்டல்களும் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. பழைய பேருந்துகளை நீக்கி அதற்குபதிலாக நவீன ஹைடெக் பேருந்துகள் வாங்கப்பட்டு வருகின்றன. வோல்வோ பேருந்து ஒன்று புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவை அனைத்தும் நல்ல பலனைக் கொடுத்துள்ளன. 2006-2007-இல் ஓட்டல்களில் தங்கியோரின் எண்ணிக்கை (Occupancy ratio) 5 சதவீதம் அதிகரித்துள்ளது. இரயில் மற்றும் சாலைவழி சுற்றுலாக்களின் மூலம் கிடைக்கும் வருவாய் பெருமளவில் அதிகரித்துள்ளது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஓட்டல்களில் 'டி' பிரிவு பணியாளர்களை தருவித்தல் (outsourcing) செய்வது மற்றும் முக்கிய ஓட்டல்களை மேம்படுத்துவது போன்ற திட்டங்களின் மூலமாக, 2007-2008 ஆம் ஆண்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தனது வளர்ச்சியைத் தக்கவைத்து, இலாபம் ஈட்டும் தன்மையை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**முடிவுரை :**

சுற்றுலாப் பயணிகள் வருகையில் முதலிடத்தைப் பெறவும், இந்தியாவிலேயே சுற்றுலா தொடர்பான மிகச் சிறந்த அடிப்படை



வசதிகளைச் செய்து தரவும் தமிழ்நாடு சுற்றுலா தொடர்ந்து முயற்சிகளை மேற்கொள்ளும். 2007-2008 ஆம் ஆண்டில் சுற்றுலாத் தொழிலின் ஒவ்வொரு பிரிவும் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு மிகப்பெருமளவில் உயர்ந்து நிற்க தன் பங்கை ஆற்றும் வகையில் தமிழ்நாடு சுற்றுலா, நடவடிக்கைகளை மேற்கொள்ளும். வேலைவாய்ப்புகளைக் குறிப்பாக கிராமப் பகுதிகளில் உருவாக்கி வறுமையைப் போக்கும் வகையில் சுற்றுலாத் துறையின் அனைத்துப் பிரிவுகளுக்கும் தமிழ்நாடு சுற்றுலா சமமான முக்கியத்துவம் வழங்கும். அதற்கேற்ப சுற்றுலாப் பயணிகளின் உடனடித் தேவைகளை நிறைவு செய்வதோடு, உள்ளூர் மக்களின் நீண்ட காலத் தேவைகளை நிறைவு செய்யும் விதத்திலும் அடிப்படை வசதிகளுக்கான நடவடிக்கைகள் திட்டமிட்டுச் செயலாற்றப்படும். இயற்கைச் சுற்றுலாவை மேம்படுத்தும்போது, சுற்றுச்சூழலுக்கு அச்சுறுத்தல் ஏதும் இருக்காத வகையில் மிகுந்த எச்சரிக்கை உணர்வுடன் அவை மேற்கொள்ளப்படும். சுற்றுலா மையங்கள் மட்டுமல்லாது, சுற்றுலாப் பயணிகள் அதிகம் சந்திக்கக் கூடிய ஓட்டல்கள், வழிபாட்டு மையங்கள், வணிக வளாகங்கள், கேளிக்கை வளாகங்கள் போன்ற இடங்களுக்கும் வசதிகள் கிடைக்கும் வகையில் மாபெரும் சுற்றுலாத் திட்டங்கள் மிகுந்த கவனத்துடன் திட்டமிடப்பட்டுச் செயல்படுத்தப்படும். சுற்றுலா என்பது செலவு அல்ல முதலீடு; விரயம் அல்ல கிரயம்; பொழுதுபோக்கு அல்ல பொழுதாக்கம் என்கிற உன்னத நிலை தமிழகத்தில் விளையும் வண்ணம் இத்துறை அயராது பாடுபடும்.

## இணைப்பு

### பாரம்பரிய நகரங்கள்

| வ. எண் | பாரம்பரிய நகரம் | மாவட்டம் |
| --- | --- | --- |
| 1. | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் |
| 2. | மாமல்லபுரம் | |
| 3. | ஸ்ரீபெரும்புதூர் | |
| 4. | சிதம்பரம் | கடலூர் |
| 5. | பிச்சாவரம் | |
| 6. | மருதூர் | |
| 7. | குறிஞ்சிப்பாடி | |
| 8. | மரக்காணம் | |
| 9. | திருவந்திபுரம் | |

| வ. எண் | பாரம்பரிய நகரம் | மாவட்டம் |
|---|---|---|
| 10 | இராமேசுவரம் | இராமநாதபுரம் |
| 11. | வாலிநோக்கம் | |
| 12. | சேதுக்கரை | |
| 13. | ஸ்ரீரங்கம் | திருச்சிராப்பள்ளி |
| 14. | ஸ்ரீவில்லிப்புத்தூர் | விருதுநகர் |
| 15. | தஞ்சாவூர் | தஞ்சாவூர் |
| 16. | கும்பகோணம் | |
| 17. | கங்கைகொண்டசோழபுரம் | பெரம்பலூர் |
| 18. | மதுரை | மதுரை |
| 19. | பழனி | திண்டுக்கல் |
| 20. | திருச்செந்தூர் | தூத்துக்குடி |
| 21. | **நவதிருப்பதிகள்:** அ) திருக்கோளூர் ஆ) குரும்பூர் | |
| 22. | மணப்பாடு | |
| 23. | திருத்தணி | திருவள்ளூர் |
| 24. | கன்னியாகுமரி | கன்னியாகுமரி |
| 25. | பத்மநாபபுரம் | |
| 26. | குளச்சல் | |
| 27. | திருவண்ணாமலை | திருவண்ணாமலை |
| 28. | செஞ்சி | விழுப்புரம் |
| 29. | பரிக்கல் | |
| 30. | திருவக்கரை | |
| 31. | செட்டிநாடு | சிவகங்கை |
| 32. | காரைக்குடி | |
| 33. | இடைக்காட்டூர் | |
| 34. | பிள்ளையார்பட்டி | |
| 35. | காளையார்கோயில் | |



| வ. எண் | பாரம்பரிய நகரம் | மாவட்டம் |
|---|---|---|
| 36. | தரங்கம்பாடி | நாகப்பட்டினம் |
| 37. | பூம்புகார் | |
| 38. | நாகூர் | |
| 39. | வேளாங்கண்ணி | |
| 40. | குற்றாலம் | திருநெல்வேலி |
| 41. | திருநெல்வேலி | |
| 42. | திருச்செங்கோடு | நாமக்கல் |
| 43. | பேரூர் | கோயம்புத்தூர் |
| 44. | பவானி | ஈரோடு |
| 45. | சித்தன்னவாசல் | புதுக்கோட்டை |
| 46. | ஆவுடையார்கோவில் | |
| 47. | திருமயம் | |






## சுற்றுலா புள்ளி விவரம்









## இணைப்பு-11

(100 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### கலை பண்பாட்டு இயக்ககம்

#### (மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பில் உள்ளது)

கலைகள் இல்லாத உலகம் அலைகள் இல்லாத கடல். கலைகளின் முதிர்ச்சியே பண்பாட்டுத் தொடர்ச்சிக்கு மூலகாரணம். செதுக்கிய சிற்பங்களும், தீட்டிய ஓவியங்களும், எழுதிய காவியங்களும், ஒலித்த இசைக்கோவைகளும், நாட்டியங்களும், நாடகங்களும் இல்லாத உலகம் கருப்பு வெள்ளையாகவே காட்சியளிக்கும். அறிவியல் மூளையைப் பலப்படுத்துகிறது; கலை இதயத்தை வலுப்படுத்துகிறது. மனிதனின் உணர்வுகளைச் சலித்து சலித்து மேன்மைப்படுத்தி, அவற்றைக் காலப்பெட்டகத்துள் பத்திரப்படுத்துகிற உன்னத முயற்சியே கலை இலக்கியம். மக்களுக்குத் தரமான கலை வடிவங்களை அறிமுகப்படுத்துவதும், கலைஞர்களைப் போற்றிப் பேணிக்காப்பதும், அவர்தம் கலைகளைச் சிதையாமல் போற்றுவதும், அதன் மூலம் பண்பாட்டுக் கூறுகளை இடைவிடாமல் பாதுகாப்பதும் கலை பண்பாட்டுத் துறையின் முதன்மைப் பணிகளாக இருக்கின்றன. தமிழகத்தின் மூலை முடுக்குகளில் எல்லாம் இசையொலியும், நாத முழக்கமும், செந்தமிழ் ஓசையும் பரவும் பொருட்டு ஓயாது உயிர்த்துடிப்புடன் செயல்படும் துறையாக இத்துறை இருந்து வருகிறது.

கலை பண்பாட்டு இயக்ககத்தின் கட்டுப்பாட்டின்கீழ் ஆறு மண்டலக் கலை பண்பாட்டு மையங்களும், நான்கு அரசு இசைக் கல்லூரிகளும், 17 மாவட்ட அரசு இசைப் பள்ளிகளும், இரண்டு அரசு கவின்கலைக் கல்லூரிகளும், அரசு கட்டட சிற்பக்கலைக் கல்லூரி ஒன்றும், 36 சவகர் சிறுவர் மன்றங்களும், மாவட்டங்கள்தோறும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் 30 மாவட்டக் கலை மன்றங்களும் செயல்பட்டு வருகின்றன. இவை தவிர, சென்னையில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு ஆகிய அமைப்புகள் கலை வளர்ச்சிக்காகப் பணியாற்றி வருகின்றன.

மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் கலையால் விழுமியங்கள் போற்றப்படுகின்றன. தொன்மையும், நெடிய பாரம்பரியத் தொடர்ச்சியும் உணர்த்தப்பட்டு, பண்பாடு குறித்த தாக்கம் ஏற்படுத்த கலை ஒப்பற்ற ஊடகமாக இருக்கிறது. கலை பண்பாட்டு இயக்ககத்தின்







செயல்பாடுகளைப் பரவலாக்கும் பொருட்டு 1997-1998 ஆம் ஆண்டில் நான்கு மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் காஞ்சிபுரம், தஞ்சாவூர், சேலம், மதுரை ஆகிய இடங்களிலும், 1998-1999 ஆம் ஆண்டில் இரண்டு மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களிலும் தோற்றுவிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இக்கலை பண்பாட்டு மையங்கள் மாவட்டக் கலை மன்றங்கள், மாவட்ட அரசு இசைப்பள்ளிகள், சவகர் சிறுவர் மன்றங்கள் ஆகியவற்றின் கலைப் பணிகளை ஒருங்கிணைத்து அரசு திட்டங்களைச் சிறப்புடன் மாவட்ட அளவில் நிறைவேற்றி வருகின்றன. மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் கலை பண்பாட்டுத் துறை சார்பாகத் தனித்தும், மாவட்டக் கலை மன்றங்கள், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு, தென்னகப் பண்பாட்டு மையம் ஆகியவற்றுடன் இணைந்தும் தமிழிசை விழா, நாட்டுப்புறக் கலைவிழா, தமிழிசை மூவர் விழா, நாட்டுப்புறக் கலைப் பயிற்சி, கார்த்திகை ஒளி விழா, பாவை விழா, சாரல் விழா, பொங்கல் விழா முதலிய கலை விழாக்களும், கலைப் பயிற்சிகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

### மாவட்டக் கலை மன்றங்கள்

நமது மரபுமிக்க கலை வடிவங்களை மேம்படுத்தி தமிழ்நாடு முழுவதும் பரப்புவதற்கும், அரிய கலைச் செல்வங்களைப் பேணிப் பாதுகாக்கவும், திறன் படைத்த கலைஞர்களைக் கண்டறிந்து ஊக்குவிக்கவும், மாவட்டக் கலை மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

மாவட்டக் கலை மன்றங்கள் மூலம் பல்வேறு கலைஞர்களுக்கு அடையாள அட்டைகளும் வழங்கப்பட்டு வருகின்றன. அரசிடமிருந்து உதவியைப் பெறுதல், அரசு நடத்தும் கலை நிகழ்ச்சிகளுக்கு கலைஞர்களைத் தெரிவு செய்தல், பயணச் சலுகை துய்த்தல் ஆகிய பயன்களைப் பெற கலைஞர்களுக்கு அடையாள அட்டைகள் பயன்பட்டு வருகின்றன.

### அரசு இசைக் கல்வி பயிலகங்கள்

#### 1. அரசு இசைக் கல்லூரி, சென்னை

சென்னை, அரசு இசைக் கல்லூரி 1949 ஆம் ஆண்டு தொடங்கப்பெற்றது. இக்கல்லூரியில் குரலிசை, கின்னரம் (வயலின்), வீணை, முழவு (மிருதங்கம்), புல்லாங்குழல், கடம், கஞ்சிரா, முகர்சிங், பரதநாட்டியம், நாதசுரம், தவில், நாட்டுப்புறக் கலைகள் ஆகியவற்றில்

மூன்றாண்டு பட்டயப் படிப்பும், குரலிசையில் மேல்நிலை இசைக் கலைமணி ஈராண்டு முதுநிலை பட்டயப் படிப்பும், நட்டுவாங்கத்தில் ஈராண்டு பட்டயப் படிப்பும், இசை ஆசிரியர் பயிற்சியில் ஓராண்டு பட்டயப் படிப்பும் பயிற்றுவிக்கப்படுகின்றன. இக்கல்லூரியில் 2006-2007 ஆம் கல்வியாண்டில் 426 மாணவ மாணவியர் பயின்று வருகின்றனர்.

## 2. அரசு இசைக் கல்லூரி, மதுரை

மதுரை, அரசு இசைக் கல்லூரி 1979 இல் தொடங்கப்பெற்றது. இக்கல்லூரியில் குரலிசை, வீணை, கின்னரம் (வயலின்), முழவு (மிருதங்கம்), புல்லாங்குழல், நாதசுரம், பரதநாட்டியம், நாட்டுப் புறக்கலைகள் ஆகியவற்றில் மூன்றாண்டு பட்டயப் படிப்பும், ஓராண்டு இசை ஆசிரியர் பயிற்சியில் பட்டயப் படிப்பும் பயிற்றுவிக்கப் படுகின்றன. இக்கல்லூரியில் 2006-2007ஆம் கல்வியாண்டில் 193 மாணவ மாணவியர் பயின்று வருகின்றனர்.

## 3. அரசு இசைக் கல்லூரி, கோயம்புத்தூர்

கோயம்புத்தூர் அரசு இசைக் கல்லூரி 1993 இல் தொடங்கப்பெற்றது. இக்கல்லூரியில் குரலிசை, கின்னரம் (வயலின்), வீணை, பரதநாட்டியம் ஆகியவற்றில் மூன்றாண்டு பட்டயப் படிப்பும், இசை ஆசிரியர் பயிற்சியில் ஓராண்டு பட்டயப் படிப்பும் பயிற்றுவிக்கப்படுகின்றன. இக்கல்லூரியில் 2006-2007ஆம் கல்வியாண்டில் 109 மாணவ மாணவியர் பயின்று வருகின்றனர்.

## 4. அரசு இசைக் கல்லூரி, திருவையாறு

திருவையாறு, அரசு இசைக் கல்லூரி 1997 இல் தொடங்கப்பெற்றது. இக்கல்லூரியில் குரலிசை, வயலின், வீணை, மிருதங்கம், பரதநாட்டியம், நாதசுரம், தவில் ஆகியவற்றில் மூன்றாண்டு பட்டயப் படிப்பும், இளங்கலை இசையில் மூன்றாண்டு குரலிசைப் பட்டப் படிப்பும் பயிற்றுவிக்கப்படுகின்றன. இக்கல்லூரியில் 2006-2007 ஆம் கல்வியாண்டில் 127 மாணவ மாணவியர் பயின்று வருகின்றனர்.

## மாலைநேர இசைக் கல்லூரி மையங்கள்

சென்னையில் இரண்டு மாலை நேர இசைக் கல்லூரி மையங்களும், மதுரையில் ஒரு மாலை நேர இசைக் கல்லூரி மையமும் நடத்தப்பட்டு வருகின்றன. சென்னை தியாகராய நகர் மையத்தில் குரலிசை, வீணை,



கின்னரம் (வயலின்) ஆகியவற்றிலும், இசைக் கல்லூரி வளாக மையத்தில் குரலிசை, வீணை, கின்னரம் (வயலின்), முழவு (மிருதங்கம்) ஆகியவற்றிலும், மதுரை மையத்தில் குரலிசை, வீணை, கின்னரம் (வயலின்), முழவு (மிருதங்கம்), பரதநாட்டியம் ஆகியவற்றிலும் ஈராண்டுச் சான்றிதழ் படிப்பு பயிற்றுவிக்கப்படுகின்றன.

## மாவட்ட அரசு இசைப் பள்ளிகள்

இசைக்கல்வியை மேலும் பரவலாக்கும் நோக்கத்திலும், பள்ளிசாரா முறையில் இசை பயிலும் சிறுவர் சிறுமியருக்கு பள்ளிசார் முறையைக் கொண்டு வரவும் அரசு இசைப் பள்ளிகள் தொடங்கப்பட்டன.

இளம் பருவத்திலேயே இசை ஆர்வம் மிக்கவர்களை ஊக்குவித்து அவர்களது இசை ஆர்வத்தினைத் தூண்டும் வகையிலும், அவர்களைப் புகழ்மிக்க இசைக் கலைஞர்களாக உருவாக்கும் நோக்கத்துடனும், மாவட்ட அரசு இசைப் பள்ளிகள் 1997 ஆம் ஆண்டு திருவாரூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, சேலம், புதுக்கோட்டை ஆகிய ஐந்து மாவட்டங்களிலும், 1998 ஆம் ஆண்டு விழுப்புரம், கடலூர், பெரம்பலூர், தூத்துக்குடி, கரூர் ஆகிய 5 மாவட்டங்களிலும், 1999ஆம் ஆண்டு காஞ்சிபுரம், திருவண்ணாமலை, நாகப்பட்டினம் (சீர்காழி), கிருஷ்ணகிரி, சிவகங்கை ஆகிய 5 மாவட்டங்களிலும், 2000 ஆம் ஆண்டு ஈரோடு, இராமநாதபுரம் ஆகிய 2 மாவட்டங்களிலும், ஆக மொத்தம் இதுகாறும் 17 மாவட்ட அரசு இசைப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. மாவட்ட அரசு இசைப் பள்ளிகளில் குரலிசை, பரதநாட்டியம், தேவாரம், நாதசுரம், தவில் ஆகிய பாடப் பிரிவுகளில் மூன்றாண்டு சான்றிதழ் படிப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. 2006-2007 ஆம் கல்வியாண்டில் மாவட்ட அரசு இசைப் பள்ளிகளில் 1,088 மாணவ மாணவியர் பயின்று வருகின்றனர். 2007-2008 ஆம் ஆண்டு முதல் கின்னரம் (வயலின்), முழவு (மிருதங்கம்) ஆகியவை பயிற்றுவிக்கப்படும்.

## அரசு கவின்கலைக் கல்லூரிகள்

## 1. அரசு கவின்கலைக் கல்லூரி, சென்னை

இக்கல்லூரி 1850 இல் தொடங்கப்பெற்றது. தலைசிறந்த ஓவியர்களை உருவாக்கிய பெருமை பெற்றது. பின்வரும் பிரிவுகளில் நான்காண்டு கால இளங்கலைப் பட்டப் படிப்பும், இரண்டாண்டு கால முதுகலைப் பட்டப் படிப்பும் பயிற்றுவிக்கப்படுகின்றன:

**இளங்கலைப் பட்டப் படிப்பு:**

(1) சுடுமண் (ஆலையக) வடிவமைப்பு
(2) துகிலியல் (ஆலையக) வடிவமைப்பு
(3) காட்சி வழித் தொடர்பு வடிவமைப்பு
(4) வண்ணக் கலை
(5) சிற்பக் கலை
(6) பதிப்போவியம்

**முதுகலைப் பட்டப் படிப்பு:**

(1) வண்ணக் கலை
(2) காட்சி வழித் தொடர்பு வடிவமைப்பு
(3) சுடுமண் (ஆலையக) வடிவமைப்பு
(4) துகிலியல் (ஆலையக) வடிவமைப்பு

இக்கல்லூரியின் பாடத்திட்டங்கள் அனைத்தும் சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப் பெற்றவையாகும். இக் கல்லூரியில் 2006-2007 ஆம் கல்வியாண்டில் 507 மாணவ மாணவியர் பயின்று வருகின்றனர்.

**2. அரசு கவின்கலைக் கல்லூரி, கும்பகோணம்**

இக்கல்லூரி 1887 ஆம் ஆண்டு தொடங்கப்பெற்றது. பின்வரும் பிரிவுகளில் நான்காண்டுகால இளங்கலைப் பட்டப் படிப்பும், இரண்டாண்டுகால முதுகலைப் பட்டப் படிப்பும் பயிற்றுவிக்கப் படுகின்றன.

**இளங்கலைப் பட்டப் படிப்பு:**

(1) வண்ணக் கலை
(2) காட்சி வழித் தொடர்பு வடிவமைப்பு
(3) சிற்பக் கலை

**முதுகலைப் பட்டப் படிப்பு:**

(1) வண்ணக் கலை
(2) சிற்பக் கலை



இக்கல்லூரியின் பாடத்திட்டங்கள் அனைத்தும் திருச்சிராப்பள்ளி, பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் இசைவு பெற்றவையாகும். இக்கல்லூரியில் 2006-2007 ஆம் கல்வியாண்டில் 327 மாணவ மாணவியர் பயின்று வருகின்றனர்.

**அரசு கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி, மாமல்லபுரம்**

சிற்பம் கல்லில் வடிக்கும் கவிதை; பாறையில் செதுக்கும் பா. நீக்க நீக்க வருவது சிற்பம். சேர்க்க சேர்க்க வருவது ஓவியம். சிற்பக் கலை வரலாற்றில் சீரிய இடம் பெற்றது மாமல்லபுரம். அரும்பெரும் சிற்பங்களால் சுற்றுலா நகரமாகவும் விளங்குகின்றது. இத்தகு வரலாற்றுப் புகழுடைய மாமல்லபுரத்தில் அரசு கட்டடக் கலை சிற்பக் கலைக் கல்லூரி 1957 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகின்றது. இக்கல்லூரியில் 2000-2001 ஆம் ஆண்டு முதல் நான்காண்டு பட்டப் படிப்பு தொடங்கப் பெற்று பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றது. மரபு கட்டடக் கலைப் பிரிவில் தொழில் நுட்பவியல் இளங்கலைப் பட்டமும், மரபு சிற்பக் கலை, மரபு ஓவியக் கலை-வண்ணம் ஆகிய பிரிவுகளில் கவின்கலை இளங்கலைப் பட்டமும் வழங்கப்படுகின்றன. இக்கல்லூரியில் 2006-2007 ஆம் கல்வியாண்டில் 140 மாணவ மாணவியர் பயின்று வருகின்றனர்.

**கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி**

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி அரசு நிதியுதவி பெறும் தனியார் கல்லூரியாகும். இக்கல்லூரியின் நிருவாகம் 2000-2001 ஆம் கல்வி ஆண்டு முதல் கலை பண்பாட்டு இயக்ககத்தின் கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இக்கல்லூரிக்கான நிதியுதவி கல்லூரிக் கல்வி இயக்ககம் மூலம் வழங்கப்படுகிறது. இக்கல்லூரியில் ஒருங்கிணைக்கப்பட்ட ஐந்தாண்டு இளநுண்கலைப் பட்டப் படிப்புகள், மூன்றாண்டு பட்டப் படிப்புகள், முதுகலைப் பட்டப் படிப்புகள் பின்வரும் பாடப் பிரிவுகளில் பயிற்றுவிக்கப்படுகின்றன.

1) பரதநாட்டியம்
2) குரலிசை
3) கின்னரம் (வயலின்)
4) வீணை
5) முழவு (மிருதங்கம்)

இவை தவிர பரதநாட்டியத்திலும், இசையிலும் முழு நேர, பகுதி நேர முனைவர் பட்டப்படிப்பும் உள்ளது.

**தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழக இணைவுடன் புதிய படிப்புகள் தொடங்குதல்**

தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் தமிழியல் பண்பாட்டு புலத்துடன் இணைந்து கலைப் பிரிவுகளில் சான்றிதழ், பட்டயம், பட்டம், முதுகலைப் பட்டம் முதலியவற்றை வரும் கல்வியாண்டில் தொடங்க இத்துறை திட்டமிட்டுள்ளது. இதன்மூலம் ஏற்கெனவே சான்றிதழ், பட்டயம் பெற்றவர்கள் குறைந்த காலத்தில் மேற்படிப்பு பெறவும், தனிப்பட்டவர்களும், தனிப்பட்ட கலை நிறுவனங்களும் அளித்துவரும் கலைப் பயிற்சிகள் பல்கலைக்கழகம் சார்ந்த படிப்புகளாக மாறவும் வழிபிறக்கும். மேலும், இசைக் கல்லூரிகளில் பட்டய வகுப்பு பயிலுவோர் இணைவாகப் பட்டம் பெறவும் வாய்ப்பு ஏற்படும்.

**தென்னகப் பண்பாட்டு மையம், தஞ்சாவூர்**

மேதகு ஆளுநரைத் தலைவராகக் கொண்டு செயல்படும் தஞ்சாவூர் தென்னகப் பண்பாட்டு மையத்தின் மூலநிதிக்குத் தமிழ்நாட்டின் பங்காக இரண்டு கோடி ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், தென்னகப் பண்பாட்டு மையக் கட்டடம் கட்டப்பெறுவதற்கு ரூ.2.00 கோடி நிதியுதவியும், மையம் ஏற்படுத்த ரூ.1.54 கோடி மதிப்புள்ள 25 ஏக்கர் நிலமும் தமிழக அரசு ஏற்கெனவே அளித்துள்ளது. தென்னகப் பண்பாட்டு மையம் தனித்தும், மாநிலக் கலை பண்பாட்டுத் துறை வழியாக நிதி உதவி வழங்கியும் பல்வேறு கலை நிகழ்ச்சிகளைத் தமிழ்நாட்டிலும், மற்ற மாநிலங்களிலும், அயல் நாடுகளிலும் நடத்தி வருகிறது.

**தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்**

'தமிழ்நாடு சங்கீத நாடக அகாதமி' எனத் தொடங்கப்பட்ட அமைப்பு 'தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்' என 1973 ஆம் ஆண்டில் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. தொன்மைச் சிறப்புமிக்க கலைகளைத் தமிழகத்தில் வளர்க்கவும், தமிழகத்திற்கு வெளியே பரப்பவும், இந்திய அரசு அமைப்பான சங்கீத நாடக அகாதமியின் நோக்கங்களைத் தமிழக அரசால் செயல்படுத்தவும், பிற மாநிலக் கலை நிகழ்ச்சிகளைத் தமிழகத்தில் நிகழ்த்தவும், தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கவும் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசின் நல்கைத் தொகை மூலம் பின்வரும் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது:



**1. கலைப்பணித் திட்டங்கள்**

மாநிலங்களிடையே கலைக் குழுக்களைப் பரிமாற்றம் செய்தல், நலிந்த நிலையில் வாழும் புகழ்பெற்ற கலைஞர்களுக்கு மாதந்தோறும் நிதியுதவி வழங்குதல், புகழ்பெற்ற மறைந்த கலைஞர்களின் குடும்பங்களுக்குக் குடும்பப் பேணுகை நிதி உதவி வழங்குதல், தமிழ்நாட்டில் பல்வேறு கலை நிறுவனங்களின் மூலம் கலை நிகழ்ச்சிகளை நடத்த வாய்ப்பளித்து அதன்மூலம் திறமைமிக்க புத்திளங் கலைஞர்களுக்கு ஆதரவும் ஊக்கமும் அளித்தல், தமிழ்ப் பண்பாட்டினை விவரிக்கும் சிறந்த தமிழ் நாடகங்களை உருவாக்கும் தொழில்முறை நாடகக் குழுக்களுக்கு நாடகத் தயாரிப்பு நல்கை வழங்குதல், அரும்பெரும் கலை நூல்களை வெளியிட நூல் வெளியீட்டு நல்கை வழங்குதல், கலை மேதைகளின் நினைவு விழாக்களை நடத்தும் தன்னார்வக் கலை நிறுவனங்களுக்கு நல்கை வழங்குதல், கலைஞர்கள் பயன்பெறும் வண்ணம் பல்வேறு கலைவிழாக்கள் நடத்துதல், மறைந்து வரும் தொன்மைச் சிறப்புமிக்க கலைத்தன்மைகளை வருங்கால மரபினரும் கண்டு உணரும் வண்ணம் அவற்றை ஆவணமாக்குதல், புகழ்பெற்ற முதுபெரும் இசைக்கலைஞர்களின் இசை நிகழ்ச்சிகளைப் பதிவு செய்து பாதுகாத்தல், நம் மரபுவழி ஊரகக் கலைகள், கவின்மிகு நுண்கலைகளைப் பற்றிய ஆய்வுகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்தல் ஆகிய முதன்மைப் பணிகளை இயல் இசை நாடக மன்றம் செம்மையுறச் செய்து வருகின்றது.

**2. கலைமாமணி விருது வழங்குதல்**

புலன்களுக்கு விருந்து படைக்கிற கலைஞர்களுக்கு 'விருது' வழங்குவது, அவர்கள் மகிழ்ச்சிக்காகவும், நம் மனநிறைவிற்காகவுமே. கலைத்துறையில் செயற்கரிய சேவை செய்து புகழ்பெற்ற கலைஞர்களைப் பாராட்டி சிறப்பு செய்யும் பொருட்டு, அவர்களுக்குத் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், கலைமாமணி விருது வழங்குகிறது. இதுவரை, 1,382 கலைஞர்களுக்குக் கலைமாமணி விருது வழங்கப்பட்டுள்ளது. கலைமாமணி விருது வழங்கும் விழாவில், இதுகாறும், 306 மறைந்த புகழ்பெற்ற கலைமேதைகளின் திருவுருவப் படங்கள் திறந்துவைக்கப் பட்டுள்ளன. கலைமாமணி விருது வழங்கும் விழாக்களில் வறிய நிலையில் வாழும் மூத்த கலைமாமணி விருதாளர்களுக்குப் பொற்கிழி (பணமுடிப்பு) வழங்கப்பட்டு வருகின்றது. இவ்வகையில் ரூ.1,000/- வீதம் 147 கலைஞர்களுக்கும், ரூ.5,000/- வீதம் 17 கலைஞர்களுக்கும், ரூ.10,000/- வீதம் 13 கலைஞர்களுக்கும், ரூ.15,000/- வீதம் 19 கலைஞர்களுக்கும், ஆகமொத்தம் 196 கலைஞர்களுக்குப்

பொற்கிழி வழங்கப்பட்டுள்ளது. கலை வளர்ச்சிக்குப் பாடுபட்டு வரும் தன்னார்வக் கலை நிறுவனங்களையும், செம்மையுறச் செயல்பட்டு வரும் நாடகக் குழுக்களையும் பாராட்டும் வகையில், இதுவரை 26 கலை நிறுவனங்களுக்கும், 17 நாடகக் குழுக்களுக்கும் கேடயங்களும், சுழற்கேடயங்களும் வழங்கப் பெற்றுள்ளன.

### 3. நலிந்த நிலையில் வாழும் கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்குதல்

கலையையே வாழ்வாகக் கொண்டு அகவை முதிர்ந்த நிலையில் நலிந்து வாழும் சிறந்த கலைஞர்களுக்குத் திங்கள்தோறும் ரூ.500/- நிதியுதவியாக வழங்கப்பட்டு வந்தது. 2006 ஆம் நிதியாண்டிலிருந்து இந்நிதியுதவித் தொகையினை ரூ.500/- லிருந்து ரூ.1,000/- ஆக உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. 2006-2007 ஆம் ஆண்டில் புதியதாக 500 நலிந்த கலைஞர்களுக்கு திங்களொன்றுக்கு ரூ.1,000/- வீதம் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. அவர்களையும் சேர்த்து இதுவரை 8,563 நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்க அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

### 4. மறைந்த புகழ்பெற்ற கலைஞர்களின் குடும்பத்தாருக்குக் குடும்பப் பேணுகை நிதியுதவி வழங்குதல்

கலைஞர்களின் மறைவினால் தவிக்கும் குடும்பங்களுக்குக் குடும்பப் பேணுகை நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் ரூ.2,000/- வீதம் 88 குடும்பங்களுக்கும், ரூ.3,000/- வீதம் 77 குடும்பங்களுக்கும், ரூ.5,000/- வீதம் 81 குடும்பங்களுக்கும், ரூ.6,000/- வீதம் 72 குடும்பங்களுக்கும், ஆக மொத்தம் 318 மறைந்த கலைஞர்களின் குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

### 5. மாநிலங்களுக்கிடையே கலைக்குழுக்கள் பரிமாற்றம்

இந்தியத் திருநாட்டின் தேசிய ஒருமைப்பாட்டு ஒற்றுமை உணர்வை வலுவாக்கவும் மாநிலங்களுக்கிடையே கலை-பண்பாட்டு மரபினைப் பற்றிய தகவல்களைப் பரிமாறிக் கொள்ளவும், இந்திய அரசின் சார்பில் சங்கீத நாடக அகாதமியும், தமிழக அரசின் சார்பில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றமும் இணைந்து மாநிலங்களுக்கிடையே கலைக் குழுக்கள் பரிமாற்றத் திட்டத்தைச் செயற்படுத்தி வருகின்றது. இத்திட்டத்தின்கீழ், இதுவரை தமிழகத்திற்கு 81 வெளி மாநிலக் கலைக் குழுக்கள் வருகை புரிந்துள்ளன. 84 தமிழகக் கலைக் குழுக்கள் வெளி மாநிலங்களுக்குச் சென்று கலை நிகழ்ச்சிகள் நடத்தியுள்ளன. 2007 ஏப்ரல் திங்களில் தமிழகக் கலைக் குழு கோவா மாநிலத்தில் கலை நிகழ்ச்சிகள் நடத்தி பாராட்டு பெற்றுள்ளது.



### 6. திறம்படைத்த இளம் கலைஞர்களை ஊக்குவித்தல்

குரலிசை, கருவியிசை, பரதநாட்டியம் ஆகிய கலைத் துறைகளில் பயிற்சி பெற்ற புத்திளங் கலைஞர்களை அறிமுகம் செய்யும் வண்ணம் தமிழகத்தில் செம்மையுடன் இயங்கிவரும் தன்னார்வக் கலை நிறுவனங்களுக்கு மன்றம் நிதியுதவி செய்து அதன் வாயிலாகக் கலை நிகழ்ச்சிகள் நடத்திட ஊக்குவித்து வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 1,760 இளங்கலைஞர்கள் பயனடைந்துள்ளனர்.

### 7. நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு / கலைக் குழுக்களுக்கு இசைக்கருவிகள், ஆடை அணிகலன்கள் வாங்க நிதியுதவி வழங்குதல்

நாட்டுப்புறக் கலைஞர்களுக்கும், கலைக் குழுக்களுக்கும், இசைக்கருவிகள், ஆடை அணிகலன்கள் வாங்க மன்றம் நிதியுதவி வழங்கி வருகின்றது. இத்திட்டத்தின்கீழ், ஒவ்வொரு தனிப்பட்ட கலைஞருக்கும் ரூ.750/- வீதம் தொகையும், ஒவ்வொரு கலைக் குழுவிற்கும் ரூ.2,500/- தொகையும் நல்கையாக வழங்கப்படுகிறது. இதுவரை 1,425 நாட்டுப்புறக் கலைஞர்களும்/கலைக்குழுக்களும் பயன் அடைந்துள்ளனர்.

### 8. புதிய நாடகங்கள் தயாரிக்க நிதியுதவி வழங்குதல்

தமிழ்க் கலை பண்பாட்டைப் பின்னணியாகக் கொண்டு, தமிழில் சிறந்த நாடகங்கள் தயாரித்திட நாடகக் குழுக்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ், இதுவரை 42 நாடகங்கள் மன்ற நல்கையுடன் உருவாக்கி மேடையேற்றம் செய்யப்பட்டுள்ளன.

### 9. புதிய நாட்டிய நாடகங்கள் தயாரிக்க நிதியுதவி வழங்குதல்

தமிழ் இலக்கியம், பண்பாடு ஆகியவற்றைப் பின்னணியாகக் கொண்டு தமிழில் சிறந்த நாட்டிய நாடகங்கள் தயாரித்து மேடையேற்றம் செய்யும் நாட்டிய நாடகக் குழுக்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது. இதுவரை 13 நாட்டிய நாடகங்கள் மன்ற நல்கையில் தயாரிக்கப்பட்டு மேடையேற்றம் செய்யப்பட்டுள்ளன.

### 10. அரிய கலை நூல்களுக்கு நல்கை வழங்குதல்

கலை நூல்களைப் பதிப்பித்து வெளியிட நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ், இதுவரை 103 நூல்கள் மன்ற நல்கையுடன் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

[2007 மே 7

## 11. கலை விழாக்கள்

மறைந்து வரும் நம் மரபு வழிச் சிறப்புமிக்க நாட்டுப்புறக் கலைகளின் சிறப்பினைத் தற்போதைய தலைமுறையினர் கண்டுணரும் வண்ணமும், தொழில் வாய்ப்பின்றி வாழ்ந்து வரும் நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு நிகழ்ச்சிகள் நடத்திட வாய்ப்புகள் நல்கும் வண்ணமும், இயல் இசை நாடக மன்றம் பல்வேறு கலை விழாக்களை நடத்தி வருகின்றது.

### தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு

தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு அரசால் 1975 இல் தொடங்கப்பட்டது. நுண்கலைகளான ஓவியம், சிற்பம், பதிப்போவியம் ஆகிய கலைகளை வளர்க்கவும், பாதுகாக்கவும், பரப்பவும் இக்கலைகளில் ஈடுபட்டுள்ள கலைஞர்களை ஊக்குவிக்கவும் ஓவிய நுண்கலைக் குழு செயல்படுகிறது. மாநில அரசு வழங்கும் நல்கைத் தொகை மூலம் பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறது.

### "கலைச் செம்மல்" விருது வழங்கும் திட்டம்

'கலைச் செம்மல்' விருதுகள் மரபு வழி, நவீன கலைப் பிரிவுகளைச் சார்ந்த புகழ் பெற்ற ஓவிய, சிற்பக் கலை வல்லுநர்கள் அவரவர்கள் துறைகளில் புரிந்துவரும் அரிய சாதனைகளைப் பாராட்டும் வகையில் வழங்கப்படுகின்றன. ஒவ்வொருவருக்கும் பாராட்டிதழுடன் ரூ.20,000/- வழங்கப்படுகிறது. மரபு வழிப் பிரிவில் ஐந்து ஓவிய, சிற்பக்கலை வல்லுநர்களுக்கும், நவீனபாணிப் பிரிவில் 36 ஓவிய, சிற்பக் கலை வல்லுநர்களுக்கும் இவ்விருதுகள் இதுவரை வழங்கப்பட்டுள்ளன.

### மாநில அளவில் மரபு வழிக் கலைக் காட்சி விருது வழங்கும் திட்டம்

மாநில அளவில் மரபு வழிக் கலைக் காட்சிகள் ஓவிய நுண்கலைக் குழுவால் நடத்தப்பட்டு மரபுவழி ஓவிய சிற்பக் கலைஞர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். சிறந்த படைப்புகளுக்கான கலைக்காட்சி விருதுகளாக 30 அகவைக்கு மேற்பட்ட "மூத்த கலைஞர்கள்" பங்கு கொள்ளும் பிரிவில் ஐந்து சிறந்த ஓவிய, சிற்பக் கலைஞர்களுக்கு ரூ.15,000/- வீதமும், 30 அகவைக்குட்பட்ட "இளங் கலைஞர்கள்" பங்கு கொள்ளும் பிரிவில் பத்து சிறந்த ஓவிய, சிற்பக் கலைஞர்களுக்கு ரூ.5,000/- வீதமும் வழங்கப்படுகிறது. 43 ஓவிய, சிற்பக் கலைஞர்களுக்கு, மரபு வழிக் கலைக் காட்சி விருதுகள் இதுவரை வழங்கப்பட்டுள்ளன.



2007 மே 7]

### மாநில அளவில் நவீனபாணிக் கலைக் காட்சி விருது வழங்கும் திட்டம்

மாநில அளவில் நவீனபாணிக் கலைக் காட்சிகள் ஓவிய நுண்கலைக் குழுவால் நடத்தப்பட்டு, ஓவிய சிற்பக் கலைஞர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். சிறந்த படைப்புகளுக்கான கலைக்காட்சி விருதுகளாக 30 அகவைக்கு மேற்பட்ட "மூத்த கலைஞர்கள்" பங்கு கொள்ளும் பிரிவில் ஐந்து சிறந்த ஓவிய, சிற்பக் கலைஞர்களுக்கு ரூ.15,000/-வீதமும், 30 அகவைக்குட்பட்ட "இளங் கலைஞர்கள்" பங்கு கொள்ளும் பிரிவில் பத்து சிறந்த ஓவிய, சிற்பக் கலைஞர்களுக்கு ரூ.5,000/-வீதமும் வழங்கப்படுகிறது. இதுவரை 249 ஓவிய, சிற்பக் கலைஞர்களுக்கு நவீனபாணிக் கலைக்காட்சி விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

### தனியர் கலைக் காட்சி அல்லது கூட்டுக் கலைக் காட்சி நடத்த நிதி உதவி வழங்கும் திட்டம்

தமிழ்நாட்டு ஓவிய சிற்பக் கலைஞர்கள் அவரவர்களது கலைப் படைப்புகள் அடங்கிய கலைக் காட்சிகளைத் தனியாகவோ, குழுவாகவோ இணைந்து நடத்திட கலைக் காட்சிகளுக்குக் காட்சி ஒன்றுக்கு ரூ.5,000/- வீதம் நிதி உதவி வழங்கப்படுகிறது. 143 கலைஞர்கள் தனியர் கலைக் காட்சி நடத்துவதற்காகவும், பத்து குழுக்கள் கூட்டு கலைக் காட்சி நடத்துவதற்காகவும் இதுவரை நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

### நுண்கலை பயிலும் மாணவ மாணவியர்களுக்குப் படிப்புதவித் தொகை வழங்கும் திட்டம்

சென்னை, கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரிகளில் நுண்கலை பயிலும் மாணவ மாணவிகளை ஊக்குவிக்கும் வகையில் முதுகலை இறுதியாண்டு பயிலும் சிறந்த மாணவ மாணவிகளுக்கு ரூ.5,000/- வீதமும், இளங்கலை இறுதியாண்டு பயிலும் சிறந்த மாணவ மாணவிகளுக்கு ரூ.3,000/- வீதமும் படிப்புதவித் தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. 2006-2007ஆம் நிதியாண்டில் முதுகலைப் பிரிவில் ஐந்து பேருக்கும், இளங்கலைப் பிரிவில் பத்து பேருக்கும் ஆக மொத்தம் இதுவரை இளங்கலைப் பிரிவில் 458 பேருக்கும், முதுகலைப் பிரிவில் 51 பேருக்கும் படிப்புதவித் தொகைகள் வழங்கப்பட்டுள்ளன.

### மாவட்டங்களில் கலைக் கூடங்கள்

ஓவிய நுண்கலைக் குழுவின் கலைக் கூடம் உதகமண்டலத்திலும் மற்றொன்று மதுரை மண்டலக் கலைப் பண்பாட்டு மையத்திலும்

அமைக்கப்பட்டுள்ளன. அக்கலைக் கூடங்களில் தமிழ்நாட்டு ஓவிய சிற்பக் கலை வல்லுநர்களின் படைப்புகள் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

**"நுண்கலை" கலையிதழ் வெளியீடு**

கலை ஆர்வலர்கள் பயன்பெறும் வகையில் தமிழ்நாட்டின் நுண்கலைச் சிறப்புகளை எடுத்துக்காட்டும் வகையில் தமிழ், ஆங்கிலக் கட்டுரைகள் கொண்ட "நுண்கலை" என்னும் கலையிதழ் ஓவிய நுண்கலைக் குழுவால் வெளியிடப்பட்டு வருகிறது.

**இளங்கலைஞர்கள் முகாம்**

மாமல்லபுரம் அரசுக் கட்டடம் மற்றும் சிற்பக் கலைக் கல்லூரியில் இளங்கலை இறுதியாண்டு பயிலும் பத்து இளம் ஓவிய சிற்பக் கலைஞர்களை அழைத்து 19-2-2007 முதல் 22-2-2007 வரை இளங்கலைஞர்கள் முகாம் நடத்தப்பட்டது.

**தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம், சென்னை**

*சென்ற இடத்தால் செலவிடாது தீதொரீஇ*
*நன்றின்பால் உய்ப்பது அறிவு*

என்று அய்யன் திருவள்ளுவர் கூறியதுபோல் சிறுவர் சிறுமியரின் கவனங்களைச் சிதறவிடாமல் நல்வழியில் செலுத்துவதற்காகக் கலைப் பயிற்சிகள் அளிப்பதற்கு 1979 ஆம் ஆண்டு தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம் தொடங்கப்பட்டது. ஐந்து அகவை முதல் பதினாறு அகவைக்கு உட்பட்ட சிறார்களுக்குக் கலைப் பயிற்சிகள் அளிப்பதும், கலைத் திறமைகளை வெளிக்கொணர்வதும், கலைகளை வெளிப்படுத்துவதும் இதன் நோக்கமாகும்.

தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் மொத்தம் 36 இடங்களில் சவகர் சிறுவர் மன்றங்கள் இயங்கி வருகின்றன. 24 இடங்களில் மாவட்ட சவகர் சிறுவர் மன்றங்கள் எனவும், பத்து இடங்களில் சிறுவர் மன்ற விரிவாக்க மையங்கள் எனவும், இரண்டு இடங்களில் சவகர் சிறுவர் மன்ற ஊரக மையங்கள் எனவும் பின்வருமாறு இயங்கி வருகின்றன:

**(1) மாவட்ட சவகர் சிறுவர் மன்றங்கள்**

சென்னை, புதுக்கோட்டை, மதுரை, உதகமண்டலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, கடலூர், நாகர்கோவில், தஞ்சாவூர், காஞ்சிபுரம்,



சிவகங்கை, திருநெல்வேலி, சேலம், இராமநாதபுரம், திண்டுக்கல், தருமபுரி, தேனி, வேலூர், திருவள்ளூர், ஈரோடு, திருவாரூர், விருதுநகர், விழுப்புரம், கிருஷ்ணகிரி.

**(2) சவகர் சிறுவர் மன்ற விரிவாக்க மையங்கள்**

பெரம்பலூர், தஞ்சாவூர், குளித்தலை, கரூர், சென்னை, மதுரை, தூத்துக்குடி, நாகப்பட்டினம், திருவண்ணாமலை, நாமக்கல்.

**(3) சவகர் சிறுவர் மன்ற ஊரக மையம்**

புதுக்கோட்டை மாவட்டம் பொன். புதுப்பட்டி, மதுரை எல்லிசு நகர் ஆகிய சிறுவர் மன்றங்கள் அரசு வழங்கும் நல்கைத் தொகை மூலம் திட்டங்களைச் செயல்படுத்துகின்றன.

**பயிற்றுவிக்கப்படும் கலைகள்**

சவகர் சிறுவர் மன்றங்களில் பரதநாட்டியம், நாட்டுப்புற நடனம், கைவினை, குரலிசை, நாடகம், உடல்திறன் பயிற்சி, மிருதங்கம்-தபேலா, கணினி, விசையிசை (கீபோர்டு), வீணை, அயல்முரசு (டிரம்ஸ்) அயல்முழவு, (பேண்ட்ஸ்) தையல், ஓவியம், திரைஅச்சு, புல்லாங்குழல், யோகா, சிலம்பம் ஆகிய இருபது கலைகளில் கீழ்வருமாறு பகுதி நேரப் பயிற்சி அளிக்கப்படுகிறது:

சென்னையில் 16 கலைகளில் வாரம் ஆறு நாட்களிலும், மாவட்ட சவகர் சிறுவர் மன்றங்கள், விரிவாக்க மையங்களில் ஏதேனும் நான்கு கலைகளில் வாரத்தில் மூன்று நாட்களிலும், ஊரக மையங்களில் இரண்டு கலைகளில் வாரத்தில் மூன்று நாட்களிலும், மாலை நேரத்தில் பயிற்சியளிக்கப்படுகின்றன. மாநிலத்திலுள்ள அனைத்துச் சிறுவர் மன்றங்களிலும் 5,700 சிறுவர் சிறுமியர் பயிற்சி பெற்று வருகின்றனர். இரண்டு ஊரக மையங்கள், கிருஷ்ணகிரி மாவட்ட சிறுவர் மன்றம் நீங்கலாக 33 சவகர் சிறுவர் மன்றங்களில் சிறுவர் நூலகங்கள் செயல்படுகின்றன.

**நிகழ்ந்தவை**

கசகசுத்தான் நாட்டில் நடைபெற்ற ஏழாவது ஆசிய இயற்பியல் ஒலிம்பியாட் (7th Asian Physics Olympiad) நிகழ்ச்சியில் கலந்துகொள்ள இந்தியாவின் சார்பாகச் சென்ற குழந்தைகளில் தமிழ்நாட்டிலிருந்து மாணவர் ஒருவர் புதுதில்லி தேசிய சிறுவர் மன்றத்தினரால் தெரிவு செய்யப்பட்டு கலந்து கொண்டார். புதுதில்லி தேசிய சிறுவர் மன்றம்

சென்னை மாநகரில் நடத்திய தென் மண்டல தேசிய இளந்திரு விருதுத் தெரிவு முகாமில் தமிழ்நாட்டிலிருந்து 56 குழந்தைகளும், புதுதில்லியில் நடத்திய தேசியக் குழந்தைகள் முகாமில் 42 குழந்தைகளும், புதுதில்லி, உதயப்பூர் ஆகிய இடங்களில் நடைபெற்ற தேசிய சுற்றுச் சூழல் முகாமில் பத்து சிறார்களும் கலந்துகொண்டுள்ளனர்.

சீன நாட்டில் நடைபெற்ற ஓவியப் போட்டியில் தமிழகக் குழந்தைகளின் 139 ஓவியங்கள் அனுப்பப்பெற்றன. ஒரு தங்க விருது, ஒரு வெண்கல விருது, ஒரு மதிப்புமிகு விருது ஆகியவற்றுடன் 72 சான்றிதழ்களும் வென்று வந்துள்ளன. மெக்சிகோ ஓவியப் போட்டியில் சென்னை சிறுவர் மன்றக் குழந்தைகளின் பதின்மூன்று ஓவியங்கள் பங்கு கொண்டு பாராட்டுச் சான்றிதழ் பெற்றுள்ளன.

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் நகரில் தமிழ்நாட்டின் அனைத்து சவகர் சிறுவர் மன்றங்களைச் சேர்ந்த 100 குழந்தைகளுக்கு பத்து நாட்கள் கோடைக்கால கலைப் பயிற்சி முகாமும், விருதுநகரில் மாரிக்காலக் கலைப் பயிற்சி முகாமும் சவகர் சிறுவர் மன்றத்தால் செயல்படுத்தப்பட்டது. திருச்சிராப்பள்ளி நகரில் 100 குழந்தைகளுக்கு பத்து நாட்கள் மாநிலக் கைவினை கலைப் பயிற்சி நடத்தப்பட்டது. மணிப்பூர் மாநில சிறுவர் மன்றத்தைச் சேர்ந்த இருபது பேர் கொண்ட குழு சென்னையிலும், மதுரையிலும் கலைப் பரிமாற்ற நிகழ்ச்சியினை வழங்கினர்.

**நிகழப்பெறுபவை**

2004, 2005 ஆகிய இரு ஆண்டுகளில் தேசிய இளந்திரு விருது பெற்றுள்ள ஆறு குழந்தைகளை அரசு பாராட்டிச் சிறப்பித்திடும் வகையில் ரூ.10,000/- வீதம் வழங்க உள்ளது.

**முடிவுரை**

கலை வடிவங்களை மூத்த தலைமுறையினரிடம் இருந்து இளைய தலைமுறையினருக்குப் பயிற்சிகள், நிகழ்ச்சிகள் மூலம் கொண்டு சென்று காலந்தோறும் கலைகளை வளர்த்தும், பரப்பியும், பேணியும் நிலைக்கச் செய்யும் பணிகளைக் கலை பண்பாட்டுத் துறை இன்னும் சிறப்பாகவும், செம்மையாகவும் ஆற்ற முனைப்பாகப் பாடுபடும்.

## தொல்லியல் துறை

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை 1961 ஆம் ஆண்டு தொடங்கப் பெற்றது. தமிழகத்திலுள்ள நினைவுச் சின்னங்களையும், வரலாற்றுச்



சின்னங்களையும் சீரமைத்துப் பாதுகாப்பதும், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அகழாய்வுப் பணி செய்வதும் முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு தொடங்கப் பெற்ற இத்துறையின் அகழாய்வுப் பிரிவுடன், கல்வெட்டுப் பிரிவு, அச்சுப் பிரிவு, மாவட்ட அகழ்வைப்பகங்கள், இரசாயனப் பிரிவு, நிழற்படப் பிரிவு மற்றும் பழம்பொருட்கள் பதிவு எனப் பல்வேறு பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன.

**அகழாய்வு மற்றும் அகழ்வைப்பகப் பிரிவு**

வரலாற்றுச் சிறப்புமிக்க 29 இடங்களில் இதுவரை அகழாய்வுப் பணி மேற்கொள்ளப்பட்டு, பல தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டு, பல்வேறு மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள 14 தொல்லியல் அகழ்வைப்பகங்களில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களில் அகழாய்வுப் பணி 28 மேற்கொள்ளுதல் திட்டத்தின்கீழ் 2006-2007 ஆம் ஆண்டில் கரூர் மாவட்டத்திலுள்ள நெடுங்கூர், மதுரை மாவட்டத்திலுள்ள மாங்குளம் ஆகிய இடங்களில் அகழாய்வுப் பணி நடைபெற்றுவருகிறது.

**பாதுகாப்புப் பிரிவு**

சமயம் சார்ந்த மற்றும் சமயஞ்சாராத 87 வரலாற்றுச் சின்னங்கள் இத்துறையால் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. பதினோராவது நிதிக் குழுவின் கீழ் மரபுச் சின்னங்கள் பாதுகாப்பு மற்றும் சுவரோவியங்கள் பராமரிப்பிற்கு ரூ.447.31 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டன.

**கல்வெட்டுப் பிரிவு**

ஆணையரகத்தில் செயல்பட்டு வரும் கல்வெட்டுப் பயிற்சி நிறுவனத்தில் முதுகலைப் பட்டம் பெற்ற 8 மாணவர்களுக்கு ஒரு வருட கால கல்வெட்டு மற்றும் தொல்லியல் முதுகலைப் பட்டயப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதுவரை, 176 மாணவர்கள் இப்பயிற்சியை முடித்துள்ளனர். சென்னைப் பல்கலைக் கழகம், தற்போது இத்துறையினை முனைவர் பட்ட ஆய்வு மையமாக அங்கீகரித்துள்ளது. இதில் நான்கு முழுநேர ஆய்வாளர்களும், இரண்டு பகுதி நேர ஆய்வாளர்களும் ஆய்வு செய்து வருகின்றனர்.

தமிழகக் கல்வெட்டுக்களை படியெடுக்கும் முனைப்புத் திட்டத்தின்கீழ், கடந்த இரண்டு ஆண்டுகளில் 12,400 கல்வெட்டுகள் இத்துறையால் படியெடுக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டு முனைப்புத்

திட்டத்தின்போது, காவிரி டெல்டா பகுதியில் சிந்து சமவெளி குறியீடு கொண்ட புதிய கற்கால கருவி கண்டெடுக்கப்பட்டதும் அடங்கும். 2,000 படியெடுக்கப்பட்ட கல்வெட்டுகள், துறை கல்வெட்டாய்வாளர்களால் படிக்கப்பட்டு புத்தக வடிவில் அச்சிடத் தயார் நிலையில் உள்ளன. மேலும், 10,000 படியெடுக்கப்பட்ட கல்வெட்டுகள் 11-வது ஐந்தாண்டு திட்ட நிதி ஒதுக்கீட்டில் அச்சிட்டு வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது.

## வெளியீடுகள்

இத்துறையின் அச்சுப்பிரிவின் வாயிலாக தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள்,அகழாய்வு அறிக்கைகள், மாவட்ட தொல்லியல் கையேடுகள், தொல்லியல் சின்னங்கள் குறித்த கையேடுகள் ஆகியவை தமிழிலும் ஆங்கிலத்திலும் நூல்களாக வெளியிடப்பட்டு வருகின்றன. "கல்வெட்டு" காலாண்டு இதழ் ஒன்றும் இத்துறை அச்சுப்பிரிவு வாயிலாக வெளியிடப்படுகிறது. இதுவரை 74 இதழ்கள் வெளியிடப்பட்டுள்ளன. கடந்த இரண்டு ஆண்டுகளில் அகழாய்வு அறிக்கைகள், கல்வெட்டு, தொல்லியல் மற்றும் அகழ்வைப்பக வழிகாட்டி நூல்களும், தமிழ்நாட்டு பாறை ஓவியங்கள் தொடர்பான அரிய நூல் என மொத்தம் 29 நூல்கள் வெளியிடப்பட்டன.

## தொல்லியல் துறை இரசாயனக் கூடங்கள்

தொல்லியல் துறையில் அகழாய்வுப் பிரிவை வலுப்படுத்துவதற்கும், அகழாய்வின்போது கிடைக்கப் பெறும் தொல்பொருட்களை இரசாயன முறையில் சுத்தம் செய்து பாதுகாப்புப் பணி மேற்கொள்வதற்கும், அதுபோன்று துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 14 அகழ்வைப்பகங்களையும், 87 நினைவுச் சின்னங்களையும் இரசாயன முறையில் பாதுகாக்கும் பணி மேற்கொள்ளும் பொருட்டும், 1979 மற்றும் 1981 ஆம் ஆண்டுகளில் சென்னை மற்றும் மதுரை ஆகிய இரண்டு இடங்களில் இரசாயனக் கூடங்கள் தொடங்கப்பட்டன.

## நிழற்படப் பிரிவு

இப்பிரிவின் பணி, பல்வேறு கோயில்கள், சிற்பங்கள், ஓவியங்கள் மற்றும் பிற பழம்பொருட்களை நிழற்படம் எடுப்பதாகும். அகழாய்வின் பல்வேறு நிலை அகழாய்வு இடங்கள் மற்றும் மரபுச் சின்னங்கள் ஆகியவை படமெடுக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. கல்வெட்டுப் படிகள் டிஜிடெல் முறையில் படமெடுக்கப்பட்டு வருகின்றன.



## பழம் பொருட்களை பதிவு செய்தல்

பழமையான கலைப் பொருட்கள் இந்தியாவில் இருந்து கடத்தப்படுவதைத் தடை செய்வதற்கு 1972 ஆம் ஆண்டு பழம் பொருள் பாதுகாப்புச் சட்டத்தினை இந்திய அரசு இயற்றியுள்ளது. இச்சட்டத்தினை திறம்பட நடைமுறைப்படுத்த இரு பதிவு அலுவலர் அலுவலகங்கள் சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளியில் இயங்கி வருகின்றன. இத்திட்டத்திற்காக அனைத்து செலவினத்தையும் மத்திய அரசே ஏற்றுக்கொள்கிறது. தமிழ்நாட்டில், 1974 ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை, 41,608 பழம் பொருட்கள் பதிவு செய்யப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தினை திறம்படச் செயல்படுத்துவதில் இந்தியாவிலேயே தமிழகம் முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது.

## அரசு கீழ்த்திசை ஓலைச் சுவடி நூலகம் மற்றும் ஆய்வு மையம்

அரசு கீழ்த்திசை ஓலைச் சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையம் இத்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் சென்னை பல்கலைக்கழக வளாகத்தில் செயல்பட்டு வருகின்றது. இந்நூலகத்தில், கணிதம், வானசாத்திரம், சித்தா, ஆயுர்வேதம், யுனானி, வேதங்கள், ஆகமம், கட்டடக் கலை, இசை, கவின் கலைகள், வரலாறு மற்றும் பல்வேறு பொருண்மைகள் தொடர்பான தமிழ், சமஸ்கிருதம், மராத்தி, உருது, அராபிக் மற்றும் பாரசீக மொழிகளில் அமைந்த 72,000-க்கும் மேற்பட்ட தாள் மற்றும் ஓலைச் சுவடிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இந்நூலகத்தில் 450-க்கும் மேற்பட்ட நூல்கள் பல்வேறு மொழிகளில் வெளியிடப்பட்டுள்ளன.

## புதிய திட்டங்கள்

2007-2008 ஆம் ஆண்டு பகுதி-II திட்டத்தின்கீழ் ஐந்து மரபுச் சின்னங்களை ரூ. 27.50 இலட்சம் செலவில் பாதுகாக்கவும், ரூ. 3.00 இலட்சம் செலவில் வரலாற்றுச் சிறப்பு மிக்க நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள செம்பியம் கண்டியூரில் அகழாய்வுப் பணி மேற்கொள்ளவும், ரூ. 2.00 இலட்சம் செலவில் ஆற்காடு மற்றும் தஞ்சை இராசராசன் அகழ்வைப்பகங்களை மேம்படுத்தவும், ரூ. 3.70 இலட்சம் செலவில் கல்வெட்டுகள், தொல்லியல் அகழ்வைப்பகங்கள், மரபுச் சின்னங்கள், இராமலிங்கவிலாசம் குறித்த தொல்லியல் கையேடு மற்றும் மாணவர்களது ஆய்வு நூல்கள் வெளியிடவும், ரூ. 0.45 இலட்சம் செலவில் சென்னை அலுவலகத்திற்கு கணிப்பொறி வாங்கவும், ரூ. 1.00 இலட்சம் செலவில் சக்தி வாய்ந்த ஒளியச்சு இயந்திரம் வாங்கவும்

மற்றும் ரூ. 0.50 இலட்சம் செலவில் மதுரை இரசாயனக் கூடத்தினை மேம்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. ஆக மொத்தம், ரூ. 38.15 இலட்சத்திற்கான புதிய திட்டங்கள் நடைமுறைபடுத்தப்படவுள்ளன.

## அருங்காட்சியகத் துறை

இந்தியாவில் மிகப்பெரியதும் பழைமையானதும் ஆகிய அருங்காட்சியகங்களில் ஒன்றான சென்னை அரசு அருங்காட்சியகம் 1851ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அருங்காட்சியகத் துறையின்கீழ், இருபது மாவட்ட அருங்காட்சியகங்கள் செயல்பட்டு வருகின்றன. சென்னை அருங்காட்சியகம் புகழ் மிகுந்த நிறுவனமாகும். இதில் உள்ள தென்னிந்திய படிமங்கள் மற்றும் வரலாற்றுப் புகழ்வாய்ந்த மரபுச் சின்னங்களும், குறிப்பாக ராபர்ட் புரூஸ்புட் சேகரிப்புகளும், ஆதிச்சநல்லூர் பெருங்கற்கால சேகரிப்புகளும், புத்த, சமண மற்றும் இந்து சமய சிற்பங்களும் குறிப்பிடத்தக்கவை. அவற்றில் அமராவதி சிற்பங்கள் சிறப்பானவை. மேலும், பல மதிப்புமிக்க அரிய விலங்கியல் மற்றும் தாவரவியல் சேகரிப்புகளும் உள்ளன. இதன் படிமக் காட்சிக்கூடத்தில் அரிய படிமங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இப்பிரிவு அயல்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளை அதிக அளவில் கவர்கிறது.

அருங்காட்சியகம் பொதுவாக அறிவியல், கலைப் பொருட்கள் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் கொண்ட பொருட்களைப் பாதுகாக்குமிடமாகவும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் இடமாகவும், கல்வி, அறிவு வளர அவை காட்சிப்படுத்தும் இடமாகவும் திகழ்கிறது.

சென்னை அரசு அருங்காட்சியகம் மற்றும் மாவட்ட அருங்காட்சியகங்கள் பொதுமக்கள் மற்றும் மாணவர்களுக்கு அறிவுத்திறனை மேம்படுத்தும் விரிவாக்க மையங்களாகச் செயல்பட்டு வருகின்றன. பொதுவாக, உலகின் இயற்கை அமைப்புகளையும், வரலாறு மற்றும் கலைப் பண்புகளையும், அறிவியல், தொழில்நுட்பச் சாதனைகளையும் பொதுமக்கள் அறிந்து கொண்டு பாராட்டும் வகையில் அருங்காட்சியகங்கள் அமைந்துள்ளன. அவை பார்வையாளர்கள் மற்றும் சமுதாயத்திற்கு ஏராளமான நற்பயன்களையும் அளிக்கின்றன. சிறுவர் முதல் பெரியவர் வரை அவர்களது திறமை, விருப்பத்தைப் பொறுத்து அவர்களுக்குத் தேவையான கல்வி மற்றும் கள ஆய்வுப் பணிகளுக்கான தகவல்களை அளிக்கும் கல்வி நிறுவனங்களாகத் திகழ்கின்றன. பள்ளி மாணவர்கள் முதல் பல்கலைக்கழக மாணவர்கள் வரை பார்வையிடவும் ஆராய்ச்சி மேற்கொள்ளவும் வாய்ப்பளிக்கின்றன.



### அருங்காட்சியகங்களின் முக்கியப் பணிகள்

1. அரும்பொருட்களைச் சேகரித்துப் பாதுகாத்தல்.

2. அறிவியல்பூர்வமாக காட்சிப்பொருட்களைப் பாதுகாத்தல் மற்றும் கலைநயம் மிக்க வகையில் காட்சிப்படுத்துதல்.

3. ஆய்வாளர்களுக்கு சேகரிப்புகளை ஆய்வு செய்வதற்காக உதவிகளைத் தனித்தோ அல்லது பிற நிறுவனங்கள் பல்கலைக்கழகங்களுடன் இணைந்தோ ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளுதல். ஆராய்ச்சி மாணவர்களுக்கு சேகரிப்புகளைக் காண வழிவகுத்தல்.

4. சேகரிப்புகளின் விவரங்கள் தயாரித்தல், பெயர்ப் பட்டியல் தயாரித்தல், புத்தகங்கள் மற்றும் மலர்கள் வெளியிடுதல்.

5. கல்விப் பணிகளாக அடிக்கடி சிறப்புக் கண்காட்சிகள் நடத்துதல், வல்லுநர்களைக் கொண்டு விரிவுரைகள் ஆற்றுதல்.

6. வேதியப் பாதுகாப்பு மற்றும் ஆய்வுக் கூடத்தின் வாயிலாக புத்தாக்கம் செய்து சுட்டுப்பொருட்களைச் சீர்கேட்டிலிருந்து பாதுகாத்தல். தேசிய கையெழுத்துப்படி குழு விருப்பப்படி, கையெழுத்துப் படிகள் பாதுகாப்பு மையத்தின் வாயிலாகக் கையெழுத்துப் படிகளைப் பற்றிய பாதுகாப்பு விழிப்புணர்வு மேம்படுத்துதல்.

இனிவருங்காலங்களில் முக்கியமான சுற்றுலா மையங்களில் புதுவிதமாக, அதாவது ஒரு மையப்பொருளின் அடிப்படையில் திறந்தவெளி அருங்காட்சியகங்கள் அமைக்கவும், சென்னை அருங்காட்சியகத்தை ஒரு தன்னாட்சி பெற்ற நிர்வாகமாக்கவும் அதன் வருவாயைப் பெருக்கவும், உரிய மாற்றங்களைச் செய்து அனைத்தும் ஒருங்கிணைக்கப்பட்டு, ஒரே அமைப்பின்கீழ் செயல்படத் தக்க வகையில் துறையின் குறிக்கோள்களையும் செயல்பாடுகளையும் சீரமைக்க இத்துறை விரும்புகிறது.

### அரசு அருங்காட்சியகம், சென்னை

சிற்பங்கள் கூடம், விலங்கியல் மற்றும் தாவரவியல் கூடங்கள் அமைந்துள்ள 200 ஆண்டுகள் பழமை வாய்ந்த பிரதான கட்டடம் புதுப்பிக்கப்பட்டு வருகிறது. அதில் முன்கட்டடத்திலுள்ள மானிடவியல் கூடங்களை 2006-2007 பகுதி-II திட்டத்தின்கீழ் சீர்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. இதற்கான செலவின மதிப்பீட்டுத் தொகை ரூ. 60.00 இலட்சம் ஆகும்.

**மாவட்ட அருங்காட்சியகங்கள்**

தற்போது, புதுக்கோட்டை, சேலம், மதுரை, திருச்சிராப்பள்ளி, வேலூர், ஈரோடு, கடலூர், உதகமண்டலம், கோயம்புத்தூர், கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, திருநெல்வேலி, சிவகங்கை, திருவாரூர், பழனி, நாகப்பட்டினம், காஞ்சிபுரம், இராமநாதபுரம், கரூர், விருதுநகர் ஆகிய இடங்களில் 20 மாவட்ட அருங்காட்சியகங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் புதுக்கோட்டை அருங்காட்சியகம் அன்றிருந்த சமஸ்தான காலத்திலிருந்து செயல்படுகிறது. மற்ற அருங்காட்சியகங்கள் அண்மைக் காலத்தில் தோற்றுவிக்கப்பட்டன.

**2007-2008 பகுதி II திட்டத்தின்கீழ் மதுரை அருங்காட்சியகத்தைப் புதுப்பித்தல்**

மதுரை அருங்காட்சியகம், காந்தி அருங்காட்சியக வளாகத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. புதிய காட்சிக்கூடங்களை அமைக்கவும், பழைய காட்சிக்கூடங்களைப் புதுப்பிக்கவும், ரூ. 28.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.



## இணைப்பு-III

*(100 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## மானியக் கோரிக்கை எண் 28—செய்தி மற்றும் விளம்பரம் கொள்கை விளக்கக் குறிப்பு, 2007-2008

**முகவுரை**

*விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது*
*சொல்லுதல் வல்லார்ப் பெறின்*

என்ற திருமறை தந்த அய்யன் திருவள்ளுவரின் வாக்குப்படி, அனைத்து அரசுத் துறைகளின் செயல்பாடுகளையும், அரசின் திட்டங்களையும் மக்கள் அறியும் வண்ணம் எடுத்துச் செல்வதே செய்தி மக்கள் தொடர்புத் துறையின் இன்றியமையாத பணியாகும்.

மக்கள் நலம் காக்கப்பட, அவர்தம் வாழ்வு சிறக்க அரசு தீட்டும் திட்டங்களைப்பற்றியும், நிறைவேற்றிவரும் அரும் பணிகளைப்பற்றியும், பயன்பெறும் மக்கள் அறியச் செய்யவேண்டிய கடமையைச் செய்வதும், அவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் முக்கிய நோக்கமாகும். இவ்வரிய நோக்கம் ஆக்கம் பெறும் வகையில், இத்துறை நவீன தொழில்நுட்ப வசதிகளுடன், பன்முனைகளில் விளம்பரப் பணிகளை ஆற்றிவருகிறது.

அரசு அறிவிப்புகளை நாளேடுகள் மற்றும் தொலைக்காட்சிகள் மூலம் மக்களுக்கு அன்றாடம் எடுத்துச் செல்ல, பத்திரிகையாளர்கள் நலம் காக்க - செய்தி வெளியீட்டுப் பிரிவு.

தியாகிகள், தமிழ்ச் சான்றோர்கள் புகழ்போற்றும் நினைவகங்கள் மற்றும் திருவுருவச் சிலைகள் அமைத்து, பராமரிக்க, அவர்கள் புகழ்பரப்பும் விழாக்கள் எடுக்க - நினைவகங்கள் பிரிவு.

அரசு வளர்ச்சிப் பணிகளை விளம்பரப்படுத்த விளம்பரப் பிரிவு. பத்திரிகைகளைப் பல்லாண்டு காலம் பாதுகாத்து, தேவைப்படும் பொழுது செய்தி நறுக்குகள் தர - மேற்கோள் பிரிவு. மக்களுக்கும்-ஆராய்ச்சி மாணவர்களுக்கும் பயன்பட - மாநிலச் செய்தி நிலையம்.

செய்தித் திரைப்படங்களைத் தயாரிக்க - தமிழ்நாடு திரைப்படப் பிரிவு. திரைப்பட தொழில்நுட்பத்தை மாணவர்களுக்குக் கற்பிக்க - எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம்.

அரசுத் திட்டங்களை மக்கள் அறியும் வண்ணம் அச்சிட 'தமிழரசு' வெளியீடு.

அரசு பொருட்காட்சிகள் மூலம், அரசுத் திட்டங்களை மக்கள் அறியச் செய்திட - பொருட்காட்சிப் பிரிவு.

மாவட்டந்தோறும் பல்துறைபணி விளக்க முகாம்கள் மூலமாகவும், பல்வேறு ஊடகங்களின் துணைகொண்டும் விளம்பரப் பணியாற்ற - மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள்.

இவ்வகையில் பல்வேறு பிரிவுகளின்மூலம் நவீன தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி அரசின் திட்டங்களும், பணிகளும், திட்டப் பயன்களும், சிற்றூர் முதல் பேரூர் வரை வாழ்கின்ற அனைத்துத் தரப்பு மக்களையும் முழுமையாகச் சென்றடையும் வகையில் செய்தி மக்கள் தொடர்புத் துறை விளம்பரப் பணியாற்றி வருகிறது.



## அத்தியாயம் - 1

## செய்தி வெளியீட்டுப் பிரிவு

அரசின் புதிய அறிவிப்புகள், செய்திகள், செயல்பாடுகள் ஆகியவற்றைத் தொடர்புடைய வண்ணப் புகைப்படங்களுடன், செய்தி இதழ்களுக்கு மின்னஞ்சல் வழியில் உடனுக்குடன் அனுப்பச் செய்யும் பணி தலைமைச் செயலகத்திலுள்ள செய்தி வெளியீட்டுப் பிரிவின்மூலம் நடைபெறுகிறது.

இப்பிரிவின்மூலம் மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களின் செய்தி வெளியீடுகள், செய்திக் குறிப்புகள் மற்றும் அறிக்கைகள், அரசின் அனைத்துத் துறைகளின் செயல்பாடுகள், அரசின் நலத் திட்டங்கள், சாதனைகள், ஆக்கப் பணிகள் குறித்த செய்திகள், அவற்றோடு தொடர்புடைய புகைப்படங்கள் ஆகியவை நாளிதழ்கள், செய்தி நிறுவனங்கள், தொலைக்காட்சிகள், வானொலி, இணைய தளங்கள் என நூற்றுக்கும் மேற்பட்ட ஊடகங்களுக்கு நேரடியாகவும், நிகரிமூலமும் மற்றும் மின்னஞ்சல் வழியாகவும் வழங்கப்பட்டு வருகின்றன. 2006ஆம் ஆண்டு மே திங்கள் முதல் இவ்வாண்டு ஏப்ரல் திங்கள் 16 வரை 672 செய்தி வெளியீடுகள், 208 செய்திக் குறிப்புகள் மற்றும் 457 நிகழ்ச்சிகளின் புகைப்படங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செய்தியாளர் கூட்டங்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களின் செய்தியாளர் கூட்டங்கள், தலைமைச் செயலாளரின் செய்தியாளர் கூட்டங்கள் ஆகியவற்றிற்குத் தேவையான ஏற்பாடுகளை இப்பிரிவு ஆழ்ந்த கவனத்துடன் மேற்கொள்வதோடு, அரசின் முக்கிய அறிவிப்புகள் மற்றும் செய்தி வெளியீடுகளை மாவட்டங்களில் உள்ள செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்குத் தக்க தருணத்தில் அனுப்பிவைத்து, மாவட்டங்களில் வெளியிடப்படும் ஏடுகளில் அச்செய்திகள் இடம்பெறும் வகையில் இப்பிரிவின்மூலம் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவை தவிர, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பங்கேற்கும் நிகழ்ச்சிகள், விழாக்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர், துறைச் செயலாளர்கள் கலந்துகொள்ளும் முக்கிய நிகழ்ச்சிகள், ஆய்வுக் கூட்டங்கள், முக்கியப் பிரமுகர்களின் வருகை போன்ற நிகழ்வுகளைப் புகைப்படம் எடுத்து அனைத்து

நாளிதழ்களுக்கும் வழங்கும் பணியினை மேற்கொள்வதுடன் இதுபோன்ற நிகழ்ச்சிகளைப் படம் எடுப்பதற்குத் தேவையான உதவிகளைத் தொலைக்காட்சிகளின் ஒளிப்பதிவாளர்கள் மற்றும் நாளிதழ்களின் புகைப்படக்காரர்களுக்கும் இப்பிரிவு வழங்கி வருகின்றது.

## பத்திரிகையாளர் நலன்

### செய்தியாளர்களுக்கு அங்கீகார அட்டை

சென்னை மற்றும் வெளி மாநிலங்களிலிருந்து வெளிவரும் நாளிதழ்களின் பத்திரிகையாளர்கள், புகைப்படக்காரர்கள், அரசுத் துறையைச் சார்ந்த வானொலி, தொலைக்காட்சி, திரைப்படப் பிரிவு, புகைப்படப் பிரிவு மற்றும் தனியார் தொலைக்காட்சி நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள், ஒளிப்பதிவாளர்கள் ஆகியோருக்கு செய்தியாளர் அங்கீகாரக் குழுவின் பரிந்துரைக்கேற்ப இந்த அட்டைகள் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வாண்டு மார்ச் திங்கள் இறுதிவரை சென்னையில் 609 பத்திரிகையாளர்களுக்கும், மாவட்டங்களில் 75 பத்திரிகையாளர்களுக்கும் செய்தியாளர் அங்கீகார அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

செய்தியாளர் அங்கீகார அட்டைகள் பெறும் பத்திரிகையாளர்களுக்குத் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்யும் வகையில் இலவசப் பேருந்து பயண அட்டையும், இரயில் பயணத்தில் 50 சதவிகித கட்டணச் சலுகையும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகளில் சிறப்பு ஒதுக்கீட்டில் வீடு பெறுவதற்கு முன்னுரிமையும் வழங்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு முழுவதும் 205 செய்தியாளர்களுக்குத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. 2007ஆம் ஆண்டிற்கு தமிழகம் முழுவதும் உள்ள 1196 பத்திரிகையாளர்கள் / புகைப்படப்பிடிப்பாளர்கள் / ஒளிப்பதிவாளர்களுக்கு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் மூலம் இலவசப் பேருந்துப் பயண அட்டை வழங்கப்பட்டுள்ளது.

### காலமுறை இதழ்களின் செய்தியாளர்களுக்கு அடையாள அட்டை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையின்படி, 1996ஆம் ஆண்டு முதல் காலமுறை இதழ்களில் பணிபுரியும் செய்தியாளர்கள்/புகைப்படக்காரர்களுக்குச் "செய்தியாளர் அடையாள அட்டைகள்" வழங்கப்பட்டு வருகின்றன. அதன்படி, வார இதழ்கள்,



மாத இதழ்கள் போன்ற காலமுறை இதழ்களைச் சேர்ந்த செய்தியாளர்கள் மற்றும் புகைப்படக்காரர்களுக்குச் "செய்தியாளர் அடையாள அட்டைகள்" வழங்கப்படுகின்றன. செய்தியாளர் அட்டை வழங்குவது என்பது அதற்கென நியமிக்கப்பட்டுள்ள தேர்வுக் குழுவினரால், மூன்று மாதங்களுக்கு ஒருமுறை நடைபெறும் அக்குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு, அதனடிப்படையில் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாண்டு 148 செய்தியாளர்களுக்கு அடையாள அட்டைகள் சென்னையில் வழங்கப்பட்டுள்ளன.

### மாவட்டங்களில் செய்தியாளர் அடையாள அட்டை

மாவட்டங்களிலுள்ள செய்தியாளர்களுக்கு, மாவட்ட ஆட்சியர்கள் மூலமாக, செய்தியாளர் அடையாள அட்டைகள் மற்றும் இலவசப் பேருந்துப் பயண அட்டைகள் வழங்கப்படுகின்றன. மேலும், அடையாள அட்டை பெற்ற செய்தியாளர்களுக்குத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய வாடகைக் குடியிருப்புகளில் முன்னுரிமை அடிப்படையில் வாடகைக்கு வீடுகள் ஒதுக்கப்படுகின்றன.

### பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதித் திட்டம்

20 ஆண்டுகள் அல்லது அதற்குமேல் தொடர்ச்சியாகப் பணியாற்றிய பத்திரிகை ஆசிரியர்கள், துணை ஆசிரியர்கள், செய்தியாளர்கள் மற்றும் புகைப்படக்காரர்கள் இவர்களில் எவரேனும் பணியிலிருக்கும்போது இயற்கை எய்தினால், அவர்களது குடும்பத்திற்குப் 'பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதித் திட்டத்தின்' கீழ், முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து நிதியுதவி வழங்கும் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 1997ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, செய்தி வெளியீட்டுப் பிரிவு மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் தொடங்கப்பட்டபோது ரூ. 25,000 நிதியுதவியாக வழங்கப்பட்டது. இத்தொகை படிப்படியாக உயர்த்தப்பட்டு, தற்பொழுது ரூ.2 இலட்சமாக வழங்கப்பட்டு வருகிறது. பத்திரிகையாளர் நலனை உத்தேசித்து, இவ்வரசு பொறுப்பேற்ற பின்னர், 16-10-2006-இலிருந்து பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதித் திட்டம் பல்வேறு காலக்கட்டங்களுக்கென மாற்றியமைக்கப்பட்டு, 20 ஆண்டுகள் பணிபுரிந்து, பணியாற்றிக்கொண்டிருக்கும்பொழுது இறந்துவிடுவார்களேயானால், அவர்களுடைய குடும்பத்திற்கு ரூ.2.00 இலட்சம் என்றும், 15 ஆண்டுகள் பணிபுரிந்திருப்பார்களேயானால் ரூ.1.50 இலட்சம் என்றும், 10 ஆண்டுகள் பணிபுரிந்திருப்பார்களேயானால் ரூ. 1.00 இலட்சம் என்றும், 5 ஆண்டுகள் பணிபுரிந்திருப்பார்களே யானால் ரூ. 50 ஆயிரம் என்றும்

மாண்புமிகு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து, பத்திரிகையாளர் குடும்பநல நிதி உதவி வழங்கும் புதுத் திட்டத்தை நிறைவேற்றி ஆணை வெளியிடப்பட்டு, நடைமுறைப்படுத்தப்படுகிறது. 31-3-2007 வரை 37 செய்தியாளர் குடும்பங்கள் பயன்பெற்றுள்ளனர்.

## பத்திரிகையாளர் ஓய்வூதியம்

பத்திரிகைத் துறையில் பணியாற்றி ஓய்வுபெற்று, வறுமை நிலையில் உள்ள பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் 20 ஆண்டுகளுக்கும் மேலாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் தொடங்கப்பட்டபோது, மாதந்தோறும் ரூ. 250 மட்டுமே ஓய்வூதியமாக வழங்கப்பட்டது. இத்தொகை படிப்படியாக உயர்த்தப்பட்டு, இவ்வரசு பொறுப்பேற்ற பின்னர் தற்பொழுது ரூ. 4,000 மாத ஓய்வூதியமாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் தற்போது (31-3-2007) 73 பத்திரிகையாளர்கள் பயன்பெறுகிறார்கள்.

## பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம்

பத்திரிகையாளர் ஓய்வூதியம் பெற்றுவந்த பத்திரிகையாளர் இயற்கை எய்தினால், அவரின் துணைவியாருக்கு, அவரது வாழ்நாள் முழுவதும் குடும்ப ஓய்வூதியம் வழங்கும் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 1998ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு மாதந்தோறும் ரூ. 500 குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்பட்டது. இந்த ஓய்வூதியம் படிப்படியாக உயர்த்தப்பட்டு, தற்போது மாதந்தோறும் ரூ. 2,000 ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது. இதுவரை 16 குடும்பங்கள் இதன்மூலம் பயன்பெற்று வருகின்றனர்.

## பத்திரிகையாளர்களுக்குக் குடியிருப்பு வசதி

தமிழகத்தில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட பத்திரிகையாளர்களுக்குத் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின்மூலம் எளிய தவணையில் வீடு வாங்குவதற்கு ஏதுவாக ஒரு சிறப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தைத் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியமும், பாரத ஸ்டேட் வங்கியும் இணைந்து செயல்படுத்துகின்றன.

1994ஆம் ஆண்டு, சென்னையில் உள்ள 136 பத்திரிகையாளர்களுக்கு, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்மூலம் வீட்டுமனைகள் வாங்குவதற்கு அரசு மானியமாக ரூ. 20.00 இலட்சத்தினை, தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது. அம்மனைகளில் 112 எண்ணிக்கையில் தனி வீடுகளும், 24 எண்ணிக்கையில் அடுக்குமாடி வீடுகளும் கட்டுவதற்குக் கூடுதல்



மானியமாக ரூ. 51.82 இலட்சத்தினை சென்னை பத்திரிகையாளர் கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்திற்கு அரசு வழங்கியுள்ளது. இவ்வகையில் மொத்தம் ரூ. 71.82 இலட்சம் தமிழக அரசு மானியமாக வழங்கியுள்ளது.

மேலும் 11 மாவட்டங்களிலுள்ள 301 பத்திரிகையாளர்களுக்கு, வீட்டுமனைப் பட்டாக்கள் சலுகை விலையில் வழங்கப்பட்டுள்ளன. சென்னை உட்பட 23 மாவட்டங்களில் 250 வாடகைக் குடியிருப்புகள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் பத்திரிகையாளர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

சென்னை நிருபர்கள் சங்கத்திற்கான புதிய கட்டடம் அரசால் கட்டித்தரப்படும் என்று அரசு அறிவித்ததற்கிணங்க, ரூ. 30.00 இலட்சம் செலவில் கட்டடம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அரசாணை 20-03-2007-ல் வெளியிடப்பட்டுள்ளது. விரைவில் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

## புகைப்படப் பிரிவு

அரசின் திட்டங்கள், நிகழ்ச்சிகள் மற்றும் பணிகளைப் பற்றிய புகைப்படம் எடுத்து உடனுக்குடன் மின்னஞ்சல் வழியாக அனைத்து நாளிதழ்களுக்கும் அனுப்பும் பணியினை இப்பிரிவு மேற்கொண்டு வருகிறது. இப்பணிகளுக்காக அனைத்து மாவட்டச் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கும் டிஜிட்டல் நிழற்படக்கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

[2007 மே 7

## அத்தியாயம் - 2

## மேற்கோள் பிரிவு

ஆங்கிலம், தமிழ் - காலை மற்றும் மாலை நாளிதழ்கள், வெளி மாநில நாளிதழ்கள், காலமுறை இதழ்களில் வெளிவரும் முக்கிய செய்தி நறுக்குகளை அன்றைய தினமே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், தொடர்புடைய அமைச்சர் பெருமக்களுக்கும், தலைமைச் செயலாளர் மற்றும் துறைச் செயலாளர்களுக்கும் பார்வைக்கெனவும், நடவடிக்கைக்கெனவும் தொகுத்து அனுப்பி வைக்கும் பணியினை மேற்கோள் பிரிவு மேற்கொண்டு வருகிறது. இப்பிரிவில், 2001ஆம் ஆண்டு முதலான முக்கிய நாளிதழ்களும் மற்றும் சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள பாரதியார் இல்லத்தில் 1991ஆம் ஆண்டிலிருந்து 2000ஆம் ஆண்டு வரையிலான நாளிதழ்களும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.



2007 மே 7]

## அத்தியாயம் - 3

## நினைவகங்கள்

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு, நாட்டிற்காக பெருந்தொண்டாற்றிப் பல்வேறு தியாகங்களைப் புரிந்த தலைவர்களையும், தமிழ்ச் சான்றோர்களையும், வருங்காலச் சந்ததியினருக்கு அறிமுகப்படுத்தி, அவர்களுக்குச் சிறப்புச் செய்து போற்றிடும் வகையில், அரசு, அவர்களின் நினைவாக 41 நினைவகங்கள், 4 அரங்கங்கள், 5 நினைவுத் தூண்கள், ஒரு நினைவுப் பூங்கா ஆகியவற்றை உருவாக்கி பேணிக்காத்து வருகிறது.

### நினைவகங்கள்

1. திருப்பூர் குமரன் நினைவகம், திருப்பூர், கோயம்புத்தூர் மாவட்டம்.
2. பகுத்தறிவுக் கவிராயர் உடுமலை நாராயணகவி மணிமண்டபம், உடுமலைப்பேட்டை, கோயம்புத்தூர் மாவட்டம்.
3. தந்தை பெரியார் நினைவகம், வைக்கம், கோட்டயம் மாவட்டம், கேரள மாநிலம்.
4. பெரியார்-அண்ணா நினைவகம், ஈரோடு
5. தீரன் சின்னமலை மணி மண்டபம், ஈரோடு.
6. மூதறிஞர் இராஜாஜி பிறந்த இல்லம், தொரப்பள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம்.
7. நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் நினைவு இல்லம், நாமக்கல்.
8. வ.வே. சுப்பிரமணியம் நினைவகம், வரகனேரி அக்ரஹாரம், திருச்சிராப்பள்ளி.
9. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் மணி மண்டபம், பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம்.
10. தில்லையாடி வள்ளியம்மை நினைவகம், தில்லையாடி, நாகப்பட்டினம் மாவட்டம்.
11. கவியரசர் கண்ணதாசன் மணி மண்டபம், காரைக்குடி, சிவகங்கை மாவட்டம்.

[2007 மே 7

12. தவத்திரு குன்றக்குடி அடிகளார் மணி மண்டபம், குன்றக்குடி, சிவகங்கை மாவட்டம்.
13. மருதுபாண்டியர் நினைவு மண்டபம், திருப்பத்தூர், சிவகங்கை மாவட்டம்.
14. தியாகி விஸ்வநாததாஸ் நினைவு மண்டபம், திருமங்கலம், மதுரை மாவட்டம்.
15. தியாக சீலர் கக்கன் மணி மண்டபம், தும்பைப்பட்டி, மதுரை மாவட்டம்.
16. பெருந்தலைவர் காமராஜர் பிறந்த இல்லம், விருதுநகர்.
17. பெருந்தலைவர் காமராஜர் நூற்றாண்டு மணி மண்டபம், விருதுநகர்.
18. மகாகவி பாரதியார் மணி மண்டபம், எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம்.
19. மகாகவி பாரதியார் இல்லம், எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம்.
20. வ.உ. சிதம்பரனார் இல்லம், ஓட்டப்பிடாரம், தூத்துக்குடி மாவட்டம்.
21. வீரன் அழகுமுத்துக்கோன் மணி மண்டபம், கட்டாரங்குளம், தூத்துக்குடி மாவட்டம்.
22. கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி மணி மண்டபம், திருநெல்வேலி.
23. பூலித்தேவன் நினைவு மாளிகை, நெற்கட்டும்செவல் கிராமம், திருநெல்வேலி மாவட்டம்.
24. பொதுவுடைமை வீரர் ப. ஜீவானந்தம் மணி மண்டபம், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.
25. காந்தி நினைவு மண்டபம், கன்னியாகுமரி.
26. பெருந்தலைவர் காமராஜர் மணி மண்டபம், கன்னியாகுமரி.
27. சதாவதானி செய்குத்தம்பிப் பாவலர் நினைவு மண்டபம், இடலாக்குடி, நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.
28. பேரறிஞர் அண்ணா நினைவிடம் மற்றும் அருங்காட்சியகம், மெரினா கடற்கரை, காமராஜர் சாலை, சென்னை.
29. பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிடம் மற்றும் அருங்காட்சியகம், மெரினா கடற்கரை, காமராஜர் சாலை, சென்னை.



2007 மே 7]

30. மகாகவி பாரதியார் நினைவு இல்லம், துளசிங்கம் பெருமாள்கோயில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.
31. பெருந்தலைவர் காமராஜர் நினைவு இல்லம், திருமலைச் சாலை, தியாகராயநகர், சென்னை.
32. வள்ளுவர் கோட்டம், நுங்கம்பாக்கம், சென்னை.
33. காந்தி மண்டபம், சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை.
34. மூதறிஞர் இராஜாஜி நினைவாலயம், சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை.
35. மொழிப்போர்த் தியாகிகள் மணி மண்டபம், காந்தி மண்டப வளாகம், சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை.
36. தியாகிகள் மணி மண்டபம், சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை.
37. பெரியவர் எம். பக்தவத்சலம் நினைவிடம், சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை.
38. பெருந்தலைவர் காமராஜர் நினைவகம், சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை.
39. கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் மணி மண்டபம், காயிதே மில்லத் அரசினர் மகளிர் கல்லூரி அருகில், சென்னை.
40. பேரறிஞர் அண்ணா நினைவு இல்லம், சின்ன காஞ்சிபுரம்.
41. முத்து மண்டபம் (இலங்கையின் கடைசித் தமிழ் மன்னர் விக்ரம ராஜ சிங்கன் நினைவகம்), வேலூர்.

**அரங்கங்கள்**

1. இராஜாஜி மண்டபம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை.
2. கலைவாணர் அரங்கம், வாலாஜா சாலை, சென்னை.
3. அண்ணா கலை அரங்கம், வேலூர்.
4. மகாமகம் கலையரங்கம், கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

[2007 மே 7

**நினைவுத் தூண்கள்**

1. பெருந்தலைவர் காமராஜர் நினைவுத்தூண், விருதுநகர் மாவட்டம்.
2. சுதந்திரப் பொன்விழா நினைவுத் தூண் (போர் நினைவுச் சின்னம் அருகில்) காமராஜர் சாலை, சென்னை.
3. "வெள்ளையனே வெளியேறு" இயக்கப் பொன்விழா நினைவுத் தூண், காந்தி மண்டப வளாகம், சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை.
4. குடியரசுப் பொன்விழா நினைவுத் தூண், (காந்தி சிலை அருகில்) காமராஜர் சாலை, சென்னை.
5. சிப்பாய்ப் புரட்சி நினைவுத் தூண், வேலூர்.

**நினைவுப் பூங்கா**

வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட இடத்தில் நினைவுப் பூங்கா, கயத்தாறு, தூத்துக்குடி மாவட்டம்

சென்னை, காந்தி மண்டப வளாகத்தில், தியாகிகள் மணி மண்டபம் எதிரில், "தலைநகர் காத்த தமிழ்ச் செல்வர்" ம.பொ.சிவஞானம் அவர்களுக்கு ரூ. 6,24,400/- செலவில் சிலை மற்றும் பீடம் அமைக்க அரசாணை வெளியிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

சென்னையில் வள்ளுவர் கோட்டம் ரூ.60.00 இலட்சம் செலவில் சீரமைக்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இராஜாஜி மண்டபத்தினைச் சீரமைக்க, தொல்லியல் துறையின் மூலம் ரூ.1.00 கோடி செலவில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள முடிவெடுக்கப்பட்டு, 11-ஆவது நிதிக்குழு மூலம் முதல் கட்டமாக ரூ.34.00 இலட்சத்தில் பணிகள் முடிவுற்றுள்ளன. 12-ஆவது நிதிக்குழுமூலம், இரண்டாவது மற்றும் மூன்றாவது கட்டமாக முறையே ரூ.30.00 இலட்சம் மற்றும் ரூ.36.00 இலட்சத்தில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள அரசாணைகள் வெளியிடப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

சுனாமியால் பாதிக்கப்பட்ட சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா நினைவிடம் மற்றும் டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிடம் ஆகியவற்றை ரூ.109.50 இலட்சம் செலவில் புதுப்பிக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.



2007 மே 7]

சென்னை திருமலைச் சாலையில் உள்ள காமராஜர் நினைவு இல்லம் ரூ.2.50 இலட்சம் செலவில் சீரமைக்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி, நாமக்கல், தஞ்சாவூர், திருநெல்வேலி, தூத்துக்குடி, திருச்சி, கன்னியாகுமரி, ஈரோடு, மதுரை மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் இத்துறையால் பராமரிக்கப்பட்டு வரும் நினைவகங்களின் பழுது பார்ப்பு மற்றும் சிறப்பு மராமத்துப் பணிகள் ரூ. 26.23 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

மதுரையில், சாத்தமங்கலம் என்ற இடத்தில், மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களுக்கு மணி மண்டபம் அமைக்க ரூ. 39.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டுமானப் பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன.

தூத்துக்குடி மாவட்டம், வல்லநாடு கிராமத்தில் சுதந்திரப் போராட்ட வீரர் வெள்ளையத் தேவன் அவர்களுக்கு நினைவகம் அமைக்க ரூ.25.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

தூத்துக்குடி மாவட்டம், சுவர்ணகிரி கிராமத்தில் சுதந்திரப் போராட்ட வீரர் சுந்தரலிங்கம் அவர்களுக்கு நினைவகம் அமைக்க, ரூ. 25.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரத்தில் உமறுப்புலவர் அவர்கள் வாழ்ந்த இல்லத்தைக் கையகப்படுத்தி, நினைவகம் அமைக்க ரூ. 22.50 இலட்சம், நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் ரெட்டமலை சீனிவாசன் அவர்களுக்கு மணி மண்டபம் அமைக்க ரூ. 19.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

தருமபுரி மாவட்டம், அதியமான் கோட்டையில், 400 நபர்கள் அமரக்கூடிய பார்வையாளர்கள் மண்டபம் உள்ள அதியமான் கோட்டம் அமைத்திடும் வகையில், 0.810 எக்டேர் நிலம் ரூ. 1,28,253/- செலவில் கையகப்படுத்தப்பட்டு, ரூபாய் ஒரு கோடியே 15 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

[2007 மே 7

## அத்தியாயம் - 4
## அரசு விழாக்கள்

இந்தியத் திருநாட்டின் விடுதலைக்காக அரும்பாடுபட்ட, தன்னிகரில்லாத தலைவர்களையும், தமிழ்மொழி வளர்ச்சிக்காக அல்லும் பகலும் அயராது உழைத்த அறிஞர் பெருமக்களைப் போற்றிப் புகழ்ந்திடவும், அவர்களது தியாகங்களையும், அருமை பெருமைகளையும் நாட்டு மக்கள் அறிந்திடச் செய்யும் நோக்கோடும், அவர்களது பிறந்த நாள் விழாக்கள் மற்றும் நினைவுநாள் நிகழ்ச்சிகள் அரசினால் நடத்தப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு அரசின் சார்பில் தேசியத் தலைவர்கள் மற்றும் அறிஞர் பெருமக்களின் திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தல் நிகழ்ச்சி நடைபெறுவது, தற்போது மாலை அணிவிப்பதற்குப் பதிலாக அவர்களின் புகைப்படம் வைத்து மலர் தூவி மரியாதை செய்திட அரசு ஆணையிட்டுள்ளது.

கீழ்க்குறிப்பிட்டுள்ள தலைவர்களின் பிறந்த நாளின்போது, அரசின் சார்பில் சென்னையில் மரியாதை செய்யப்படுகின்றது:

| | | |
|---|---|---|
| 1. | ஜனவரி 17 | பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். |
| 2. | ஜனவரி 23 | நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் |
| 3. | ஏப்ரல் 14 | டாக்டர் அம்பேத்கர் |
| 4. | ஏப்ரல் 27 | சர்.பிட்டி. தியாகராயர் |
| 5. | ஏப்ரல் 29 | பாவேந்தர் பாரதிதாசன் |
| 6. | ஜூன் 5 | கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத் |
| 7. | ஜூன் 24 | கவியரசர் கண்ணதாசன் |
| 8. | ஜூலை 15 | பெருந்தலைவர் காமராஜர் |
| 9. | செப்டம்பர் 5 | கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. |
| 10. | செப்டம்பர் 15 | பேரறிஞர் அண்ணா |
| 11. | செப்டம்பர் 17 | தந்தை பெரியார் |
| 12. | செப்டம்பர் 29 | முன்னாள் மேயர் சிவராஜ் |
| 13. | அக்டோபர் 2 | மகாத்மா காந்தியடிகள் |
| 14. | அக்டோபர் 30 | பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் |
| 15. | நவம்பர் 14 | பண்டித ஜவஹர்லால் நேரு |
| 16. | டிசம்பர் 10 | மூதறிஞர் இராஜாஜி |
| 17. | டிசம்பர் 11 | மகாகவி பாரதியார் |

ஆண்டுதோறும் மகாத்மா காந்தியடிகள் நினைவு நாளான ஜனவரி 30 அன்று அரசின் சார்பில் அவரது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்யப்படுகிறது.



2007 மே 7]

ஆண்டுதோறும் தியாகிகள் தினமான ஜூலை 17 அன்று தியாகி சங்கரலிங்கனார் மற்றும் தியாகி ஆர்யா என்கின்ற பாஷ்யம் ஆகியோரின் சிலைகளுக்கு மலர் தூவி மரியாதை செய்யப்படுகிறது.

2006-2007 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் பெருமக்களின் பிறந்தநாள் விழாக்கள் மாவட்டங்களில் கொண்டாடப்பட்டன:—

1. வீரன் அழகுமுத்துக்கோன், தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி.
2. வ.உ.சிதம்பரனார், தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம்.
3. வீரபாண்டிய கட்டபொம்மன், தூத்துக்குடி மாவட்டம், பாஞ்சாலங்குறிச்சி.
4. வீரன் சுந்தரலிங்கம், தூத்துக்குடி மாவட்டம், சுவர்ணகிரி.
5. மகாகவி பாரதியார், தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரம்.
6. ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி, இராமநாதபுரம்.
7. தீரன் சின்னமலை, ஈரோடு மாவட்டம், ஓடாநிலை. (ஆடிப்பெருக்கு நாள்)
8. வல்வில் ஓரி, நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை.
9. மகாத்மா காந்தியடிகள், அனைத்து மாவட்டங்கள்.
10. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், இராமநாதபுரம் மற்றும் மதுரை மாவட்டங்கள்.
11. மூதறிஞர் இராஜாஜி, கிருஷ்ணகிரி மாவட்டம், தொரப்பள்ளி.

### சிறப்பு விழாக்கள்

கௌதம புத்தர் மகாபரிநிர்வாணம் அடைந்து 2550 ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி, விழாவினை நாடு முழுவதும் ஓராண்டு காலம் விழா நடத்துவதற்காக மைய அரசினால் மாண்புமிகு பாரதப் பிரதமர் தலைமையில் தேசிய அளவில் தேசியக் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதுபோன்று, தமிழ்நாட்டில் ஆண்டு முழுவதும் விழா கொண்டாட மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தலைமையில் குழு அமைக்கப்பட்டு விழா கொண்டாடப்பட்டு வருகிறது.

கன்னியாகுமரி மாவட்டம் தாய்த் தமிழகத்தோடு இணைந்து 31-10-2006 அன்று 50 ஆண்டுகள் நிறைவு பெற்றதையொட்டி, கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு சார்பில் பொன்விழா கொண்டாடப்பட்டது.

[2007 மே 7

## அத்தியாயம் - 5

## விளம்பரம்

தமிழ்நாடு அரசின் அனைத்து விளம்பரங்களும், நாளிதழ்கள் மற்றும் காலமுறை இதழ்களில் வெளியிடுதல் மையப்படுத்தப்பட்டு, இத்துறை மூலம் வெளியிடப்பட்டு வருகின்றன. விளம்பரத்தின் தன்மை, அவை சென்றடைய வேண்டிய பகுதி, மக்கள் ஆகியவற்றின் அடிப்படையில் பத்திரிகைகளுக்கு விளம்பரங்கள் அளிக்கப்பட்டு வருகின்றன.

(1) நிலமற்ற விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு இலவச நிலம் வழங்கும் திட்டம்

(2) அனைத்து விவசாயிகளின் கூட்டுறவுப் பயிர்க் கடன்கள் தள்ளுபடி

(3) சத்துணவோடு வாரம் மூன்று முறை முட்டை வழங்குதல்

(4) மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம்

(5) தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி

(6) ஏழைக் குடும்பங்களுக்கு இலவச எரிவாயு அடுப்பு மற்றும் அதற்கான இணைப்பு வழங்குதல்

(7) நியாய விலைக் கடைகளில் இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசியுடன் குறைந்த விலையில் பருப்பு வகைகள், சமையல் எண்ணெய் வகைகள் விநியோகம்

(8) வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இலவசமாக வழங்கும் திட்டம்

(9) அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் - 5 ஆண்டுகளில் ரூ.2,500 கோடி, ஆண்டுக்கு ரூ.500 கோடி வீதம் செலவிடுதல்

(10) விவசாயிகளுக்கும் விவசாயத் தொழிலாளர்களுக்கும் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல உதவிச் சட்டம்

(11) அமைப்பு சாரா தொழிலாளர்களுக்குத் தனித்தனி வாரியங்கள்

(12) வேலை வேண்டி காத்திருப்போருக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம்

போன்ற அரசு நலத் திட்டங்கள் பற்றிய விளம்பரங்கள் நாளிதழ்களில் வெளியிடப்பட்டன. விளம்பரத்தில் புதிய உத்தியைக் கையாண்டு, அரசு நலத் திட்டங்கள் குறித்த விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் வகையில்,



2007 மே 7]

நாளிதழ்களின் வெளியீட்டாளர்கள் வழங்கும் விளம்பரத்துடன் கூடிய கட்டுரைகள் வெளியிடச் செய்யப் பெறுகின்றன. தமிழகத்தின் அடிப்படைக் கட்டமைப்புகளை வெளிப்படுத்தும் விளம்பரங்கள், அயல்நாட்டு நேரடி மூலதனத்தையும், பிற மாநிலங்களின் தொழில் முனைவோர்களிடமிருந்து புதிய கூடுதலான மூலதனத்தையும் ஈர்க்க வகை செய்துள்ளது. சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிக்கும் வகையில் விளம்பர முக்கியத்துவம் தரப்படுகின்றது.

நவீன தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி கூடுதல் செலவு ஏதுமின்றி அனைத்து அரசு விளம்பரங்களும் மக்களை எளிதில் சென்றடையும் வகையில் ஒப்பந்தப்புள்ளி மற்றும் வரைகலை விளம்பரங்கள் மத்திய அரசின் தேசிய தகவல் மையத்தின் வழியாக, தமிழக அரசின் www.tn.gov.in என்ற வலைதளத்தில் இலவசமாக வெளியிடப்படுவதுடன் இணையதளத்திலும் இலவசமாக வெளியிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அரசு டெண்டர் விளம்பரங்கள் பத்திரிகைகளில் வெளியிடப்படுவதுடன், இணையதளத்திலும் வெளியிடப்படுவதால், அரசின் வெளிப்படையான நிர்வாகம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்பதோடு, தகுதியான எவரும் பங்கேற்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அரசின் செயல்பாடுகள் அனைத்தும் மக்கள் அறிந்துகொள்ளும் வகையில் வெளிப்படையாக இருத்தல் வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில், 1998ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட ஒப்பந்தப்புள்ளிச் சட்டத்திற்குட்பட்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகள் 2000 இயற்றப்பட்டு, அதன் அடிப்படையில் மாவட்ட / மாநில ஒப்பந்தப்புள்ளி செய்திமலர்கள் வாரந்தோறும் வெளியிடப்படுகின்றன.

ரூ. 5 இலட்சத்திற்கு மேல் ரூ.10 இலட்சம் வரையிலான கொள்முதல் மதிப்பு மற்றும் ரூ. 10 இலட்சத்திலிருந்து ரூ. 25 இலட்சம் வரையிலான பணிகளின் மதிப்பு ஆகியன பற்றிய ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்கள் மாவட்ட ஒப்பந்தப்புள்ளி செய்திமலரிலும், ரூ.10 இலட்சத்திற்கு மேற்பட்ட கொள்முதல் மதிப்பு மற்றும் ரூ. 25 இலட்சத்திற்கு மேற்பட்ட பணிகளின் மதிப்பு ஆகிய ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்கள் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்திமலரிலும் வெளியிடப்படுகின்றன. இம்மலர்களில், ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள்மீது மேற்கொண்ட முடிவுகளும் வெளியிடப்பட்டு வருகின்றன.

[2007 மே 7

**அத்தியாயம்-6**

# திரைப்பட விருதுகள் மற்றும் குறைந்த செலவில் தயாரிக்கப்படும் திரைப்படங்களுக்கு மானியம்

தமிழ்த் திரைப்படத் துறையை ஊக்குவிக்கும் பொருட்டு, 1968-ஆம் ஆண்டு முதல், சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோருக்குத் தமிழ்நாடு அரசால் திரைப்பட விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 1-ஆம் தேதி முதல் டிசம்பர் 31-ஆம் தேதி வரையிலான மத்திய தணிக்கைக் குழு சான்றளிக்கப்பட்ட திரைப்படங்களில் சிறந்த திரைப்படங்கள், நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோரைத் தேர்வு செய்வதற்கென ஆண்டுதோறும் ஒரு தேர்வுக்குழு அரசால் அமைக்கப்படுகிறது.

இக்குழுவால் தேர்வு செய்யப்படும் திரைப்படங்களுக்கு ஆண்டுதோறும் முதல் பரிசு ரூ.2/-இலட்சம் ரொக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழ், இரண்டாம் பரிசு ரூ.1/- இலட்சம் ரொக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழ், மூன்றாம் பரிசு ரூ.75 ஆயிரம் ரொக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழ், சிறப்புப் பரிசு ரூ. 75 ஆயிரம் ரொக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழ் மற்றும் பெண்களைப் பற்றி உயர்வாக சித்தரிக்கும் திரைப்படத்திற்குச் சிறப்புப் பரிசாக ரூ. 1.25 இலட்சம் ரொக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. சிறந்த நடிகர்கள், நடிகைகள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் ஒவ்வொருவருக்கும் தலா 5 பவுன் தங்கப்பதக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கப்படுகின்றன. இவ்வகையில் அரசு ரூ.16.00 இலட்சம் ஆண்டுதோறும் செலவிடுகிறது.

அளவான குடும்பம் மற்றும் திட்டமிட்ட குடும்ப நெறிகளைப் பிரதிபலிக்கின்ற திரைப்படங்களுக்கு முதல் பரிசு ரூ.50 ஆயிரம் ரொக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழ், இரண்டாம் பரிசு ரூ.25 ஆயிரம் ரொக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழ், மூன்றாம் பரிசு ரூ.10 ஆயிரம் ரொக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கப்படுகின்றன.

## கலைத்துறை வித்தகர் விருதுகள்

தமிழ்த் திரைப்படத் துறை வரலாற்றில் முத்திரை பதித்து, மக்கள் மனதில் இடம் பெற்ற அறிஞர் அண்ணா, கலைவாணர்,



2007 மே 7]

ராஜாசாண்டோ, மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்., கவிஞர் கண்ணதாசன், நடிகர் திலகம் சிவாஜி கணேசன், தியாகராஜ பாகவதர் ஆகியோர் பெயர்களில் கலைத்துறை வித்தகர் விருதுகள் வழங்கப்படுகின்றன. கலைத்துறை வித்தகர் விருது பெற்றவர்களுக்குத் தலா 5 பவுன் தங்கப்பதக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கப்படுகின்றன. இதற்காக அரசு ரூ.2.50 இலட்சம் ஆண்டுதோறும் செலவிடுகிறது.

## குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு மானியம்

குறைந்த செலவில் தயாரித்து வெளியிடப்படும் தரமான தமிழ்த் திரைப்படங்களை ஊக்குவிக்கும் பொருட்டு, அப்படங்களுக்கு மானியம் வழங்கும் திட்டத்தினை அரசு செயல்படுத்தி வருகிறது. ஆண்டுதோறும் இத்திட்டத்தின்கீழ் படங்களைத் தேர்ந்தெடுக்க ஒரு தேர்வுக்குழு அரசால் அமைக்கப்படுகிறது. இக்குழுவால் தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொரு படத்திற்கும் ரூ.7 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.

## தேர்வு

சிறந்த நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோருக்கு விருதுகள் வழங்கிட தேர்வுக்குழுவிற்கு 2005 மற்றும் 2006 ஆம் ஆண்டுகளுக்கான 87 திரைப்படங்கள் வரப்பெற்றுள்ளன. 2005ஆம் ஆண்டிற்கான குறைந்த செலவில் தயாரித்து வெளியிடப்பட்ட தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு அரசு மானியம் வழங்கிட, தேர்வுக்குழுவிற்கு 43 திரைப்படங்கள் வரப்பெற்றுள்ளன. இத்திரைப்படங்களை உரிய தேர்வுக்குழுவினர் பார்வையிட்டு வருகின்றனர்.

## திரைப்படத் துறையினருக்கு வழங்கப்படும் அரசின் பிற சலுகைகள்

1. அரசுக்குச் சொந்தமான இடங்களில் படப்பிடிப்பு நடத்த சுலபமாகவும், விரைவாகவும் ஒற்றைச் சாளர முறையில் செய்தித் துறை இயக்குநர் அவர்களால் அனுமதி வழங்கப்படுகிறது.

2. திரைப்படம் மற்றும் தொலைக்காட்சித் துறையினரின் வேண்டுகோளுக்கிணங்க, இவ்வரசு பொறுப்பேற்ற பின்னர், அவர்களை மேலும் ஊக்கப்படுத்தும் வகையில், வெளிப்புறப் படப்பிடிப்பிற்கான கட்டணங்கள் வெகுவாகக் குறைக்கப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இதன் பலனாக, படப்பிடிப்புகள்

நடத்துவதற்கான அனுமதி வழங்கும் எண்ணிக்கை அதிகரித்து, அதன் பலனாக அரசுக்குக் கிடைக்கும் வருவாய் கணிசமாக உயர்ந்துள்ளது

3. தேசிய மற்றும் பன்னாட்டு விருதுகள் பெறும் தமிழ்த் திரைப்படங்களுக்கு அந்த விருதுகள் பெற்றமைக்காக தமிழ்நாடு அரசு அவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, புதியதாக ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்திற்கான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

4. சண்டைக்காட்சியில் நடிக்கும் பொழுது சண்டைப் பயிற்சியாளர் காயமுற்று இறந்தால், அவரது குடும்பத்தினருக்கு ரூ.1 இலட்சமும், செயல்பட முடியாத அளவுக்கு ஊனமுற்றால் ரூ.50 ஆயிரமும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

5. திரைப்படத் துறையில் திரையரங்க உரிமையாளர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் தயாரிப்பாளர்களுக்கு இடையே ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க, மாவட்ட மற்றும் மாநில அளவில் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.



## அத்தியாயம்-7

## தமிழ்நாடு திரைப்படப் பிரிவு

திரைப்படம் மற்றும் வீடியோ தொழில்நுட்பத்தின் மூலமாக அரசின் நலத்திட்டங்களை மக்களுக்கு எடுத்துச் செல்லும் சிறந்ததொரு இணைப்புப் பாலமாக தமிழ்நாடு திரைப்படப்பிரிவு 1968-ஆம் ஆண்டு முதல் செயல்படுகிறது.· தொடக்கத்தில் இப்பிரிவு கருப்பு/வெள்ளை செய்தி மலர்களை மட்டுமே தயாரித்தது. கடந்த 40 ஆண்டுகளில் இப்பிரிவு புதிய தயாரிப்பு வடிவங்களை (Format) படிப்படியாகப் பயன்படுத்தத் தொடங்கியது. கருப்பு/வெள்ளை பிலிம், வண்ண பிலிம், வி.எச்.எஸ்/யுமாடிக் ஒளிநாடா, லோ-பேண்டு, ஐ-பேண்டு, பீட்டா முதலியன அவற்றின் வளர்ச்சிக் கட்டங்களாகும்.

### செய்திப் படப்பிடிப்பு

தமிழ்நாடு திரைப்படப்பிரிவு, தமிழ்நாட்டில் நடைபெறும் முக்கியமான நிகழ்ச்சிகளையும், அவ்வப்போது வெளிமாநிலங்கள், புதுடில்லியில் மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் நிகழ்ச்சிகள் போன்ற நிகழ்ச்சிகளையும் பிலிம் மற்றும் வீடியோவில் படமெடுக்கிறது.

### 35 மிமீ பிலிம் செய்தி மலர்

செய்தி மலர் படப்பிடிப்புகளை 10 நிமிடப் படமாக தொகுத்து அதை மத்திய அரசு திரைப்படப் பிரிவின் உதவியுடன் தமிழகத்திலுள்ள அனைத்து திரையரங்குகளில் சுழற்சி முறையில் திரையிடப்படுகிறது. இதுவரை, தமிழ்நாடு திரைப்படப் பிரிவு மூலம் 579 செய்தி மலர்கள் தயாரித்து வெளியிட்டுள்ளது.

### 35 மிமீ பிலிம் மற்றும் வீடியோவில் விளக்கப்படம்

தமிழ்நாடு அரசின் துறைகள் மற்றும் சார்பு நிறுவனங்களுக்காக விளக்கப்படம் தயாரிக்க வேண்டிய ஒரே முகமை தமிழ்நாடு திரைப்படப் பிரிவாகும். தமிழ்நாடு திரைப்படப் பிரிவு இதுவரை குடும்பநலம், வேளாண்மை, தீண்டாமை ஒழிப்பு குறித்து 10 முதல் 20 நிமிடங்கள் வரை ஓடக்கூடிய 365 விளக்கப்படங்கள் பிலிம் மற்றும் வீடியோவில் தயாரித்துள்ளது. விளக்கப்படங்கள் திரையரங்குகளிலும், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் மூலம் கிராமங்களிலும் திரையிடப்படுகின்றன.

### வீடியோ செய்தி மலர்

முக்கியமான மக்கள் நலத்திட்டங்கள் பற்றி 30 முதல் 60 நிமிடம் வரை ஓடக்கூடிய வீடியோ செய்தி மலர்கள் தயாரிக்கப்பட்டு, மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களின் மூலமும், தொலைக்காட்சிகள் மூலமும் திரையிடப்படுகின்றன.

### வீடியோ குறும்படம்

செப்டம்பர் 2006-இல் "அரசின் 100 நாட்கள் சாதனைகள்" உள்ளிட்ட 20 முதல் 30 வினாடிகள் ஓடக்கூடிய 22 வீடியோ குறும்படங்கள் தயாரிக்கப்பட்டன. இந்தக் குறும்படங்கள் பொதிகை, சன், விஜய், மக்கள் மற்றும் ராஜ் ஆகிய தொலைக்காட்சிகளிலும் ஒளிபரப்பப்பட்டன. மேலும், அகில இந்திய வானொலி, ரெயின்போ பண்பலை வரிசை மற்றும் சன் பண்பலை வரிசை ஆகியவற்றிலும் ஒலிபரப்பப்பட்டது.

### அங்கீகரிக்கப்பட்ட தயாரிப்பாளர்கள்

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு மூலம் விளக்கப்படங்கள் தயாரிக்க இயலாத காலங்களில், தனியார் தயாரிப்பாளர்கள் மூலம் விளக்கப் படங்கள் தயாரிக்கப்படுகின்றன. இதற்காக 96 தனியார் படத் தயாரிப்பாளர் அடங்கிய பட்டியலை அரசு அங்கீகரித்துள்ளது. இந்தப் பட்டியலில் உள்ள படத் தயாரிப்பாளர்கள் இதுவரை தமிழ்நாடு திரைப்படப் பிரிவிற்காக 150 பிலிம்/வீடியோ படங்கள் விளக்கப்படங்களுக்கு மேல் தயாரித்துள்ளனர்.

### தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள் ஒளிபரப்பு

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், பேரவை நடவடிக்கைகளை ஒளிப்பதிவு செய்வதற்காக, ரூ.2.29 கோடி செலவில் நவீன வீடியோ ஒளிப்பதிவு மற்றும் தொகுப்புக் கருவிகள் நிறுவப்பட்டன. இந்த ஒளிப்பதிவு நாடாக்கள் தமிழ்நாடு திரைப்படப் பிரிவின் நூலகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. மேலும், இவை தனியார் தொலைக்காட்சி நிறுவனங்கள் ஒளிபரப்பும் பொருட்டு அவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

தமிழ்நாடு திரைப்படப் பிரிவிற்கு, திரைப்படம் மற்றும் வீடியோ தயாரிப்புப் பணிகளை நவீன முறையில் விரைந்து மேற்கொள்ள ஏதுவாக, ஃபைனல் கட் புரோ-5 என்ற கருவி ரூ 17.93 இலட்சம் செலவில் வாங்கப்பட்டு நிறுவப்பட்டுள்ளது.



## அத்தியாயம்-8

## எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம்

எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் இந்தியாவில் உள்ள திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனங்களுள் முதன்மை வாய்ந்த ஒரு நிறுவனமாகும்.

இந்நிறுவனத்தில் இயக்குதல், திரைக்கதை வசனம் எழுதுதல், ஒளிப்பதிவு, ஒலிப்பதிவு மற்றும் ஒலிப்பொறியியல், படத்தொகுப்பு மற்றும் படம் பதனிடுதல் ஆகிய மூன்றாண்டு கால சிறப்புப் பட்டயப் படிப்புகள் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்புப் பயிற்சிகள் ஆகியன மாணவர்களுக்கு நடத்தப்படுகின்றன.

இந்நிறுவனத்தில் நடத்தப்பட்டு வரும் பட்டய வகுப்புகள் மற்றும் இதில் சேருவதற்கான கல்வித் தகுதி கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:—

| வ. எண். | பட்டயப் படிப்பு | காலம் | கல்வித் தகுதி | இருக்கைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | இயக்குதல் மற்றும் திரைக்கதை வசனம் எழுதுதல் | 3 ஆண்டுகள் | ஏதாவது ஒரு பட்டப் படிப்பு | 14 |
| 2. | ஒளிப்பதிவு | 3 ஆண்டுகள் | மேல்நிலை வகுப்புத் தேர்ச்சி | 14 |
| 3. | ஒலிப்பதிவு மற்றும் ஒலிப்பொறியியல் | 3 ஆண்டுகள் | மேல்நிலை வகுப்புத் தேர்ச்சி | 14 |
| 4. | படத்தொகுப்பு | 3 ஆண்டுகள் | மேல்நிலை வகுப்புத் தேர்ச்சி | 14 |
| 5. | படம் பதனிடுதல் | 3 ஆண்டுகள் | மேல்நிலை வகுப்புத் தேர்ச்சி | 14 |

இந்நிறுவனத்தில் பயிற்றுவிக்கப்படும் ஐந்து பட்டயப் படிப்புகளுக்கான, மாணவ/மாணவியர்கள் சேர்க்கைக்கும், தேர்வில்

கலந்து கொள்ளவும், தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தால் ஒப்புதல் வழங்கி தேர்வு நடத்தி, தேர்ச்சி பெற்ற மாணவ/மாணவியர்களுக்குப் பட்டயம் வழங்கப்படுகிறது.

இந்நிறுவனத்தில் பயிற்சி அளிக்கப்படும் அனைத்துப் பட்டயப் படிப்புகளுக்கும் புதுடெல்லியில் உள்ள அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்விக்குழு அங்கீகாரம் அளித்துள்ளது.

பல்வேறு துறைகளின் மாணவர்கள் சேர்ந்து குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு குழுவிலும், ஒவ்வொரு பிரிவு மாணவர் ஒருவர் வீதம், ஐவர் குழு ஒரு முழுமையான திரைப்படம் தயார் செய்யும். மேலும், இறுதியாண்டு மாணவர்கள் குழு, தனியே ஒரு குறும்படம் தயாரிக்கவும் பாடத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. பட்டயப் படிப்பு மாணவர்களின் படப்பிடிப்பு தயாரிப்புச் செலவிற்காகத் தமிழக அரசால் ஆண்டுதோறும் ரூ.15.00 இலட்சம் செலவிடப்பட்டு வருகிறது.

மாணவர்களால் தயாரிக்கப்படும் படங்கள், தேசிய மற்றும் பன்னாட்டுத் திரைப்பட விழாவில் கலந்துகொள்ள ஏதுவாக அரசு மூலம் ரூ.75,000/- ஆண்டு தோறும் வழங்கப்படுகிறது.

இந்நிறுவன மாணவர்கள் தயாரிக்கும் குறும்படங்களின் சிறந்த இயக்குநர், சிறந்த ஒளிப்பதிவாளர், சிறந்த ஒலிப்பதிவாளர், சிறந்த படத்தொகுப்பாளர், சிறந்த படம் பதனிடுபவர் ஆகியோருக்கு விருதுகள் வழங்கும் திட்டத்தின்கீழ், தலா ஒரு பவுன் தங்கப்பதக்கமும், ரூ.5,000/- ரொக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டு வருகின்றன.

2006-2007 ஆம் ஆண்டில், எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்திலுள்ள மறு ஒலிப்பதிவு அரங்கத்தில் ரூ36.00 இலட்சம் செலவில் ஒருமுகப்படுத்தப்பட்ட சீர்வளி வசதியும், இருக்கை வசதியும் ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளது.

மேலும், இவ்வரங்கத்தில் "டி.டி.எஸ். டால்பி டிஜிட்டல் ரெக்கார்டிங்" கருவி, "என்கோடர்" கலவை இயந்திரம் மற்றும் இதர நவீனக் கருவிகள் ரூ50.00 இலட்சம் செலவில் வாங்கி நிறுவப்பட்டுள்ளன.

இந்நிறுவனத்திலுள்ள படப்பிடிப்புத் தளத்தில் சீர்வளி வசதி ஏற்படுத்தித் தரும் பொருட்டு, ரூபாய் ஒரு கோடியே 43 இலட்சம் ஒதுக்கீடு செய்து அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் நிறைவுற்றபின், படத் தயாரிப்பாளர்களுக்கு வாடகைக்கு விடப்படும்.



## அத்தியாயம்-9

# திரைப்படம், வீடியோ மற்றும் கேபிள் தொலைக்காட்சி இணைப்பு

தமிழ்நாட்டில் திரைப்படத் தொழில் பல ஆயிரக்கணக்கான கலைஞர்களுக்கும், தொழில்நுட்ப வல்லுநர்களுக்கும் வேலை வாய்ப்பளிக்கும் முக்கியத் தொழிலாகத் தொடர்ந்து விளங்குகிறது.

2. தமிழ்நாட்டில் கீழ்க்கண்டவகையிலான மொத்தம் 1,662 திரையரங்குகள் உள்ளன.

| | | |
|---|---|---|
| (1) | நிரந்தரத் திரையரங்குகள் | 1,332 |
| (2) | ஓரளவு நிரந்தரத் திரையரங்குகள் | 115 |
| (3) | நிரந்தரமற்ற திரையரங்குகள் | 203 |
| (4) | திறந்த வெளித் திரையரங்குகள் | 12 |
| | **மொத்தம்** | 1,662 |

3. 1955ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படச் (முறைப்படுத்துதல்) சட்டம், அதன் கீழ் வரும் 1957ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்பட (முறைப்படுத்துதல்) விதிகள், உறுதியான கட்டட அமைப்பு உள்ளிட்ட அடிப்படை வசதிகளுடன் கூடிய திரையரங்குகளை முறையாகப் பராமரிக்க வகை செய்கின்றன.

4. இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் தமிழில் பெயரிடப்பட்ட பழைய மற்றும் புதிய தமிழ்த் திரைப்படங்களுக்கு கேளிக்கைவரி விலக்களித்தல், பொது இடங்களில் எடுக்கப்படும் படப்பிடிப்பிற்கான கட்டணங்களைப் பெருமளவில் குறைத்தல் போன்ற பல்வேறு சலுகைகளைத் திரைப்படத்தொழிலுக்கு வழங்கியுள்ளது. இதன் பயன்கள் பொதுமக்களுக்குச் சென்றடையும் நோக்கில் திரையரங்குகளின் கட்டண வீதங்களைக் குறைவாக விதிக்குமாறு திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கம் மற்றும் பிலிம் சேம்பர், திரைப்பட விநியோகஸ்தர்கள் சங்கம், சென்னை மாநகரத் திரையரங்குகள் உரிமையாளர்கள் சங்கம் ஆகிய அமைப்புகள் அரசைக் கேட்டுக்கொண்டன. இச்சங்கங்களின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட அரசு, உள்துறையின் (சினிமா.I) 21-12-2006 ஆம் நாளிட்ட 1240, நிலை எண் அரசாணையில் திரையரங்குகள் அமைந்துள்ள உள்ளாட்சி

அமைப்புகளின் அடிப்படையில் திரையரங்குகளின் கட்டணங்களை 1-1-2007 முதல், கீழே குறிப்பிடப்பட்டுள்ள குறைந்த மற்றும் அதிக அளவுக்குள் கட்டணங்களை மாற்றியமைத்தும், மறுநிர்ணயம் செய்தும் ஆணை பிறப்பித்துள்ளது:—

**திரையரங்குகளின் நுழைவுக் கட்டண வீதங்கள்**

| | சீர்வளி வசதியுள்ள திரையரங்குகள் | சீர்வளி வசதியில்லாத திரையரங்குகள் |
|---|---|---|
| **மாநகராட்சிகள்** | ரூ. | ரூ. |
| குறைந்த அளவு | 10 | 7 |
| அதிக அளவு | 50 | 30 |
| **நகராட்சிகள்** | | |
| குறைந்த அளவு | 5 | 4 |
| அதிக அளவு | 40 | 30 |
| **பேரூராட்சிகள்** | | |
| குறைந்த அளவு | 5 | 4 |
| அதிக அளவு | 25 | 20 |
| **கிராமப் பஞ்சாயத்துக்கள்** | | |
| குறைந்த அளவு | 5 | 4 |
| அதிக அளவு | 15 | 10 |

5. பல்வேறு திரைப்படத்தொழில் அமைப்புகளின் கோரிக்கையினை ஏற்றுப் புதிதாக வெளியிடப்படும் திரைப்படங்களுக்குத் திரைப்படம் வெளியிடப்பட்ட நாளிலிருந்து முதல் இரண்டு வாரங்களுக்கு, உச்சவரம்பு ஏதுமின்றி திரையரங்கு உரிமதாரர்கள் நுழைவுக்கட்டணங்களை நிர்ணயித்துக் கொள்ளலாம் என்கிற முந்தைய ஆணையையும் அரசு இரத்து செய்துள்ளது.

6. மேற்சொன்ன ஆணையைத் தொடர்ந்து அரசு நிர்ணயித்துள்ள அதிக அளவு கட்டணங்களுக்கும் குறைவாக ஒரு குறிப்பிட்ட கால அளவிற்குக் கட்டணத்தை நிர்ணயிக்கத் திரையரங்க உரிமையாளர் விரும்பினால் உரிமம் வழங்கும் அலுவலர் மற்றும் வணிகவரி அலுவலர் ஆகியோருக்கு முன்கூட்டியே அறிவிப்புச் செய்து 'சி' படிவ உரிமத்தில்



உரிமம் வழங்கும் அலுவலரால் முறையாகப் பதிவு செய்து/மேலொப்பம் இடப்பட்ட பின்னர் அவ்வாறு நிர்ணயித்துக் கொள்ளலாம் என்றும் அரசு ஆணையிட்டுள்ளது.

7. மேலும் பல்வேறு வணிக அமைப்புகளைக் கொண்ட திரையரங்க உரிமையாளர்கள், சென்னை மாநகரத் திரைப்படம் காட்டுவோர் சங்கம் தங்கள் திரையரங்குகளில் உள்ள உணவு மையம், குழந்தைகள் விளையாடும் இடம் போன்ற பல்வேறு வசதிகளைக் கருத்திற் கொண்டு பல்வேறு வணிக அமைப்புகள் கொண்ட திரையரங்குகளுக்குத் (Multiplex) தனியாகக் கட்டணம் நிர்ணயிக்க வேண்டும் எனக்கோரி முறையீடு செய்து கொண்டதன் அடிப்படையில், பல்வேறு வணிக அமைப்புகள் கொண்ட திரையரங்குகளுக்குக் கீழ்க்கண்டுள்ளவாறு நுழைவுக் கட்டணங்களை அரசு நிர்ணயித்து ஆணையிட்டுள்ளது:—

(i) உலகத்தரத்திற்கு இணையான வணிக வசதிகள் கொண்ட திரையரங்குகள் பின்வரும் நிபந்தனைகளை நிறைவு செய்வதன் பேரில் நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்த அளவு மற்றும் அதிக அளவு கட்டணங்களாக முறையே ரூ.10, ரூ.95 என்ற வீதத்தில் நுழைவுக் கட்டணங்களை விதிக்க வேண்டும். அதாவது :—

1. இரண்டும் அதற்கு அதிகமான சீர்வளி வசதியுள்ள காட்சித் திரைகள்
2. அனைத்துக் காட்சித் திரைகளின் மொத்த இருக்கை எண்ணிக்கை 800-க்குக் குறையாமல் இருக்க வேண்டும்.
3. இருக்கையின் அகலம் 20 அங்குலத்திற்கும் குறையாமல் இருத்தல் வேண்டும்
4. இருக்கை வரிசைகளுக்கிடையிலான இடைவெளி 1050மி.மீட்டருக்குக் (41.5 அங்குலம்) குறையாமல் இருத்தல் வேண்டும்.
5. 100% ஜெனரேட்டர் வசதி
6. ஜியான் அல்லது டிஜிடல் திரைப்படக் கருவி
7. டிஜிடல் ஒலி அமைப்பு (DTS)
8. மூன்று பிரதான ஒலி பெருக்கிகள்
9. மூன்று வழி ஒலி பெருக்கிகள்
10. சுற்றுப்புற ஒலிபெருக்கி வசதி
11. தானியங்கி சுத்திகரிப்புடன் கூடிய கழிப்பிட வசதி

12. சீர்வளி வசதியுள்ள வெளிக்கூடம்

13. கணினி நுழைவுச் சீட்டு முறை

14. இணையதள நுழைவுச் சீட்டு முறை

15. திரையரங்கு நுழைவுச் சீட்டுகளை வீடுகளுக்குச் சென்று வழங்கும்முறை

(ii) மேலே குறிப்பிடப்பட்டுள்ள 15 நிபந்தனைகளில், பின்வரும் 5 நிபந்தனைகள் உள்ளிட்ட 10 நிபந்தனைகளை நிறைவு செய்யும் பல்வேறு வணிக வசதிகள் கொண்ட திரையரங்குகள், குறைந்த அளவு கட்டணம் ரூ.10 மற்றும் அதிக அளவுக் கட்டணம் ரூ.85 என்ற வீதத்தில் நுழைவுக் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நிபந்தனை விவரங்கள் பின்வருமாறு:—

1. இரண்டும் அதற்கு அதிகமான எண்ணிக்கையில் சீர்வளி வசதியுள்ள திரைகள்

2. அனைத்துக் காட்சித் திரைகளின் மொத்த இருக்கை எண்ணிக்கை 800-க்கு குறைவில்லாது இருக்க வேண்டும்.

3. 100% ஜெனரேட்டர் வசதி

4. ஜியான் அல்லது டிஜிடல் திரைப்படக் கருவி

5. டிஜிடல் ஒலி அமைப்பு (DTS)

(iii) ஒரே வளாகத்தில் மூன்றுக்கும் மேற்பட்ட திரையரங்குகள், உணவிடங்கள், கூடுதல் பொழுது போக்கு வசதிகள் மற்றும் சீர்வளி வசதி கொண்ட குடும்ப கேளிக்கை மையங்களில் குறைந்த அளவு கட்டணமாக 10 ரூபாயும், அதிக அளவு கட்டணமாக 120 ரூபாயும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன.

(iv) சென்னைக்கு அருகே கிழக்குக் கடற்கரைச் சாலையில் அமைந்துள்ள பிரார்த்தனா திறந்தவெளித் திரையரங்கின் சிறப்புத் தன்மையைக் கருத்தில் கொண்டு, தற்போது நடைமுறையில் உள்ள குறைந்த அளவுக் கட்டணமான 30 ரூபாயும், அதிக அளவுக் கட்டணமான 60 ரூபாயும் தொடர்ந்து நீடிக்க அரசு அனுமதி அளித்து ஆணை பிறப்பித்துள்ளது.



### வீடியோ சட்டமும் விதிகளும்

8. 1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு வீடியோ கேசட் பதிவுக் கருவிகள் மூலமாகத் தொலைக்காட்சிப் பெட்டித் திரையிலும், கம்பிவடத் தொலைக்காட்சிப் பெட்டித் திரையிலும் திரைப்படங்களைக் காட்டுதல் (முறைப்படுத்தல்) சட்டம் தமிழ்நாட்டில் வீடியோ கேசட் பதிவுக்கருவிகளைப் பயன்படுத்தி, திரைப்படங்களைத் தொலைக்காட்சித் திரைகளில் ஒளிபரப்புச் செய்வதை முறைப்படுத்துகிறது. இச்சட்டம் வீடியோ கேசட் பதிவுக் கருவிகள் மூலம் தொலைக்காட்சித் திரையில் திரைப்படங்களை ஒளிபரப்புவதற்கும், வீடியோ நூலகங்கள் நடத்துவதற்கும் தனியார்களுக்கு உரிமம் வழங்க வகை செய்கிறது. மாவட்ட அளவில் அந்தந்த மாவட்ட ஆட்சியர்களும், சென்னை மாநகரில், காவல்துறை ஆணையாளரும் உரிமம் வழங்கும் அலுவலர்களாகச் செயல்படுகின்றனர். வீட்டில் குடும்ப உறுப்பினர்களின் பயன்பாட்டிற்காக வீடியோ கேசட் பதிவுக் கருவிகள் மூலம் தொலைக்காட்சித் திரையில் திரைப்படங்களைக் காட்டுவதற்கு உரிமம் எதுவும் அவசியம் இல்லை.

### திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவு

9. தமிழ்நாடு புலானாய்வுத் துறை குற்றப்பிரிவில் திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவு சென்னை காவல்துறை கூடுதல் தலைமை இயக்குநரின் (குற்றம்) நேரடி கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது. பதிப்புரிமைச் சட்டம், 2000 ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்பச் சட்டம் ஆகியவை தொடர்பான சட்ட விதி மீறல்களைத் தடுக்கவும், இப்பிரிவு ஆற்றும் பணிகள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது பன்னிரெண்டு திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவுகள் தமிழ்நாட்டில் இயங்கி வருகின்றன. இந்த 12 திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவுகளின் தலைமையிடங்கள் மற்றும் அதிகார வரம்புப் பகுதி விவரங்கள் வருமாறு:—

| தொ. எண். | பிரிவுகள் | அதிகார வரம்புப் பகுதிகள் |
|---|---|---|
| 1. | சென்னை-1 | சென்னை மாநகர வடக்குச் சரகம் |
| 2. | சென்னை-2 | சென்னை மாநகர மத்திய மற்றும் தெற்குச் சரகங்கள் |

| | | |
|---|---|---|
| 3. | பரங்கிமலை | திருவள்ளூர் செங்கற்பட்டு கிழக்கு, காஞ்சிபுரம் மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள் |
| 4. | வேலூர் | வேலூார், திருவண்ணாமலை மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள் |
| 5. | சேலம் | சேலம் மாநகரம், சேலம் மாவட்டம், நாமக்கல் மற்றும் தருமபுரி மாவட்டங்கள் |
| 6. | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் மாநகரம், கோயம்புத்தூர் மாவட்டம், ஈரோடு மற்றும் நீலகிரி மாவட்டங்கள் |
| 7. | திருச்சி | திருச்சி மாநகரம், திருச்சி மாவட்டம், புதுக்கோட்டை மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்கள் |
| 8. | கடலூர் | கடலூர், பெரம்பலூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்கள் |
| 9. | மதுரை | மதுரை மாநகரம் மற்றும் மதுரை ஊரக மாவட்டம் |
| 10 | திண்டுக்கல் | திண்டுக்கல், தேனி மற்றும் கரூர் மாவட்டங்கள் |
| 11. | விருதுநகர் | விருதுநகர், இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்கள் |
| 12. | திருநெல்வேலி | திருநெல்வேலி மாநகரம் திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் |

10. வீடியோ திருட்டைத் தடுப்பதற்காக 1957ஆம் ஆண்டு பதிப்புரிமைச் சட்டம், தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு, காணொலிப் பேழை பதிவுக் கருவிகள் மற்றும் கேபிள் தொலைக்காட்சி கட்டமைப்பு மூலமாக திரைப்படங்களைத் தொலைக்காட்சிப் பெட்டித்திரையில் காட்டுதல் (முறைப்படுத்தல்) சட்டம் மற்றும் 1952 ஆம் ஆண்டு திரைப்படச் சட்டம் போன்ற சட்டங்கள் கையாளப்படுகின்றன.



கீழ்க்கண்டவை திருட்டு வீடியோ குற்றங்களைத் தடுக்கும் தனிப்பிரிவின் செயல்பாடுகளாகும்:—

1. திருட்டு வீடியோ குறுந்தகடுகள் தொடர்பான தகவல்களைச் சேகரித்தல்

2. திரைப்படத் தயாரிப்பாளர்கள் அளிக்கும் தகவல்களைச் சரி பார்த்தல்

3. திடீர் சோதனை நடத்தி குற்றம் சாட்டப்பட்டவரைக் கைது செய்தல்

4. குற்றத்திற்குட்படுத்தும் பொருட்களைக் கைப்பற்றுதல்

5. தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுதல், குற்றம் சாட்டப்பட்டவரை விசாரணைக் காவலில் வைத்தல், புலனாய்வு முடிவடைந்த பின்னர் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தல்

6. நீதி மன்றங்களில் வழக்கு விசாரணைகளில் கலந்து கொண்டு உதவி செய்தல்

மாநிலத்தில் உள்ள பன்னாட்டு விமான நிலையங்களில் சுங்கத் துறையினருடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு, டிவிடி-கள் மற்றும் விசிடி-கள் வெளிநாடுகளுக்குக் கடத்துவதையும், அவற்றை வெளிநாடுகளிலிருந்து கடத்தி வருவதையும் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

11. மாநிலத்தில் இயங்கி வரும் தொலைதூரப் பேருந்துகள் சிலவற்றில், திருட்டுக் கேசட்டுகளையும், வி.சி.டி-களையும் பயன்படுத்தி புதிய திரைப்படங்கள் காண்பிக்கப்படுகிறது. இதுபோன்ற தொலைதூரப் பேருந்துகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, இந்த வழக்கத்தை நிறுத்துவதற்காக அடிக்கடி சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2004ஆம் ஆண்டிலிருந்து அவ்வாறு திருட்டு வி.சி.டி-களைக் கொண்டு பேருந்துகளில் புதிய திரைப்படங்கள் காண்பிக்கப்பட்டதற்காகப் பேருந்து இயக்குபவர்கள் மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் விவரம் வருமாறு:—

[2007 மே 7

**2004ஆம் ஆண்டிலிருந்து திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவினரால் பதிவு செய்யப்பட்ட வழக்குகள்**

| ஆண்டு | பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | கைது செய்யப் பட்ட குற்ற வாளிகளின் எண்ணிக்கை | கைப்பற்றப்பட்ட சொத்துக்களின் மதிப்பு (ரூபாயில்) | கேபிள் தொலைக் காட்சி நடத்து பவர்கள் மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 2004 | 1,180 | 1,206 | 12,06,43,647 | 53 |
| 2005 | 826 | 950 | 9,44,55,557 | 13 |
| 2006 | 1,153 | 1,193 | 19,00,04,502 | 10 |
| 2007 (31.1.07 வரையில்) | 84 | 86 | 1,01,47,800/- | 1 |

**கேபிள் தொலைக்காட்சிக் கட்டமைப்பு**

12. 1995ஆம் ஆண்டு மத்திய கேபிள் தொலைக்காட்சி கட்டமைப்புச் (முறைப்படுத்தல்) சட்டம் மற்றும் 1994 ஆம் ஆண்டு விதிகளை மத்திய அரசு இயற்றியுள்ளது. இச்சட்டம், இந்தியா முழுவதற்கும் பொருந்தும். இதன்படி, தலைமை அஞ்சல் நிலைய அதிகாரி, பதிவு செய்யும் அதிகாரி ஆவார். 2000ஆம் ஆண்டு திருத்தப்பட்ட கேபிள் தொலைக்காட்சி (முறைப்படுத்தல்) சட்டத்தின் (சட்டம் 36/2000)-ன்படி மாவட்ட மாஜிஸ்டிரேட்டுகள், உட்கோட்ட மாஜிஸ்டிரேட்டுகள் மற்றும் சென்னை காவல்துறை ஆணையாளர் ஆகியோர், இச்சட்டத்தின் 3,5,6 அல்லது 8 ஆகிய பிரிவுகளை மீறும் கேபிள் தொலைக்காட்சி இயக்குபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

**கட்டண அலைவரிசைகளைக் காணும் ஏற்பாட்டு முறை (CAS)**

13. 1995ஆம் ஆண்டு கேபிள் தொலைக்காட்சிக் கட்டமைப்பு (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம்) 4A பிரிவு, கட்டண அலைவரிசைகளைப் பார்க்கும் ஏற்பாட்டு முறையில் (CAS) ஒளிபரப்ப வகை செய்கிறது. இது, சந்தாதாரர்கள் தாங்கள் காண விரும்பும்



2007 மே 7]

கட்டண அலைவரிசைகளைக் காண்பதற்கு ஏதுவாக ஏற்படுத்தப்பட்ட ஒரு வழிமுறையாகும். பார்வையாளர்கள், தாம் காண விரும்பும் அலைவரிசைகளுக்கு மட்டுமே கட்டணம் செலுத்துவதற்கு இது வழிவகுக்கும். கட்டண அலைவரிசை ஒளிபரப்புகளைக் காண்பதற்கு 'செட்-டாப் பாக்ஸ்' என்னும் கருவியைப் பயன்படுத்த வேண்டும். ஆனால், கட்டணமில்லாத அலைவரிசைகளைக் காண 'செட் டாப் பாக்ஸ்' தேவையில்லை.

14. கட்டண அலைவரிசைகளைப் பார்க்கும் ஏற்பாட்டுமுறை, சென்னை மாநகரில், 1-09-2003 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மத்திய அரசு, 09-01-2004ஆம் நாளிட்ட அதன் அறிவிக்கையின் மூலம், கேபிள் தொலைக்காட்சி சேவையை இந்தியத் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்திடம் (TRAI) ஒப்படைத்தது. மத்திய அரசு, 31-07-2006 அன்று 1994 ஆம் ஆண்டு கேபிள் தொலைக்காட்சி கட்டமைப்பு விதிகளுக்குத் திருத்தங்களை அறிவித்தது. தொலைத்தொடர்பு ஒழுங்கு முறை ஆணையத்தால் அவ்வப்போது பிறப்பிக்கப்படும் ஆணைகள்/உத்தரவுகள்/ஒழுங்குமுறை விதிகளின்படி, கட்டண வீதங்கள், மனு அளிக்க கால அளவு, சேவையின் தரம் மற்றும் 'செட் டாப் பாக்ஸி'ன் தரம் ஆகியவை இருக்க வேண்டுமென வகைசெய்தது. இதனைத் தொடர்ந்து ஏனையவற்றிற்கிடையே தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் 2006 ஆம் ஆண்டு தொலைத்தொடர்பு ஒளிபரப்புதல் மற்றும் கேபிள் தொலைக்காட்சி கட்டண அலைவரிசைகளைப் பார்க்கும் ஏற்பாட்டு முறை கட்டணம் செலுத்துதல் ஆணை உள்ளிட்ட (CAS) பல்வேறு ஒழுங்குமுறை விதிகள்/ உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளது.

15. 31-12-2006-லிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள கட்டண வீதங்கள் பற்றிய ஆணைகளின் முக்கிய அம்சங்கள் வருமாறு:—

* சந்தாதாரர் கட்டணமில்லாத அலைவரிசைகள் அல்லது இலவச கட்டணமில்லாத அலைவரிசைகளுடன் கட்டண அலைவரிசைகளையும் தேர்ந்தெடுக்கலாம்.
* தனித்தனியாகவுள்ள கட்டண அலைவரிசைகளைத் தேர்ந்தெடுப்பதற்குச் சந்தாதாரருக்கு உரிமையுண்டு. தொகுப்பாக உள்ள அலைவரிசைகளைத் தேர்ந்தெடுப்பதும் சந்தாதாரரின் விருப்பத்திற்கு உட்பட்டதாகும்.
* கட்டண அலைவரிசை ஒன்றுக்கான அதிகபட்ச சில்லறை விலை, ஒரு இணைப்புக்கு மாதமொன்றுக்கு ரூ.5/-க்கு மிகாமல் இருக்க வேண்டும். (வரி நீங்கலாக)

[2007 மே 7

* கட்டணமில்லாத அலைவரிசைகளுக்கான அதிகபட்ச சில்லறை தொகையானது, குறைந்தபட்சம் 30 அலைவரிசைகளைக் கொண்ட ஒரு இணைப்பு மாதமொன்றுக்கு ரூ.77/-க்கு மிகாமல் இருக்க வேண்டும் (வரிகள் நீங்கலாக). வழங்கப்படும் கட்டணமில்லாத கூடுதல் அலைவரிசைகளுக்குக் கூடுதல் கட்டணம் எதுவும் கிடையாது.

'செட் டாப் பாக்ஸ்' வழங்குவதற்கான திட்டம் வருமாறு:-

(அ) கட்டண அலைவரிசைத் திட்டத்தின் ஒரு அங்கமாகப் பன்முக சேவை இயக்குபவர் மற்றும் கேபிள் தொலைக்காட்சி இயக்குபவர்களால் கட்டாயமாக இரண்டு திட்டங்கள் கட்டண அலைவரிசை அமைப்பில் வழங்கப்பட வேண்டும்.

(i) முதலாவதாக, டிஜிட்டல் "செட் டாப் பாக்ஸ்" ஒன்றுக்கு, மாத வாடகையாக ரூ.30/-ம், திருப்பிச் செலுத்தத்தக்க வைப்புத் தொகை ரூ.999/-ம் செலுத்த வேண்டும்.

(வைப்புத் தொகையில் 'செட் டாப் பாக்ஸ்' ஒன்றுக்கு மாதமொன்றுக்கு பயன்பாட்டுக் கட்டணமாக ரூ.12.50 வீதம் கழித்துக் கொண்டு திருப்பி வழங்கப்படும்.)

(ii) இரண்டாவதாக, டிஜிட்டல் 'செட் டாப் பாக்ஸ்' ஒன்றுக்கு, மாதமொன்றுக்கு மாதாந்திர வாடகையாக ரூ.45/-ம் (அலை செட் டாப் பாக்ஸிற்கு ரூ.23/-ம்) திருப்பிச் செலுத்தத்தக்க வைப்புத் தொகை ரூ.250/-ம் செலுத்த வேண்டும்.

(வைப்புத் தொகையில் "செட் டாப் பாக்ஸ்" ஒன்றுக்கு மாதமொன்றுக்கு பயன்பாட்டுக் கட்டணமாக ரூ.3/- வீதம் கழித்துக் கொண்டு திருப்பி வழங்கப்படும்.)

(ஆ) கேபிள் ஆபரேட்டர்கள், ஆணையிடப்பட்டவாறான சீரான கட்டணத் திட்டத்துடன் மாற்றுக் கட்டணத் திட்டங்களை கூடுதலாக அளிக்கலாம்.

(இ) செட் டாப் பாக்ஸ்கள் நிறுவவும், இணைப்பு வழங்கவும் ஸ்மார்ட் கார்டுகள் (Smart Card) மற்றும் அலைவரிசையைக் காண்பதற்கான வியூவிங் கார்டுகள் (Viewing Cards) வழங்கவும், பழுது பார்க்கவும் மற்றும் பராமரிக்கவும், தனியாக கட்டணங்கள் ஏதும் ஐந்தாண்டுகளுக்கு வசூலிக்கக் கூடாது.

மேற்காணும் திட்டம் 15-10-2006 அன்று முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.



2007 மே 7]

## அத்தியாயம் - 10

## தமிழரசு

தமிழக அரசின் திட்டங்கள், செயல்பாடுகள், சாதனைகள் போன்றவற்றை மக்களிடையே சேர்க்கும் அரசின் அச்சு ஊடகமாக 'தமிழரசு' இதழ் விளங்குகிறது.

'தமிழரசு' தமிழ் இதழ், மாத இதழாகவும், ஆங்கில இதழ் காலாண்டு இதழாகவும் வெளியிடப்பட்டு வருகின்றன. 'தமிழரசு' தமிழ் இதழின் விலை ரூ.10/-ஆகவும், ஆண்டுச் சந்தா ரூ.120/- ஆகவும், ஆயுள் சந்தா (10 ஆண்டுகளுக்கு) ரூ.1,000/- ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

'தமிழரசு' ஆங்கில இதழின் விலை ரூ.15/- ஆகவும், ஆண்டுச் சந்தா ரூ.60/- ஆகவும், ஆயுள் சந்தா (10 ஆண்டுகளுக்கு) ரூ.500/- ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

'தமிழரசு' இதழில், அரசின் சாதனைகள், மேதகு ஆளுநர் அவர்களின் உரைத் தொகுப்புகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உரைத் தொகுப்புகள், அறிவிப்புகள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களின் உரைத் தொகுப்புகள், அறிவிப்புகள், மக்களுக்கு வழங்கப்படும் நலத் திட்ட உதவிகள், திட்டங்கள், அவற்றின் செயல்பாடுகள், மாவட்ட வளர்ச்சிப் பணிகள் பற்றிய கட்டுரைகள் வெளியிடப்பட்டு வருகின்றன. அதுமட்டுமின்றி, மகளிர் மேம்பாட்டுத் திட்டங்கள், இலக்கியம், மருத்துவம் போன்ற பொருள்கள் தொடர்பான கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள் ஆகியனவும் வெளியிடப்பட்டு வருகின்றன.

தமிழரசு இதழ்கள் மட்டுமல்லாமல், சிறப்பு வெளியீடுகள், சிறப்புக் கையேடுகள், அரசு விழா அழைப்பிதழ்கள், சுவரொட்டிகள் ஆகியவற்றையும் இலாப நோக்கின்றி சிறந்த முறையில் வடிவமைத்து, தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகின்றன.

ஏப்ரல் 2007 வரையில், தமிழரசு தமிழ் இதழின் சந்தாக்கள் எண்ணிக்கை 66,000 ஆகும். இதில் 48,160 ஆயுள் சந்தாக்களாகும்.

தமிழரசு இதழ் தற்போது அரசின் இணையதளத்திலும் (www.tn.gov.in) உடனுக்குடன் வெளியிடப்பட்டு வருகிறது.

**சிறப்பு வெளியீடுகள்**

* தமிழக சட்டப்பேரவையில் மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்குப் பதிலளித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 30-05-2006 அன்று ஆற்றிய உரை—வாக்குறுதி நிறைவேற்றும் வாய்மை—கையேடு
* கலைஞர் அரசின் 60 நாட்களில் அரிய சாதனைகள்—கையேடு
* மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சுதந்திரத் திருநாள் உரை (15-8-2006)—கையேடு (தமிழ் மற்றும் ஆங்கிலம்)
* வளர்ச்சித் திட்டங்களால் வளம் காணும் தமிழகம் (துறை வாரியான அறிவிப்புகள்)
* மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மதுரை காமராஜர் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா (15-12-2006) சிறப்புரை—புத்தகம்.
* புத்தர் மகாபரிநிர்வாணம் அடைந்த 2550 ஆம் ஆண்டு விழா—கையேடு மற்றும் சுவரொட்டி.

தொழில்நுட்ப மேன்மைக்கு வழிவகுக்கும் வகையில், 2006-2007ஆம் ஆண்டில், தமிழரசு அச்சகத்திற்கு ரூ.19,47,918 செலவில் டிப்ளமாட் தானியங்கித் தாள் மடிக்கும் இயந்திரமும், ரூ.8,83,300 செலவில் பிரிண்டிங் டவுன் பிரேம் மற்றும் பிளேட் பிராசசர் இயந்திரமும், ரூ.4,39,857 செலவில் இமேஜ் மெமரி பிராசசர் என்ற இயந்திரமும், ரூ.1,92,400 செலவில் நவீன லேமினேஷன் இயந்திரமும் வாங்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன.



## அத்தியாயம் - 11

## பொருட்காட்சி

இத்துறையின் பொருட்காட்சிப் பிரிவால் நடத்தப்படும் அரசுப் பொருட்காட்சிகள்—அரசின் கொள்கைகள், நலத் திட்டங்கள், சமூக விழிப்புணர்வு மற்றும் சாதனைகள் குறித்த விளக்கங்களைப் பொதுமக்கள் எளிதில் அறிந்திடும் வகையில் ஆண்டுதோறும், மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாநகரங்களில் ஏப்ரல்—ஜூன் மாதங்களிலும், சேலம் மாநகரில் ஜூலை—செப்டம்பர் மாதங்களிலும், இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை திருநெல்வேலி அல்லது வேலூர் நகரில் நடத்திட ஆணையிடப்பட்டுள்ளது.

இப்பொருட்காட்சிகளில், மாநில-மைய அரசுத் துறைகள், அரசு சார்பு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் ஆகியவை தங்களது செயல்பாடுகள் குறித்து பொதுமக்கள் தெளிவுறப் புரிந்து பயனடையும் வகையில் பங்கேற்கின்றன.

ஒவ்வொரு அரசுப் பொருட்காட்சியிலும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை நன்முறையில் விற்பனை செய்யும் பொருட்டு கடைகள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. ஒவ்வொரு அரசுப் பொருட்காட்சியிலும் ஒரு நடுவர் குழு அமைக்கப்பட்டு, அவர்களால் தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த அரசுத் துறை மற்றும் அரசு சார்பு நிறுவனங்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும், சிறு கண்காட்சிகள், மாவட்டங்களில் ஆண்டுதோறும் முக்கிய விழாக்கள் நடைபெறும் இடங்களில் மாவட்டச் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலகங்கள்மூலம் நடத்தப்படுகின்றன. இதற்கென ஆண்டுதோறும் ரூ.3.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது

### பல்துறைப் பணி விளக்க முகாம்கள்

அரசின் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்த விழிப்புணர்வைப் பொதுமக்களிடையே ஏற்படுத்த பல்துறைப் பணி விளக்க முகாம்கள் அனைத்து மாவட்டங்களிலும் 10 நாட்கள் நடத்த அரசாணை வழங்கப்பட்டது. அரசைப் பொதுமக்கள் தேடி வருவதைவிட, அரசே பொதுமக்களிடம் சென்று அவர்களின் தேவை அறிந்து செயல்படுவதுதான் பல்துறைப் பணி விளக்க முகாமின் நோக்கமாகும். மாவட்டத்திலுள்ள அனைத்துத் துறைகளையும்

ஒருங்கிணைத்து, அரசின் திட்டங்கள், செயல்பாடுகள், திட்டம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன் அரசின் உதவிகளைப் பெறுவதற்கான தகுதிகள் போன்ற விவரங்கள் குறித்து பொதுமக்கள் தெரிந்து கொள்ளும் பொருட்டு இம்முகாம்கள் நடத்தப்பட்டன.

இதில் பங்கேற்கும் பல துறைகள் சார்பாக மக்களுக்கு அளிக்கப்படும் நலத் திட்ட உதவிகள், அதைப் பெறுவதற்கான வழிமுறைகள், தகுதி போன்ற அனைத்து விவரங்களும் மக்கள் எளிதில் அறிந்து கொள்ளும் வகையில் விளக்கப்பெற்றன.

பொதுமக்களுக்கு இலவச மருத்துவ சோதனைகள், இலவச கால்நடை மருத்துவம் போன்றவை இடம் பெற்றன.

பொதுமக்கள் ஆவலுடன் கலந்து கொள்ளும் வகையில் தினந்தோறும் பல்வகை கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

பல்துறைப் பணி விளக்க முகாம்களில், மாவட்டத்தில் உள்ள நலிவுற்ற கிராமியக் கலைக் குழுக்களைக் கண்டறிந்து, அவர்களைக் கொண்டு அரசின் திட்டங்கள், செயல்பாடுகளை விளக்கக்கூடிய கலை நிகழ்ச்சிகளை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டன. இக்கண்காட்சிகளுக்கு வருகைதரும் பொதுமக்கள் அளிக்கும் கோரிக்கை மனுக்களைப் பெற்று தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

இம்முகாம்கள் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்படும் என்று அறிவித்ததற்கிணங்க, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூ.1.00 இலட்சம் வீதம் 30 மாவட்டங்களுக்கு ரூ.30.00 இலட்சம் வழங்கப்பட்டு, மாவட்டத் தலைநகரத்திலும், மாவட்டத்தின் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலும் நடத்தப்பட்டன.

### நிழற்பட விளம்பரப் பலகைகள்

மாவட்டங்களில் அரசின் நலத் திட்டங்களை விளக்குவதற்காக நடத்தப்படுகின்ற பல்துறைப் பணிவிளக்க முகாம்கள், மாவட்ட முக்கியத்துவம் வாய்ந்த திருவிழாக்களையொட்டி நடத்தப்படுகின்ற சிறப்புக் கண்காட்சிகள், மேலும் மாவட்டங்களில் வீடியோ படக்காட்சிகளின்போது நடத்தப்படும் சிறிய நிழற்படக் கண்காட்சிகள் மற்றும் அரசு விழாக்களை ஒட்டி நடத்தப்படும் நிழற்படக் கண்காட்சிகள் போன்றவற்றில் பயன்படுத்துவதற்காக எளிதில் எடுத்துச் செல்லக்கூடிய நிழற்படங்கள் பொருத்தும் விளம்பரப் பலகைகள்



ஒவ்வொரு மாவட்டத்திற்கும் புதியதாக 10 எனும் வீதம் முப்பது மாவட்டங்களுக்கும், ஒரு மாவட்டத்திற்கு ரூபாய் 1.00 இலட்சம் வீதம் அனைத்து மாவட்டங்களுக்கும் ரூ.30.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டது.

### பிற பணிகள்

சென்னையில் ஆண்டுதோறும் நடைபெறும் குடியரசு தினவிழாவில், அலங்கார ஊர்திகள் அணிவகுப்பில் இத்துறை பங்கேற்பதுடன், அரசின் சாதனைகளையும், திட்டங்களையும் வெளிப்படுத்தும் வகையில், அலங்கார ஊர்திகள் அணிவகுப்பில் பிற துறைகள் பங்கேற்கச் செய்திடவும், அலங்கார ஊர்திகள் வடிவமைக்கச் செய்திடவும் ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொள்வதும் இத்துறையின் பங்களிப்பாகும். 26-1-2007-ல் சென்னையில் நடைபெற்ற குடியரசு நாள் விழாவில், அலங்கார ஊர்திகள் அணிவகுப்பில் பங்கேற்ற ஊர்திகளில் சிறந்த ஊர்திக்கான இரண்டாம் பரிசினை இத்துறை பெற்றது. புதுடில்லியில் நடைபெறும் குடியரசு நாள் விழாவில் அலங்கார ஊர்தி அணிவகுப்பில், இந்திய அரசால் நியமிக்கப்படும் வல்லுநர் குழுவின் தேர்வு அடிப்படையில் இத்துறை பங்கேற்கும்.

இந்திய ஒருமைப்பாடு, மதநல்லிணக்கம் ஆகியவற்றை வலியுறுத்தும் வகையில், புதுடெல்லியில் 2006 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் நடைபெற்ற மலர்ப் பேரணி விழாவில் (Phool Walon ki Saire) இத்துறை பங்கேற்றது.

புதுடெல்லியில் கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் நடைபெற்ற அகில இந்திய பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியில் தமிழகத்தின் சார்பில் இத்துறை பங்கேற்றது.

புதுடெல்லியில் அமைந்துள்ள பிரகதி பொருட்காட்சி வளாகத்தில் உள்ள தமிழ்நாடு அரங்கில் பழுதுபார்க்கும் பணிகளுக்காகவும், மேம்பாட்டுப் பணிகளுக்காகவும், அரசு ரூ.29.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்து பொதுப் பணித் துறையினரால் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

53-148—11a

[2007 மே 7

## அத்தியாயம் - 12

## மாவட்டச் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலகங்கள்

மக்கள் நலம் காக்கும் அரசின் திட்டங்களின் விவரங்களைப் பொது மக்கள் அறியவும், அவற்றின் பலனை முழுமையாக அடையவும் ஏதுவாக, அவற்றைப் பற்றிய விழிப்புணர்வை அவர்களிடம் உருவாக்கி, விளம்பரப் பணிகளையும் செவ்வனே மேற்கொள்ளும் பணிகளை மாவட்டங்களில் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள் மேற்கொண்டு வருகிறார்கள்.

வீடியோ படக் காட்சிகள் நடத்துதல், பத்திரிகையாளர் கூட்டங்களை ஏற்பாடு செய்தல், கேபிள் தொலைக்காட்சிகள் மூலம் விளம்பரப் பணி ஆற்றுதல், அரசு விழாக்களை நடத்துதல், சிறு கண்காட்சியினை அமைத்தல், நினைவகங்களைப் பராமரிக்கச் செய்தல் போன்ற பல்வேறு பணிகளைச் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள் மேற்கொண்டு வருகிறார்கள்.

இவர்கள் பணி சிறக்கும் வகையில் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி அனைத்து மாவட்டங்களிலும் அரசின் சார்பில் கணினிகள், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள், 'டிஜிட்டல்' நிழற்படக் கருவிகள், நிகரிகள், 'ஸ்கேனர்கள்', நகலெடுக்கும் இயந்திரங்கள் போன்ற அடிப்படைத் தேவைகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டு, மாவட்டச் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலகங்கள் செயல்படுகின்றன.

தகவல் தொழில்நுட்பச் சாதனங்களை உரிய முறையில் பயன்படுத்த உதவும் பொருட்டு, அலுவலர்களுக்குத் தேசிய தகவல் மையம் மற்றும் அண்ணா மேலாண்மைப் பயிற்சி மையம் மூலமாக பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

2006-2007 ஆம் ஆண்டில் அனைத்து மாவட்டச் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள் மற்றும் தலைமையிட அலுவலர்கள் ஆகியோருக்கு ரூ.1.42 இலட்சம் செலவில் செல்லிடத் தொலைபேசிகள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றின் பயன்பாட்டிற்காகத் தொலைபேசி ஒன்றுக்கு மாதம் ரூ.350 கட்டணமாகச் செலுத்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அனைத்து மாவட்டச் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு ரூ.2.70 இலட்சம் செலவில் 'ஸ்கேனர்'கள் வழங்கப்பட்டுள்ளன.



2007 மே 7]

அரசு அறிவிப்பின்படி, ஆண்டுதோறும் சிறந்த மாவட்டச் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசுக்குரியவர்களுக்கு முறையே ரூ.15,000/- ரூ.10,000/- ரூ.5,000/- (சேமிப்புப் பத்திரமாக) ரொக்கப் பரிசுகளும் தலா ரூ.5,000/- மதிப்பில் பதக்கங்களும் மற்றும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

### மாவட்ட விளம்பர ஒருங்கிணைப்புக் குழு

அரசின் திட்டங்களைப் பொதுமக்கள் அறிந்து பயன்பெறும் வகையில் பல்வேறு அரசுத் துறைகளின்மூலம் விளம்பரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அப்பணிகளை விரைவுப்படுத்தி, செயல்படுத்தும் நோக்கில், அனைத்து மாவட்டங்களிலும், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைமையில் "மாவட்ட விளம்பர ஒருங்கிணைப்புக் குழுக்கள்" அமைக்கப்பட்டுள்ளன. மாவட்டங்களில் பல்வேறு அரசு நல்வாழ்வுத் திட்டங்களைப் பொதுமக்கள் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் விளம்பரப்படுத்தும் வழிமுறைகள் குறித்து, இக்கூட்டத்தில் ஆலோசித்து முடிவுகள் மேற்கொண்டு விளம்பரப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

# அத்தியாயம் - 13

# மாநிலச் செய்தி நிலையம்

## செய்தி நிலையங்கள்

செய்தி-மக்கள் தொடர்புத் துறையின்கீழ் சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், கோயம்புத்தூர், புதுடில்லி ஆகிய ஆறு இடங்களில் செய்தி நிலையங்கள் இயங்கி வருகின்றன. இச்செய்தி நிலையங்களில் பல்வேறு பொருள் பற்றிய புத்தகங்களும், நாளிதழ்கள் மற்றும் மாத, வார இதழ்களும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வைக்கப்பட்டுள்ளன.

## மாநிலச் செய்தி நிலையம்

மாநிலச் செய்தி நிலையம், சென்னை கலைவாணர் அரங்கத்தின் ஒரு பகுதியில் செயல்பட்டு வருகிறது. இந்நிலையம் ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் சுமார் 17,500 புத்தகங்களை உள்ளடக்கி பொதுமக்கள் தொடர்பு ஊடகமாக சிறப்புடன் செயல்பட்டு வருகிறது. வாழ்க்கை வரலாற்று நூல்கள், அறிவியல், சரித்திரம், தத்துவம், புதினங்கள், மருத்துவம், தொழில்நுட்பம், சட்டம், வணிகவியல், கணக்கு, கணினி போன்ற தொழில்கல்வி பயிலும் மாணவர்கள் பயன்பெறும் வகையிலும் இங்கு புத்தகங்கள் வைக்கப்பட்டுள்ளன. குழந்தைகள், கல்லூரி மாணவர்கள், ஆராய்ச்சி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரது மேற்கோளுக்கு பயன்படும் புத்தகங்களும், நாளிதழ்கள், வார மாத இதழ்களும், வேலை தேடும் இளைஞர்களது நலனுக்காக வேலைவாய்ப்புச் செய்தி, போட்டித் தேர்வுகளுக்காகத் தயார் செய்ய உதவும் மேற்கோள் புத்தகங்கள் மற்றும் பல்வேறு போட்டித் தேர்வுகளின் முடிவுகளும் இங்கு மேற்கோளுக்காக வைக்கப்பட்டுள்ளன.

அரசின் பல்வேறு துறைகள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்களின் பயன்பாட்டிற்காக இரண்டு ஆண்டுகளுக்கும் மேற்பட்ட இதழ்களும், காலமுறை வெளியீடுகளும் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. ஒவ்வோர் ஆண்டும் பல்வேறு பதிப்பகத்திலிருந்து புத்தகங்கள் புதிதாகக் கொள்முதல் செய்யப்பட்டு, நூலகம் மேலும் பயனுள்ளதாகப் பயன்பட அவ்வப்போது தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அரசின் பல்வேறு நலத் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்த கையேடுகளும், வெளியீடுகளும் இங்கு தகவலுக்காக வைக்கப்பட்டுள்ளன.



## நிறைவுரை

அரசின் திட்டங்களும் திட்டங்களினால் ஏற்படும் பலன்களும் முழுமையாக மக்களை அடையச் செய்வது அரசின் கொள்கை. அதன் அடிப்படையில் இத்துறை விளம்பரப் பணிகளை புதுமைப் பொலிவுடன் மேற்கொண்டு மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. திட்டப் பலன்கள்மூலம் பொதுமக்கள் பயனுறச் செய்வதை உறுதி செய்யும் வகையில் முன்னேற்றப் பாதையில் இத்துறை தொய்வின்றி தளரா நடைபோடுகிறது.

## இணைப்பு-1

## வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 2007 - 2008

(ரூபாய் ஆயிரத்தில்)

| | | 2006-2007 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. | 2006-2007 திருத்த மதிப்பீடு. | 2007-2008 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| 2059 | பொதுப் பணிகள் | 75,29 | 75,29 | 75,29 |
| 2220 | செய்தி மற்றும் விளம்பரம் | 29,72,60 | 32,27,04 | 32,21,11 |
| 2235 | சமூகப் பாதுகாப்பும் நலனும் | 32,40 | 39,84 | 40,40 |
| 2250 | ஏனைய சமூகப் பணிகள் | 5,69 | 4,96 | 5,56 |
| 2251 | தலைமைச் செயலகம் - சமூகப் பணிகள் | 2,71,25 | 2,74,44 | .... |
| 4220 | செய்தி, விளம்பரம் குறித்த மூலதனச் செலவு | 35,73 | 35,73 | 87,60 |
| | **மொத்தம்** .. | **33,92,96** | **36,57,30** | **34,29,96** |

# இணைப்பு-2

## பகுதி-2 திட்டங்கள் 2007-2008

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | திட்டங்களின் விவரங்கள் | இறுதிநிலைச் செலவு | | | 2007-2008-க்கான செலவு | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | தொடர் செலவினம் | தொடராச் செலவினம் | மொத்தம் | வருவாய் | மூலதனம் | மொத்தம் |
| | **செய்தி மக்கள் தொடர்பு இயக்ககம்** | | | | | | |
| 1. | கணினி தொழில் நுட்பத்தில் இயங்கும் அச்சகக் கருவி வாங்குதல் | ... | 84.60 | 84.60 | ... | 84.60 | 84.60 |
| 2. | ஜெனரேட்டர் வாங்குதல் | ... | 3.00 | 3.00 | ... | 3.00 | 3.00 |
| 3. | தற்போதுள்ள கேமிராக்களை மேம்படுத்துதல்/ மாற்றி அமைத்தல் மற்றும் புதிய கேமிராக்களை வாங்குதல் | ... | 70.00 | 70.00 | 70.00 | ... | 70.00 |
| 4. | 5 டெம்போ டிராக்ஸ் ஜூடோ வாகனங்கள் வாங்குதல் | ... | 20.00 | 20.00 | 20.00 | ... | 20.00 |
| 5. | துணைப் பாகங்களுடன் கூடிய டி.டி.எஸ். மற்றும் பி.ஏ. ஒலி அமைப்பு சாதனங்கள் வாங்குதல் | ... | 17.00 | 17.00 | 17.00 | ... | 17.00 |
| 6. | டிஜிட்டல் ஒளி நகலி வாங்குதல் | ... | 0.49 | 0.49 | 0.49 | ... | 0.49 |
| 7. | சீர்வளி சாதனம் ஒன்று வாங்குதல் | ... | 0.34 | 0.34 | 0.34 | ... | 0.34 |
| 8. | நகல் எடுக்கும் இயந்திரம் ஒன்று வாங்குதல் | ... | 0.60 | 0.60 | 0.60 | ... | 0.60 |
| 9. | லேசர் டிஜிட்டல் நகல் எடுக்கும் இயந்திரம் ஒன்று வாங்குதல் | ... | 0.42 | 0.42 | 0.42 | ... | 0.42 |
| 10. | நிகரி இயந்திரம் வாங்குதல் | ... | 0.10 | 0.10 | 0.10 | ... | 0.10 |
| | **மொத்தம்** | ... | 196.55 | 196.55 | 108.95 | 87.60 | 196.55 |

## இணைப்பு-IV

*(103 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## மானியக் கோரிக்கை எண் 30—எழுதுபொருள் மற்றும் அச்சு கொள்கை விளக்கக் குறிப்பு, 2007-2008

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரகத்தின் நிருவாகக் கட்டுப்பாட்டில், கீழ்க் குறிப்பிட்டுள்ள அலகுகள் செயல்பட்டு வருகின்றன:

1. அரசு மைய அச்சகம், சென்னை-79
2. எழுதுபொருள் கிடங்கு, சென்னை-1
3. அரசு கிளை அச்சகங்கள்- உயர் நீதிமன்ற வளாகம், சென்னை-104, மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, விருத்தாசலம் மற்றும் சென்னை உயர் நீதிமன்றக் கிளை, மதுரை.

இதுவரை அரசு மைய அச்சகம், சென்னை-79, உயர் நீதிமன்றக் கிளை அச்சகம், சென்னை-104, அரசு கிளை அச்சகங்கள் மதுரை, சேலம் மற்றும் புதுக்கோட்டை ஆகியவை நவீனமயமாக்கப்பட்டுள்ளன. அரசு கிளை அச்சகம், திருச்சிராப்பள்ளி நவீனமயமாக்கப்பட்டு வருகிறது.

விருத்தாசலம் கிளை அச்சகம் மட்டும் நவீனமயமாக்கப்பட வேண்டியுள்ளது.

### எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் பணியாளர்கள் விவரம்

இத்துறையில் மொத்தம் 2,219 பணியாளர்கள் உள்ளனர். அவர்களில் 455 பேர் பெண்கள். மேலும் 37 கண்பார்வையற்றவர்கள், 84 உடல் ஊனமுற்றவர்கள் மற்றும் 9 காதுகேளாதவர்கள்/ வாய்பேசாதவர்கள் இதில் அடங்குவர்.

### எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரகம், சென்னை-2

அலுவலர்கள் நிருவாக அமைப்பு விவரம் பிற்சேர்க்கை 'அ'-வில் அளிக்கப்பட்டுள்ளது. 175 பணியாளர்கள் ஆணையரகத்தில் பணிபுரிகின்றனர். எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையரின் நிருவாகக் கட்டுப்பாட்டில் அரசு அச்சகங்களும், விற்பனை நிலையங்களும், எழுதுபொருள் கிடங்கு அலுவலகமும் இயங்கி வருகின்றன.







### அரசு மைய அச்சகம், சென்னை-79

அரசு மைய அச்சகம், தற்போது இரண்டு பணி மேலாளர்களின் கீழ் 1,272 பணியாளர்களைக் கொண்டு மூன்று முறை மாற்றங்களில் இயங்கி வருகிறது. அச்சுத் துறையில் தற்போது தேவையான அதிநவீன வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு படிப்படியாக அரசு மைய அச்சகம் நவீனப்படுத்தப்படுகிறது.

### அரசு மைய அச்சகத்தில் அச்சடிக்கப்படும் மிக முக்கியப் பணிகள்

வரவு-செலவுத் திட்ட அறிக்கைகள், அரசிதழ்கள், சட்டமன்றப் பேரவைக்கான பணிகள், பல்வேறு குழுக்களுக்கான அறிக்கைகள், தமிழ்நாடு பணியாளர் தேர்வாணைய வெளியீடுகள், தேர்தல் தொடர்பான பணிகள், வாக்குச் சீட்டுகள் மற்றும் மாநில கணக்காய்வுத் தலைவர் அவர்களின் அறிக்கைகள், வணிக வரித் துறை மற்றும் மோட்டார் வாகன பதிவுச் சான்றிதழ் போன்ற கமுக்கத் தன்மை வாய்ந்த படிவங்கள், காவல் துறைப் படிவங்கள் ஆகியவை கவனத்துடன் அச்சடிக்கப்பட்டு வருகின்றன.

மேதகு ஆளுநர் அவர்களின் செயலகம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், மாண்புமிகு அமைச்சர்கள், சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள், மாண்புமிகு தலைமை நீதியரசர், நீதியரசர்கள் மற்றும் தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் (ம) உறுப்பினர்களுக்கான லெட்டர் பேடுகள் மற்றும் உறைகள் போன்றவையும் அரசு மைய அச்சகத்தில் அச்சிடப்படுகின்றன.

### எழுதுபொருள் கிடங்கு, சென்னை-1

எழுதுபொருள் கிடங்கு, ஓர் உதவி இயக்குநரின்கீழ் 126 பணியாளர்களுடன் இயங்கி வருகிறது.

மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து அரசு அலுவலகங்களுக்குத் தேவையான எழுதுபொருட்கள், தமிழ் மற்றும் ஆங்கில தட்டச்சுப் பொறிகள், படிப்பெருக்கிகள் மற்றும் அச்சகப் பொருட்கள் ஆகியவை தமிழ்நாடு அரசு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம், 1998 (ம) விதிகள் 2000-ன்படி ஆண்டுதோறும் ஒட்டுமொத்தமாக கொள்முதல் செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

தட்டச்சுப் பொறிகள், படிப்பெருக்கிகள், கணக்கீட்டுப் பொறிகள் ஆகியவை தலைமை இயக்குநர், விநியோகம் மற்றும் ஒதுக்கீடு அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட விலைக்குக் கொள்முதல் செய்யப்படுகின்றன.

தமிழ்நாடு முழுவதுமுள்ள 3,474 கேட்பு அலுவலகங்களுக்கு, அவர்களது கோரிக்கை மற்றும் தேவைகளின் அடிப்படையில் (இலவசமாக 3,342, முன்கூட்டியே பணம் செலுத்துதல் 132) ஆண்டுதோறும் எழுதுபொருட்கள் இத்துறை மூலம் வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் (T.N.P.L.) உற்பத்தி செய்யும் அனைத்து வகைக் காகிதங்களும், இத்துறையின் தேவைக்கேற்ப அந்நிறுவனத்திடமிருந்தே கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. சிறப்புவகைக் காகிதங்கள், கரிப்படி தாள் (கார்பன்) மற்றும் படிப்பெருக்கியின் மை போன்ற எழுதுபொருட்கள் தமிழ்நாடு அரசு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 (ம) விதிகள் 2000-ஐ பின்பற்றி தனியாரிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டு, இத்துறையால் விநியோகம் செய்யப்படுகிறது.

### அரசு கிளை அச்சகம், உயர் நீதிமன்ற வளாகம், சென்னை-104

அரசு கிளை அச்சகம், உயர் நீதிமன்ற வளாகம், ஒரு துணைப் பணி மேலாளரின்கீழ் 153 பணியாளர்களுடன் மூன்று முறைமாற்றங்களில் இயங்கி வருகிறது.

தினசரி வழக்குப் பட்டியல்கள், உயர் நீதிமன்றத்திற்குத் தேவையான படிவங்கள் மற்றும் பதிவேடுகள் இக்கிளை அச்சகத்தில் நேர்த்தியாக அச்சிடப்படுகின்றன.

### அரசு கிளை அச்சகம், மதுரை

அரசு கிளை அச்சகம், மதுரை ஒரு துணைப் பணி மேலாளரின் கீழ் 165 பணியாளர்களைக் கொண்டு இரு முறை மாற்றங்களில் செயல்பட்டு வருகிறது.

வருவாய், காவல், பதிவு, மருத்துவம் மற்றும் வணிக வரி ஆகிய துறைகளின் படிவங்கள் மற்றும் பதிவேடுகள் இக்கிளை அச்சகத்தில் அச்சிடப்பட்டு வருகின்றன.

மதுரை, விருதுநகர், திண்டுக்கல், தேனி மற்றும் திருநெல்வேலி ஆகிய ஐந்து மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்களும் குறித்த நேரத்தில் அச்சிடப்பட்டு வருகின்றன.

### அரசு கிளை அச்சகம், சேலம்

அரசு கிளை அச்சகம், சேலம் ஓர் உதவிப் பணி மேலாளர் நிலையில் உள்ள கிளை மேலாளரின் கீழ் 85 பணியாளர்களுடன் இரு முறைமாற்றங்களில் இயங்கி வருகின்றது.



தமிழ்நாடு கருவூல விதித்தொகுப்புப் படிவங்கள், மருத்துவத் துறைப் படிவங்கள், அரசுத் தேர்வுப் பணிகளுக்கானப் படிவங்கள் ஆகியவை இக்கிளை அச்சகத்தில் அச்சிடப்படுகின்றன.

சேலம், கோயம்புத்தூர், ஈரோடு, நாமக்கல், நீலகிரி மற்றும் தருமபுரி ஆகிய ஆறு மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்களும் இங்கு அச்சிடப்படுகின்றன.

### அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை

அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை ஓர் உதவிப் பணி மேலாளர் நிலையில் உள்ள கிளை மேலாளரின் கீழ் 89 பணியாளர்களைக் கொண்டு இரு முறைமாற்றங்களில் செயல்பட்டு வருகிறது.

ஆதிதிராவிடர் நலம், பிற்படுத்தப்பட்டோர் நலம், காவல், மருத்துவம், ஓய்வூதியம், சுற்றுச்சூழல் மற்றும் வனம் ஆகிய துறைகளுக்கான நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள், பதிவேடுகள் ஆகியனவும் இக்கிளை அச்சகத்தில் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இராமநாதபுரம், கன்னியாகுமரி, சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், திருவண்ணாமலை, தஞ்சாவூர், புதுக்கோட்டை, தூத்துக்குடி, திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் சிவகங்கை ஆகிய 12 மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்கள் இக்கிளை அச்சகத்தில் அச்சிடப்படுகின்றன.

### அரசு கிளை அச்சகம், திருச்சி

அரசு கிளை அச்சகம், திருச்சி ஓர் உதவிப் பணி மேலாளர் நிலையில் உள்ள கிளை மேலாளரின் கீழ் 90 பணியாளர்களைக் கொண்டு இரு முறைமாற்றங்களில் இயங்கி வருகிறது.

பொதுப் படிவங்களான, தன்பதிவேடுகள், ரொக்கப் பதிவேடுகள் ஆகியன இக்கிளை அச்சகத்தில் அச்சிடப்படுகின்றன.

திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர் மற்றும் கரூர் ஆகிய மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்களும் இங்கு அச்சிடப்படுகின்றன.

### அரசு கிளை அச்சகம், விருத்தாசலம்

அரசு கிளை அச்சகம், விருத்தாசலம் ஓர் உதவிப் பணி மேலாளர் நிலையில் உள்ள கிளை மேலாளரின் கீழ் 64 பணியாளர்களுடன் இரு முறைமாற்றங்களில் இயங்கி வருகிறது.

வேளாண்மை, பொதுப் பணி, காவல், தீயணைப்பு, தேசிய மாணவர் படை, வனம், தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு, கால்நடைப் பராமரிப்பு, மருத்துவம், புள்ளியியல் ஆகிய துறைகளுக்கான படிவங்கள் மற்றும், பதிவேடுகள் இக்கிளை அச்சகத்தில் அச்சிடப்படுகின்றன.

இக்கிளை அச்சகத்தில் விழுப்புரம், வேலூர் மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்கள் அச்சிடப்படுகின்றன.

## 2006-2007 ஆம் ஆண்டில் செயலாக்கப்பட்ட மிக முக்கியப் பணிகள்

பின்வரும் முக்கிய அச்சுப் பணிகள் இத்துறையால் குறித்த காலத்தில், செவ்வனே அச்சிட்டு வழங்கப்பட்டன:

* அரசு தேர்வுத் துறைக்கான சுமார் 10 கோடி 60 இலட்சத்து 40 ஆயிரம் விடைத் தாட்கள் மற்றும் நிலைப்படுத்தப்படாத படிவங்கள்/பதிவேடுகள்.
* சென்னை உயர் நீதிமன்றத்திற்கான சுமார் 18 இலட்சம் தினசரி வழக்குப் பட்டியல்கள் மற்றும் படிவங்கள்.
* தமிழ்நாடு அரசு தேர்வாணையக் குழுவிற்கு தேர்வு விளக்கக் குறிப்பு - 21 இலட்சம்.
* வணிக வரித் துறைக்கான 'சி' படிவம்.
* 2007 ஆம் ஆண்டிற்கான மூன்று மாத நாட்காட்டிகள், மாத நாட்காட்டிகள் மற்றும் பல்வேறு நாட்குறிப்பேடுகள்.
* 1.15 கோடி வணிக வரித் துறையின் 22 வகையான மதிப்புக் கூட்டு வரி படிவங்கள்.
* 17.42 இலட்சம் மோட்டார் வாகன சாலை வரி விதிப்பு வில்லைக்கான படிவங்கள்.

## அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம், சென்னை-2

அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம், சென்னை, அண்ணா சாலையில் ஆணையரக வளாகத்திலும், இதன் கிளை விற்பனை நிலையம் ஒன்று உயர் நீதிமன்ற வளாகத்திலும் இயங்கி வருகின்றன. இவ்விற்பனை நிலையங்கள்மூலம் அரசு வெளியீடுகளான சட்டம் மற்றும் விதி நூல்கள், விதித் தொகுப்புகள், நடைமுறை நூல்கள், அரசிதழ்கள், செய்தி அறிவிப்பு வெளியீடுகள் மற்றும் பணிப்



பதிவேடுகள் போன்றவை விற்பனை செய்யப்படுகின்றன. மேலும், இந்திய அரசின் வெளியீடுகளை விற்பனை செய்யும் முகவர் அமைப்பாகவும் இவ்விற்பனை நிலையங்கள் இயங்கி வருகின்றன. அனுமதி பெற்ற 32 முகவர்கள் மூலமாக அரசு வெளியீடுகள் அனைத்து மாவட்டங்களிலும் விற்பனை செய்யப்படுகின்றன.

2006-2007ஆம் நிதியாண்டில் தனியார் அறிவிக்கைகள் மற்றும் பிற அறிவிக்கைகளுக்கான பிரசுரக் கட்டணமாக ரூ. 87,52,021-ம் மற்றும் அரசிதழ்கள், அரசு வெளியீடுகள் விற்பனை மூலமாக ரூ.26,69,445-ம் ஆக மொத்தம் ரூ.1,14,21,466 அரசுக்கு வருவாயாக 31-03-2007 வரை ஈட்டப்பட்டுள்ளது.

## சென்னை உயர் நீதிமன்றம், மதுரைக் கிளை

மதுரை உயர் நீதிமன்ற வளாகத்தில் செயல்படும் அரசு கிளை அச்சகம் முழுமையாகச் செயல்படத் தேவையான கூடுதல் நவீன இயந்திரம் கொள்முதல் செய்ய ரூ.10 இலட்சம் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு கொள்முதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், மதுரை உயர் நீதிமன்ற வளாகத்தில் உள்ள அரசு கிளை அச்சகம் செயல்பட புதிதாக 49 பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் பராமரிப்புச் செலவினத்திற்கு ஆண்டொன்றுக்கு ரூ.86.60 இலட்சம் அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டு தினசரி வழக்குப் பட்டியல்கள் 22-1-2007 முதல் அச்சிட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

## தொழிலாளர் நலன்

சென்னையில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலனைக் கவனிப்பதற்காக ஒரு தொழிலாளர் நல அலுவலர், இரண்டு உதவித் தொழிலாளர் நல அலுவலர்கள் மற்றும் ஒரு சுகாதார மேற்பார்வையாளர் ஆகியோர் இத்துறையில் பணிபுரிகின்றனர்.

அரசு மைய அச்சகத்தில் மருந்தகம் ஒன்று இயங்கி வருகின்றது. இதில் பணிபுரியும் மருத்துவ அலுவலர் வாரந்தோறும் சென்னை மாநகரிலுள்ள ஆணையரகம் உள்ளிட்ட அனைத்து அலகுகளுக்கும் சென்று மருத்துவப் பரிசோதனை செய்து அனைத்துத் தொழிலாளர்கள், பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்குத் தேவையான மருத்துவ சிகிச்சை அளித்து வருகிறார்.

**அரசு மைய அச்சகம், அரசு எழுதுபொருள் கிடங்கு மற்றும் கிளை அச்சகங்கள் ஆகியவற்றின் பணியாளர்களுக்கு வழங்கப்படும் சிறப்புப் படிகள் குறித்த விவரங்கள்**

அரசு மைய அச்சகம், அரசு எழுதுபொருள் கிடங்கு மற்றும் கிளை அச்சகங்கள் ஆகியவற்றின் பணியாளர்களை உற்சாகப்படுத்தி, ஊக்கப்படுத்தும் வகையில் கீழ்க்கண்ட சிறப்புப் படிகள் அரசால் அளிக்கப்பட்டு வருகின்றன:

(அ) பாரம்பரிய உணவுப் படியாக மாதம் ரூ.150/- வழங்கப்படுகின்றது.

(ஆ) பால் படியாக நாளொன்றுக்கு ரூ.5/- வழங்கப்படுகின்றது.

(இ) ஆண் தொழிலாளர்களுக்குச் சீருடை தையற்கூலியாக மூன்று ஜோடிக்கு ரூ. 300 மற்றும் பெண் தொழிலாளர்களுக்குச் சீருடை ரவிக்கை தையற்கூலியாக மூன்று ரவிக்கைகளுக்கு ரூ.60/- வழங்கப்படுகின்றது.

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரகம், அரசு மைய அச்சகம், அரசு எழுதுபொருள் கிடங்கு மற்றும் அரசு கிளை அச்சகம், மதுரை ஆகிய அலகுகளில் பணியாளர்களுக்காகச் சிற்றுண்டிச் சாலை நடத்தப்படுகிறது.

அரசு மைய அச்சகம் மற்றும் கிளை அச்சகங்களில் இயங்கிவரும் தமிழ்நாடு எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை தொழிலாளர் கூட்டுறவு சங்கங்கள், சங்க உறுப்பினர்களுக்கு தலா ரூ.1,50,000/- வரையில் கடனுதவி வழங்கி வருகிறது.

அரசு அச்சகங்களில் பணியாளர்களிடையே விளையாட்டையும், உடல் ஆரோக்கியத்தையும் ஊக்குவிக்கும் வகையில் விளையாட்டுப் பொருட்கள் ஆண்டுதோறும் கொள்முதல் செய்யவும், விளையாட்டுப் போட்டிகள் நடத்தவும் ரூ.45,000/- அரசால் ஒதுக்கப்படுகின்றது.

**அச்சக மேம்பாட்டுத் திட்டம்**

அரசு அச்சகங்கள் அனைத்தும் தொலைநோக்குப் பார்வையுடன் படிப்படியாக முற்றிலும் நவீனமயமாக்கப்பட அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.



அரசு மைய அச்சகத்திற்குக் கூடுதல் இயந்திரங்கள் நிறுவவும் மற்றும் திருச்சி கிளை அச்சகத்தினை நவீனமயமாக்கும் பொருட்டு ரூ.193.15 இலட்சம் 2006-2007 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இயந்திரங்களைக் கொள்முதல் செய்து நிறுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரகத்தின் நிருவாக அமைப்பு மற்றும் பணியாளர்கள் விவரம் அட்டவணை 'அ' மற்றும் 'ஆ'-வில் அளிக்கப்பட்டுள்ளன.

**ஆணையரகம், சென்னை–2**

ஆணையரகத்தில் அலுவலகப் பயன்பாட்டிற்காக 2006-2007 ஆம் ஆண்டு பகுதி-II திட்டத்தின் கீழ் ரூ.1.71 இலட்சத்தில் லைன் டாட் மேட்ரிக்ஸ் பிரிண்டர் மற்றும் தீயணைப்பான்கள் ஆகியவை கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

**அரசு மைய அச்சகம், சென்னை–79**

2006-2007 ஆம் ஆண்டு பகுதி-II திட்டத்தின் கீழ் ரூ.79.76 இலட்சத்தில் அரசு மைய அச்சகம், சென்னை-79-ல் கீழ்க்கண்ட இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்து நிறுவப்பட உள்ளன:—

(1) புரோகராம் கட்டிங் இயந்திரம்

(2) ஓயர் ஸ்டிச்சிங் இயந்திரம்

(3) ஷீட் ஃபெட் அச்சு இயந்திரம்

(4) ரீ-டச்சிங் மேசை

(5) தடையற்ற மின்சாரம் வழங்கும் சாதனம் (2. கே.வி.ஏ.)

(6) லைன் டாட் மேட்ரிக்ஸ்

(7) லேசர் பிரிண்டர் ஏ3 மற்றும் ஏ4 அளவு

(8) ஸ்பிளிட் ஏ.சி. உடன் ஸ்டெபிலைசர்

(9) சீலிங் பேன் மற்றும் எக்ஸாஸ்ட் பேன்

(10) வாட்டர் கூலர் மற்றும் அதன் உபகரணங்கள்

**அரசு கிளை அச்சகம், திருச்சிராப்பள்ளி**

2006-2007 ஆம் ஆண்டு பகுதி-II திட்டத்தின்கீழ் ரூ.53.56 இலட்சத்தில் அரசு கிளை அச்சகம், திருச்சிராப்பள்ளியில் கீழ்க்கண்ட இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்து நிறுவப்பட்டு உள்ளன:

(1) டிடிபி இயந்திரம் மற்றும் அதன் உபகரணங்கள்

(2) லேசர் பிரிண்டர்

(3) ஸ்பிளிட் ஏ.சி. உடன் ஸ்டெபிலைசர்

(4) தடையற்ற மின்சாரம் வழங்கும் சாதனம் (2 கேவிஏ)

(5) ரீ-டச்சிங் மேசை

(6) டுவின் எக்ஸ்போஸர்

(7) ஃபிளேட் பிராஸஸர்

(8) வெப் ஆப்செட் அச்சு இயந்திரம்

(9) டேம்பனர் கிளீனிங் இயந்திரம்

(10) சீலிங் பேன் மற்றும் எக்ஸாஸ்ட் பேன்

(11) வாட்டர் கூலர் மற்றும் அதன் உபகரணங்கள்

(12) தீயணைப்பான்கள்

கடந்த ஆண்டுகளில் சென்னை உயர் நீதிமன்ற கிளை அச்சகம், மதுரை, சேலம் மற்றும் புதுக்கோட்டை ஆகிய கிளை அச்சகங்கள் நவீனமயமாக்கப்பட்டதன் பயனாக, பணியாளர்களின் எண்ணிக்கை கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் 50 விழுக்காடு குறைந்த போதிலும், இத்துறையின் உற்பத்தி தற்போது இருமடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் அச்சுப் பணியின் தரமும் மேம்பாடு அடைந்துள்ளது.

அரசு அச்சகங்கள் படிப்படியாக நவீனமயமாக்கப்பட்டதன் தொடர்ச்சியாக அரசிடமிருந்து பெறப்படும் அனைத்து அச்சுப் பணிகளும் குறித்த காலக்கெடுவிற்குள் மிகுந்த தரத்துடன் அச்சிட்டு வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், வேலைத் திறனை மேம்படுத்தியும், அரசின் முக்கிய ஆவணங்கள் மற்றும் கமுக்கத்தன்மை வாய்ந்த ஆவணங்களின் இரகசியங்களைக் காப்பாற்றியும், இத்துறை தொடர்ந்து சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது.

**அரசு கிளை அச்சகம், உயர் நீதிமன்றம், சென்னை—104**

2006-2007 ஆம் ஆண்டு பகுதி-II திட்டத்தின்கீழ் ரூ.55.48 இலட்சத்தில் அரசு கிளை அச்சகம், உயர்நீதிமன்றம், சென்னை-104-ல் கீழ்க்கண்ட





இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்து நிறுவப்பட்டு உள்ளன:—

(1) வெப் ஆப்செட் பிரிண்டிங் இயந்திரம்

(2) புரோக்ராம் கட்டிங் இயந்திரம்

(3) தீயணைப்பான்கள்

(4) குளிர் சாதனப் பெட்டி மற்றும் அதன் உபகரணங்கள்

**சாதனைகள்**

(1) தனி நபர் பெயர் மாற்ற அறிவிக்கைகள் இதுவரை இத்துறையால் ஆங்கிலத்தில் மட்டுமே அரசிதழில் பிரசுரிக்கப்பட்டு வந்தன. இதற்கான கட்டணம் ரூ.415 (தபால் செலவு உட்பட) வசூலிக்கப்பட்டு வருகிறது. தற்பொழுது அரசிதழில் தமிழிலும் பெயர் மாற்றம் பிரசுரம் செய்ய இவ்வரசால் ஆணையிடப்பட்டு இதற்கான கட்டணமாக ரூ.50 மட்டுமே (தபால் செலவு நீங்கலாக) வசூலிக்கப்பட்டு வருகிறது.

(2) அரசு ஊழியர்களுக்குப் பொங்கல் போனஸ் ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு இவ்வரசால் வழங்கப்படுகிறது. பொங்கல் போனஸாக ரூ.825 'ஏ' மற்றும் 'பி' பிரிவு அலுவலர்களுக்கும், ரூ.2500 'சி' மற்றும் 'டி' பிரிவு அலுவலர்களுக்கும் வழங்க உத்தரவிட்டதன் பயனாக இத்துறைக்கு ரூ.60,35,650 (ரூபாய் அறுபது இலட்சத்து முப்பத்தைந்தாயிரத்து அறுநூற்று ஐம்பது மட்டும்) நிதி கூடுதலாக ஒதுக்கப்பட்டது.

(3) இத்துறையில் பணிபுரியும் தொழில்நுட்பப் பணியாளர்களுக்குச் சொந்த அலுவலுக்கான ஈட்டா விடுப்பு நவம்பர் 2006 முதல் வழங்கப்படுகிறது.

(4) அரசு அச்சகங்களை நவீனமயமாக்க தற்போதுள்ள 443 பதவிகள் ஒப்புவிக்கப்பட்டு 19 வகையான புதிய இனங்களில் 333 பதவிகள் உருவாக்கப்பட்டன. அரசு அச்சகங்களைப் படிப்படியாக நவீனமயமாக்கும் வழிவகைகளைப் பரிந்துரைக்க ஏழு நபர்களைக் கொண்ட ஒரு வல்லுநர் குழு சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையரைத் தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

(5) சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளை அச்சகத்திற்கு அரசால் புதிதாக 49 பதவிகள் ஏற்படுத்தப்பட்டு அவற்றிற்கு ஊதியம் மற்றும் இதர செலவினங்களுக்காக ரூ.86.60 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை - அ

நிருவாக அமைப்பு






அட்டவணை - ஆ

1-4-2007-ல் உள்ளபடி பணியாளர்களின் எண்ணிக்கை

| வ. எண் | அலகு | 1-4-2007-ல் மொத்தப் பணியாளர்கள் | அலுவலர்கள் | அமைச்சுப் பணியாளர்கள் | பிற பிரிவு பணியாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | ஆணையரகம் (அரசு வெளியீடுகள், விற்பனை நிலையம் உட்பட) | 175 | 13 | 93 | 69 |
| 2 | அரசு எழுதுபொருள் அலுவலகம், சென்னை-1. | 126 | 01 | 56 | 69 |
| 3 | அரசு மைய அச்சகம், சென்னை-79 (ஆனைக்கார தோட்டம் அச்சகம் உட்பட). | 1272 | 23 | 176 | 1073 |
| 4 | அரசு கிளை அச்சகம் (உயர் நீதிமன்ற வளாகம்), சென்னை-104. | 153 | 04 | 12 | 137 |
| 5 | அரசு கிளை அச்சகம், மதுரை. | 165 | 03 | 15 | 147 |
| 6 | அரசு கிளை அச்சகம், சேலம். | 85 | 02 | 12 | 71 |
| 7 | அரசு கிளை அச்சகம், திருச்சி. | 90 | 02 | 09 | 79 |
| 8 | அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை. | 89 | 02 | 10 | 77 |
| 9 | அரசு கிளை அச்சகம், விருத்தாசலம். | 64 | 02 | 07 | 55 |
| 10 | அரசு கிளை அச்சகம், சென்னை உயர் நீதிமன்ற கிளை, மதுரை.* | - | - | - | - |
| | மொத்தம் .. | 2219 | 52 | 390 | 1777 |

* ஒப்பளிப்பு செய்யப்பட்ட 49 பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## இணைப்பு-இ

## 2007-2008 ஆம் ஆண்டுக்கான திட்ட மதிப்பீடு

### எழுதுபொருள் மற்றும் அச்சு

(நிகரச் செலவு ரூபாய் ஆயிரத்தில்)

| | 2006-2007 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு | 2006-2007 திருத்த மதிப்பீடு | 2007-2008 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|
| 2058 எழுதுபொருள் அச்சு | 58,33,30 | 64,80,76 | 64,87,88 |
| 2059 பொதுப் பணிகள் | 55,23 | 67,23 | 55,23 |
| 4058 எழுதுபொருள், அச்சிடுதல் குறித்த மூலதனச் செலவு | 1,93,17 | 2,03,17 | 8 |
| மொத்தம் | | | 65,43,19 |







## இணைப்பு-ஈ

### பகுதி II திட்டப் பணிகள் 2007-2008

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண். | திட்டப் பணிகளின் விபரம் | இறுதிநிலைச் செலவு | | | 2007-2008-இல் செலவு | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | தொடர் செலவினம் | தொடராச் செலவினம் | மொத்தம் | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| | எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை | | | | | | | |
| 1. | ஆணையரகத்திற்கு துணைப் பாகங்களுடன் கணினி மற்றும் இதர உபகரணங்கள் வாங்குதல் | | 12.65 | 12.65 | 12.65 | | | 12.65 |
| 2. | சென்னை, எழுதுபொருள் அலுவலகத்திற்கு துணைப் பாகங்களுடன் கணினி மற்றும் இதர உபகரணங்கள் வாங்குதல் | | 2.35 | 2.35 | 2.35 | | | 2.35 |
| 3. | சென்னை, அரசு மைய அச்சகத்திற்கு துணைப் பாகங்களுடன் கணினி மற்றும் இதர உபகரணங்கள் வாங்குதல் | | 21.25 | 21.25 | 21.25 | | | 21.25 |
| 4. | சென்னை, உயர் நீதிமன்ற கிளை அச்சகத்திற்கு துணைப் பாகங்களுடன் கணினி மற்றும் இதர உபகரணங்கள் வாங்குதல் | | 1.75 | 1.75 | 1.75 | | | 1.75 |
| 5. | விருத்தாசலம், அரசு கிளை அச்சகத்திற்கு துணைப் பாகங்களுடன் கணினி மற்றும் இதர உபகரணங்கள் வாங்குதல் | | 3.25 | 3.25 | 3.25 | | | 3.25 |

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண். | திட்டப்பணிகளின் விபரம் | இறுதிநிலைச் செலவு | | | 2007-2008-ல் செலவு | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | தொடர் செலவினம் | தொடரா செலவினம் | மொத்தம் | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| | எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை | | | | | | | |
| 6. | திருச்சி, அரசு கிளை அச்சகத்திற்கு துணைப் பாகங்களுடன் கணினி மற்றும் இதர உபகரணங்கள் வாங்குதல் | | 1.75 | 1.75 | 1.75 | | | 1.75 |
| 7. | சேலம், அரசு கிளை அச்சகத்திற்கு துணைப் பாகங்களுடன் கணினி மற்றும் இதர உபகரணங்கள் வாங்குதல் | | 10.25 | 10.25 | 10.25 | | | 10.25 |
| 8. | புதுக்கோட்டை, அரசு கிளை அச்சகத்திற்கு துணைப் பாகங்களுடன் கணினி மற்றும் இதர உபகரணங்கள் வாங்குதல் | | 2.75 | 2.75 | 2.75 | | | 2.75 |
| 9. | மதுரை, அரசு கிளை அச்சகத்திற்கு துணைப் பாகங்களுடன் கணினி மற்றும் இதர உபகரணங்கள் வாங்குதல் | | 8.25 | 8.25 | 8.25 | | | 8.25 |
| 10. | மதுரை, உயர் நீதிமன்றக் கிளை அச்சகத்திற்கு துணைப் பாகங்களுடன் கணினி மற்றும் இதர உபகரணங்கள் வாங்குதல் | | 15.35 | 15.35 | 15.35 | | | 15.35 |
| | மொத்தம் | | 79.60 | 79.60 | 79.60 | | | 79.60 |



## இணைப்பு-V

*(176 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 28—செய்தி மற்றும் விளம்பரம் அறிவிப்புகள் 2007 - 2008

1. தமிழக அரசின் நலத்திட்டங்களை உடனுக்குடன் மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் இத்துறை மூலமாக அரசு செய்தி என்ற விளம்பரச் சுவரொட்டி 1997 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரை வெளியிடப்பட்டு வந்தது. நிறுத்தப்பட்ட இந்த விளம்பரச் சுவரொட்டி இத்துறை மூலமாகத் தயாரிக்கப்பட்டு அரசு மைய அச்சகத்தில் அச்சிடப்பட்டு மீண்டும் வெளிவர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

2. அனைத்து மாவட்டங்களில் ஊரக மற்றும் நகரப் பகுதிகளில் ஊரகக் கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகள், திரைப்படக்காட்சிகள், அரசு திட்ட விளக்கக் கூட்டங்கள், சிறு கண்காட்சிகள் போன்ற பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி பல்துறைகளையும் பங்கேற்கச் செய்து அரசின் நலத்திட்டங்களைப் பொதுமக்களிடையே விளம்பரம் செய்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் 'பல்வேறு ஊடகங்கள் வழியாக பல்துறைப் பணி விளக்க முகாம்கள்' நடத்திட தலா ரூ.1.00 இலட்சம் வீதம் 30 மாவட்டங்களுக்கு ரூ.30.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். பொதுமக்களிடையே ஏற்படும் விழிப்புணர்வின் விளைவாக நலத்திட்டங்களின் பயன்களை இம்முகாமிற்கு வருகை தரும் பொதுமக்கள் அடையச் செய்யும் வாய்ப்புகள் உருவாகும். மாவட்டத்தில் உள்ள பல்வேறு துறைகளின் அலுவலர்கள் பங்கேற்புடன் அமையும் பொதுமக்கள் குறை தீர்க்கும் சிறப்பு நிகழ்ச்சியாகவும் இம்முகாம்கள் நடத்தப்படும்.

3. தரமான அச்சுப் பணிகள் மேற்கொள்ளும் வகையில் தமிழரசு அச்சகத்திற்கு ரூ.84.60 இலட்சம் செலவில் கணினி தொழில்நுட்ப இயக்கத்தில் இயங்கும் அச்சகக் கருவிகள் வாங்கப்படும்.

4. நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவாறு, தென்னிந்திய திரைப்படத் தொழிலாளர்கள் சம்மேளனத்தின் சார்பில், அந்தத் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்ட நிலம் வழங்கிட வேண்டும் என்று கேட்டுக்கொண்ட கோரிக்கையினை இந்த அரசு ஏற்று, அதற்கான

நிலம் தேர்வு செய்யும் பொறுப்பை அவர்களிடமே ஒப்படைத்து நிலம் தேர்வு செய்யும் பணி தற்போது முடிவடைந்துள்ளதால், அதற்கான அரசு ஆணை விரைவில் வழங்கப்படும்.

5. நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவாறு பத்திரிகைத் துறையில் இருப்பவர்களின் ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம் ஆகியவற்றை உயர்த்தி வழங்கியதோடு பணிக்காலத்திலேயே மறைந்திட நேரிடும் பத்திரிகையாளர்களின் குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தையும் அவர்தம் குடும்பங்கள் எளிதில் உதவி பெறும் வகையில் இந்த அரசு திருத்தி அமைத்துள்ளது. இவர்களில் உரியவர்களுக்கு நல உதவிகளை மேலும் செம்மையாக அளித்திட, தனி நல நிதியம் ஒன்று உருவாக்கப்படும்.

6. நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவாறு, சின்னத்திரைக் கலைஞர்களுக்கான விருதுகளையும் வழங்கி, திரை மற்றும் கலையுலகை ஊக்குவிக்கும் பணிகள் நிறைவேற்றப்படும்.

7. வள்ளுவர் கோட்ட மேல்தளத்தில் அமைந்துள்ள நீர்நிலையில் வள்ளுவர் கோட்டத் தேர் மற்றும் திருவள்ளுவர் சிலை ஆகியவற்றின் பிரதிபலிப்புப் பிம்பங்களைப் பார்வையாளர்கள் காணும் வகையில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

8. எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்திற்கு ரூ.70.00 இலட்சம் செலவில் தற்போதுள்ள கேமிராக்கள் நவீனப்படுத்தப்படுவதுடன் புதிய கேமிராக்கள் வாங்கப்படும்.

9. கலைவாணர் அரங்கத்திற்கு ரூ.17.00 இலட்சம் செலவில் துணை பாகங்களுடன் கூடிய டி.டி.எஸ். மற்றும் பிர. ஒலி அமைப்பு சாதனங்கள் வாங்கப்படும்.

10. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்ட மன்றப் பேரவையில் அறிவித்தவாறு திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில், சுதந்திரப் போராட்ட வீரர் தியாகி பி. சீனிவாசராவ் அவர்களுக்கு ரூ.25.00 இலட்சம் செலவில் நினைவு மண்டபம் அமைக்கப்படும்.

11. தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டையில், பட்டுக்கோட்டை அழகிரி அவர்களுக்கு ரூ.25.00 இலட்சம் செலவில் நினைவு மண்டபம் கட்டப்படும்.



12. நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவாறு வரும் 30-10-2007 அன்று, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் நூற்றாண்டு விழாவை அரசின் சார்பில் சிறப்பாகக் கொண்டாட முடிவு செய்யப்பட்டுள்ளதையொட்டி, ரூபாய் 50.00 இலட்சம் செலவில், பசும்பொன் கிராமத்திலுள்ள அன்னாரது நினைவு இல்லம் பழமை மாறாமல் புதுப்பிக்கப்பட்டு, நூற்றாண்டு விழா தோரண வாயில் மற்றும் அணையா விளக்கு ஆகியவை அமைக்கப்படுவதோடு, அவரது நினைவிடத்தை வழிபட வரும் பொதுமக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்படும்.

13. நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவாறு, அயோத்திதாச பண்டிதர் அவர்களால் 1907, ஜூன் 19 ஆம் நாளன்று தொடங்கப்பட்ட "ஒரு பைசா தமிழன்" எனும் வார இதழ்—அவரது முக்கியமான சாதனைகளில் ஒன்றாகக் கருதப்படுவதாலும், தமிழ் இதழியல் வரலாற்றில் தலைமையானதொரு இடம் வகிப்பதாலும், உலகெங்கும் பரவிக் கிடந்த ஒடுக்கப்பட்ட தமிழர்களை ஒருங்கிணைத்து, அவர்களுக்கு உணர்ச்சி ஊட்டுவதில் முன்னோடி இதழாகத் திகழ்ந்ததாலும், அந்த இதழுக்கு அரசு சார்பில் நூற்றாண்டு விழா கொண்டாடப்படும்.

14. நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவாறு, மறைந்த பொதுவுடைமைத் தலைவர் திரு. ப. ஜீவானந்தம் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் அன்னாரது 100-வது பிறந்த நாள் விழா சென்னை, கோவை மற்றும் நாகர்கோவில் நகரங்களில் 21-8-2007 அன்று அரசின் சார்பில் கொண்டாடப்படும்.

15. தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் உள்ள கீழ்க்கண்ட நினைவகங்களிலும், கேரள மாநிலம், வைக்கத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் கட்டப்பட்டுள்ள தந்தை பெரியார் நினைவகத்திலும் பழுதுகள் நீக்கி மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| (i) தந்தை பெரியார் நினைவகம், வைக்கம், கேரள மாநிலம் .. .. .. | ரூ.4.60 இலட்சம் |
| (ii) தில்லையாடி வள்ளியம்மை நினைவகம், நாகப்பட்டினம் மாவட்டம் .. .. .. | ரூ.6.00 இலட்சம் |
| (iii) தியாகிகள் மணிமண்டபம், சென்னை .. | ரூ.2.00 இலட்சம் |
| (iv) மகாகவி பாரதியார் நினைவு இல்லம், சென்னை .. .. .. | ரூ.2.00 இலட்சம் |

| | |
|---|---|
| (v) காந்தி அருங்காட்சியகம், சென்னை | ரூ.3.00 இலட்சம் |
| (vi) மொழிப்போர்த் தியாகிகள் மணிமண்டபம், சென்னை | ரூ.2.00 இலட்சம் |
| (vii) மூதறிஞர் இராஜாஜி நினைவாலயம், சென்னை | ரூ.15.00 இலட்சம் |
| (viii) திருப்பூர் குமரன் நினைவகம், திருப்பூர் கோயம்புத்தூர் மாவட்டம் | ரூ.4.40 இலட்சம் |
| (ix) பகுத்தறிவு கவிராயர் உடுமலை நாராயணகவி மணி மண்டபம், கோயம்புத்தூர் மாவட்டம் | ரூ.4.45 இலட்சம் |
| மொத்தம் | ரூ.43.45 இலட்சம் |

16. எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர்களின் தொழில்நுட்பத் திறன் காலத்திற்கேற்ப மேம்பாடு அடையும் வகையில், நிறுவனத்தின் மாணவர்களுக்கான படத்தளத்தில் மேம்பாட்டுப் பணிகளும், கூடுதல் ஒளி வசதியும் ரூ.18.00 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

17. செய்தி வெளியீட்டுப் பிரிவு, நிழற்படப் பிரிவு, தலைமைச் செயலகச் செய்தியாளர்கள் அறை ஆகியவற்றில் மின்னணு ஆளுமை உருவாக்கி கணினி மயமாக்கிட,

(i) செய்தியாளர்கள் அறைக்கு இரண்டு தொலைபேசிகளுக்கு அகண்ட கற்றை கம்பியில்லா வலைதள வசதி (Broadband Wireless Internet)

(ii) நிழற்படப் பிரிவிற்கு ஏழு டிஜிட்டல் நிழற்படக்கருவிகள் மற்றும் துணைக் கருவிகள்

(iii) நிழற்படப் பிரிவிற்கு உயரிய தொழில்நுட்பங்களுடன் கம்பியில்லா வலைதள வசதியுடன் மூன்று லேப்டாப் கணினிகள்

(iv) செய்தி வெளியீட்டுப் பிரிவில், தாளில்லா அலுவலக நடைமுறை நிர்வாகத்தை உருவாக்க மூன்று கணினிகள், பிரிண்டர்கள், நகலிகள்.

(v) நிழற்படப் பிரிவிற்கு நிழற்பட ஆவண வசதிக்காக உயரிய தொழில்நுட்பத்துடன் கூடிய சர்வர் மற்றும் துணைக் கருவிகளும் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



18. சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, சேலம் மற்றும் திருநெல்வேலி மாவட்டச் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணிப்பயன்பாட்டிற்கென தலா ஒரு 'லேப்டாப் கணினி' கம்பியில்லா இணைய இணைப்பு வசதியுடன் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

19. கலைவாணர் அரங்கத்தில் ரூ.2.94 இலட்சம் செலவில் "பவர் பேக்டர்" கருவியும், துணைக் கருவிகளும் பொருத்தப்படும்.

20. தமிழரசு அச்சகத்திற்கு ரூ.3.00 இலட்சம் செலவில் மின்னாக்கி வாங்கப்படும்.

21. ஐந்து மாவட்டச் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு ரூ.20.00 இலட்சம் செலவில் ஐந்து டெம்போ டிராக்ஸ் ஜீப் ஊர்திகள் வாங்கி வழங்கப்படும்.

22. மாநிலச் செய்தி நிலைய அலுவலகப் பயன்பாட்டிற்கு டிஜிட்டல் ஒளி நகலி வாங்கப்படும்.

23. இராஜாஜி மண்டப அலுவலகப் பயன்பாட்டிற்கு சீர்வளி சாதனம் ஒன்று வாங்கப்படும்.

## இணைப்பு-VI

(192 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 29—சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை

## அறிவிப்புகள் 2007-2008

**1. தஞ்சாவூர் மாவட்டம் கல்லணையில் அடிப்படை வசதிகள்**

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள "கல்லணை" சிறந்த சுற்றுலாத் தலமாக விளங்குகிறது. எனவே, கல்லணையை அழகுபடுத்தவும் அதனைக் காண வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் ஏற்படுத்தவும் ரூ.100.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**2. கோயம்புத்தூர் மாவட்டம் கோவை குற்றாலத்தில் சுற்றுச்சூழல் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் செய்தல்**

கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள முக்கிய சுற்றுலாப் பகுதிகளில் "கோவை குற்றாலமும்" ஒன்றாகும். இந்த நீர்வீழ்ச்சியைக் கண்டு களிக்க நாள்தோறும் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருகை புரிகின்றனர். எனவே, சுற்றுலாப் பயணிகளின் வசதிகளுக்காக கோவை குற்றாலம் அருவிப் பகுதியில் அடிப்படை வசதிகளை அளிப்பதற்காக ரூ.36.90 இலட்சம் செலவிடப்படும்.

**3. சிவகங்கை மாவட்டம் குன்றக்குடியில் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் செய்தல்**

சிவகங்கை மாவட்டம் குன்றக்குடி அருள்மிகு சுப்ரமணியர் கோவில் மிகவும் புகழ் பெற்றதாகும். இக்கோவில் மாமன்னன் இராஜராஜ சோழனால் கட்டப்பட்டதாகும். குன்றக்குடி கிராமம், சாலை வசதிகளால் நன்கு இணைக்கப்பட்டுள்ளது. செட்டிநாட்டிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் அருகில் அமைந்துள்ள குன்றக்குடிக்கும் வந்து செல்வதால் குன்றக்குடியில் சுற்றுலா கட்டமைப்பு வசதிகளை உருவாக்க ரூ.43.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.



**4. சிவகங்கை மாவட்டத்திலுள்ள பிள்ளையார்பட்டியில் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் செய்தல்**

சிவகங்கை மாவட்டம் பிள்ளையார்பட்டியில் உள்ள அருள்மிகு ஸ்ரீகற்பக விநாயகர் கோவில் மிகவும் புகழ் பெற்றதாகும். இங்குள்ள சுமார் 12 அடி உயரமுள்ள ஸ்ரீகற்பக விநாயகர் சிலை ஒரே பாறையில் செதுக்கப்பட்டதாகும். எனவே, பிள்ளையார்பட்டிக்கு ஏராளமான சுற்றுலாப் பயணிகள் நாள்தோறும் வருகை புரிகின்றனர். இங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் நன்மையைக் கருதி பிள்ளையார்பட்டியில் சுற்றுலா கட்டமைப்பு வசதிகளை உருவாக்க ரூ.25.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்படும்.

**5. தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள பாஞ்சாலங்குறிச்சி கோட்டையில் புனரமைப்பு பணிகள் செய்தல்**

தமிழக அரசால் 1974 ஆம் ஆண்டு பாஞ்சாலங்குறிச்சியில் கட்டப்பட்ட வீரபாண்டிய கட்டபொம்மன் நினைவுக் கோட்டையைக் காண நாள்தோறும் ஏராளமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை புரிகின்றனர். சுற்றுலாப் பயணிகளை அதிகளவில் ஈர்த்திடும் வகையில் அடிப்படை வசதிகள் செய்வதற்கு ரூ.28.50 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்படும்.

**6. திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள குற்றாலம் நீர்வீழ்ச்சியை மேம்படுத்த நிதி ஒதுக்கீடு**

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள குற்றாலம் நீர்வீழ்ச்சிக்கு அதிக அளவிலான சுற்றுலாப் பயணிகள் வருகை புரிகின்றனர். எனவே, 2007-2008 ஆம் ஆண்டில், சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக ரூ. 88.00 இலட்சம் செலவில் கூடுதல் வசதிகள் அளிக்கப்பட உள்ளது.

**7. சுற்றுலா தொடர்புடைய திட்டங்களுக்கு சலுகைகள்**

சுற்றுலா தொடர்புடைய அனைத்துத் திட்டங்களுக்கும், சலுகைகள் வழங்குவது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

**8. பாரம்பரிய ஓட்டல்களுக்கு மானியம் அளித்தல்**

பாரம்பரிய ஓட்டல்களை நிர்மாணிப்பதற்கும், பாரம்பரியக் கட்டடங்களை ஓட்டல்களாக மாற்றியமைப்பதற்கும், பாரம்பரியக் கட்டடங்களை பாரம்பரிய ஓட்டல்களாக மாற்றியமைக்கத் தேவைப்படும் மொத்த முதலீட்டில் 10 சதவிகிதத்தை திட்டம் ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ. 100.00 இலட்சம் மானியமாக அளிப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

## 9. மலேசியா மற்றும் தென் ஆப்பிரிக்க சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க குறும்படம் தயாரித்தல்

தமிழ்நாட்டிற்கு மலேசியா, தென் ஆப்பிரிக்கா, மொரிசியஸ் ஆகிய நாடுகளில் இருந்து ஏராளமான சுற்றுலாப் பயணிகள் தமிழ்நாட்டிற்கு வருகை புரிகின்றனர். அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள நவக்கிரக ஆலயங்களுக்கும் அறுபடை வீடு ஆலயங்களுக்கும் செல்வதை அதிக அளவில் விரும்புகின்றனர். எனவே, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கோடும் நவக்கிரக ஆலயங்கள் மற்றும் அறுபடை வீடுகள் பற்றிய குறும்படம் ஒன்று தயாரிக்கப்படும்.

## 10. சமண ஆலயங்கள் பற்றிய கையேடு

தமிழ்நாட்டில் உள்ள முக்கிய "சமண ஆலயப் பகுதிகளில்" (JAIN TEMPLES) அடிப்படை வசதிகள் ஏற்படுத்தும் பணி நடைபெறுகிறது. எனவே இந்த ஆலயங்களின் சிறப்புக்களையும், எவ்வாறு இந்த ஆலயங்களுக்குச் செல்வது போன்ற விவரங்கள் அடங்கிய கையேடு ஒன்று வெளியிடப்படும்.

## 11. புதிய வோல்வோ (VOLVO) பேருந்து

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் புதிய 'வோல்வோ' (VOLVO) பேருந்து ஒன்றை ரூ.61.25 இலட்சத்தில் அறிமுகப்படுத்தியது. இந்த சொகுசுப் பேருந்து சென்னை-திருப்பதி சுற்றுலாவிற்கு பயன்படுத்தப்படுகிறது. வோல்வோ பேருந்தில் பயணம் செய்வதை சுற்றுலாப் பயணிகள் அதிகம் விரும்புகின்றனர். எனவே, சுற்றுலாப் பயணிகளின் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் மேலும் ஒரு வோல்வோ பேருந்து 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.61.25 இலட்சம் மதிப்பீட்டில் வாங்கப்படும்.

## 12. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் ஓட்டல்களை மேம்படுத்துதல்

2007-2008 ஆம் ஆண்டில் காஞ்சிபுரம், கோயம்புத்தூர், கொடைக்கானல், இராமேஸ்வரம், கன்னியாகுமரி, மதுரை-II, தஞ்சாவூர் மற்றும் ஏற்காடு ஆகிய இடங்களில் உள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்குச் சொந்தமான ஓட்டல்கள் ரூ.300.00 இலட்சம் செலவில் மேம்படுத்தப்படும். கொடைக்கானல் ஓட்டலில் மூன்று மாடிகள் உள்ளதால், அங்கு ரூ.15.40 இலட்சம் செலவில் மின்தூக்கி ஒன்று நிறுவப்படும்.



## 13. கடற்கரை வளாகத்தில் ஜெனரேட்டர் நிறுவுதல்

மாமல்லபுரத்திலுள்ள கடற்கரை வளாகத்தில் தடையில்லா மின்வசதியை அளிப்பதற்காக 250 KVA ஜெனரேட்டர் ஒன்று ரூ.18.00 இலட்சம் செலவில் நிறுவப்படும்.

## 14. மாமல்லபுரத்திலுள்ள கடற்கரை வளாகத்தில் 20 சிக்கன குடில்களை புதுப்பித்தல் மற்றும் கூடுதலாக 20 புதிய குடில்களை கட்டுதல்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மாமல்லபுரத்திலுள்ள கடற்கரை வளாகத்தில் அமைந்துள்ள 37 குடில்களை ரூ.180.00 இலட்சம் செலவில் புதுப்பித்துள்ளது. இப்புதுப்பிக்கப்பட்ட குடில்களுக்கு சுற்றுலாப் பயணிகளிடையே மிகுந்த வரவேற்பு கிடைத்துள்ளது. எனவே, ரூ.200.00 இலட்சம் செலவில் 20 சிக்கனக் குடில்களைப் புதுப்பிக்கவும், இச்சிக்கனக் குடில்களின் மேல் கூடுதலாக 20 புதிய குடில்களைக் கட்டவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## 15. முட்டுக்காடு படகு குழாமை மேம்படுத்துதல்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் முட்டுக்காட்டில் நடத்தப்பட்டு வரும் படகு குழாம் சுற்றுலாப் பயணிகளிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. எனவே இங்கு போதுமான அளவு வாகன நிறுத்துமிட வசதிகளுடன் கூடிய மேம்பாட்டுத் திட்டங்களை ரூ.45.00 இலட்சம் செலவில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

## 16. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் முக்கியமான ஓட்டல்களுக்கு புதியதாக மெத்தைகள் வாங்குதல்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் முக்கியமான ஓட்டல்களுக்கு 1066 லேடெக்ஸ், பின்கோர் வகை மெத்தைகள் ரூபாய் 59.00 இலட்சத்திற்கு வாங்கப்பட உள்ளது.

## 17. புதியதாக படகுகள் வாங்குதல்

படகுப் பிரிவின் மூலம் கிடைக்கும் வருவாயை அதிகரிக்கும் நோக்கோடு ரூ.30.00 இலட்சம் செலவில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் நடத்தப்படுகின்ற படகு இல்லங்களின் பயன்பாட்டிற்காக 68 புதிய படகுகள் வாங்கப்படவுள்ளன.

**18. உதகமண்டலத்தில் உள்ள "ஓட்டல் தமிழ்நாடு" மேம்படுத்துதல்**

உதகமண்டலத்தில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு மேம்படுத்தப்படும். மேலும் அங்கு ஒரு மின்தூக்கி அமைக்கப்படும். இப்பணிகளுக்காக ரூபாய் 31 இலட்சம் செலவிடப்படும்.

**19. குழந்தைகளுக்கான சுற்றுலாக்களை மேம்படுத்துதல்**

மாணவர்கள் பயன்பெறும் வகையில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மாணவர்களுக்கான சுற்றுலாக்களை சலுகைக் கட்டணத்தில் நடத்தி வருகிறது. பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் முக்கிய சுற்றுலாத் தலங்களை கண்டுகளிக்கவும், சுற்றுலா பற்றிய விழிப்புணர்ச்சியை அவர்களிடையே ஏற்படுத்திடவும், அவர்கள் சுற்றுலா செல்லும்போது அவர்கள் தங்குமிடத்திற்கான கட்டணத்தை நாளொன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.50 என்ற அளவில் மூன்று நாட்களுக்கு மிகாமல் சுற்றுலாத் துறை ஏற்கும். இத்திட்டத்தின்கீழ் அரசு / மாநகராட்சி, அரசு உதவி பெறும் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு இச்சலுகை வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஆண்டும், ஒரு மாவட்டத்தில் உள்ள இரண்டு பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்படும்.

## கலை மற்றும் பண்பாட்டுத் துறை

## அறிவிப்புகள் 2007-2008

**1. திருச்சி, மதுரை காஞ்சிபுரத்தில் கலை பண்பாட்டு வளாகம்**

இந்நிதியாண்டில் தமிழ்நாட்டில் உள்ள ஆறு கலை பண்பாட்டு மண்டல மையங்களில் மூன்று இடங்களில் (திருச்சிராப்பள்ளி, மதுரை, காஞ்சிபுரம்) மண்டல கலை பண்பாட்டு மையம், இசைப்பள்ளி, சவகர் சிறுவர் மன்றம், மாவட்டக் கலை மன்றம் ஆகியவற்றை உள்ளடக்கி கலை-பண்பாட்டு வளாகம் அமைக்கப்படும். ஒரு வளாகத்திற்கு ரூ.75 இலட்சம் வீதம் மூன்று வளாகத்திற்கு ரூ.225 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்படும்.

**2. இசைக் கல்லூரிகளில் பயிலும் அனைத்துப் பிரிவு மாணவ, மாணவியருக்கும் கல்வி உதவித் தொகை**

தற்போது தவில், நாதசுரம் நாட்டுப்புறக்கலை பயிலும் மாணவர்களுக்கு மாதந்தோறும் உதவித் தொகையாக ரூ.250 வழங்கப்படுகிறது. இந்நிதியாண்டு முதல் இசைக் கல்லூரிகளில் பயிலும்



அனைத்துப் பிரிவு மாணவ - மாணவியருக்கும் கல்வி உதவித் தொகை வழங்கப்படும். இதனால் ஆண்டொன்றுக்கு ரூ.19.40 இலட்சம் கூடுதல் செலவு ஏற்படும்.

**3. சவகர் சிறுவர் மன்றம், ஓவிய நுண்கலைக் குழு ஆகியவை கலை பண்பாட்டு இயக்கத்துடன் இணைப்பு**

கலை-பண்பாட்டு இயக்ககத்தின்கீழ் இயங்கும் சவகர் சிறுவர் மன்றம், தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு ஆகியவற்றை கலை பண்பாட்டு இயக்ககத்துடன் இணைத்து ஒரே இயக்கமாக செயல்படுத்தப்படும்.

**4. தமிழ்நாடு திறந்தவெளிப் பல்கலைக் கழகத்துடன் இணைந்த கலைசார் படிப்புகள் அறிமுகம்**

தமிழ்நாடு திறந்தவெளிப் பல்கலைக் கழகத்துடன் இணைந்து கலைசார் படிப்புகள் அறிமுகப்படுத்தப்படும். இதனால் கலைசார் மேற்படிப்பு படிப்பதை விரும்புகிறவர்கள் பயனடையலாம்.

**5. கோயம்புத்தூர் இசைக் கல்லூரி பயிற்றுநர்களுக்கு காலமுறை ஊதிய விகிதம்**

கோயம்புத்தூர் இசைக் கல்லூரியில் அது தொடங்கப்பட்ட நாளிலிருந்தே (1993) தொகுப்பூதியத்தில் பணிபுரிந்துவரும் பயிற்றுநர்களுக்கு (ஆறு) இந்நிதியாண்டு முதல் காலமுறை ஊதிய விகிதத்தில் ஊதியம் வழங்கப்படும். இதனால் அரசுக்கு கூடுதலாக ஆண்டொன்றுக்கு ரூ.7.50 இலட்சம் செலவாகும்.

**6. தொல்லியல் துறையில் கல்வெட்டு முதுகலைப் பட்டயப் பயிற்சி பெறும் மாணவர் உதவித் தொகை ரூ.500/-லிருந்து ரூ.1000/-ஆக உயர்வு**

தொல்லியல் துறையில் கல்வெட்டு முதுகலைப் பட்டயப் பயிற்சி பெறும் மாணவர்கள், வெளியூர்களில் இருந்து தலைநகர் வந்து தங்கிப் படிக்க வேண்டியிருப்பதால், இந்த நிதியாண்டு முதல் அவர்களுக்கு வழங்கப்படும் பயிற்சி உதவித் தொகையை ரூ.500/-லிருந்து ரூ.1,000/-ஆக உயர்த்தி வழங்கப்படும். இதனால் அரசுக்கு கூடுதலாக ரூ.48,000/- செலவினம் ஆகும்.

**7. ஆவணப்படம் தயாரித்தல்**

தமிழ் இசை மரபு பற்றிய ஓர் ஆவணப்படம் தயாரிக்கப்படும். இதில் சீர்காழி மூவரிலிருந்து இராஜரத்தினம் பிள்ளை வரையிலான வரலாற்றைச் சித்தரிப்பதாக இது அமையும்.

8. முத்தமிழ் முகாம்

பூனா திரைப்படக் கல்லூரியில் ஆண்டுதோறும் கோடை விடுமுறையில் திரைப்பட ரசனை பயிற்சி வகுப்பு நடத்துவது போல், இயல், இசை, நாடகத்திற்கான முகாம் ஒன்றை மூன்று துறைகளிலும் உள்ள சிறந்த கலைஞர்கள், படைப்பாளிகளைக் கொண்டு நடத்தப்படும்.

9. நாடகக் கலைஞர்களின் புகைப்படம், குரல்கள் மற்றும் நாடக நிகழ்வுகளைச் சேகரித்துத் தொகுத்து ஆவணமாக்கிப் பாதுகாத்தல்

நாடகக் கலை குறித்து இளைய தலைமுறையினர் அறிந்துகொள்ளும்பொருட்டு, நாடகக் கலையில் ஈடுபட்டுள்ள கலைஞர்களைப் பற்றிய விவரத்தினைச் சேகரித்து, ஆவணமாக்கிப் பாதுகாக்கப்படும். நாடகக் கலைஞர்களின் புகைப்படங்கள், கலைஞர்களின் குரல்கள் மற்றும் நாடக நிகழ்வுகளைப் பதிவு செய்து பாதுகாக்கப்பட வேண்டும். மேலும் புகழ்பெற்ற கலைஞர்கள் பயன்படுத்திய ஆடை அணிகலன்கள், மேடைப்பொருட்கள், காட்சி அமைப்புகளையும் சேகரித்துப் பாதுகாத்து பார்வையாளர்கள் காணும்வண்ணம் காட்சிப் பொருள்களாக வைக்கப்படும்.

10. அகில இந்திய அளவில் புகழ்பெற்ற கலைஞர்களுக்கு விருதுகள் வழங்குதல்

தமிழகத்தைச் சேர்ந்த கலைஞர்களுக்கு விருது வழங்குவது அன்னியில், அகில இந்திய அளவில் புகழ்பெற்ற கலைஞர்களுக்கும், இலக்கியவாதிகளுக்கும் தமிழக அரசின் சார்பில் விருதுகள் வழங்கப்படும்.

11. கலைஞர்கள்/கலைக்குழுவினர் தங்குவதற்கு தகுந்த விருந்தினர் இல்லத்தை மன்ற வளாகத்தில் கட்டுதல்

பல்வேறு கலைப்பணிகள் குறித்து சென்னைக்கு வருகைதரும் அனைத்துத் தரப்புக் கலைஞர்களும் தங்குவதற்கு உகந்தவாறு மன்ற வளாகத்தில் 3000 சதுர அடியில் ஒரு கட்டடம் கட்டுவதற்கு ஆவன செய்யப்படும்.



12. நலிந்த கலைஞர்களுக்கான நிதியுதவித் திட்டத்தில் 2007-2008 ஆம் நிதியாண்டில் புதிதாக 500 கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்குதல்

கடந்த (2006-2007) நிதியாண்டின் மானியக் கோரிக்கையின்போது புதிதாக 500 நலிந்த கலைஞர்களுக்கு அவர்கள் வாழ்நாள் வரை மாதந்தோறும் ரூ.1,000/- வீதம் நிதியுதவி வழங்க அறிவிப்புச் செய்யப்பட்டதைத் தொடர்ந்து 500 கலைஞர்களுக்கு நிதியுதவி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது. அதேபோல் நடப்பு நிதியாண்டில் (2007-2008) புதிதாக 500 நலிந்த கலைஞர்களுக்கு மாதந்தோறும் தலா ரூ.1,000/- வீதம் நிதியுதவி ஒப்பளிக்க ஆவன செய்யப்படும்.

227667
சென்னை-600 008
நூலகம்

ஜ மைய அச்சகம், சென்னை — 600 079.

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Commissioner of Stationery and Printing,
Chennai-600 002.